ஜநவிநோதிநி.

இல. 4-12.] ஏப்பிரல்—டிசம்பர்மீ 1886. [புஸ்த. XVII.

நாகாநந்தநாடகக் கதை.

(தொடர்ச்சி.)

கருடனுக்கு நல்லுணவாக நாள்தோறும் ஒவ்வொரு நாகத்தை அனுப்பவேண்டுமென்ற ஏற்பாட்டின்படியே, ஜீமூதவாகனன் அவ்விடம் சென்றிருந்தசமயத்தில் அங்கே கருடனுக்கு உணவாகும்படி வந்துநின்ற நாகத்தை நோக்கி அதன் தாய் புத்திரசோகம் பொறுக்கமாட்டாமல் புலம்பினதென்று முன் சஞ்சிகையிற் கூறினேமே.

அப்பொழுது அருகேநின்றிருந்த ஜீமூதவாகனன் அதுகண்டு, ஆகா, இதென்ன ஆச்சரியம்! இவளோ தள்ளாதகிழவி, கண்ணும் கண்ணீருமாய் அழுதுகொண்டுநிற்கிறாள், இவளெதிரில்வந்து இப்பிள்ளையைக் கருடன் எடுத்துப் புசிப்பானால் அப்போது அவர் மனது வச்சிரத்தால் செய்ததென்றே சொல்லவேண்டும். இதுநிற்க, இவனுக்கு மரணகாலம் சமீபித்துவிட்டது; உறவினர்களும் அரசனுங்கூட இவனைப் பாதுகாக்கத் திறமையின்றிக் கைவிட்டுவிட்டார்கள். இந்தத் தாயோ நாதனற்றகிழவி, புதல்வனுக்காகப் புலம்புகிறாள்; இந்த நிலையைக் கண்ணாலேகண்டு நாமும் இவனைக் காப்பாற்றாது கைவிட்டால் நாம் சரீரமெடுத்தது வீணேயாகுமல்லவோ என்று நினைத்துக்கொண்டு கிழவியின்கண்ணெதிரேபோய் நின்றான்.

சங்கசூடனுடையதாய் இவனைக்கண்டு கருடனென்று நினைத்துப் பிள்ளையை மறைத்துக்கொண்டு, ஓ சுவாமி, வாசுகி இன்று என்னைத் தமக்கு ஆகாரமாய் அனுப்பினார், என்னைப் புசித்துப் பசிதீரும் என்றது. ஜீமூதவாகனன் அதைக்கேட்டுக் கண்ணீர்ததும்ப, அம்மா நான் புள்ளரசன்று, உன் புதல்வனைப் பாதுகாக்கவந்தவன். அந்தப் போர்வையை என்மேல் போட்டுவிடு, நான் கருடனுக்கு உணவாகிவிடுகிறேன் என்றான். தாய் நாகம் அதைக்கேட்டதும், குழந்தாய், கண்மணியே, என் பிள்ளையைக் காப்பாற்றும்பொருட்டு உன்னைக் கருடனுக்கு உணவாகக்கொடுக்க நான் துணியேன்; அவ்

வாறுசெய்தால் தங்கத்தைவிற்றுத் தவிடுவாங்கினது போலாகும். உன்னைப் பார்க்கும்போதே என் மகனைப்பார்க்கிலும் உன்னிடத்தில் எனக்கு வாத்ஸல்யம் அதிகரித்து என்மனம் பூரிக்கின்றது என்றது. சங்கசூடன், ஆகா! இவன் சுபாவம் வெகு விசித்திரமாயிருக்கின்றது: விசுவாமித்திரர் தம் பிராணனைப் பாதுகாக்கும்பொருட்டு நாயிறைச்சியைப் புசித்ததாகப் புராணங்களில் சொல்லியிருக்கின்றது; கௌதமன் என்பவன் தன் பசிக்காகத் தனக்கு உதவிபுரிந்த உத்தமனான நாளீஜங்கனைக் கொன்றுவிட்டான்; இதோ கருடன் பிரதிதினம் நாகங்களைப் புசித்துவருகிறார். இப்படி ஒவ்வொருவரும் தம் பிராணனையே பெரிதாக நினைத்து அதைக் காப்பதுநிமித்தம் அன்னியரைத் தொந்தரைசெய்வது இவ்வுலகவியற்கையாயிருக்கின்றதே. அவ்வாறிருக்க இந்த மகானுபாவன் பிறரைக் காப்பதற்காகத் தன் உயிரைத் திருணமாக எண்ணி ஒழித்துவிடத் துணிவது மிகவும் ஆச்சரியமானது என்று தன் மனதில் நினைத்துக்கொண்டே, குமாரா, நீ மகா குணசாலி, பரோபகாரத்தில் அடியூன்றியவன், உன்னைப்போன்ற குணவான்களை இவ்வுலகில் அதிகமாய்க் காண்பது அருமை. பரோபகார சிந்தையற்ற என்னைப் போன்ற புல்லியர் அனேகர் உண்டு. ஆதலால் இப்போது நீ சொல்லியபடி செய்யத்துணிவது சரியன்று; இந்த எண்ணத்தை உடனே மாற்றிவிடு; அற்பனான என் உயிருக்காக உதாரகுணசீலனான உன் சரீரத்துக்கு ஊறுபாடு செய்துகொள்வது ஒருபோதும் ஒவ்வாது: என் விஷயத்தில் உனக்குத் தயையிருப்பது உண்மையாயின் என் தாயின் உயிரை விடாதிருக்கும்படி நீ அவளைக் காப்பாற்றவேண்டுமென்றது.

ஜீமூதவாகனன் அதுகேட்டு, சங்கசூடா, நீ சொல்வது சரியே; நீ பிழைத்திருந்தாலல்லவோ உன் தாய் பிழைத்திருப்பாள்; நீ மரணமடைந்தால் அவளும்கூடவே மடியச் சித்தமாயிருக்கிறாளே. ஆதலின், என் பிராணனைக்கொடுத்து உன் பிராணனைப் பாதுகாத்துக்கொண்டாலல்லது நான் உன் தாயாரைக் காப்பாற்றுவது கூடாதகாரியம் என்ன, சங்கசூடன், அது எனக்குச் சம்மதமானதல்ல என்று சொல்லித்தடுத்து, அம்மா, கருடன்வருகிற ஸமயமாகிவிட்டது, நீ திரும்பிவிடு; இனி நான் எந்தெந்த ஜன்மம் எடுத்தாலும் அந்தந்த ஜன்மங்கள்தோறும் நீயே எனக்கு அன்னையாகவேண்டும் என்றுசொல்லித் தாயை வணங்கித் திரும்பிப்போம்படி கேட்டுக்கொண்டது. மகனது மனவுறுதியைக்கண்ட தாய் துயரமதிகமாகித் திரும்பிப்போக மனமில்லாமல்,பிள்ளையினது நிர்ப்பந்தத்தினால் அங்கிருக்கவுங்கூடாமல், அந்த மலையில் ஓரிடத்திலே பதுங்கிப்பார்த்திருப்போமென்று புறப்பட்டுப் போய்விட்டது. சங்கசூடனும் வைநதேயன் வருகிறசமயம் நெருங்கிவிடவே, அவர் வருவதற்குள் அக்கடற்கரையிலுள்ள கோகர்ணக்ஷேத்திரத்தில் பரமேசுவரதரிசனம் செய்து புனிதனாகிவரலாமென்று சென்றது. ஜீமூதவாகனனோ, மஞ்சள்

வஸ்திரம் ஒன்று தனக்குக் கிடைக்குமானால் அதைப் போர்த்துக்கொண்டு தான் பலவந்தமாகவே கருடனுக்கு இரையாகிவிடலாமென்று நினைத்து அதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டேயிருந்தனன்.

இவர்கள் மரபிலே கலியாணநாள் முதல் 10 நாள்வரையில் மருமகனுக்கும் மணமகளுக்கும் மஞ்சள்வஸ்திரம் கொடுக்கின்ற வழக்கமுண்டு. அவ்வாறே அன்றும் ஜீமூதவாகனனுக்குக் கொடுக்கும்படி இரண்டு மஞ்சள்வஸ்திரம் விசுவாவசுவின் தேவி கஞ்சுகியினிடம் கொடுத்து அனுப்பினாள். கஞ்சுகி அந்தவஸ்திரத்தை ஜீமூதவாகனனிடம் கெர்ண்டுவந்து, இதைத் தம்மிடங் கொடுத்துவரும்படி மஹாராணியார் அவர்கள் உத்தரவுசெய்தார்கள் என்று உரைத்தான். அதைக்காணும்போது ஜீமூதவாகனனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. வெகு மரியாதையாய் அவன் அதை வாங்கிக்கொண்டு நான் வந்தனஞ்செய்ததாய் மாமியிடம்சொல் என்று உரைத்துக் கஞ்சுகியை அனுப்பிவிட்டு, ஒரு ஜீவனைக் காப்பாற்றும்படி தேகத்தை விடத் தான் எண்ணியதற்கு அனுகூலமாகவே அந்த உடை கிடைக்கும்படி கடவுள் கடாக்ஷித்ததைப்பற்றித் தனக்குள் சந்தோஷித்துக்கொண்டே, சங்கசூடன் வருமுன்னமே தான் புள்ளரசு நாகங்களை யெடுத்துக்கொண்டுபோகிற பாறையின்மேல் ஏறி உட்காரவேண்டுமென்று அதை நெருங்கிச்சென்றான்.

இதற்குள் கருடன்வருகிற வேகத்தால் அம்மலைமேல் பெருங்காற்றுவிசி மரங்கள் அசைந்து மலையும் நடுங்குவதுபோலச் சலித்தது. அதைக்கண்ட ஜீமூதவாகனன் கருடன்வருகிற சமயம் நெருங்கியதென்றறிந்து மஞ்சள் போர்வையைப் போர்த்துக்கொண்டு மனமகிழ்ந்து அந்தப் பாறைமீதேறி உட்காந்தான். உட்காருகையில் அவன், தான் தாயார்மடியில் உட்காந்து விளையாடும்போது உண்டான ஆனந்தமும், தன் அருமை மனையாட்டியான மலயவதியின் ஆலிங்கனத்தால் உண்டாகும் ஆனந்தமும், தற்காலத்தில் அந்தக்கொலைப்பாறையில் உட்காரப்பெற்றதனால் உண்டான ஆனந்தத்திற்கு எள்ளளவும் ஈடன்றெனத் தனக்குள் எண்ணி அகமகிழ்ந்தான். கருடன் வந்துவிட்டது. அதை அறிந்த ஜீமூதவாகனன் தான் நன்றாய்ப் போர்த்துக்கொண்டு, இப்போது நான் சங்கசூடனுக்குச் சீவனையளிப்பதால்உண்டாகிற புண்ணியத்தின் பயனாகப் பரோபகாரத்திற்காகவே எனக்கு மறுபிறவியும், அந்தப் பிறப்பில்செய்யும் பரோபகாரத்தால் மற்றொருபிறவியில் பரோபகாரமான தேகமும், இப்படி எப்போதும் மாறிமாறிப் பரோபகாரத்திற்காகவே எனக்குப் பிறவி கிடைக்க வேண்டுமென்றும், கருடன் தன்னை எடுத்துக்கொண்டு செல்லுகிறவரையில் சங்கசூடன் வராதிருக்கவேண்டுமென்றும் இஷ்டதேவதைகளைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தான்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு"

கருடன் வழக்கப்படி வந்து, ஜீமூதவாகனனே தனக்கு உணவாக வாசுகியால் அனுப்பப்பட்ட நாகமென்று நினைத்து மூக்கினால் குத்தி எடுத்துக்கொண்டு, மலயமலைச்சிகரத்தில் சென்று புசிப்பதாய்ப் போய்விட்டது.

கருடன் இவனை எடுத்துக்கொள்ளும்போது வானத்தினின்றும் பூமாரிபொழிந்தது; தேவதுந்துபி வாத்தியங்கள் முழங்கின. அது கண்டு ஒருநாளுமில்லாமல் இன்று இப்புதுமை நேர்ந்ததின் நிமித்தம் யாதோவென்று கருடனும் சிறிதுநேரம் சிந்தித்ததாயினும், தான்செல்லுகின்ற வேகத்தால் கற்பகத்தருக்கள் சலித்து அவற்றினின்றும் மலர்கள் உதிர்கின்றனவெனவும், ஊழிகாலம் வந்துவிட்டதாக நினைத்து மேகங்கள் முழங்குகின்றனவெனவும் எண்ணிச் சமாதானம் செய்துகொண்டே சென்றது.

இதற்குள் கோகர்ண தரிசனத்திற்குச்சென்ற சங்கசூடன் விரைவாகவே திரும்பிக் கொலைப்பாறையின் அருகே வந்துசேர்ந்தது. ஐயோ, அங்கே அது வந்து சேர்வதற்குமுன்னமே ஜீமூதவாகனனைக்கவ்விக்கொண்டு கருடன் ஆகாயத்தில் கிளம்பிப்போய்விட்டதே! அதுகண்டு அந்தநாகம், உளமுருகி ஒருவன் இன்று தன் உயிரைக் கொடுத்து நம்மைக் காப்பாற்றினன் என்று நாகங்கள் புகழும்படியான பாக்கியத்தை ஒருநாளாகிலும் பெறுவதற்குக் கொடுத்துவையாத பாவியானேனே; அன்றியும், நமது மகாராஜாவின் ஆக்கினையையும் தவறினவனுனேன். யாரோ ஒரு புண்ணியவான் தன் உயிரைக் கொடுத்து நம்மைக் காத்தருளினனென்றால் அதுகண்டு நாம் வெட்கமின்றி வீடுபோய்ச் சேரலாமோ என்று தன்னைத்தானே இகழ்ந்துகொண்டு, கருடன் வேகமாய்ப் பறந்துசென்றது கண்டு, தானும் ஆகாயத்தில் கிளம்பிக் கருடனுடன் செல்லவேண்டுமென நினைத்தது. நினைத்து உயரக்கிளம்புமுன் தரையைக் குனிந்துபார்க்க, அங்கே ஜீமூதவாகனன் உடம்பிலிருந்து பெருகின உதிரம் சிந்தினவழி தெரிந்தது. ஆரம்பத்தில் உதிரம் அதிகமாய்ச் சிந்தி நனைந்திருந்தது; அப்புறம் செல்லச்செல்லப் பெருந்துளிகளாய் இடைவிட்டுச் சிந்தியிருந்தது; கற்களில் சிந்தியபோது சிதறிப் பக்கங்களில் தெறித்திருந்தது; சிலவிடங்களில் உதிரத்தை எறும்புகள் மொய்த்துக்கொண்டிருந்தன; சில இடங்களிலே கைரிகாதி தாதுக்களின் தூள்கள் படிந்து அதனால் அங்கே சிந்தின ரத்ததாரை தெரியாமல் மறைந்திருந்தது. அதைக்கண்டு அதுவே கருடன்சென்ற வழியெனத் தேர்ந்து அந்தநாகம் அவ்வழியே கருடன் இடம் போகவேண்டுமென நினைத்துப் போகப்புறப்பட்டது.

இது இவ்வாறிருக்க, ஜீமூதவாகனன் கடற்கரையிலிருப்பதாகக் கேள்வியுற்ற விசுவாவசு, அந்த இடம் அபாயகரமாகையால் எப்படியாகுமோ என்று மனதில் அச்சங்கொண்டு, அங்கிருந்து அவன் வீடுவந்துசேர்ந்தானு பார்த்துவா என்று தன் கஞ்சுகியை

ஜீமூதகேதுவின் ஆச்சிரமத்திற்கு அனுப்பினன். கஞ்சுகி அவ்வாச்சிரமம்போய்ப் பார்க்கும்பொழுது, ஜீமூதகேது, அவன் மனையாள், மலயவதி இவர்கள்மாத்திரமே அங்கே உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்; ஜீமூதவாஹனன்மாத்திரம் அவ்விடத்திலில்லை. வீட்டிற்குத் திரும்பாமலே அவன் கருடனுக்கு இரையாயினனே; வீட்டில் எவ்வாறு காணப்படுவான்! அப்பொழுது ஜீமூதகேது நாம், யௌவன காலத்தில் திருப்தியாய்ப் பற்பலசுகங்களையும் அநுபவித்தாயிற்று; நீதிமுறை வழுவாது அரசு செலுத்தியாயிற்று; கீர்த்தியும் சம்பாதித்தோம்; லோகோத்தரனான புதல்வனைப் பெற்றோம்; தகுந்த நாட்டுப்பெண்ணும் வீட்டிற்கு வந்தாள்; இனி நமக்கு வேண்டுவது யாதொன்றுமில்லை, நாம் எதிர்பார்க்கவேண்டுவது மரணமொன்றுதான் எனப் பேசிக்கொண்டிருந்தான். அந்தப்பேச்சு முடிவதற்குமுன்னமே கஞ்சுகி ஓடிவந்து, 'ஜீமூதவாகனன்' என்றான். ஜீமூதகேது 'மரணம்' என்றவுடனே, கஞ்சுகி 'ஜீமூதவாகனன்' என்னவே, அது ஜீமூதவாகனனுடைய மரணம் என்ற ஒரு உபசுருதியாயினதுகண்டு, ஜீமூதகேதுவும் கிழவியும் மலயவதியும் அஞ்சி நடுங்கினார்கள்.

ஜீமூதகேது அதைக்கேட்டு, என்னடா சொல்லுகின்றாயென, கஞ்சுகி, ஜீமூதவாஹனன் இவ்விடத்திலிருக்கிறாராவென்று விசாரித்துவரும்படி மஹாராஜா என்னை அனுப்பினார் என்றான்.

அப்பொழுது அவர்களுக்குள் அங்குநடந்த ஸம்பாஷணையாவது:—

ஜீமூதகேது: நமதுகுமாரன் அவ்விடத்திலில்லையோ?

கிழவி: அங்கே யில்லையாயின் பின் எங்கே போயிருப்பான்?

ஜீமூதகேது: நமக்கு ஆஹாரத்திற்காகக் காய் கிழங்குகள் கொண்டுவரப் போயிருக்கலாம்.

மலயவதி: என் பிராணநாதர் இங்குமில்லை அங்குமில்லையென் பதைக்கேட்க என் நெஞ்சம் நடுங்குகின்றதே!

கஞ்சுகி: நான் மஹாராஜாவுக்கு என்ன மறுமொழிகூறுகின்றது?

ஜீமூதகேது: நானென்ன சொல்வேன்! எனது இடதுகண் அடிக்கடி துடிக்கின்றது, எனது அருமைப்புதல்வன் அபாயமின்றி உயிரோடிருக்கும்படி சூரியபகவான் கருணைபுரியவேண்டும்.

(இவ்வாறு இவர்கள் ஸம்பாஷணை செய்துகொண்டிருக்கும்பொழுது ஆகாயத்திலிருந்து ஒரு சூடாமணி ஜீமூதகேதுவின் காலில் வந்து விழுந்தது. அதைப்பார்த்து)

ஜீமூதகேது: இது நிணமும் உதிரமும்பட்டு நனைந்திருக்கின்றது; யாருடையதோ தெரியவில்லையே.

கிழவி: ஜீமூதவாகனனுடையதாயிருக்குமோ?

மலயவதி: தாம் அப்படி சந்தேகிக்கலாகாது.

கஞ்சுகி: அப்படி நினைக்கவேண்டாம், இங்கே கருடன் நாகங்களைப் புசிப்பது வழக்கம்; அவைகளில் ஒன்றின் மாணிக்கமாயிருக்கலாம்.

ஜீமூதகேது: நீ சொல்வதே உசிதமெனத்தோன்றுகின்றது.

கிழவி: சுநந்தா, ஒருவேளை இந்நேரம் ஜீமூதவாஹனன் மாமனார் வீட்டுக்கு வந்திருப்பான், நீ போய்ப் பார்த்துவா.

கஞ்சுகி: அப்படியேயென்று விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

இவர்கள் இவ்விதமாய்ச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ரத்த தாரையின் வழியே வைநதேயனிடம் சென்ற சங்கசூடன் தற்செயலாய் இவர்களுக்கெதிராகவே செல்லும்படி நேர்ந்தது. அப்பொழுது அது ஜீமூதவாகனனுடைய நற்குணங்களை நினைத்துக் கதறிப் புலம்பிக்கொண்டேபோயிற்று. அந்த நாகம் அவ்வாறு அழுதுகொண்டுபோவதைப் பார்த்து அதனுடைய சூடாமணியே தமது கையில் அகப்பட்டது என்று அவர்கள் எண்ணினார்கள்.

(சங்கசூடனுக்கும் அவர்களுக்கும் நடந்த ஸம்பாஷணை.)

ஜீமூதகேது: மகனே ஏன் அழுகின்றாய்?

சங்கசூடன்: மகாபிரபுவே, வார்த்தைசொல்ல நாவெழவில்லை, துக்கம் அதிகமாகி வாய் குளறுகின்றது.

ஜீமூதகேது: விசனமுறாதே; வாய்ச்சொல்லை விளங்க உரைப்பாயாக. நான் இப்போது புத்திரசோகத்தில் ஆழ்ந்திருக்கிறேன்; உனது துக்கத்தைக் கேட்பதனாலாயினும் என்துக்கம் சிறிது ஆறுமோ பார்ப்போம்.

சங்கசூடன்: ஸ்வாமி, இந்தத் துக்கச்செய்தியைச் சொல்லவா நான் பிள்ளைபிறந்தேன். நான் நாகவம்சத்தில் பிறந்தவன், என் பெயர் சங்கசூடன்; கருடனுக்கு உணவாகும்பொருட்டு எங்கள் அரசன் இன்று என்னை அனுப்பினார். இந்தச் சரிதத்தை விரித்து உரைப்பதனால் வீணே காலம் கழிகின்றது; தூளிகள் கிளம்பி இந்த உதிரதாரை மறைந்துபோகும், சுருக்கமாய் சொல்லுகின்றேன்: நான் சுவாமி தரிசனத்துக்காக அங்கிருந்து கோகர்ணக்ஷேத்திரம் சென்ற தருணமறிந்து யாரோ வித்தியாதர ராஜகுமாரன் தன்னைக் கருடனுக்கு ஆஹாரமாக்கிக்கொண்டார்; பெரும்பாவியான நான் அதற்காகவே அந்தக் கருடனிடம் ஓடுகின்றேன்.

ஜீமூதகேது: யாரோ என்று சந்தேகமாய்ச் சொல்வானேன்; ஜீமூதவாகனனென்று சொல். வேறுயார் இவ்வாறு உயிரையும் ஒருபொருளாய் எண்ணாமல் உதவிபுரியத் துணிவார்கள்? ஐயோ ஜீமூதவாகனா!

கிழவி: குழந்தாய், யாதுசெய்யத் துணிந்தாயடா?

மலயவதி: ஐயோ, நான் சங்கித்தது மெய்யாகவே முடிந்ததே என்றாள். உடனே அவர்கள் எல்லோரும் மதிமயங்கி மூர்ச்சையை

டடந்தார்கள். அதுகண்டு சங்கசூடன், இவர்கள் அவன் தாய் தந்தையரும் இவள் இல்லாளுமாயிருக்கின்றார்கள். ஆகா, கொடும் பாவியான என்னொருவனுக்காக இவர்கள் இத்தனைபேருக்கும் இவ்வளவு ஆபத்து நேரும்படியாயினதே. ஐயோ பாபம்! எதுமறியாத இச்சிறுமகள் கணவனையிழந்து கோவென்று கதறுகிறாள். நம்மைக் காப்பாற்றும்பொருட்டுத் தன் பிராணனைக்கொடுத்த ஜீமூதவாகனனுக்கு நாம் செய்யத்தக்க பிரதிஉபகாரம் என்ன இருக்கிறது; இப்போதே நாமும் உயிர்நீத்துவிடுவது நன்று; நல்லது, முதலில் இவர்களுக்குக் கொஞ்சம் தேற்றாவுசொல்லிப் பிறகு யோசிக்கலாமென்று கருதி அவர்களுக்குச் சீதோபசாரம்செய்தது; அவர்களும் சிறிது மூர்ச்சைதெளிந்து எழுந்தார்கள்.

கிழவி: மருமகளைநோக்கி, குழந்தாய் கதறவேண்டாம், நாம் ஜீமூதவாகனனை விட்டுப் பிரிந்திருக்கப்போகிறோமோ, இல்லையே! என்றாள்.

ஜீமூதகேது: ஹா வத்ஸா, உனது பிதுருபக்திக்கு மெச்சுகின்றேன்; பரலோகம் போகும்பொழுதும் நீ நம்மை அடிபணிவதற்குப் பதிலாக உன் சூடாமணியை நமது பாதத்தண்டையில் விடுத்தாயன்றோ; பாலகா, இவ்வளவுதானோ உன் தரிசனம்!

கிழவி: பாலகா, நீ உன் பிதாவுக்குப் பணிவிடைசெய்வதை விட வேறெந்தச் சுகத்தையும் மேலாக மதித்தவனன்றே; இதற்காகவே ராஜ்யத்தையும் துறந்து வனத்திற்கு வந்தாயே; இப்போது உன் தகப்பனைத் தனியேவிட்டுப் போக உனக்கு எப்படி மனம் துணிந்தது மகனே!

ஜீமூதகேது: நீ எதிப்படி புலம்புகின்றாய்; வேண்டாம், நாம் நிமிஷப்பொழுதில் ஜீமூதவாகனனிடம் போய்ச் சேரப்போகின்றோமே.

மலயவதி: அம்மா, என் பிராணநாதருடைய சூடாமணியை எனக்குத் தயைசெய்து தந்தருளவேண்டுகின்றேன்; அதை நான் மார்பில் அணைத்துக்கொண்டு அக்கினிப்பிரவேசம்செய்து என் துக்கம் ஆறுகிறேன்.

கிழவி: குழந்தாய் என்கண்மணியே எல்லோரும் அப்படியே செய்வோம்.

ஜீமூதகேது: ஆஹிதாக்கினி (அக்கினிஹோத்திரம் செய்பவன்) யை வேறு நெருப்பினால் ஸம்ஸ்காரம் செய்யக்கூடாதென்பார்களே; ஆதலின் நமது ஓமாக்கினியை எடுத்துவந்து சிதைசெய்து நாம் அந்தத்தீயில் குளித்துவிடுவோம்.

சங்கசூடன்: ஸ்வாமி, தீரயோசியாமல் ஒன்றும் செய்யக்கூடாது; ஒருகால் இவர் நாகமல்லவென்று தெரிந்து கருடன் அவரை விட்டுவிடக்கூடும்; ஆதலின் எல்லோரும் அவ்விடம் போய்ப்பார்ப்பது நல்லதென்று என் சிற்றறிவுக்குத் தோன்றுகிறது.

மலயவதி: அப்படிப்பட்ட நல்லகாலங்கூட இனி நமக்கு உண்டாகுமோ!

ஜீமூதகேது: பிள்ளாய், நீ சொல்லுவது சரியே, ஆயினும் அக்கினியையும் கூடவே எடுத்துக்கொண்டு போகவேண்டும்; நான் அக்கினியை யெடுத்துக்கொண்டுவருகிறேன். நீ முன்னேபோ; நாங்கள் பின்னே வருகிறோம் என்றான். அவர்கள் ஆச்சிரமத்திற்குச் சென்றார்கள். சங்கசூடன் விரைவாய்க் கருடனிருப்பிடத்துக்கு ஓடினது.

இது நிற்க; ஜீமூதவாகனனைப் புஜிப்பதின்பொருட்டு எடுத்துக்கொண்டு வானத்திற்சென்ற கருடன் கதையைக் கேளுங்கள்: அது அந்த உத்தமனைப் புஜிக்கும்பொழுது, அவ்விறைச்சி அது வரையில் தான் புஜித்த மற்ற நாகங்களின் மாம்ஸம்போலன்றி வேறு வகையாய்த் தோன்றினமையாலும், அதிகமாய் உதிரத்தைக் குடிக்கையிலும் மாம்ஸத்தைப்பிடுங்கிப் புஜிக்கையிலும் அவன் தைரியம் கைவிடாமலும், வேதனையை வெளிக்காட்டாமலுமிருந்ததுமன்றி அவ்வளவு கொடுமைசெய்கையிலும் பரமோபகாரியைப் பிரீதியோடே பார்ப்பதுபோலப் பார்த்துக்கொண்டிருந்ததனாலும் இவன் யாரோ மஹாபுருஷனாயிருக்கவேண்டும், இவனைச் சற்று விசாரிப்போமென்று நினைத்து, பட்சிராஜன் பட்சிப்பதைநிறுத்திவிட்டுச் சும்மா இருந்தது.

அதைக்கண்ட ஜீமூதவாகனன், கருடபகவானே, இன்னும் என் உடம்பில் உதிரமும் மாம்ஸமும் மிகுதியாயிருக்கின்றன, உமக்கும் பசியாறவில்லையே; என்னை அருந்தாமல் இவ்வளவோடு நிறுத்திவிட்டதின் காரணமென்ன என்று வினவினன். அதைக்கேட்டுக் கருடன், நான் உன் மார்பைப்பிளந்து ரத்தத்தைக் குடிக்கையிலும் நீ தைரியம் தவறாமலிருக்கின்றாயே, நீ யாரென்று வினவ விரும்புகின்றேன் என்ன, ஜீமூதவாகனன், நீ பசித்திருப்பதால் இந்த சமயத்தில் வீண்பேச்சுகள்பேசிப் பொழுதுபோக்க எனக்கு இஷ்டமில்லை, உசிதமுமன்று; நீ என் உதிரமாம்ஸங்களைத் தின்று திருப்தியாய்ப் பசிதீர்த்துக்கொள் என்றான்.

இதற்குள் சங்கசூடன், கருடபகவானே, நீர் அவசரப்பட்டு அநியாயம்செய்யவேண்டாம்; அவர் நாகமன்று. வாசுகி உமக்கு உணவாகும்படி அனுப்பினது என்னையன்றோ? அது தெரியாமல் யாரோ ஒரு உத்தமபுருஷனைப் பிடித்துக்கொண்டு போகின்றீரே; அவரை விட்டுவிட்டு என்னைப் புஜிக்கவேண்டும் என்று கூவிக்கொண்டே எதிரில்வந்துநின்றது. அதுகண்டு தன் மனோரதம் நிறைவேறுவதற்கு இடையூறாகச் சங்கசூடன் வந்துவிட்டானேயென்று ஜீமூதவாஹனன் சித்தம் சஞ்சலமுற்று நின்றான்.

கருடன் அதைக்கேட்டுக் கலக்கமுற்று, உங்களிருவருக்கும்

கொலைக்குறியான மஞ்சட்போர்வை இருப்பதால் இன்னார் நாக மென்று நிச்சயிக்கமுடியாமல் மோசம்போனேன் என்று விசன மடைந்தது.

சங்கசூடன், ஸ்வாமி, நீர் சொல்லுவது ஆச்சரியமாயிருக்கின் றது, நரர்களுக்கும் நாகங்களுக்கும் வேற்றுமை கண்டுகொள்வது கடி னமோ? என் மார்பில் பாம்புகளுக்குள்ள ரேகை இருக்கின்றது; நான் வார்த்தைசொல்லுகையில், நாக்கு இரண்டாயிருப்பது தெரி யவருகிறது; இதோ படம் இருக்கின்றது, இவையெல்லாம் நாகங் களின் அறிகுறியல்லவோ என்று தன்படத்தைக் காட்டியது.

கருடன் சங்கசூடனது படத்தைப்பார்த்து, ஓ! நான் மோசம் போனேன், இவர் யார் என்றுகேட்க, சங்கசூடன், வித்தியாதர குலதிலகராகிய ஜீமூதவாஹனன் என்றது.

பக்ஷிராஜன் அதைச் செவியுற்றமாத்திரத்தில், ஐயோ, நான் கொடும்பாவியாயினேனே! பரோபகாரியான இம்மகானுபாவனை வீணே புசித்துப் பெரும்பழிக்கு ஆளானேனே; இந்தப் பாவம் செய்த யான் அக்கினிப்பிரவேசம் செய்தாலல்லது இனி நற்கதி யடையமாட்டேன்; இந்த மலயபர்வதத்தில் அக்கினி எங்கே அகப் படுமென்று நாற்புறமும் பார்த்தது. இதற்குள் முன் வீட்டிற்குப் போன ஜீமூதகேதுமுதலியவர்கள் அக்கினியும் கையுமாய் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வரும்போது, பாலகா, ஜீமூதவா கனு! என்று புலம்பிக்கொண்டேவந்தார்கள். அதுகண்டு கருடன் அவர்கள் ஜீமூதவாகனனுடைய தாய்தந்தையரென்றறிந்து, அவர்கள் எதிரே போய் நின்று அக்கினியை யாசிக்கவெட்கி, அருகிலுள்ள கடலிலே விழுந்து உயிர்நீத்துப் பழிதீர்த்துக்கொள்ளவேண்டுமென நிச்சயித்துப் புறப்பட்டது.

ஜீமூதவாகனன் அதுகண்டு கருடனே, நீர் செய்யநினைத்தது இந்தப்பாபத்திற்கு ஒருகாலும் பிராயச்சித்தமாகாது என்றுசொல்ல, கருடன், ஆனால் அதற்கு எது பிராயச்சித்தமோ அதைத் தெரி வித்து அடியேனைப் புனிதனாக்கவேண்டுமென்று வணங்கிக் கைகூ ப்பிநின்றது. இதற்குள் ஜீமூதகேதுவும் அவன் மனையாளும் மலயவதி யும் அருகே வந்துசேர்ந்தார்கள்.

அவர்களைக் கண்ட ஜீமூதவாகனன், பட்சிராஜனே, என் தாய் தந் தையர் இதோ வருகின்றார்கள், சற்றுப் பொறும்; சொல்லுகிறேன் என்று உரைக்க, கருடன் அப்படியேயென்று கைகூப்பியபடியே நின்றுகொண்டிருந்தது.

தன் செல்வப்புதல்வன் சீவனோடிருப்பது மாத்திரமன்றிக் கரு டன் அருகே கைகூப்பி நின்றுகொண்டிருப்பதையும் கண்ட ஜீமூத கேது அளவிறந்த சந்தோஷம் அடைந்தான். தன் அருமை மகன் உயிரோடு இருக்கக்கண்டதைப்பற்றிக் கிழவி மிகவும் களிப்படை ந்தாள். மலயவதியோ தன் பிராணநாயகன் ஜீவித்திருக்கிறானென்

பதைக் கண்ணாரக்கண்டும், அதுவிஷயத்தில் நம்பிக்கைகொள்ளாதவளாயினாள். அதிக ஆதரவு என்றும் அபாயத்தையே சிந்திக்கச்செய்யும் என்பது உலகவழக்கமாதலின், அதன்படியே மலயவதி சிந்தித்துக்கொண்டேயிருந்தாள். தன் தாய்தந்தையர் நெருங்கி வந்துவிடக் கண்ட ஜீமூதவாகனன் அவர்களைத் தண்டன்சமர்ப்பிக்கும்படி யெழுந்தான். போர்வை கீழே விழுந்துவிட்டது; அவன் உடனே மூர்ச்சித்துக் கீழேவிழுந்தான். ஓகோ அபாயம்வந்துவிட்டதேயென்று, அதுகண்ட சங்கசூடன் சீதோபசாரம் செய்யத்தொடங்கினான். ஜீமூதகேது, வத்ஸா, நீ என்னைப்பார்த்து வந்தனஞ் செய்யாமல் இப்படி ஒருநாளும் இருந்ததில்லையே, இப்போது உனக்கு என்ன விபத்து வந்துவிட்டதடா என்று புலம்பினான். கிழவி, குழந்தாய், நீ என்னைப்பார்த்து இன்சொற்சொல்லாமல் ஒருபோதுமிருந்ததில்லையே, இப்பொழுது ஏனிப்படி மவுனமாயிருக்கிறாய் என்று கண்ணீர் விட்டுக் கதறியழுதாள். மலயவதியோ, நான் கொடும்பாவியானாலும் தமது தாய்தந்தையரையும் உபேக்ஷிக்கலாமோ பிராணநாதா என்று பரிதபித்து நின்றாள். இவ்வாறு அவர்கள் மூவரும் சோகஸாகரத்தில் மூழ்கி மூர்ச்சையடைந்தார்கள்.

இவற்றைக்கண்ட சங்கசூடன் தானொருவனேயன்றோ இவ்வளவு சங்கடத்திற்கும் காரணமானது என்று மிகவும் மனநொந்து, நான் பிறந்தவன்றே மாண்டுபோகாமல் ஏன் இதுவரையில் ஜீவித்திருந்தேன்; என்ன பாபஞ்செய்து இப்புவியில் வந்து பிறந்தேன் என்று தன்னைத்தானே வெறுத்துக்கொண்டிருந்தது.

கருடன் தான் நன்றாய் ஆலோசியாமல் செய்ததால் இத்தன்மையான துன்பங்கள் நேர்ந்தனவென்று நொந்து, தன் இறகுகளால் மெல்லக்காற்றுவரும்படி வீசிக் கிழவர்களைக் களைதெளியச் செய்தது.

கிழவி மூர்ச்சை தெளிந்தெழுந்தவுடனே, நாம் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே நமது அருமைமகனை யமதேவன் இழுத்துக்கொண்டுபோகிறானே, ஐயோ, இதென்ன அநியாயம் என, ஜீமூதவாகனன், அம்மா, அமங்களமான வார்த்தை ஒன்றையும் சொல்லாதேயென்று தடுத்தான்.

கிழவி ஜீமூதவாகனன் உடம்பைத் தடவிப்பார்த்து, பாவி கருடா, இச்சிறுவன் சரீரம் இப்பருவத்தில் எவ்வளவு சுகுமாரமாயிருந்தது; அதை இவ்வண்ணமாக்கிவிட்டாயே; அடா, உன் துணிவு என்னடா என்று வெறுத்துக்கூற, அதுகேட்டு ஜீமூதவாகனன், தாயே, கருடன்மேல் குற்றம் கூறவேண்டாம்; சற்றுயோசித்துபார். நிணம், எலும்பு, மாம்ஸம், உதிரம் இவைகளினால் உருவமைந்து தோலால் மூடப்பட்டிருக்கின்ற இவ்வுடலுக்கு அழகு எங்கிருந்து வந்தது. இதைப்போலக் காண்பதற்கு விகாரமானபொருள் வேறொன்றுமில்லை; அப்படியிருக்க இதுவிஷயத்தில் கருடன்செய்த சிறுமை என்ன இருக்கிறது. அன்றியும் இவ்வுடல் அழிவதைப்பற்றி அற்

பர் அகங்குழைவார்களேயன்றி உண்மையுணர்ந்தோர் அணுவள வேனும் அச்சம் கொள்ளார்கள் என்றான்.

"புழுவொளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோடு தற்கு."

அப்போது கருடன் ஜீமூதவாகனனை நோக்கி, மஹாபிரபு, கொடிய நரகத்தீயில்வீழ்ந்து தவிப்பவன்போல் நான் தவித்துக்கொண்டிருக்கிறேன்; எனக்குத் தகுந்த பிராயச்சித்தம் எதுவோ அதை உபதேசிக்கவேண்டும் என்று வருந்திக்கேட்க, ஜீமூதவாகனன், தாய் தந்தையரின் அனுமதி பெற்றுக்கொண்டு கருடனை நோக்கி, கருடா, நீ இனி ஜீவவதை செய்வதை ஒழித்துவிடவேண்டும்; இதுவரையில் செய்ததைப்பற்றி அனுதாபமுற்று இரங்கவேண்டும்; இனிமேல் கூடியவரையில் தீச்செயல்களையொழித்து நற்செயல்களைசெய்து புண்ணியம் தேடவேண்டும், எல்லா உயிர்களுக்கும் இதமானவைகளையே செய்யவேண்டும்; இவ்வாறு செய்துவந்தால் இனிப் பாவம்சேர இடமில்லாம லிருப்பதுமன்றி, இதுவே செய்த பாவத்திற்கும் பிராயச்சித்தமுமாகும் என்று உபதேசித்தான். மிகுந்த வணக்கத்துடன் அதைக்கேட்டு அப்படியே செய்வதாய்க் கருடன் ஒப்புக்கொள்ளவே ஜீமூதவாகனன் சந்தோஷித்து, சங்கசூடா, உன் தாய் உன்னைக்குறித்துச் சிந்தித்துச் சோகமுற்றுச் சிந்தைகலங்கி நிற்பாள்; உடனே வீடுபோய்ச்சேர்ந்து நீ அவளைச் சந்தோஷப்படுத்து என்றான். சங்கசூடன் அது கேட்டு, யாதும் பதில் சொல்லத் தெரியாமல் தலைகுனிந்துகொண்டிருந்தது. கிழவி அப்பொழுது, ஆ! கருடனுக்கு உணவாக அனுப்பப்பட்டும் சிறிதும் காயம் இல்லாமல் சுகமாய் வீடுபோய்ச்சேரும் பிள்ளையைப்பார்க்கப் பெற்ற தாய் செய்த தவமல்லவோ நல்லதவம் என்ன, அதைச் செவியுற்ற சங்கசூடன், ஆம், ஜீமூதவாகனன் சுகமாய்ப் பிழைத்தெழுந்தாலல்லவோ நீர் சொல்வது உண்மையாகும் என்றது. பரோபகாரம் செய்வதற்குத் தான் துவக்கிய காரியத்திலுள்ள ஊற்றத்தால் தேகத்திலுண்டான வேதனைகள் இதுவரையில் ஜீமூதவாகனனுக்குத் தெரியாமலேயிருந்தன. கடைசியில் முடிவுகாலம் சமீபித்து மரணவேதனை அதிகமாகவே, அவன் அந்த யாதனை பொறுக்கமுடியாமல் மிகவும் மெய்வருந்தலானான். அந்தச் சரமசமயத்தில் அவன் தன் தாய் தந்தையரை வந்தனம் செய்யக்கருதிக் கைகளை ஒன்றோடொன்று சேர்க்கமுயல, கையைத் தூக்கக்கூடாமற்போகவே, சங்கசூடனை நோக்கி, சங்கசூடா, என் கைகளை ஒன்றாய்ச்சேர் என்றான்.

சங்கசூடன் அதுகேட்டு மனந்துடித்து வாய்திறக்கமுடியாமல் கண்ணுங்கண்ணீருமாய் அப்படியே அவன் கைகளை ஒன்றாய்ச் சேர்க்க, ஜீமூதவாகனன் மாதாபிதாக்களை நோக்கி, என் அருமைப்

பிதாக்களே! இதோ நான் தங்களுக்குக் கடைசியாக என் வந்தனஞ் செலுத்துகிறேன். எனக்கு உடலைவிட்டு உயிர் நீங்குகிறதருணம் நெருங்கிவிட்டது; நீங்கள் சொல்வதொன்றும் என் காதுக்குக் கேட்கவில்லை; உடம்பு சோர்வுற்றது; கண்கள் பஞ்சடைந்து பார்வையற்றுப்போயின; நாவும் தழதழத்துப் பேசுந் திறமையற்றது; உயிரும் இருப்பிடம்விட்டு வெளிக்கிளம்பியது; இனி நான் வேண்டிக்கொள்ளத்தக்கது மற்றொன்றுமில்லை: நான் இப்பூமியில் இன்னும் எத்தனைதரம் பிறந்தாலும் பரோபகாரசிந்தையே மேலிட்டிருக்கின்ற புண்ணிய ஜன்மமே எனக்கு உண்டாகும்படி நீங்கள் அனுக்கிரகிக்கக்கடவீர்கள் என்றுசொல்லிக் கைகூப்பி வணங்கினன்.

அப்பொழுது அவன்படுகிற மரணவேதனையை நேரில் பார்த்துக்கொண்டுநின்ற அவன் பெற்றோர்களும் மலயவதியும் துக்கக்கடலில் ஆழ்ந்தவர்களாய், ஆ! இவன் இவ்வாறு தவித்துப் பிராணனை விடுவதற்கு இருக்கையிலும், நமது மனம் கல்லாகிச் சிறிதும் கரையாதிருக்கின்றதே; இத்தன்மையான துன்பங்களையனுபவிக்க நாம் என்ன பாதகஞ்செய்தோம்; இதற்காகவோ நாம் இப்பூமியில் வந்து பிறந்தோம் என்று பலவாறு புலம்பினர்கள். தாய் துக்கத்தினல் ஒன்றும்பேச நாவெழாமல் மறுபடியும் மூர்ச்சையடைந்தாள்.

இவர்கள் இவ்வாறு விசனமுற்றிருக்கையிலேயே ஜீமூதவாகனனது உயிர் உடலினின்றும் நீங்கிப்போய்விட்டது. அதுகண்ட சங்கசூடன் கோவென்று கதறிப்புலம்பி, இதோ, நானும் உமது பின்னே வந்துவிடுகிறேனென்றான். அதைக்கேட்டு மற்றவர்களும் புலம்பத்தொடங்கினர்கள்.

இதற்குள் தற்செயலாய் மூர்ச்சை தெளிந்தெழுந்த கிழவி தன்மகனைத் தடவிப்பார்த்துப் பிணமாயிருப்பதுகண்டு, ஓ பாலகா, பத்துமாதம் சுமந்துபெற்ற என் வயிற்றில் நல்ல தீயை மூட்டிக் கடைத்தேறச் செய்வதைவிட்டு இக்கொடிய சோகாக்கினியை மூட்டுவதற்கோ நீ மகனாய்ப்பிறந்தாய்! ஓ தேவர்காள், இவனைக் கொண்டுபோனவர்கள் கூடவே என்னையும் கொண்டுபோகலாகாதோ! இல்லாவிடின் தேவாமிர்தத்தையாயினும் கொண்டுவந்து இவன் மீது பொழிந்து பிழைப்பித்து எங்களுடைய பரிதாபத்தைப் போக்கலாகாதோ என்று கூவிக் கதறினள்.

ஐயோ! நாம் இந்தப் புண்ணியபுருஷனைக் கொன்று கொடும்பாவியானேமே; இதற்குச் செய்யவேண்டிய பரிகாரம் யாதென்று சோகமுற்றுச் சிந்தைகலங்கியிருந்த கருடன் அமிர்தமென்ற மொழியைக் கேட்டவுடனே மிகவும் மகிழ்ச்சிகொண்டு, இதோ, நான் ஒரு நொடியில் தேவலோகம்சென்று அமிர்தம் வாங்கிக்கொண்டுவருகின்றேன்; தேவர்கள் அதை நயந்துகொடுக்க உடன்படாராகில், முன் அமிர்தாபகாரம் செய்தவண்ணமே போர்புரிந்தாகிலும் கொள்ளை

யடித்துக்கொண்டு விரைவில்வந்து சேருவேன் என்று மனதில் நிச்சயித்துக்கொண்டு வெகுவேகமாய் வானத்திற் பறந்துசென்றது.

இதற்குள் ஜீமூதவாகனனுடைய தாய்தந்தையர்கள் சங்கசூடனைநோக்கி, மகனே, நீ எங்களுக்கு ஒரு பேருதவிசெய்யவேண்டும்; அதாவது, இந்தச் செல்வப்புதல்வன் ஒரு நிமிஷங்கூட எங்களைவிட்டுப் பிரிந்திருக்கப்பொறான்; இவனுடன்கூடவே நாங்களும் உயிர்நீத்துப்பரலோகஞ்செல்லத்துணிந்தோம்; எங்கள் எல்லோருக்கும் நீ சரியாய்ச் சிதையடுக்கித் தரவேண்டுமென்றார்கள்.

அதைக்கேட்ட சங்கசூடன், இதோ தங்கள் சித்தப்படியேசெய்துமுடிக்கச் சித்தமாயிருக்கிறேன்; ஆயின் உங்களுக்குமுன்னமே தீக்குளித்துவிடும்படி எனக்கு நீங்கள் அனுமதிதரவேண்டுமெனப் பிரார்த்தித்து, அவ்விடத்தில் சிந்திக்கிடந்த சந்தனக்கட்டைகளைச் சேர்த்துச் சிதையடுக்கினன். எல்லாம் சித்தமானபிறகு அவர்கள் அச்சிதையின்மேல் ஜீமூதவாகனனை யெடுத்துவிட்டுத் தீமூட்டிக் கூடவே தாமும் தீக்குளிக்க நிச்சயித்திருந்தார்கள்.

அப்பொழுது மலயவதியானவள் தன் அருமைக்கணவன் உயிரிழந்த துயரம் தாங்கமாட்டாமல், வானத்தைநோக்கிக் கைகூப்பி, ஓ, எங்கள் குலதெய்வமான அம்பிகாதேவி, ஆருட்கடலே, ஆபத்பந்துவே, உலகமாதாவே, வித்தியாதர சக்கரவர்த்தி ஒருவன் உனக்குக் கணவனாக வாய்ப்பானென்று அனுக்கிரகித்தாயே; நான் பண்ணிய பெரும்பாவத்தால் உனது பொய்யாமொழியும் பொய்த்துப் போகலாயிற்றே! நான் மாபாவியாய் இப்பிறவியில் ஒரு நன்மையையும் அனுபவிக்கப் பாக்கியம்பெற்றிலேனாயினும் மறுபிறவியிலாவது உன் வார்த்தை உண்மையாகும்படி உறுதியாய் அனுக்கிரகிக்கவேண்டுமென்று சொல்லிக் கதறிப்புலம்பினாள்.

கருணைக்கடலான அந்தக் குலதேவதையானவள் மலயவதியின் பரிதாபத்தைப் பார்க்கப்பொறாமல் உடனே அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாகி, என் வார்த்தை ஒருபோதும் வீணாகாது; இவனுடைய மனவுறுதியையும் உதாரகுணத்தையும் நன்றாய்ப் பரீக்ஷித்தறியும்பொருட்டு இவ்வாறு செய்ததேயன்றி மற்றப்படி அபாயமொன்றுமில்லை; அஞ்சவேண்டாமென்று அபயப்பிரதானஞ்செய்து ஜீமூதவாகனனுடலைத் தன் கையினால் தொட்டுத்தடவி, அருகிலிருந்த தெண்ணீரைச் சிறிது அவன்மேல் தெளித்து,

"நிஜென ஜீவிதெநாவி ஜமதா ஊவகாரிணঃ।
வரிதுஷ்டாஸ்மி தெவத்ஸ ஜீவ ஜீமூதவாஹந॥"

"தன்னுயிரைத் தந்துந் தரணிதனைத் தாங்கியிடும்
மன்னுபுகழ்ச் சீமூத வாகனனே—மன்னு
வியப்புமிகு முன்குணத்தை வேண்டிமகிழ் வுற்றேன்
உயிர்த்தெழுவா யுத்தமனே நீ."

என்று அனுக்கிரகித்தாள். அந்தக்ஷணமே அவன் வச்சிரதேகமாய்த்

தான் ராச்சியபாரத்தைப்பற்றிய விசாரம் சிறிதுமின்றிச் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான்.

ஜமதக்கினி முனிவரின் ஆச்சிரமத்தில் உதயனனால் விடுவிக்கப்பட்ட நாகமானது வாசுகி என்னும் நாகராஜனுடைய மூத்தமகன். அதன்பெயர் வசுநேமி. அது பாதாளலோகம்போய்ச் சேர்ந்தவுடனே தன்னை வேடன் மந்திரத்தினால் தடைகட்டிப் பிடித்துக்கொண்டுபோனதும், உதயனன் விடுவித்ததுமாகிய கதைகளைத் தந்தையினிடம் தெரிவித்தது. அதுகேட்டு வாசுகி தன் குமாரனை விடுவித்த தயாகுண சீலனான உதயனனைத் தம்மிடம் வரவழைத்து எற்றமரியாதை செய்விக்கவேண்டுமென்று தக்கதருணத்தை எதிர்பார்த்திருந்தது.

இவ்வாறிருக்க ஒருநாள் உதயனன் தன் மந்திரிகளோடு காட்டிற்கு வேட்டமாடச் சென்றிருந்தான். அத்தருணமறிந்து அவனைப் பாதாளலோகத்திற்கு அழைத்துவரும்படி வாசுகி தன் மகன் வசுநேமியை அவ்விடம் அனுப்ப,வசுநேமி உதயனன் வரும்வழியில் நின்று காத்திருந்தது. தன்னருகே உதயனன் வந்தஉடனே வழியே காத்திருந்த வசுநேமி தன் வரலாற்றைத் தெரிவித்து, தன் பிதாவின் உத்தரவின்படி பாதாளலோகத்திற்கு அழைத்துப்போகத் தான் வந்திருப்பதாக உரைத்து உதயனனை வரும்படி வேண்டி அழைத்தது. இச்செய்தியைச் செவியுற்ற உதயனன் சந்தோஷமடைந்து அதைத் தன் தாய்தந்தையர்களுக்குச் சொல்லும்படி மந்திரிமார்களை அனுப்பிவிட்டு, தானொருவனாகவே வாசுகிமைந்தனுடன் பாதாளலோகத்திற்குச் சென்றான்.

வாசுகி உதயனனைக் கண்டவுடனே அவனை மிகவும் கொண்டாடி அவனுக்குப் பல மரியாதைகள் செய்து, தன் புத்திரனை வேடனிடத்தினின்றும் விடுவித்ததற்காக அவனை மிகவும் புகழ்ந்து சகல உபசாரங்களுடன் சிலநாள் தன்னிடம் வைத்துக்கொண்டிருந்து, நன்றாக வீணைவாசிக்கப்பயிற்றுவித்து, கோஷவதி என்னும் தன் வீணையையும் அவனுக்கு வெகுமதியாயளித்து, என்றும் உலராதிருக்கும்படி திலகம் இடும்விதத்தையும், என்றும் வாடாமல் மாலைகட்டும் வகையையும் கற்றுக்கொடுத்து, மரகதம் மாணிக்கம் முதலியமணிகளும் பலவாய்ப் பரிசளித்து அனுப்பியது. உதயனன் பாதாளலோகத்தில் வாசம்செய்யும்போது வாசுகியினிடத்திலேயே விஷவைத்தியமும் நன்றாய்ப் பயிற்சிசெய்துகொண்டான்.

இவன் தாய்தந்தையர்கள் மந்திரி புத்திரர்களின்முகமாய் மகன் பாதாளலோகத்திற்குச்சென்ற செய்தி கேள்வியுற்று எப்போ திரும்பிவருவானென்று அவன் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். உதயனன் திரும்பிக் கௌசாம்பிநகரம் வந்துசேர்ந்து தான் பாதாளலோகம்சென்ற வரலாற்றையும் அங்கே தனக்கு நேர்ந்த உபசாரங்களின் பெருமைகளையும் விவரமாய் எடுத்துக்கூறித் தன்

மாதாபிதாக்களையும் மற்றவர்களையும் மிகவும் மனமகிழச்செய்தான். இவ்வாறிருக்க நாளளவிலே ஸஹஸ்ராநீகனுக்கு மூப்புமேலிட்டது. அதனால் அவன் தன் குமாரனுக்குப் பட்டாபிஷேகம்செய்து தன் பத்தினியாகிய மிருகாவதியுடன் மந்திரிமார்களையும் அழைத்துக் கொண்டு தவம்செய்யும்படி இமயமலைச்சாரலுக்குச் சென்றான்.

பிறகு உதயனமகாராஜன் யௌகந்தராயணனை முதன் மந்திரி யாகவும், ருமண்வானைப் பிரதான சேனாபதியாகவும், வஸந்தகனை எப்பொழுதும் தன்னுடன் இருக்கும் தோழனாகவும் ஏற்படுத்திக் கொண்டு மனுநீதிமுறை வழுவாமல் கௌசாம்பீ நகரத்திலிருந்து கொண்டே அரசுசெலுத்திவந்தான். இவன் வத்ஸதேசத்தை வெகு சிறப்புடன் பாதுகாத்துவந்தமையால் இவனுக்கு வத்ஸராஜனென்று பெயர் வழங்கலாயிற்று. இவ்வாறே சிலகாலம் சென்றது. பிறகு உதயனன் யௌகந்தராயணனையும் ருமண்வானையுமே ராஜகாரியங்க ளைப்பார்த்துவரும்படி நியமித்து வஸந்தகனுடன் அடிக்கடி வேட் டையாடும்படி காட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான். அக்காலங் களில் அவன் செய்வது யாதெனில், ஜந்துவதையொன்றும் செய்வ தில்லை; அரணியத்திலே போயிருந்து வாசுகிகொடுத்த கோஷ வதி என்கிற வீணையை வாசிப்பான். அதைக்கேட்க மதயானைகள் கும்பல் கும்பலாய் ஓடிவரும்; அவைகளைப் பிடித்துக்கட்டிஅடக்கித் தன் நகரத்துக்குக் கொண்டுவருவான். அவன் இவ்வாறு எப்பொழு தும் யானை வேட்டையிலேயே விருப்பமுள்ளவனாகி அதிகமாய் இராச்சியத்தில் தங்காமல் வனத்திலேயே வாசமாயிருந்தான்.

வத்ஸராஜன் வாஸவதத்தையை மணம்புரிந்தது.

இவ்வாறிருக்கையில் யௌகந்தராயணன் அரசனுக்குத்தகுந்த ஒரு ராஜகன்னிகையைத்தேடி விவாகம் செய்விக்க வேண்டுமென்று விசாரித்துக்கொண்டேயிருந்தான். விசாரிக்கையில் உஜ்ஜயினீஅரசனா கிய பிரத்தியோதன் என்பவனுக்கு வாஸவதத்தை என்று ஒரு மகள் உண்டென்றும், அவள்தான் உதயனனுக்கு ஏற்றவளென்றும் தெரி யவந்தது. அவளை அரசனுக்கு விவாகம் செய்விக்கவேண்டிய விஷ யத்தைப் பற்றி மந்திரிமார் ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள்.

உஜ்ஜயினீ அரசனாகிய பிரத்தியோதராஜன் தேவேந்திரபூஜைசெ ய்து அந்தப்புதல்வியைப்பெற்றான். தேவேந்திரன் அனுக்கிரகத்தால் ஜனித்தமைபற்றி அவளுக்கு வாஸவதத்தை (இந்திரனால் அளிக் கப்பட்டவள்) என்று பெயரிடப்பட்டது. இவளுக்கு மூத்தவர் களாய் கோபாலன், பாலகனென்று அவனுக்கு இரண்டு புத்திரர் உண்டு.

அவன் தவம்புரிந்து காளிகாதேவியின் அனுக்கிரகம்பெற்றுப் போர்க்களத்தில் தனக்கு ஒருநாளும் தோல்விவாராதிருக்கும்படி வரம்பெற்றவன். அவன் வாலிபத்தில் வெகுகாலம் மகிஷாசுரமர்த்

தினியைக்குறித்துத் தவம்புரிந்தான். எத்தனைநாள் தவம்செய்தும் அவள் பிரஸன்னை ஆகாமலிருப்பது கண்டு தன் தேஹத்தையே அறுத்து அந்த மாமிசத்தால் ஓமம்செய்யத் தொடங்கினன். அதுகண்டு தேவி அவன் ஸாஹஸத்திற்கு மிகவும் மெச்சிப் பிரஸன்னையாகி ஒரு அற்புதமான கட்காயுதத்தை அவனுக்குத் தந்தருளினுள்.

அவ்வரசன் தனக்கு யௌவநவயதுவந்தபிறகு தகுந்த பத்தினியைத் தேடவேண்டுமென்று சிந்தித்துக்கொண்டே வெகுகாலம் கழித்தான். அவன் ஒருநாள் வேட்டைக்காகக் காட்டிற்குப் போயிருந்த போழ்து அங்கே ஒரு பெரும் பன்றியைக் கண்டு அதை வெகுதூரம் தூரத்திக்கொண்டு சென்ருன். கடைசியில் அது அவன்கையில் அகப்படாமலே ஒரு குகைவழியாக நுழைந்து கண்காணுமல் போய்விட்டது. அரசன் அதன்பின்னே குகைக்குள் நுழைந்துபார்த்தான்; பன்றி காணப்படவில்லை. வெகுதூரம் பன்றியைத்தூரத்தி ஓடிவந்த வருத்தத்தால் தாகம் எடுத்து அவன் அருகே இருந்த ஒரு சிங்காரவனத்தில் புகுந்து அங்குள்ள பொய்கையில் நீராடித் தாகசாந்தி செய்துகொண்டு ஒரு மரத்தடியில் உட்காந்தான்.

அத்தருணத்தில் ஒரு கன்னிகை தன் தோழிமார்களுடன் அந்தப் பொய்கையில் நீர் விளையாட வந்தாள். அவளது ரூபலாவண்ணியம் முதலியவைகளைக் கண்டு பிரத்தியோதராஜன் மனமகிழ்ந்து, அவள் கன்னிகையாயுமிருப்பதால் அவளையே தான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென நிச்சயித்தான்.

அவ்வணங்கும் இவனைப் பார்த்த உடனே மோகித்து இவனையே தனக்குக் கணவனுக மனதில் வரித்துக்கொண்டாள். பிறகு ஸ்நாநம் முதலிய தான் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடித்துக் கொண்டு அக்கன்னிகை இவன் அருகில் வந்து வணங்கிநின்று இவன் வரலாற்றை விசாரிக்கலானுள். அவ்வாறே அவன் தான் வந்தசெய்திகளை ஆதியோடந்தமாய் எடுத்துக்கூற, அவள் அதைக் கேட்டவுடன் சிந்தைகலங்கி முகம்வாடிநின்ருள். அதுகண்டு அரசன் என்ன யோசிக்கிருயென்று வினவ, கன்னிகை, ஸ்வாமி, தாம் ஒரு பன்றியைப் பின்தொடர்ந்துவந்ததாய்ப் புகன்றீரே; அவர் என் தகப்பனுர்; அசுரகோடியிற் சேர்ந்தவர். அவருக்கு அங்காரகனென்று பெயர்; நான் அவர் மகள்; அங்காரவதி என்பது என் பெயர். நான் தம்மைப் பார்த்தஉடனே மனதினல் தம்மையே பர்த்தாவாக வரித்துவிட்டேன்; என் தந்தை இப்போது உறங்கிக்கொண்டிருக்கிருர்; அவர் எழுந்துவந்தஉடனே தம்மைத் தூரத்திவந்து மிகவும் துன்பப்படுத்துவாரே; இதற்கு என்ன செய்கிறதென்பதற்காகவே விசனப்படுகிறேன் என்று கூறினுள்.

அதுகேட்டுப் பிரத்தியோதராஜன் ஆயின், இதற்காக நீ சிந்திக்க வேண்டாம்; நான் சொல்லுகிறபடி கேள்: நீ இப்பொழுதே உன் தகப்பனுரிடம் சென்று பக்கத்தில் உட்காந்திரு; அவர் தூங்கி எழுந்

திருக்கும்போழ்து நீ அழுதுகொண்டேயிரு; எழுந்தவுடனே என் அழுகிறுயென்று அவர் கேட்பார்; உமது காலத்துக்குப்பிறகு என்னைக் காப்பாற்றுவாரில்லையேஎன நினைத்து விசனப்படுகிறேன் என்று சொல்; அதற்குமேல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று உரைத்து, தான் அவளுடன் சென்று அவன் படுத்திருந்த இடத்திற்குச் சமீபத்தில் மறைவாக நின்றுகொண்டான். அங்காரவதி தகப்பனருகேபோய் உட்காந்தாள். உட்காந்த சிறிதுநேரத்தில் அவன் நித்திரைதெளிந்தெழுந்தான். உடனே அரசன் உரைத்திருந்த உபாயத்தின்படியே அங்காரவதி அழத்தொடங்கினுள். அதுகண்டு அசுரன், மகளே நீ ஏன் அழுகிறுயென்று வினவ, அம்மகள், நீர் என்னை மிகப் பிரீதியுடன் பெருமையாய்ப் போற்றி வளர்த்துவருகின்றீர், உமதுகாலத்திற்குப்பிறகு நான் என்னகதியாகிறது என்று அதற்காகவே விசாரப்படுகிறேனென்று கூறினுள்.

அதைக்கேட்டு அங்காரகன் குலுங்க நகைத்து, குழந்தாய், நீ இவ்வாறு அச்சமுற்று வீணே விசாரப்படவேண்டாம்; என்னைக் கொல்ல ஒருவராலும் ஆகாது, எனது இடதுகையில் ஒரு துவாரம் உண்டு, அதில் அம்பையெய்து அடித்தாலல்லது நான் உயிரிழக்க மாட்டேன், அந்தத்துளையை எப்போதும் எனது வில் மறைத்துக் கொண்டேயிருக்கின்றது, ஆதலின் எனக்கு எந்நாளும் மரணம் நேரிடப்போகிறதில்லை; நீ அஞ்சவேண்டாம் என்றுசொல்லித் தேற்றிவிட்டு, ஸ்நாநம்செய்து மௌனவிரதத்துடனே தேவபூஜை செய்யத்தொடங்கினுன்.

அங்காரகனது உயிர்நிலை யின்னதென்பதை அவன் வாய் மொழியினுலேயே கேட்டறிந்து, அவனைக் கொலைபுரியக் காத்திருந்த பிரத்தியோதராஜன், அதற்கு அவன் தேவபூஜை செய்கிற சமயமே ஏற்றதருணமென உணர்ந்து, வில்லுங் கையுமாய் எதிரேபோய்நின்று அவ்வசுரனை யுத்தத்திற்குவரும்படி அழைத்தான். சற்றுப்பொறுக்கும்படி அசுரன் இடதுகையை அமர்த்திக்கேட்டான். பிரத்தியோதன் அந்தத் தருணங்கண்டு வெகு விரைவாய் அந்தக் காத்திலுள்ள துவாரத்தில் அநேகம் பகழிகளைப் பிரயோகம்செய்ய, அதனுல் அங்காரகாசுரன் அடிபட்டுப் பிராணஸம்சயத்தை அடைந்தான்; ஆயினும் பிரத்தியோதனது தைரியத்தைக்கண்டு மிகவும் கொண்டாடித் தன் மகளை அவனுக்குத்தானே கன்னிகாதானம் செய்து கொடுத்துத் தன் கைப்பொருள் அனைத்தையும் அவனுக்கே சீதனமாகக்கொடுத்துவிட்டான். பிறகு, தான் தாகித்திருக்கையில் தன்னைக் கொன்றபடியால் வருஷந்தோறும் தனக்கு ஜலஸந்தர்ப்பணம் செய்துகொண்டுவரவேண்டுமெனவும், அவ்வாறு செய்யத்தவறினுல் பிரதி வருஷம் ஐந்துமந்திரிகள் மாண்டுபோவார்களெனவும் சொல்லிவிட்டு அவன் உயிரையிழந்தான்.

பிரத்தியோதராஜன் பிறகு அவனுக்குச் செய்யவேண்டிய உத்தர

கிரியைகளை முறையேசெய்து முடித்துவிட்டு அங்காரவதியை மணம் புரிந்து அங்குள்ள தனங்கள்யாவும் எடுத்துக்கொண்டு தன்னூருக்குச்சென்று சுகமாயிருந்தான். அவளிடத்திலேதான் பிரத்தியோத ராஜனுக்குக் கோபாலன் பாலகன் வாஸவதத்தை எனும் மூன்று மக்களும் பிறந்தனர். அன்றியும் அவ்வரசனுக்கு நளகிரி என்னும்பட்டத்துயானை ஒன்று உண்டு, அது மிகவும் மதம்கொண்டது; போர்க்களத்தில் பகைவர்களை அழித்துத் தன் அரசனுக்கு வெற்றிதரவல்லது. அவன் சேனையோ மகாவீரர்கள் அடங்கியது; போருக்குப் பின்வாங்காத பராக்கிரமமுடையது; அதனால் அவனுக்குச் சண்ட மகாசேனன் (போர்க்களத்தில் பின்வாங்காத பராக்கிரமமுள்ள பெருஞ்சேனையுடையவன்) எனப்பெயர் வழங்கலாயிற்று. வாஸவதத்தைக்குப் பருவம்வந்தவுடனே அவ்வரசன் அவளை யாருக்குக் கன்னிகாதானம் செய்யலாமென்று சிந்தித்துக்கொண்டிருந்தான். கடைசியாக வத்ஸராஜனே வாஸவதத்தைக்கு ஏற்றவரனெனக் கண்டறிந்து அவனைத் தந்திரமாய்த் தன்னிடம் வரவழைக்கும்படி ஒரு திருமுகமெழுதிக்கொடுத்துத் தூதனொருவனை உதயனனிடம் அனுப்பினான். தூதன் அவ்வேந்தனிடம்சென்று பிரத்தியோதன்தந்த திருமுகத்தைக் கொடுக்க, உதயனன் அதைப் படித்துப்பார்த்தான். அதில் "வத்ஸராஜனே, நீ வீணைவாசிப்பதில் வல்லவனென்று கேள்வியுற்றேன். எனக்கு வாஸவதத்தை என்றொரு மகளிருக்கிறாள்; அவள் வீணை வாசிக்கப் பயிலவேண்டுமென விரும்புகிறாள்; நீ நமது அரண்மனையில்வந்து சிலகாலமிருந்து அவ்வணங்குக்கு வீணைகற்பித்துக் கொடுத்துப்போக வேண்டுகிறேன்" என்று வரைந்திருந்தது. அதைப் பார்த்து அது விஷயத்தைப்பற்றி அரசன் அமைச்சருடன் ஆலோசிக்கலானான். அப்பொழுது யௌகந்தராயணன் ஆய்ந்துணர்ந்து "அரசே தாம் ராஜகாரியம் ஒன்றும்பாராமல் கேவலம் வேட்டையாடுவதிலேயே விருப்பங்கொண்டுதிரிவதனால் அவன் பெண் என்னும் தூண்டிமுள்ளையிட்டுத் தம்மைப் பிடித்திழுத்துக்கட்டிவைக்கக் கருதியிருக்கிறான்" என்று கூறினான்.

உதயனன் அதுகேட்டு, ஆயின் அவன்மேல் படையெடுத்துப் போர்புரிந்தாகிலும் நாம் அப்பெண்மணியைப் பெற்றுக்கொள்ளக் கூடுமா என்று வினவ, மந்திரிமார் அவனது படையின் பெருமையையும் பராக்கிரமத்தையும் எடுத்துக்கூறி,

> "வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியும்
> துணைவலியுந் தூக்கிச் செயல்."

என்றிருப்பதால் அக்காரியம் நாம் இப்பொழுது செயற்பாலதன்றென நியாயமெடுத்தோதி அவன்கொண்ட கருத்தை மாற்றினார்கள்.

வாஸவதத்தையை எவ்வகையிலாயினும் தான் விவாகம்செய்து கொள்ளவேண்டுமென்று மன்னவன் மொழிந்தமாற்றம் கேட்டு மந்திரிமார் தாங்கள் அவ்வாறே அவளை மணம்புரிவிக்கின்றதாய் உறுதி

மொழிகூறினர்கள். அதன்மேல் ஆய்ந்துணர்ந்து வந்த தூதனிடமே, "அரசே உன் பத்திரிகையைப்பார்க்கப் பரம சந்தோஷமாயிற்று, எனக்கு அங்கே வந்திருக்க விராமகாலம் வாய்க்கவில்லை, உன் மகளை இங்கே அனுப்பினல் வீணைபயிற்றி அனுப்புவிக்கிறேன்" என்று மறுமொழி எழுதிக்கொடுத்து அனுப்பினர்கள். சண்டமகாசேனன் அப்பத்திரிகையைப் பார்த்தவுடனே, வத்ஸராஜனே மானமேதனமாகக்கொண்டவன், எளிதில் இங்கே வரத்தக்கனல்லன், நாம் பெண்ணை அவனிடம் அனுப்புவதென்ருல் அது நமக்கு இகழ்ச்சியாகும்; இதற்குச் செய்யவேண்டுவதென்னவென்று யோசித்துக் கடைசியில், வத்ஸராஜன் யானைவேட்டையில் தேர்ச்சிபெற்றவனுகி அதில் அதிக நோக்கம்கொண்டிருப்பதால், பொய்யாய்ச் சில யானைகள்செய்து அவனை வஞ்சித்து வெகுதூரம் அழைத்துவந்து, தன்னெல்லையருகில் எய்தியவுடனே கட்டிக்கொண்டுவந்து சிறைசெய்து பிறகு வாஸவதத்தைக்கு வீணைகற்பிக்கும்படி செய்யவேண்டும் என்று தீர்மானித்தார். வத்ஸராஜனே, அடிக்கடி வேட்டைக்குச் செல்வதால் பற்பல விபத்துக்கள் நேருமென்று தெரிவித்து யௌகந்தராயணன் பலமுறை தடுத்தும் கேளாமல், முன்போலவே வேட்டையிலே கண்ணுயிருந்தான். பிரத்தியோதராஜன் தான் யோசனைசெய்திருந்தபடி பெரிய பொய்யானை ஒன்று செய்து அதன் வயிற்றில் பல போர்வீரர்களைவைத்து ஒருநாள் அதை விந்தியமலைக்கடுத்த வனத்திலே நிறுத்திவைத்தான்.

அதுகண்டு வேட்டமாடவந்த வத்ஸராஜனுடைய வீரர்கள் ஓர் பெரியயானை வந்திருக்கிறதென்று அரசனுக்குத்தெரிவிக்க, அரசனும் வழக்கப்படியே சிலசேனைகளைக் கூட்டிக்கொண்டு அதனருகேசென்று அதைப்பார்த்து மெய்யான யானையென்றேநினைத்து, இந்தவேழத்தைப்பிடித்து வசப்படுத்திக்கொண்டால் இதனுல் நளகிரியென்னும் பிரத்தியோதராஜன் கஜத்தை ஜயிக்கலாமென்று மனதில்ஆலோசித்துக்கொண்டே, சேனைகளைக்கண்டால் யானை பயந்தோடிப்போகுமென்று நினைத்துத் தன்னுடன் வந்தவர்களைத் தூரநிறுத்திவிட்டு, தான் தனியாய் அதனருகேசென்று கோஷவதியை வாசிக்கலுற்ருன். அந்த மாயயானையோ யந்திரபலத்தினுல் அந்தப் பாட்டைக்கேட்டுக் காது நெறிப்பதுபோலும் கண் சுழலுவதுபோலும் சமீபத்திலிருப்பதுபோலுமே தோற்றிக்கொண்டு கொஞ்சங்கொஞ்சமாய் வெகுதூரம் கொண்டுபோகப்பட்டது. அரசனும் அதைப்பின்தொடர்ந்தே பாடிக்கொண்டு போயினன். அவ்வாறு ஒரு பெருங்காட்டில் போய்ச் சேர்ந்தவுடனே அதன் வயிற்றிலிருந்த வீரர்கள் இதுதான் ஏற்ற தருணமென்று வெளியேவந்து உதயனனைப் பிடிக்கப்போக, அவன் அக்கருத்துணர்ந்து அவர்களில் அநேகரைக் கண்டதுண்டம் செய்தான். கடைசியில் வெகுதூரம் நடந்துவந்த வருத்தத்தாலும் இவர்களுடன் அமராடிய இளைப்பினுலும் சோர்ந்துநின்ற தருணம்பார்த்து

மற்றும் அநேக வீரர்கள் அவனைக்கட்டி உஜ்ஜயினீ நகரம் கொண்டு போய்ச்சேர்த்தார்கள்.

இவனைக் கட்டிக்கொண்டுபோகும்போது பார்த்த உஜ்ஜயினீ நகரத்து ஜனங்கள் ஒருவாக்காய், இவ்வரசன் உருவமெடுத்துவந்த மன்மதனேபோலிருக்கிறான்; வாஸவதத்தை இவனிடமே சேர்வளாயின் பழம்நழுவிப் பாலில் விழ்ந்ததுபோலாகுமென்று சொல்லிச் சந்தோஷித்தார்கள். சண்டமகாசேனராஜன் பிடிபட்டுவந்த வத்ஸராஜனை ஒரு பெரிய அரண்மனையில் கால்விலங்கிட்டுச் சிறைசெய்து, வத்ஸராஜனே நீ இன்றுமுதல் என் மகளுக்கு வீணையினது அருமை பெருமைகளை நன்குபோதித்து அதில் தேர்ச்சியுண்டாக்கக்கடவை; பிறகு நான் இவளை உனக்கே விவாகம்செய்துகொடுத்து உன்னையும் விடுவிக்கிறேன் என்றுசொல்லி, வாஸவதத்தையை அவ்வரசனிடம் வித்தியாப்பியாஸத்திற்காகச் சிறைச்சாலையில் கொண்டுவந்துவிட்டான். உதயனன் அவளது ரூபலாவணியங்களைக் கண்டுவியந்து அன்றுமுதல் அவளுக்கு வீணைகற்றுக்கொடுக்கத் தொடங்கினான். அவளது மதிமுகத்தை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருந்ததனால் அவனுக்கு அந்தச் சிறையிருப்பு சிறிதும் துன்பமாய்த் தோன்றாமல் ஓர் இன்பமாகவேயிருந்தது.

இது இவ்வாறிருக்க, உதயனனுடன் கூடச்சென்றிருந்த சேனைகள் மாலைப்பொழுதுவரையில் அரசன் வரவை எதிர்பார்த்திருந்து வாராமல்போகவே திரும்பிக் கௌசாம்பீநகரம் போய்ச்சேர்ந்தன. யௌகந்தராயணன் அவர்கள்மூலமாய் அரசன் காணாமற்போன செய்திகேட்டுச் சிந்தைகொண்டு, சாரர்கள்முகமாய் விசாரித்துச் சகல சமாசாரமும் தெளிவாய்த் தெரிந்துகொண்டான். பிறகு யௌகந்தராயணன் ருமண்வானுடன் கலந்து ஆலோசனைசெய்து, ருமண்வான் ராஜகாரியங்களைக் குறைவின்றிப் பார்த்துவரும்படி ஏற்பாடுசெய்து, தான் வஸந்தகனுடன் மாறுவேடம்பூண்டு உஜ்ஜயினீ போய்ச் சேர்ந்தான். அந்நகரத்தில் அவர்கள் செய்த காரியமென்னவெனில், பகற்காலத்தில் இருவரும்பிரிந்து தெருத்தெருவாய் அல்லாடுவார்கள்; இராக்காலத்தி லிருவரும் மயானத்தில் போய்க் கூடி, மறுநாள் நடத்தவேண்டியதைப்பற்றியும் அன்று நடந்ததைப் பற்றியும் பேசிக்கொள்வார்கள். யௌகந்தராயணன் பித்தம் பிடித்தவன்போலத் தெருக்களில் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஓடுவான். அதை அந்நகரத்தார் அனைவரும் ஒரு விநோதமாகவந்து பார்ப்பார்கள். இச்செய்திகேள்வியுற்று ஒருநாள் ராஜகுமாரி அந்தப் பித்தனைத் தான் பார்க்கவேண்டுமென விருப்பங்கொண்டு தன் அந்தப்புரத்திற்கு வரவழைத்தாள். அவன் அவ்விடம் சென்றஉடனே அங்கு அரசனை விலங்கிட்டிருப்பதுகண்டு கண்ணீர் உகுக்கலானான். அதைப்பார்த்து அங்கிருந்தவர்கள் பித்தன்செயல் பலவற்றுள் இதுவுமொன்றென நினைத்தார்களேயன்றி அதன் உண்மை இன்னதென்று

ஒருவரேனும் கண்டறிந்துகொள்ளவில்லை. அத்தருணத்தில் யௌகந்தராயணன், வஸந்தகன் மாறுவேடம்பூண்டு அவ்விடம் வந்திருப்பதாகவும், அவனைக் கூடவே துணையாக வைத்துக்கொண்டிருக்கும்படியாகவும் அரசனுக்குக் குறிகாட்டி, அஞ்சனத்தின்வலிமையினால் அங்கேயே ஒருவர்கண்ணுக்கும் தோன்றாமல் மறைந்துகொண்டான். பேசிக்கொண்டேயிருந்த பைத்தியக்காரன் திடீரென்று காணாமற்போனது கண்டு அங்கிருந்த பெண்கள் எல்லாரும் இதென்ன மாயமென்று வியந்து பேசிக்கொண்டார்கள். அப்பொழுது அரசன் யௌகந்தராயணன் கருத்து இன்னதென்றறிந்துகொண்டு, ஸரஸ்வதிதேவிக்குப் பூஜைசெய்யவேண்டியநிமித்தம் ஒவ்வொருவரும் சென்று பூஜைக்குவேண்டிய பொருள்கள் பலவும் கொண்டுவரவேண்டுமெனக் கட்டளையிட்டான். அவர்கள் எல்லோரும் அப்படியேயென்று அவ்விடம்விட்டுச்சென்ற சமயம்பார்த்து யௌகந்தராயணன் அரசனுக்குச் சில ஏற்பாடுகள் சொல்லிவிட்டு வெளியே போய்விட்டான். பெண்கள் பூஜைக்குரிய பொருள்கள் கொண்டுவந்தவுடனே அரசன் கிரமப்படி பூஜைசெய்வித்துப் பிறகு வாசலில் யாராவது வேதியர் வந்திருந்தால் அவரை இங்கு அழைத்துவாருங்களென்று கட்டளையிட்டான். அவ்வாறே அவர்கள் வாசலிலே போய்ப்பார்க்கையில் அங்கே அரசன் தோழனாகிய வஸந்தகன், மஹோதர ரோகங்கொண்ட வாலிபன்போல் வேஷந்தரித்து உட்கார்ந்திருந்தான். அவனை அரசனிருக்குமிடத்திற்கு அழைத்துவந்தார்கள். அவன் அரசனைப்பார்த்துத் துக்கம் உள்ளடங்காமல் கோவென்று கதறத்தொடங்கினான். அரசன் அதுகண்டு, பிராமணோத்தமரே விசனப்படவேண்டாம், நீர் இங்கேயேயிரும்; உமது துயரத்தை நான் தீர்த்துவிடுகிறேன் என்று சொல்லித் தன்னிடத்திலேயே அவனை வைத்துக்கொண்டான். அன்றுமுதல் வாஸவதத்தை வெளியேபோயிருக்கும் காலங்களில் அரசனுக்கு வஸந்தகன் பொழுதுபோக்காயிருந்தான். யௌகந்தராயணன் அவ்விடம்விட்டு வெளியேசென்றபிறகு செய்தசெய்கை யாதென்பீர்களோ? விந்தியமலையிலுள்ள காட்டரசனாகிய விந்தியகேதுவினிடம்சென்று நடந்த செய்திகளை அறிவித்து, படைக்கலங்களோடு வேண்டிய படைகளைப் போர்த்தொழிலுக்குச் சித்தமாகவைத்திருந்து வத்ஸராஜன் வெளி வரும்போது துணைசெய்யவேண்டுமென வேண்டிக்கொண்டான். அவன் வத்ஸராஜனுக்கு மித்திரனாதலின், அப்படியே ஒப்புக்கொண்டான்.

யௌகந்தராயணன் பிறகு கௌசாம்பீநகரம்போய்ச் சேர்ந்து அரசனை மீட்கவேண்டிய மார்க்கத்தைபற்றி மந்திரிமார்களுடன் கலந்து ஆலோசித்தான். அவ்வாலோசனையில், பிரத்தியோதராஜன் வஞ்சனைசெய்து நம் அரசனைப்பிடித்தானாதலின், அவ்வண்ணமே நாமும் அவனை வஞ்சித்து வாஸவதத்தையுடன் அரசனை மீட்டுக்கொண்டு வரவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

அதன்படியே யௌகந்தராயணன் வேண்டிய தனம்முதலிய சாதனங்களுடன் புறப்பட்டு உஜ்ஜயினீ நகரம்சேர்ந்து முன்போலவே சில நாளுக்கொருதரம் அரசனிடம்சென்று கண்சைகையால் நடக்கவேண்டியவைகளைப்பற்றிக் குறிப்பாய்ப் பேசிவிட்டுப் போய்க்கொண்டிருந்தான். அதனால் அவன், வாஸவதத்தை அரசனிடம் உள்ளூற அன்புவைத்திருக்கிறாளென்பதை அரசனால் அறிந்துகொள்ளும்படியாயிற்று. வாஸவதத்தை வத்ஸராஜனுடைய வடிவழகையும், செங்கோன்முறைமை, செய்தொழிற்றிறமை, கல்வித்திறம், படைமாட்சி, புகழ், பெருமை, மானம், சான்றாண்மை முதலிய சிறந்தகுணங்களையும் கண்டும் கேட்டும் வியப்புற்று அவனுக்கே தான் மணமாலை சூட்டவேண்டுமென மனதில் உறுதிகொண்டிருந்தாள். அன்றியும் தன் தகப்பனார் தன்னை அவனுக்கே கொடுப்பதாக நிச்சயம் செய்திருக்கிறாரென்பதையும் தாதிகள்முகமாய் அறிந்து மகிழ்ச்சிகொண்டிருந்தாள்.

ஒருநாள் நளகிரியென்னும் பிரத்தியோதராஜனது பட்டத்துயானை மதம்கொண்டு கட்டுத்தறியை முறித்துக்கொண்டு யாருக்கும் அடங்காது வெளிப்பட்டு வீதிவழியாய் ஓடத்தொடங்கியது. அதை அடக்க எவராலும் ஆகாமல்போகவே, வத்ஸராஜன் வேழங்களை அடக்குவதில் வல்லவனென்று அறிந்து அவனைச் சிறைச்சாலையினின்றும் வருவித்து அதை அடக்கிக் கட்டும்படிவேண்ட, அவன் அவ்வாறே தான் வீணைவாசித்து அதை மயங்கச்செய்து மதத்தையடக்கித் தறியில்கட்டிவிட்டான். அப்போது அவன் காட்டிய திறமையைக்கண்டு மிகுந்த மகிழ்ச்சிகொண்டு பிரத்தியோதன் விலைபெற்ற பூணாரங்கள் பரிசுகொடுத்து அவனை மிகவும் மேலாகக்கொண்டாடினான். தன்னிடத்தில் வாஸவதத்தை உள்ளூற அன்புவைத்திருக்கிறாள் என்பதை அரசன் நன்றாய் அறிந்தவுடனே யௌகந்தராயணன் யோசனையின்படி, “நான் உன்னை அபகரித்துக்கொண்டு உன் தகப்பனாரை வஞ்சித்து வெளிப்பட்டுப் போய்விடவேண்டுமென்று கருதியிருக்கிறேன், அதுவிஷயத்தில் உன் தாற்பரியமென்ன” என்று வாஸவதத்தையை வினவினான். வாஸவதத்தை அவனையே தனக்குத் தகுந்த கணவனாக மனதில் மதித்துவிட்டவளானதாலும், பதிவிரதாதர்மத்தில் ஊன்றியவளாதலாலும், தங்கள் சித்தம் என்பாக்கியம் என்றுகூறி அக்கருத்திற்கு இசைந்தாள். அதை யௌகந்தராயணன் அறிந்த உடனே, அரசன் சிறைச்சாலையினின்றும் வெளிப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவைத்து அரசனிடம்வந்து, அரசே, தம்மைப் பிரத்தியோதன் மாயையால் கட்டிப்பிடித்தான்; இப்பொழுது அவன் எண்ணியிருப்பது யாதெனின், தன் மகளை உமக்குப் பாணிக்கிரகணம் செய்வித்துத் தக்க மரியாதையுடன் ஊருக்குத்திருப்பி அனுப்பவேண்டுமென்று ஆலோசித்திருக்கிறான்; அது நமது பெருமைக்கு மிகவும் குறைவானகாரிய

மாகையால், வாஸவதத்தையைத் தாம் தந்திரமாய் அபகரித்துக் கொண்டு வெளிப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது, வாஸவதத்தைக்கு பத்திராவதி என்று ஒரு பெண் யானை உண்டு; அதை நளகிரி ஒன்றுதவிர மற்றெந்தயானையும் வேகமாய்ப் பின்தொடர்ந்துசெல்ல வல்லதன்று; அதுவும் இதைப் பார்த்த உடனே மதிமதியங்கி நின்றுவிடுமேயல்லது, மறுத்து எதிர்க்கத் துணியாது. அந்த யானைப்பாகனை நான்வேண்டியபொருள்கொடுத்து வசியம்செய்திருக்கிறேன்; யானைபாஷை அறிந்தவனொருவன் இங்கேயிருக்கிறான், அவனை மிகுதியாக மத்தியபானம்செய்வித்து மயக்கிவிட்டு நாளையிராத்திரி விலங்கைத்தறித்துக்கொண்டு அந்த யானையின்மேலேறி மதில்வழியாக வெளியே வந்து விடவேண்டும் என்பதுதான். வெளிப்படும்பொழுது ஏதாவது கலகம் சம்பவிக்குமாயின், அச்சமயத்தில் நமக்குக் கைகொடுத்து உதவ நமது நற்றோழனாகிய விந்தியகேது வீராவேசம் கொண்டிருக்கின்றான். நான் முன்னதாய்ச்சென்று அவனைச் சித்தப்படுத்தியழைத்துவருகிறேன் என்று உரைத்து யௌகந்தராயணன் விடைபெற்றுக்கொண்டு காட்டரசனிடம் சென்றான்.

உதயனராஜன் யௌகந்தராயணனது யுக்தியாலோசனைகளைக் கேட்டு மிக்க மகிழ்ச்சிகொண்டவனாய் வாஸவதத்தை வந்தவுடனே அச்செய்தி எல்லாவற்றையும் அவளுடன் உரைத்துப் பிரயாணத்துக்கு வேண்டியமுயற்சிகள் செய்துவைத்தான். அதன்படியே மறுநாள் ஞாயிறுபட்டு மாலைப்பொழுதானவேளையில் வாஸவதத்தை யானைப்பாகர் அனைவர்க்கும் மிகுதியாக மத்தியபானம் செய்வித்து, அவர்களுள் பெரிய யானைப்பாகனுக்குப் பின்னும் அதிகமாகக்கொடுத்து மயக்கம் மிகுதியாகும்படி செய்தாள். பின்பு பத்திராவதியைப் பிரயாணத்திற்குச் சித்தம்செய்யும்பொழுது அது "நான் இன்று அறுபத்துமூன்று காததூரம் வழிநடக்கவேண்டும்" என்று கூச்சலிட்டது. அதைக்கேட்ட பெரிய பாகன் என்னவோ பேசக்கருதிக் குடிமயக்கத்தால் வாய் தழதழத்துப்பேசினான். அதனால் அவன் பேச்சு மற்றெவர்க்கும் கேட்கவேயில்லை. அன்றிராத்திரி அந்நகரத்தார் அனைவரும் நல்ல நித்திரையாய் மெய்ம்மறந்திருந்த வேளையில் அரசனானவன், வஸந்தகன், வாஸவதத்தை, அவள் தோழியாகிய காஞ்சனமாலை இவர்களுடனே, பத்திராவதியின்மேலேறி அந்தயானையைக்கொண்டு மதிலில் ஒரு மூலையிலே வழிதிறந்து கொண்டு வெளியே புறப்பட்டுச்சென்றான். திடீரென்று கோட்டைச்சுவரை இடித்துக்கொண்டு யானையொன்று வெளிப்பட்டதை கண்டு அங்கே மதிலண்டையில் காவல்காத்திருந்த வீரபாகு தாலபடன் என்னும் இருவர் எதிர்த்து அமர்புரிய ஆரம்பிக்க, அரசன் அவர்களைக் கணப்பொழுதில் கொலைசெய்துவிட்டு வெகு விரைவாக வேழத்தை நடத்திக்கொண்டுபோயினான்.

இந்தச் சந்தடியில் கண்விழித்துக்கொண்ட சிலர், மதிள் காவற்காரர்கள் மாண்டுபோய்க்கிடப்பதும் மதிளிடிந்திருப்பதும் கண்டு பெருங்கூச்சலிட்டார்கள். அதுகேட்டு அரசன் திடுக்கிட்டுக் கண் விழித்தெழுந்தான். எழுந்து உடனே சிறைச்சாலையிலே போய்ப் பார்க்க, அங்கே வத்ஸராஜனும் வாஸவதத்தையும் காணுதிருப்பது கண்டு, வத்ஸராஜனே வாஸவதத்தையைக் கைக்கொண்டு தந்திரமாய்த் தப்பித்துக்கொண்டு போயினுனென்று நிச்சயித்தான்.

உத்தியான வனத்திலே படுத்திருந்த பாலகனென்னும் ராஜகுமாரன் இதைக் கேட்டவுடனே மிகக்கோபங்கொண்டு தந்தைக்குத் தெரியாமலே நளகிரிமேலேறி வத்ஸராஜனைப் பின்தொடர்ந்துசென்று யுத்தம்செய்யத் தொடங்கினுன். நளகிரியோ பத்திரவதியின் சமீபம் சென்றவுடனே மதிமயங்கி அதை ஒன்றும் செய்யத்தோன்றுமல் அவ்வாறே நின்றுவிட்டது. வத்ஸராஜனும் பாலகனும் சிறிதுநேரம் சண்டைசெய்துகொண்டிருந்தனர். இதற்குள் பாலகன் யுத்தத்திற்குச்சென்ற சமாசாரம் கேட்டுப் பிரத்தியோதன் தனது மூத்தமகன் கோபாலனை அனுப்பிப் பாலகனைத் திருப்பி அழைத்துவந்துவிடச் செய்தான். அதுகண்டு வத்ஸராஜன் இனி நமக்குப் பயமில்லையென்று தைரியங்கொண்டவனுய் மெதுவாகவே யானையை நடத்திக்கொண்டு சென்றுன்.

ஆயினும் அந்தயானை அன்றிராத்திரி முழுவதும் அறுபத்துமூன்றுகாததூரம் வழிநடந்து வந்ததுபற்றி மிகவும் மெய்வருந்திக் களைத்து, காலைப்பொழுதாகிச் சிறிது நேரம் சென்றவுடனே நீர் வேட்கையினுல் தவித்துத் தண்ணீர் குடித்துத் தக்ஷணமே கீழேவிழுந்து மடிந்துபோயிற்று.

பிறகு உதயனமகாராஜன் தான் வருகின்ற செய்தியை விந்தியகேதுவுக்குத் தெரிவித்துவரும்படி வஸந்தகனை அனுப்பிவிட்டுத் தான் வாஸவதத்தையுடன் கால்நடையாகவே காட்டில் நடந்து சிறிதுதூரம் சென்றுன். அதனுல் அவர்கள் கைகால்கள் நொந்து அதிகதூரம் நடக்கமுடியாமல் ஒரு மரத்தடியில் உட்காந்தார்கள். அச்சமயத்தில் அங்கே 105 திருடர்கள் வந்து வத்ஸராஜனைச் சுற்றிக்கொள்ள, அரசனும் தான் ஒருவனுகவே அத்திருடர்கள் அனைவரையும் எதிர்த்து வதைத்துக்கொண்டிருந்தான். அதற்குள் விந்தியகேதுவின் ஸேனைகளுடன் யௌகந்தராயணனும் வஸந்தகனும் விந்தியகேதுவும் அவ்விடம்வந்துசேர்ந்து திருடர்களைத் துரத்திவிட்டு அரசன் திறமையைக்கண்டு மிகவும் புகழ்ந்தார்கள். பின்பு யாவரும் சந்தோஷமாய் விந்தியகேதுவின் மாளிகைபோய்ச் சேர்ந்தார்கள்.

இவர்கள் அவ்விடம்போய்ச் சேர்ந்தபின்னர் சண்டமகாசேனராஜனுடைய தூதனொருவன் அவ்விடம் வந்து அரசனை அடிபணிந்து ஒரு கடிதம் கொடுத்தான். அதில், "வத்ஸராஜனே, நீர் என்

செல்வப்புதல்வியுடன் சிறைமீண்டுசென்றது எமக்குச் சந்தோஷமானசெய்தியே; உமக்கும் உசிதமானதுதான். அதுகேட்டு நான் மிக்க மனமுவந்தேன். நான் உம்மைக் கட்டிக்கொண்டு வந்தது கூட என் குழந்தையை உமக்குக் கலியாணஞ்செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காகவே. உம்மைச் சிறைசெய்திருந்தபோழ்தே வாஸவதத்தையை உமக்கு விவாஹஞ்செய்து கொடுக்கலாமா என்று ஆலோசித்தேன். நீர் மானி ஆகையால் அது உமக்கு அவமானமாகுமென்று நினைத்து, உடனே அவ்வாறு செய்யாது நான் நிறுத்தியிருந்தேன். இப்பொழுது நீர் அவசரப்படாமல் சற்று நிதானிக்க வேண்டும். என் குமாரன் கோபாலனை அனுப்புகின்றேன். அவன் என் மகளை உமக்கு விதிப்படி விவாகம் செய்துவைப்பான். அது வரையில் நீர் பொறுத்திருக்கவேண்டும்" என்று எழுதியிருந்தது. அதைக்கண்டு அரசன் ஆனந்த பூரிதனாய் அதை வாஸவதத்தைக்கு வாசித்துக்காட்ட, அப்பெண்மணியும் தன் உற்றார் உறவினர் தன்னை இனிக் கைவிட்டுவிடுவார்களோ என்று தன் கருத்தில்கொண்டிருந்த சந்தேகம் நீங்கி மிக்க மனமகிழ்ந்தாள். பின்பு உதயனன் தன் நகருக்குச் செய்தி அனுப்பி அங்கிருந்துவந்த சேனைகளுடனேகூடிக் கௌசாம்பீநகரம் போய்ச்சேர்ந்தான். போகும்பொழுது, கோபாலன் அவ்விடம்வந்தால் அவனைக் கௌசாம்பீநகருக்கு அழைத்துவரும்படி விந்தியகேதுவுக்குக் கட்டளையிட்டுப்போயினான்.

நெடுநாளாகக் காணுதிருந்த தமது நாட்டு நல்லரசன் சிறைமீண்டு வெற்றிவீரனாக வாஸவதத்தையுடன் நகரத்துக்கு வருகிறானென்ற செய்திகேட்டு அப்பட்டணத்திலுள்ள பல்லாயிரம் பிரஜைகளும், மேககர்ச்சனையைக்கேட்ட மயில்போல மிக்க மகிழ்ச்சிகொண்டு, பட்டணம் முழுதும் பலவிதமாய் அலங்கரித்து அரசன் வரவை எதிர்பார்த்திருந்தனர். அவன் நகரத்துட்புகுந்து ஊர்வலம் வந்து ராஜவீதியாய்ச் செல்லும்பொழுது அனைவரும் அக்கோமகனைக் கண்குளிரக் கண்டு கொண்டாடி "ஜயவிஜயீபவ" என வாழ்த்திப் பூக்களும் பொரிகளும் அவன்மீது வாரியிறைத்து ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்கள். அதன்பின்னர் சிலநாள் கழித்துக் கோபாலனும் விந்தியகேதுவும் கௌசாம்பீநகரம் வந்துசேர்ந்தனர்.

கோபாலன் வந்தபிறகு நாநாதேசத்து வேந்தர்களையும் வரவழைத்துப் பற்பல விசித்திர விநோதங்களுடன் வெகு விபவமாகச் சிறந்ததோர் சுபமுகூர்த்தத்தில் விதிப்படி வத்ஸராஜனுக்கும் வாஸவதத்தைக்கும் விவாகமகோற்சவம் நடத்தப்பட்டது. கலியாணகாலத்தில் கோபாலன் மணமகனுக்கும் மணமகளுக்கும் வேண்டிய வண்மைகளும் வரிசைகளும் செய்துவாழ்த்தினான். அங்குற்றிருந்த மற்றும் பல ராஜாக்கள் அவரவர்க்கேற்றபடி ஆடையாபரணங்கள் அளித்து ஆசீர்வதித்தனர். பிறகு வத்ஸராஜன் தனது விவாகமகோற்சவத்திற்கு வந்த வேந்தர் அனைவருக்கும் தகு

தியாகவே ராஜோபசாரங்களும் மரியாதைகளும் செய்வித்து அவரவர் தேசத்துக்குச்செல்ல விடுத்துச் சுகமாக ராச்சியபரிபாலனம் செய்துகொண்டிருந்தான். நல்லமைச்சர்களான யௌகந்தராயணனும் ருமண்வானும் தம்மரசனுக்குச் சிறந்த துணைவர்களாகி ஏற்ற தருணங்களில் உசிதமான யுக்தி ஆலோசனைகள் செய்து ராஜகாரியங்களை நன்கு நடத்திக்கொண்டுவந்தனர். அரசன் செயலொழிந்து விநோதமாயிருக்கின்ற வேளைகளில் வஸந்தகன் அவனுக்கு இனிய கதைகள் சொல்லிப் பொழுதுபோக்கிக்கொண்டிருந்தான். வாஸவதத்தையின் அன்னையான அங்காரவதி தன் மகளுக்கு நீதி நன்னெறிகள் போதித்து நல்வழிப்படுத்தும் நற்றோழியாக ஸாங்கிருத்தியாயனியென்னும் ஒரு சன்னியாசிப்பெண்ணை அவளிடம் அனுப்பிவைத்தாள். அவளும் அரசனுக்கும் அரசிக்கும் பற்பல புதிய கதைகளும் பூர்வசரித்திரங்களும் எடுத்துரைத்துப் பொழுது போக்கிக்கொண்டிருந்தாள்.

இவ்வாறிருக்கின்ற நாளில் வத்ஸராஜனுக்கு நரவாகனதத்தனென்று ஒரு நற்புதல்வன் பிறந்தான். அவன் பரமசிவனுாது போருளினால் மேலான மகிமைகள் பெற்றவனாகி, பல வித்தியாதர கன்னிகைகளை மணம்புரிந்து வித்தியாதர சக்கரவர்த்தியாயினான். யௌகந்தராயணன் மகனாகிய மருபூதி, ருமண்வான் மகனாகிய அரிசிகன், வஸந்தகன் மகனாகிய கோமுகன், நித்தியோதிதனென்னும் பிரதிஹாரியின் மகனாகிய தபந்தகன் ஆகிய இவர்கள் நால்வரும் நரவாகனதத்தனுக்கு நல்லமைச்சர்களாயிருந்து தபோபலத்தினால் நரவாகனதத்தனுடனே தாமும் வித்தியாதர பதவி பெற்று வாழ்ந்தார்கள்.

உணவு.

உணவின் தன்மையும் உபயோகமும்.

இயற்கையான உணவுப்பொருள்களுள் பாலொன்றே சிறந்ததாகும். மற்ற உணவுப்பொருள்களுள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காரியங்களுக்கு உதவுகின்றது: விதைகள் விளைகின்றன; செடிகளும், மிருகங்களும் வளர்ந்து ஜீவிக்கின்றன; பாலொன்றுமட்டுமே உணவைத்தவிர்த்து மற்றொன்றுமாகிறதில்லை.

பாலுண்டுவளரும் மிருகங்களெல்லாம் நிறையில் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. நாவில் ஊறும் உமிழ்நீரும், ஈரலிலிருக்கும் பித்தநீரும், கண்ணீர்முதலியனவும் ஆகிய இவையெல்லாம் பாலினின்றுமுண்டாகின்றன. அன்றியும், பால் தேகத்தில் உஷ்ணத்தை உண்டாக்கித் தேகத்தின் உறுப்புகளை அசையும்படி செய்கின்றது. இவையெல்லாம் பாலொன்றைமட்டும் உண்பதினாலே யுண்டாவனவே

யல்லாமல் மற்றப்படி வேறுவிதமாய் உண்டாவனவல்ல. பாலானது தேகத்தின் கூறுகளாகிய எல்லாவற்றையும் உண்டாக்குவதுமல்லாமல், சிறுகன்றைக் கடாரியாகவும், கைக்குழந்தையைச் சிறுபிள்ளையாகவும் செய்கின்றது. இதனாலேயே பால் சிறந்த உணவென்று நாம் எண்ணலாம். இபற்கையான உணவுப்பண்டங்களுள் பாலைப்போலச் சிறந்த உணவு வேறொன்றுமில்லையென்பது நிச்சயம். ஆதலினால், பாலில் அடங்கியிருக்கிற பொருள்கள் இன்னவையென்று அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். அதன் பெரும்பாகம் ஜலமே; அத்தனை ஜலமும் நமது தேகத்திலுள்ள திரவபதார்த்தம் உண்டாவதற்கு அவசியம்வேண்டும்.

பாலை அசையாமல் தோய்த்துவைத்திருந்தால் அதன் ஆடை மேலே ஏடாய்ப் புடைத்துவிடும்; இதுதான் கொழுப்பு. இது நாம் மூச்சுவிடுகையில் கொஞ்சங் கொஞ்சமாகக் கழிந்துவிடும்; மிருகங்களின் தேகத்தில் உஷ்ணமுண்டாவதற்கும் இதுவே காரணம். நீராவியந்திரங்களுக்கு நிலக்கரி யெப்படியோ அப்படியே நமது தேகத்தில் திடனையுண்டாக்கி இயங்கச்செய்வதற்கு இது காரணமாகும்; நாம் அளவுக்குமேலான ஆடையை உண்போமாயின், அந்தக் கொழுப்பு நமது தேகத்தில் கொழுப்பாய்த் தங்கியிருக்கும்.

பாலைப் புளித்துப்போகும்படி பிரைகுத்திவைத்திருந்தால் அதன் கெட்டியான பாகமானது தயிராகத் தோய்ந்துவிடும். அது தேகத்திலுள்ள தசை, தோல், மயிர், இரத்தாசயம், ஈரல்முதலியவற்றை வளர்ப்பதற்கும், நாள்தோறும் தேகத்தினின்று கழிந்து வெளிப்படும் பற்பலவாகிய பொருள்களுக்குச் சரியாகச்சென்று தேகத்தை வளர்ப்பதற்கும் ஏற்றதாகும். தயிர்த் தண்ணீரில் உப்புமுதலிய ஜீரணஞ்செய்யத்தக்க பதார்த்தங்களும், எலும்பையுண்டாக்கத்தக்க பொருள்களுமுண்டு. அது ஆடையைப்போலவே தேகத்தில் அனலையுண்டாக்கிப் பலனைக்கொடுக்கும். நாம் நமக்கு உணவு உண்டாக்கிக்கொள்ளும்பொழுது பாலின்கூறுகளை நன்றாயறிந்துகொண்டு இயன்றமட்டில் அதில் இருக்கும் பொருள்களெல்லாம் நன்றாய்அமைந்திருக்கும்படிபார்த்துச் செய்யவேண்டும். ஏனெனில், கஞ்சிப்பசை மா, கிழங்குவகை, கொழுப்பு தசைக்கொழுப்பு முதலிய உண்பொருள்களுள் உயிர்தாங்குவதற்கேற்ற எல்லாப்பொருள்களும் கலந்திருப்பதில்லை; ஆதலினாலேதான் இவற்றின்கூறுகளெல்லாம் அமைந்திருக்கும்படி உணவை ஏற்றவிதமாய்ச்செய்யவேண்டும்.

நாம் உண்ணும் பொருள்கள் உண்ணப்பட்டபின் நமது தேகத்துக்குள் கலந்து அமையும் பலகூறாகி விடுகின்றன; அவையெல்லாம் ஒன்று சேர்ந்து தயிர்போலாகும். இதற்குத்தான் சதையையுண்டுபண்ணும் உணவென்று பெயர். இதில் உப்புவாயு அதிகமாயிருத்தலால் இதற்கு உப்புப் பதார்த்தமென்றுபெயர். இது பெரும்

பான்மையாய் முட்டையின் வெள்ளைக்கருவைப்போலிருத்தலால், வெள்ளைக் கருப்பொருளென்றும்சொல்லப்படும்.

மிருகங்களின் இறைச்சியின் கெட்டியானபாகம், பாலாடை, முட்டையின் வெள்ளைக்கரு, சதைக்குழம்பு, மாவின்பசை, பயறு துவரைமுதலிய தானியங்களின் அதிகபாகமாகிய தயிர்போன்ற பொருள் இவையெல்லாம் பெரும்பான்மையாய் வெள்ளைக் கருப் பொருளாகின்றன.

நமது தேகத்தில் உஷ்ணமுண்டாகும்படி வைத்திருந்து நாம் மூச்சுவிடுகையில் கழிந்துபோகின்ற உணவுப் பொருளுக்கு உஷ் ணத்தைக்கொடுக்கும் உணவென்றுபெயர். அவற்றுள் கரியமல வாயு அதிகமாயிருத்தலால் அதற்குக் கரியமலப் பொருளென்றும் பெயர்; அது எரியும்படி எண்ணெயையொத்திருத்தலால் எண் ணெய்ப்பொருளென்றுஞ் சொல்லப்படுவதுண்டு.

இந்த ஆகாரங்களுள் முக்கியமானவை கொழுப்பு, எண்ணெய், பசைமா, சர்க்கரை, பிசின், மூலவர்க்கங்களின் எளிதில் ஜீரணமா கத்தக்க மிருதுவான நார்முதலியவாம்.

நாம் உண்ணும் உணவுப் பொருள்களுள் பெரும்பான்மை யானவற்றில் வெள்ளைக் கருப்பொருளும், எண்ணெய்ப்பசையும் ஏற்றபடி கலந்தமைந்திருப்பதில்லை யாதலால், எல்லாம் நன்றாய்க் கலந்திருக்கும்படி பதார்த்தங்களைப்பார்த்துக் கலந்துவைத்து உண வாக்கவேண்டும். இப்படிப் பக்குவமாய்க்கலந்து இந்தக் குறை யை நிவிர்த்திசெய்துகொள்ளவேண்டும். அரிசி உருளைக்கிழங்கு இவற்றில் பசைமாவே அதிகம். இவற்றுள் கொழுப்பும், வெள் ளைக்கருவும் கலந்திருந்தாலல்லாமல் இவை நல்ல உணவாகாவாம். ஆனதினாலேதான் பாலைக் கஞ்சியாகக் காய்ச்சும்போது அதனோடு அரிசி, வெண்ணெய்முதலிய பல பொருள்களைச் சேர்க்கின்றனர்; இவையெல்லாஞ்சேர்த்துக் கஞ்சியானால் அது நல்ல உணவாகும்; இந்த உணவு ஒன்றுமட்டுமே நாம் நோயின்றித் திடகாத்திரமுடைய வர்களாய் வாழ்ந்திருக்கப் போதும். அவரை ரொட்டிமுதலியவற் றோடு மற்றுமுள்ள பதார்த்தங்களைச்சேர்த்து உண்ணவேண்டும்.

உணவோடுசேர்க்கப்படும்பொருள்.

நாம் உணவோடு கலந்துண்ணும் பொருள்களுள் முக்கியமான வை உப்பு, மிளகு, கடுகு முதலியனவாம்; இவற்றுள் உப்பு உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. மற்றவைகளைச் சிறிய அளவாக உணவோடுசேர்த்து உண்டால் வாய்க்கினிமையாய் உணவு வெகு நன்றாயிருக்கும்; அப்படிக்கன்றி அதிகமாக வழங்குவோமாயின் தீமையையுண்டாக்கும்; உண்டவுணவு சுகமாய் ஜீரணிக்கும் சிறு குழந்தைக்கு இது அவசியமன்று.

உப்பானது தேகசௌக்கியத்துக்கு இன்றியமையாதது; அது உயிர்வாழ்க்கைக்கும் அப்படித்தான்; உப்பு உலோகவர்க்கங்களுள்

அதிக சாதாரணமானது; அநேக விடங்களில் பூமியில் மிருதியாய் அகப்படும்; கடல் நீருள் நூற்றில் மூன்றுபங்கு உப்பு; அது எவ்வகையான பூமியினும், ஆறு, ஊற்று இவற்றின் தண்ணீரினும் மனிதருக்கும் மிருகங்களுக்கும் உணவாகின்ற கந்தமூலங்களிலும் சிறிது இருக்கும்.

உப்பை உணவோடு உட்கொண்டால் அதனால் இரண்டு பொருள்கள் உண்டாகும்; அவற்றுள் ஒன்று நாம் உண்ட உணவை ஜரிக்கச்செய்கிற புளிப்பு ஜலம் உண்டாக உதவுகிற ஓர் புளிப்பாம்; மற்றொன்று, உணவானது ஜரித்து ரசமாவதற்குமுன்பே அதை அவ்வாறு, பிரியும்படி அதனோடு சேரும் பித்தஜலம் என்னும் லவணரசமாம். நாம் உப்பில்லாமலாயினும், போதுமான அளவிற்கு உப்புச் சேராமலாயினும் உணவுப்பண்டங்களையுண்டால் நோய்கொண்டவர்களாவோம். ஒருவனுக்கு நாளொன்றுக்கு வேண்டிய உப்பினளவு கால்அவுன்ஸ்முதல் அரைஅவுன்ஸ்வரையில். நாம் உட்கொள்ளுகின்ற பலவகையான அன்னபானாதிகளுள் இவ்வளவினும் அதிகபாகம் சேர்ந்திருக்கும்.

இறைச்சியையும் இன்னும் மற்றுமுள்ள பொருள்களையும் கெடாமல் வைத்திருக்கும் சக்தி அதற்குண்டு. பண்டங்களிலுள்ள நீரையெல்லாம் அது வெளிப்படுத்தும். உப்பானது உணவுப்பொருள்களின் சாரத்தையெல்லாம் போக்கிவிடுகின்றதனால் அவ்வாறான உணவை ஒருவன் பலநாள் உண்பது நன்றன்று.

மழைக்காலத்திற்கு வேண்டுமென்று கந்தமூலபதார்த்தங்களை உப்பிட்டுக் கெடாமல் வைத்துக்கொள்ளுகிற வழக்கம் எங்கும் உண்டு; பிரான்ஸ்தேசத்தில் அவரைக்காயைத் துண்டுதுண்டாக நறுக்கி ஜாடியிலடைத்து உப்பை நிரைநிரையாய்த்தூவி, அந்த உப்புஜலமானது அப்புறப்படாமலிருக்கும்படிவைத்துப் பக்குவப்படுத்துகிறார்கள்; அது பல மாதங்களளவும் கெடாமலிருக்கும். அதன் வாயைமூடிக் குளிர்ந்த இடத்தில் வைத்திருந்தால் அது வெகுநாளிருக்கும்; அதையெடுத்து அதன்மேல் படிந்திருக்கும் உப்புஜலத்தை அலம்பிவிட்டால் அது உணவுக்கேற்றதாகும். அநேக நாடுகளில் காய்கறிமுதலிய பல கந்தமூல பதார்த்தங்கள் இவ்வாறாகப் பத்திரப்படுத்தி வைக்கப்படுகின்றன. “உப்பில்லாப்பண்டம் குப்பையிலே” என்றபடி உப்பில்லாவிடின் எந்தப்பண்டமும் உபயோகப் படாது.

நாம் உண்ணும் உணவுப்பொருள்களில் நமது தேகத்தின் செளக்கியத்திற்குவேண்டிய அளவு உப்பின்மையால் நாம் உண்ணும்போதெல்லாம் உப்பை உணவுப்பொருள்களோடு கலந்து உண்ணவேண்டும்.

கடுகானது உணவோடு சேர்க்கப்படும் பண்டங்களுள் அதிக சாதாரணமானது; அதைச் சிறிது உட்கொண்டால் பசியையுண்

டாக்கி ஜீரணசக்தியை விர்த்திசெய்யும்; ஆனல் அளவின்றி அதிகமாக உட்கொண்டால் இரைப்பையில் மிக்க எரிச்சலையுண்டாக்கி அதிகதீமையை யுண்டுபண்ணும். கடுகு நல்ல மருந்து. கடுகைத் துணியிலேதடவி உடம்பின்மேல் ஒட்டிவைத்திருந்தால் அது உடலுக்குள்ளேயிருக்கும் புண்ணிலுள்ள ரத்தத்தை வெளியேயிழுத்துக்கொண்டு வந்து அப்புண்ணை ஆற்றும். இவ்வாறு அது மிகவும் கொடிய உபத்திரவங்களையெல்லாம் நிவிர்த்திசெய்கின்றதனல் நன்ருய் வைத்தியஞ்செய்வதற்கு ஏற்றவர்கள் அகப்படாதகாலத்தில் இந்த ஔஷதத்தைச் சிறிதும் பயமின்றி யாரும் வழங்கலாம்.

மிளகானது போஜனத்தோடு சேர்க்கப்படும் வாசனைப் பொருள்களுள் வெகு முக்கியமானது. உண்ணு முணவுக்குச் சுவையுண்டாகச் செய்கின்றவைகளில் அதுவுமொன்று. ஆனல் அதை அதிகமாக வழங்கினல் அது அன்னுசயத்தைக் கெடுத்து, சாதாரணமான உணவையும் ஜரிப்பியாதாதலால் அதை அதிகமாக உட்கொள்வது தீதாகும். மிளகை மிகவும் அதிகமாகச் சேர்த்திருக்கும் உணவைச் சிறுகுழந்தைகளுக்குக் கொடுத்துப் பழக்கலாகாது.

தருமமே தலைகாக்கும்.

இந்துதேசத்தின் வடபாகமாகிய ஆரியாவர்த்தத்திலுள்ள அவந்திதேசத்திலே விக்கிரமார்க்கன் முதலிய மகாராஜாக்கள் நெடுங்காலம் அரசு செலுத்திவந்த உஜ்ஜயினியென்னும் உயர்ந்த நகரமொன்று உண்டல்லவா? அந்நகரத்திலே நற்சந்தி செட்டித்தெருவென்று ஒருவீதியுண்டு; அவ்வீதியில் வினயதத்தனென்னும் ஒரு வைசியனிருந்தான். அவனுக்கு ஸாகரதத்தனென்று ஒரு புதல்வன் பிறந்தான். அந்த ஸாகரதத்தனுக்குச் சாருதத்தன் என்று ஒரு மகனுண்டு; அவன் வைசியனுகையால் தனது குலாசாரப்படி உபநயநம்முதலிய சடங்குகள் செய்யப்பெற்று வேதம்முதலிய நூல்களை நன்கு ஓதியுணர்ந்து,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்றபடி நல்லொழுக்கமும் நற்குணங்களும் அமைந்தவனுய்த் தக்க வயதுவந்தவுடன் தூதையென்னும் மாதுசிரோமணியை மணம்புரிந்து உஜ்ஜயிநீநகருக்கு ஒரு நாயகமணிபோல விளங்கினுன்.

அவன் மிகுந்த செல்வப்பெருக்குடையவன்; தரும சிந்தை குடிகொண்டவன்; ஆகவே தன் விபவத்தை வீணில்கழிக்க விருப்பமின்றி, இயல்வது கரவாமல் அறஞ்செயவிரும்பி ஐயமிட்டுண்டு வாழக்கருதி,

"செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்"

"நச்சப் படாதவன் செல்வ நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று."

"கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்."

என்னுமிவைமுதலிய பற்பல நீதிநூன் மொழிகளை நன்குணர்ந்து, நாமுயிரோடிருக்கையில் உண்டு உடுத்துத் தானதருமங்கள்செய்து பெரும்புகழ் படைப்பதினும் பெறும்பேறு வேறொன்றில்லையெனத் தேர்ந்து, உற்றார் உறவினர் நண்பர் நாட்டார் அனைவர்க்கும் ஏற்ற படி உதவிபுரிந்து அன்புடன் ஆதரித்துவந்ததுமன்றி, பல வேள்விகள் புரிவதும், தேவாலயங்கள் பிரதிஷ்டைசெய்வதும், வாபீகூப தடாகம்முதலியவைகள் வெட்டுவித்து நாட்டுக்கு நன்மை விளைவிக்கத்தக்க நீர்வளங்கள் உண்டாக்குவதும், தன்னை யடுத்தவர்களைக் கைவிடாது காப்பாற்றுவதும், ஏற்ற சமயங்கள் வாய்த்தபோது மற்றும் பற்பல வகையாய்ப் பரோபகாரங்கள் செய்வதுமாகி, கைம்மாறு கருதாமல் எளியோர்க்கு உதவும் பெருங்கொடை வள்ளலெனப் புகழ்பெற்று வாழ்ந்திருந்தான்.

அவன் மகாகுணசாலி, தனக்கு யார் எவ்வளவு தீங்குசெய்தாலும் அதைச் சிறிதளவும் சிந்தையில் கொள்பவனல்லன்; அயலார் மனநொந்து கண்ணீருகுக்கக் கணப்பொழுதேனும் காணப்பொறான்; எவ்வகையிலாயினும் பிறர்துயரந் தீர்ப்பதற்கே வழிதேடுவான். அவனால் உபகாரம் பெறாதவர்களாயினும் அபகாரம் பெற்றவர்களாயினும் அவந்திதேசத்தில் இல்லவேயில்லையென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

தருமமே தனக்குத் தஞ்சமெனக்கொண்டு அவன் வாணிபத்தொழில்செய்வதை யொழித்துப் பரோபகாரமே புரிந்துவந்ததனால், வரவுகுன்றி மூலதனமும் செலவழியத்தொடங்கி, "தேடாதழிக்கிற் பாடாமுடியும்" என்றபடி நாளளவிலே கைப்பொருள் முழுமையும் கரைந்து வறியனாயினான். ஆயினும் அப்பொழுதும் அவன் தனது செல்வப்பொருளிலேமாத்திரம் வறியனாயினனே யல்லது ஈகைக்குணத்திலும் உதாரபுத்தியிலும் பரோபகார சிந்தையிலும் சிறிதும் வறியனாகவில்லை; "கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்றுகூறிய கல்விப்பொருளையே தனக்குப் பெருந்துணையாக நாடிவந்தான்.

"சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்தும்
கந்தங் குறைபடா தாதலால்—தந்தம்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கெட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று."

அவன் ஒருகால் தன் மித்திரனான மைத்திரேயனென்பவனுடன் விநோதமாக வஸந்தோத்தியானமென்கிற சிங்காரவனத்திற்குச் சென்றிருந்தான். அந்நகரத்தில் வசந்தசேனையென்னும் ஒரு வேசி

மகளுண்டு. வேசிப்பெண்ணாயினும் அவள் குலமகளுக்குரிய உத்தமகுணங்கள் பலவும் குடிகொண்டவளாகி அந்நகரத்திலேயே ஒரு அற்புதக்காட்சியாக விளங்கினாள். அப்பெண்மணியும் அன்று அந்த உத்தியானவனத்திற்குத் தன் தோழிமார்களுடனே விளையாட வந்திருந்தாள்.

அவ்வூர் வேந்தனுக்குச் சகாரன் என்று ஒருமைத்துனனிருந்தான். அவன் அனைவரும்பார்த்து வெறுக்கதக்க விகாரவடிவுள்ளவன்; மிகக்கொடியவன்; அசாதுரியமாய்ப் பேசுபவன்; அவன் அன்று உத்தியானவனத்தில் வந்திருந்த வஸந்தசேனையைக்கண்டு அவள்மேலாசைகொண்டு அவளை வசப்படுத்திக்கொள்ள வகைதேடினான். வஸந்தசேனையோ அவன் தனக்கு ஏற்றபுருஷனல்லன் என்று உணர்ந்து அவனை ஒருபொருட்டாகவே மதியாதிருந்தாள். அது கண்டு அவன் மூர்க்கங்கொண்டு அச்சிறுமியைத் துன்பப்படுத்தத் தொடங்க, அவள் பூனையைக்கண்ட கிளிபோலப் பயந்து, இங்குமங்கு மோடிக் கடைசியில் அங்கே வந்திருந்த சாருதத்தனைச் சரணமடைந்தாள். அபயமென்று அடிபணிந்தோரை ஆதரிப்பதே கடமையாகக்கொண்ட அவ்வுத்தமபுருஷன் அவள் படுகிறதுன்பத்தைக் கண்டு மிகவும் பரிதாபமுற்று அக்கொடியவன் கையினின்றும் அவளைக் காப்பாற்றினான்.

முன்னமே சாருதத்தனது சிறந்த குணங்களைக்கேட்டு ... திருந்த வசந்தசேனை, அன்று அவனது வியக்கத்தக்க வ... யும், அப்பொழுது நேர்ந்த கொடிய ஆபத்தினின்றுந் தன்... பாற்றிய காருணியத்தின் பெருமையையும் கண்ணாரக்கண்... புற்று, அவனிடத்தில் அதுமுதல் அதிகமான மனப்பற்றுடைய... ளாயினாள். அவளுடைய தோழிமார்கள் நாளளவிலே அவளது உட்கருத்தை உணர்ந்து, கைப்பொருளிழந்து வறியனாகிநிற்கும் சாருதத்தன்மீது நீ சிந்தைவைப்பது சரியல்லவென்று பலவகையாய்ப்பேசி அவள் மனதை மாற்ற முயன்றார்கள். அவள் விஷயத்தில் அவையாவும் செவிடன் காதில் சங்கு ஊதினதுபோலாயின. சாருதத்தனது சற்குணங்களையே மேலாக மதித்தவளாகி வசந்தசேனை, தன்னிடத்திலுள்ள திரளான திரவியமே தங்களுக்குப் பற்பல இன்பங்களையும் அனுபவிக்கப் போதுமானதெனக் கருதி, அவ்வணிகர் குலதிலகன் தன்னை விரும்பும்படி செய்வதற்கு வேண்டிய வழிகளையே தேடிக்கொண்டிருந்தாள்.

சாருதத்தனும் வசந்தசேனையைக் கண்டதுமுதல் அவளுடைய ரூபலாவணியம் முதலியவைகளைப்பார்த்து வியந்து விருப்பமுற்றானாயினும், அவள் வேசிப்பெண்ணாதலால் வெறுங்கையனான தன்னிடத்தில் விருப்பங்கொள்ளாளென நினைத்து, அச்செய்தியைத் தன் உயிர்த்தோழனான மைத்திரேயனுடனும் உரைக்கத்துணியாமல்

உபேக்ஷையாயிருந்தான். அந்த மைத்திரேயன் இளமைமுதற்கொண்டு ஊணுறக்கம் செய்யுங் காலங்களிலேகூடச் சாருதத்தனுடனிருந்து, அவனது சுகதுக்கங்களனைத்தையும் தன்னுடையவைபோலவே பாவித்துவந்தவன். அற்றகுளத்தில் ஒட்டியுலரும் கொட்டி முதலியவைபோல அவன், சாருதத்தன் வறுமையுற்று வருந்தும் அக்காலத்தினும் அவனுடனேயிருந்து கட்டிக்காத்து, தான் செய்யக்கூடிய நன்மைகள் பலவும் செய்து சந்தோஷப்படுத்திக்கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்கையில் சாருதத்தனுடைய சிநேகிதனான சூரணவிருத்தனென்பவன் ஜாதிமலர்மணமேற்றிய மேற்போர்வையொன்றைத் தன் தோழன்கையில் கொடுக்கும்படி ஒருநாள் மாலைவேளையில் மைத்திரேயன்வச மனுப்பினான். அதைக் கைக்கொண்டு மைத்திரேயன் வந்தசமயத்தில் சாருதத்தன் மாலைக்கடன்கழித்து, தங்கள் ஒழுக்கமுறைப்படி கிருகதேவதைகளுக்கு வாயிற்படிகளில் பலியளித்துவிட்டுத் தனக்கு நேர்ந்த வறுமையைப்பற்றி விசாரமுற்று, முன் நாம் பலியளிக்கும் காலங்களில் இங்கே விளையாடும் அன்னப்பறவைகளும் ஸாரஸப்புட்களும் போட்டிபோட்டுக்கொண்டுவந்து அதைத் தின்னக்காண்போமே; அந்தக் கண்களாலேயே இப்பொழுது அதே பலியைப் புல்முளைத்துப் பாழாய்க்கிடக்கின்ற இவ்வி[illegible]ல் எறும்புகள்வந்து இழுத்துக்கொண்டுபோகக் காணும்படியா[illegible] பூவிற்றவிடத்தில் புல்விற்கும்படியாயினதல்லவா? நமது [illegible]கொடுமை இவ்விதமாகவோ முடிந்ததென்று இவ்வாறு சிந்தி[illegible]ண்டிருந்தான்.

அப்பொழுது மைத்திரேயன் அவனிடம் சென்று ஆசிகூறி ஜாதிமலர்ப்போர்வையை யளித்துஅருகே உட்கார்ந்தான். அதைக் கையில் வாங்கிக்கொண்டும் சாருதத்தன் தன்னுடன் பேசாதிருப்பதுகண்டு மைத்திரேயன், நண்பனே, நீ எந்நாளும் இப்படி என்னைப்பார்த்து மவுனமாயிருந்ததில்லையே; இன்று உனக்கு என்னதுன்பம் நேர்ந்தது; ஏன் சோகமுற்றுச் சிந்தைகலங்கியிருக்கிறாயென்று வினவ, சாருதத்தன், அருமைத்தோழனே, என் துன்பம் உனக்குத் தெரியாதோ!

"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது"

என ஒருவனுக்கு வறுமையினு மிக்க துன்பம் வேறில்லை யெனக் கூறியிருக்கின்றதல்லவா? அத்துயர மிப்பொழுது என்னிடம் வந்து வருத்துகின்றது. முதலிலே தரித்திரத்தினால் துன்பம் அனுபவித்தவனிடம் பின்னால் செல்வம்வந்து அடையுமானால் அது இருட்டறையில் விளக்கேற்றியதுபோல மேன்மேலும் இன்பம் விளைவிப்பதாகும்; அவ்வாறன்றிப் பிறவிச்செல்வனாய்ச் சுகித்திருப்பவனுக்குப் பின்னால் வறுமை வந்தெய்துமாயின் அதைவிடப் பெருந்துயரம் வேறில்லை. நமக்குச் சுகபோகங்களை யனுபவிக்கச் செல்வமில்லையே

யென்று நான் சிந்தைகலங்கவில்லே; கேட்போர்களுக்குக் கொடுக்கக் கையில் ஒன்றுமில்லாத எளியனுயினேமேயென்று அதற்காகவே விசாரப்படுகிறேன்.

"சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை"

என்றல்லவோ பெரியோர் கூறுகின்றனர். இந்த வீட்டுக்காரன் வறியனுயினுனென்று இங்கே வருகின்ற விருந்தினர்களெல்லாரும் வந்தவழியே திரும்பிவிடுகிருர்களே; அதைவிட மானக்கேடு வேறென்ன வேண்டும். அல்லாமலும், வறுமையானது வெட்கத்தை விளைவிக்கின்றது; வெட்கமுண்டாகப் பெருமையும் பேரழகும் குறைகின்றன; அவை குறைய, பிறரால் பரிபவம் உண்டாகின்றது; பரிபவத்தால் வெறுப்பு உண்டாகின்றது; வெறுப்பு உண்டாக அதனுல் துயரமுண்டாகிப் புத்திநிலை மாறுகின்றது; புத்திகெட்டவன் நாசமடைவான் என்பதைப்பற்றிக் கேட்கவேண்டுமோ? ஆதலின் தரித்திரமானது எவ்வகைத் துன்பத்திற்கும் ஆதிகாரணமாகின்றது. இதற்கு நான் என்னசெய்வேனென்று வாடிவருந்தினுன்.

அவைகளைச் செவியுற்று மைத்திரேயன், நண்பனே நீ இவ்வாறு நினைத்துக்கொண்டு நலிவது நியாயமன்று. "உடைமையும் வறுமையும் ஒருவழிநில்லா" என்பது உனக்குத் தெரியாததோ. அன்றியும் உன் உடைமையனைத்தும் உன்னை அடுத்தோர்க்கும் ஏனையோர்க்கும் நல்வழியில் உதவியதேயன்றிச் சிறிதும் வீணிற்கழியவில்லை; ஆதலின் தனது அமிர்தகிரணங்களனைத்தையும் அமரர்கள் அருந்தவிட்டுக் கலைகுறைந்துநிற்கும் சந்திரனுக்குச் சமானனுயிருக்கின்ருய். இனி வளர்பிறையில் அச்சந்திரன் நாளுக்குநாள் வளர்தற்கு ஒப்பாக நீயும் சீக்கிரமே செல்வப்பெருக்கு உடையவனுவாய். இறைத்த கிணறு தானே சுரக்கும், இதற்காகச் சிந்திக்கவேண்டுவதில்லை.

"அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்.
"இடுக்கண் வருங்கா னகுக வதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.
"வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையான்
உள்ளத்தி னுள்ளக் கெடும்"

என்று சமாதானஞ் சொல்லிச் சந்தோஷப்படுத்தினுன்.

அதைக்கேட்டுச் சாருதத்தன் சிந்தைதெளிந்து, நண்பனே, நீ சொல்லுவது சரிதான்; இனி அவ்வாறே நான் தைரியத்தைக் கைவிடாதிருக்கக் கருதுகின்றேன். இப்பொழுது நான் கிருகதேவதைகளுக்குப் பலியளித்தாயிற்று; ஜபம்செய்யவேண்டும்; நீ நாற்சந்திக்குச் சென்று அங்குள்ள தேவதைகளுக்குப் பலியளித்துவருவாயா என, மைத்திரேயன், நான் போவதில்லை; நாள்தோறும் தவருமல் நாம் பலியளித்து வருகிறோம்; அந்தத் தெய்வங்களுக்குக் கொஞ்சமா

யினும் கண்ணில்லையே; வீணாக ஏன் வந்தனைவழிபாடு செய்யவேண்டுமென்றான். அதற்குச் சாருதத்தன், மித்திரா அவ்வாறன்று; நாம் செய்த பாபத்திற்குத் தெய்வங்கள் என்னசெய்யும்; ஐயம்புகினும் செய்வன செய்யவேண்டுவது கடமை.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

என்றபடி, இல்லறத்தோர் செய்யவேண்டிய ஐந்துகடன்களுள் தெய்வங்களுக்குப் பலியிடுவதும் ஒன்றாதலால் இதனை நாம் அவசியம் செய்தே தீரவேண்டும், நீ போய்ப் பலியிட்டுவாவென, அவன் இப்பொழுது போக என்னாலாகாது; இம்மாலைவேளையில் ராஜவீதியிலே வேசிகளும் நடன் விடன் முதலியோரும் வந்து கூடியிருப்பார்கள்; அவர்கள் நடுவே போனால் பரிபவம் நேரிடும்; அன்றியும் நானும் ஜபம் செய்யவேண்டுமென்றான். இருவரும் ஜபம்செய்யத் தொடங்கினார்கள்.

அந்நகரத்து வேசிப்பெண்மணியாகிய வசந்தசேனை அன்று மாலைப்பொழுதில் ஆலயந்தொழப் போயிருந்து வழக்கப்படி வீட்டிற்குத் திரும்பினாள். திரும்பிவரும்போது வழியே சகாரன் முதலிய சிலகொடியர்களைக் கண்டு, வேடனைக்கண்ட மான்போலும், கருடனைக்கண்ட பாம்புபோலும் வெருண்டவளாகி அஞ்சி நடுங்கி விரைவாய் நடந்து சாருதத்தன் வீட்டுவாயில் போய்ச்சேர்ந்தாள்.

இதற்குள் மாலைவெளிச்சம் மறைந்து இருள் மூடிக்கொண்டது; சாருதத்தன் ஜபம்செய்தலு முடிந்தது. முடிந்தவுடன் அவன் மைத்திரேயனை நோக்கி, இனியாவது போய்ப் பலியளித்து வரலாமா என, அவன், இப்பொழுது நான் போகமாட்டேனென்று மறுத்தான். மறுக்கவே சாருதத்தன் மனநொந்து, ஆகா, தரித்திரத்தின் கொடுமையை என்னென்று சொல்லலாம்! வறுமை வந்துவிடுமானால் எத்தன்மையனாயினும் அவனை யாரும் ஏனென்று கேட்பதில்லை:

"கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்.

"இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா—என்சொலினும்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடல்ஞாலம்."

ஆபத்துக்குத் தோழன் என்பார்களே; அந்தத் தோழன்கூட நமது பொல்லாதகாலம் சொன்னபேச்சுக் கேட்க உடன்படவில்லையென்று சொல்லி விசனமடைந்தான். அந்தப்பேச்சைக் கேட்க மனந்தாளாமல் மைத்திரேயன், உன் பேச்சுக்கு நான் ஒருபோதும் எதிர் பேசுபவனல்லன்; அவசியம் போகவேண்டுமென்றால் இதோ போகக்காத்திருக்கிறேன்; இந்தப்பேரிருளில் நான்மாத்திரம் தனியே எப்

படி போகின்றது; ரதனிகையையும் கூடவரச் சொல்லவேண்டுமென்ருன். சாருதத்தன் அவ்வாறே செய்கவென்று சம்மதி கொடுக்க, மைத்திரேயன், ரதனிகையென்னும் வேலைக்காரியை விளக்கேற்றிவரச்சொல்லித் தான் முன்னேசென்று வாயிற்கதவைத் திறந்தான். அவன் கதவு திறக்கும் தருணத்திலேதான் வசந்தசேனை அவ்வாயிலண்டை வந்து நிற்கும்படி நேர்ந்தது.

தனக்கு நற்சகுனம் நேரிட்டதுபோலத் தான் அவ்விடம் சென்றதற்கும் வாயிற்கதவு திறந்ததற்கும் சரியாயிருக்கவே வசந்தசேனை மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளே நுழைந்தாள். நுழைந்து செல்லுகையில் எதிரேவிளக்குவரக்கண்டு, தான் உள்ளேபுகுவது அவர்கள் கண்ணுக்குப்புலப்படாதிருக்கவேண்டுமென்று வஸ்திரத்தினுல் விளக்கை அவித்துவிட்டு அடியோசைகேளாமல் உள்ளே போய்விட்டாள்.

ஏற்றிக்கொண்டுபோன விளக்குத் திடீரென்று அவிந்துபோகக் கண்டு சாருதத்தன், விளக்கு நின்றுபோனதற்கு நிமித்தமென்னவென்று வினவ, மைத்திரேயன், மூடியிருந்த கதவைத் திடீரென்று திறக்கவே, காற்றடித்துத் தீபம் அணைந்துபோயிற்று என்று உரைத்து மறுபடிவிளக்கேற்றி யெடுத்துக்கொண்டு சென்ருன்.

சாருதத்தனுக்கு ரோஹசேனன் என்று ஒரு புதல்வனுண்டு. அக்குழந்தையை அன்றுமாலைப்பொழுதில் நல்லகாற்று வீசுமிடமான மேல்மாளிகையில் எடுத்துவந்திருந்தார்கள். வேலைக்காரி வெளியே போய்விடவே சாருதத்தன் அச்சிறுமகன் சமீபத்தில் உட்கார்ந்திருந்தான். வசந்தசேனை அப்பொழுது அவனெதிரேபோய் நின்ருள். அவளைநோக்கி ரதனிகையென நினைந்து சாருதத்தன், ரதனிகே, நீ இந்தப் பூமணமேற்றிய பட்டாடையைப் போர்த்துப் பாலகனை உள்ளேஎடுத்துக்கொண்டுபோ என்றுஉரைத்து, அந்த ஆடையை அவள் மேல் எறிந்தான். அதற்கு அவள் யாதும் மறுமொழி கூருமல் மரம்போல நிற்பதுகண்டு மறுத்துமவன், ரதனிகே, குழந்தையை எடுத்துக்கொண்டுபோவென்ருல் பேசாது நிற்கிருயே; யாதுகாரணம் என்றுவினவ, அவ்வுரையைக்கேட்ட வசந்தசேனை, தமது கிரகத்துக்குள்புகும்படி அடியாள் அத்தனைபாக்கியம் பெறவில்லையேயென்று மனதிலெண்ணி மகிழ்ச்சிகொண்டிருந்தாள். அதுகண்டு சாருதத்தன், ரதனிகை கூடத் தன் வாய்மொழியைக் காதுகொடுத்துக் கேளாமல் அவமதிக்கின்ருளென நினைத்து, ஆ! இவையெல்லாம் நமது வறுமையின் கொடுமையல்லவா! நமக்கு என்னவிதி வந்து வாய்த்ததென்று விசாரமுற்ருன்.

வணிகர் திலகன் அவ்வாறு கூறக்கேட்டுக்கொண்டே பலியளித்துத் திரும்பிவந்த மைத்திரேயன் வசந்தசேனையை உற்றுப்பார்த்து, ரதனிகை இதோ என்பின்னே வருகின்ருள்; முன் வசந்தோத்தியானத்தில் உமது அன்பினுல் ஆதரிக்கப்பட்ட உத்தமியாகிய வசந்தசேனையன்ரூ இங்குவந்து நிற்பவள்; அது தெரியாமல் நீர் வீணே

வெறுத்துக்கொள்ளுகின்றீரேயென்று சொல்லிச் சமாதானப்படுத்த, ஆள்தெரியாமல் அதிகமாய்ப் பேசிவிட்டோம் என்று மனதிலெண்ணிக்கொண்டு, இன்னாரென்று அறியாமல் உன்னை யான் ஊழியக்காரிகளை ஏவுவதுபோல் ஏவி அவமதித்தேன்; மன்னிக்கவேண்டுமென்றுவசந்தசேனையைநோக்கி வணக்கமாய்க்கூற, அவள், யான்தமது அருகில் இவ்வாறு வந்துநிற்கச் சிறிதும் உரிமையில்லாதவளாயினும் துணிந்துவந்து நிற்பதைப்பற்றித் திருவுள்ளமிரங்கவேண்டுமென விநயமாகமொழிந்து, இந்தப்பூஷணங்களுக்காகச் சிலகொடியர்கள் என்னைப் பின்தொடருகின்றனர்; ஆதலின் இவற்றை இங்கேவைத்துக் காப்பாற்றித்தரும்படி தயைசெய்யவேண்டும் என்றாள். அதற்கு அவ்வணிகர்பெருமான், இந்தவீடு இப்பொழுது உடைமைகளை வைத்து ஆதரிப்பதற்கு ஏற்றவிடமல்லவே என்று சொல்ல, அவ்வுத்தமி இவற்றை ஏற்றுக்கொள்ளும்படி தம்மை நான் வேண்டிக்கொண்டதேயன்றி வீட்டை வேண்டினவளன்றேயென மெல்லியகுரலாய் மொழிந்தாள். அந்தவார்த்தையைக்கேட்ட சாருதத்தன் சிந்தைகுளிர்ந்து நண்பனைநோக்கி, அவள் கையிலுள்ள பூணாரங்களைப் பெற்றுக்கொள்ளும்படி பரிவுடன் உரைக்க, அவன் அவ்வாறே அவற்றைக்கையில் வாங்கிக்கொண்டு அவளை ஆசிர்வதித்தான். அதுகண்டு சாருதத்தன், இப்பொழுது வசந்தசேனையை வாழ்த்தினது என்னகாரணம்; இது உனக்கு நன்கொடையாய்க் கொடுத்ததென நினைத்தாயோ; கருத்துவைத்துக் காப்பாற்றித் தரவேண்டு மென்றல்லவோ நம்மிடத்தில் அடைக்கலமாக வைக்கப்பட்டதென்று சொல்ல, மைத்திரேயன், கள்ளர்வந்து கொள்ளை கொண்டுபோனால் அப்பொழுது நாம் செய்வதென்னவென்று சொல்லியதுகேட்டுச் சாருதத்தன், தெய்வச்செயலால் ஒருகால் அவ்வாறு நேரிடுமானால், அவற்றின் விலையை நாம் கையிலிருந்துகொடுத்துக் கடன்தீர்த்துக் கொள்ளவேண்டுமென்றான். பிறகு வசந்தசேனை விடைபெற்று மைத்திரேயனைத் துணையாய் அழைத்துக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தாள். அவள் அளித்துப்போன ஆபரணங்களைப் பகற்காலங்களில் வர்த்தமானனென்னும் வேலைக்காரனும், இராக்காலங்களில் மைத்திரேயனுமாக வைத்திருந்து காப்பாற்றவேண்டுமெனக் கட்டளையிட்டுச் சாருதத்தன் வசந்தசேனையைக்குறித்த விசாரமே தலைக்கொண்டவனாய் அவளைப்பற்றியே பேசிக்கொண்டு அன்றிராப்பொழுதைட் போக்கினான்.

வசந்தசேனை வீடுபோய்ச்சேர்ந்து செய்தசெய்கை என்னவென்பீர்களோ? முன்னமே அவள் மனதில் குடிகொண்டிருந்த சாருதத்தனுடைய சற்குணங்கள் பின்னும் பதின்மடங்காய் அவள் மனதைக் கவரலாயின. அன்று தற்செயலாய் அவ்வுத்தமனைக் கணப்பொழுது காணநேர்ந்ததாயினும் உடனே பிரியும்படியாயினதேயென்று பரிதாபமுற்று, பொழுதுபோக்க வேறுவழியில்லாமல் மதனிகையென்

னும் தன் தோழிப்பெண்ணுடன் அவனைப்பற்றிய கதைகளையே பேசுவதும், அவனது வடிவழகைச் சித்திரத்திலெழுதிக் கண்குளிரக் காண்பதுமாகப் பொழுதுபோக்கிவந்தாள்.

அந்த உஜ்ஜயினீ நகரத்தில் சர்வலிகன் என்று ஒருவனுண்டு. அவன் களவு சாஸ்திரத்தைக் கரைகண்டவன். அவன் வறுமையால் வருந்துகின்றவனாதலால் எவ்வகையிலாயினும் ஜீவனம் செய்யவேண்டுமேயெனக் கருதித் தான் கற்றதொழிலாகிய களவையே தனக்கு ஒரு ஜீவனோபாயமாகக் கைக்கொண்டிருந்தான். ஆயினும் அவன் அறநெறி தவறி அடித்துப்பறிப்பதில்லை; பெண்கள் பூண்ட பூஷணங்களைப் பிடுங்குவதில்லை; திருடர்க்குரிய தருமவழியிலேயே யிருந்து ஜீவனம் செய்துவந்தான். அவன் ஒருநாள் இராத்திரி எவ்விடத்திலாயினும் களவுசெய்யவேண்டுமென உள்ளத்தில் உறுதிகொண்டு புறப்பட்டு, பலவிடங்களில் போய்ப்பார்த்து அங்கங்கே ஒவ்வோர் அசந்தர்ப்பங்கள் இருக்கக்கண்டு கடைசியில் சாருதத்தன் வீடுவந்துசேர்ந்தான். அவ்விடு சிறிதும் சந்தடியற்றுப் பெண்கள் ஒருவரும் கண்ணுக்குப் புலப்படாமல் தீபமும் செவ்வையாய்ச் சொலித்துக்கொண்டிருக்கவே, தான் கருதிய காரியத்திற்கு அதுவே ஏற்றவிடமெனத் தேர்ந்து, தன் ஆசிரியர்களைக் கையெடுத்துக்கும்பிட்டு, பிறகு கன்னமிட்டுக் கன்னவாயிலால் உள்ளே நுழைந்தான். நுழைந்து உட்சென்று அவ்வீடு முழுதும் சோதனைசெய்து பார்த்தான், ஒருகாசுகூடக் கிடைக்கவில்லை; பூமிக்குள் புதையல் முதலியன ஏதேனும் உண்டோவென்று, அதைக்கண்டறிவதற்குக் கூறியிருக்கும் உபாயங்களையும் அனுசரித்து ஆய்ந்தோய்ந்து பார்த்தான்; கடைசியில் அதிலும் காரியமில்லையென நிச்சயித்து நிராசையாய் அவன் வெளியேபோகத் திரும்பினான்.

அத்தருணத்தில் அங்கே படுத்திருந்த மைத்திரேயன், நண்பனே கள்வன் யாரோ வந்திருப்பதுபோலக் காண்கிறது; இந்த நகைகளை நீ வாங்கிக்கொள் என்று வாய்பிதற்றினான். இதுகேட்டுச் சர்வலிகன், இவ்வறியோன் வீட்டில் வந்து வீணாய்த்திரும்புவதை நோக்கி நகைத்துப் பேசுகிறான் போலும் என நினைத்தான். ஆயினும் சற்று நிதானித்துப்பார்க்க, உடைமைப் பெட்டியொன்று அவன் கூறியபடியே அவன் கையிலிருந்தது. அதைப்பார்த்தபின்னும், இப்படிப்பட்ட தரித்திரருடைய பொருளை அபகரித்துத் துன்பம் செய்வது நியாயத்திற்கு அடுத்ததல்லவேயென்று யோசித்து அப்புறம் சென்றான்.

வாய்பிதற்றின விதூஷகன், அவ்வளவோடு சும்மா இராமல் மறுத்தும், நான் பலதரம் சொல்லியும் நீ கேட்கவில்லை; இனியாயினும் இவைகளை நீ வாங்கிக்கொள்ளாவிட்டால், பார்ப்பானாணை; பசுவின்மேலாணையென்று கனவில் கூறினான். அதைக் கேட்ட கள்வன், இவன் இத்தனை ஆணையிடும்பொழுது நாம் உபேக்ஷையாய் அப்புறம் போவது உசிதமல்லவென வுணர்ந்து அவனது

அருகே சென்று, ஆண்மக்கள் தீபமவிப்பது கூடாதே; தீபமெரிந்து கொண்டிருக்கையில் திருடுவதும் சரியல்லவேயென்று தன்னிடமிருந்த விட்டிற்பூச்சிகளை எடுத்துவிட்டு விளக்கு அவியச்செய்தான். பிறகு தனது தரித்திரத்தின் கொடுமையன்றோ, கொலைகளவென்று கொலையோடுசேர்த்துக் கற்றோரும் மற்றோருங் கழித்துக்கூறிய தீச்செயல் செய்யவேண்டியதாயிற்று. பிறரிடம்சென்று ஏற்பதுகூட இகழ்ச்சியென்று எண்ணி உண்மைநெறி தவறாதிருந்த உத்தமர்களுடைய சந்ததியில் நான், மாஞ்செடிகளும் பூஞ்செடிகளுமடர்ந்த உத்தியானவனத்தில் ஒரு விஷக்கொடிபடர்ந்தவண்ணம் பெரியோர் பெயரையழிக்கப் பெரும்பாவியாய் வந்து பிறந்தேன்.

"புலையுங் கொலையும் களவும் தவிர்."

"கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு"

என்றல்லவோ நீதிநூல்களும் முறையிடுகின்றன என்று ஒன்றுந் தோன்றாமல் சிறிதுநேரம் சிந்தைகலங்கிச் சோகமுற்று நின்றான். ஆயினும் வேறுவழியில்லாமற்போகவே கடைசியில் மைத்திரேயனது கையிலிருந்த பூஷணப்பெட்டியை யெடுத்துக்கொண்டுபோய்விட்டான்.

அவன் அப்புறம் போனவுடனே அவ்வீட்டின் மற்றோர் புறத்தில் படுத்திருந்த ரதனிகை ஏதோ சிறிதளவு சந்தடிகேட்டுக் கண்விழித்துக்கொண்டு, வீட்டில் விளக்கவிந்திருப்பதுகண்டு திடுக்கிட்டு, எந்நாளுமில்லாமல் இன்று இவ்வாறு விளக்கவிந்திருப்பது என்ன காரணமென்று சந்தேகமுற்றவளாகவே யெழுந்துபோய் விதூஷகன் முதலியோரைக் கூவியெழுப்பினள். எழுந்தவுடன் அவர்கள் அச்சங்கொண்டு தீபமேற்றி அவ்வீடுமுழுதும் சோதனை செய்துபார்க்க, புறச்சுவரில் கன்னம் வைத்திருப்பது வெளிச்சமாய்த் தெரிந்தது. அதுகண்டு சாருதத்தன், ஐயோ, கன்னம்வைத்தவன் யாரோ உளவுதெரியாத திருடன்போலும்; பெரியவீடென்று பிச்சைக்குப்போனகதையாய், வீடு பெரிதாயிருப்பதைப்பார்த்து இங்கே கன்னம்வைத்துக் கைநோவ வீணே வருத்தமுற்றானே; உள்ளூர்த் திருடர் யாராவது கைபழகக் கன்னம்வைத்திருந்தால் இருக்கலாம்; அவ்வாறில்லாவிடின், அவன் தன் தோழர்களிடஞ் சென்று, இன்று நான் ஒரு பாவிவீட்டுக்குப் போனேன்; ஒரு பொருள்கூடக் கிடைக்கவில்லை; இனி அவன் பெயரைச்சொன்னாலும் நமக்குப் பிழைப்பகப்படாது என்றல்லவோ இகழ்ந்துபேசுவான். இதை நினைக்க எனக்கு மிகவும் மனவருத்தமுண்டாகின்றது; வந்தவன் ஏதாயினும் ஒரு உடைமையாவது கைக்கொண்டு போயிருந்தால் எனக்கு இத்தனை அநுதாபமிராதென்றான்.

உடைமையென்ற பேச்சைக் கேட்டவுடனே விதூஷகன் தான் கையில் வைத்திருந்த உடைமைப்பெட்டி நினைவுவந்து சாருதத்

தனை நோக்கி, நண்பனே, நான் இப்பொழுது வெகு சமர்த்தனாயினேன்; வசந்தசேனையின் பூஷணப்பெட்டியை உன் கையில் கொடுத்துவிட்டதனாலல்லவோ நான் தப்பியது; இல்லாவிட்டால் என் கையிலிருந்து கள்வன் அதைக் கொண்டுபோயிருப்பான்; மைத்திரேயன் மூடனென்று நாட்டிலே நால்வரும் இகழ்ந்துபேசுவார்கள், என்னுடைய நல்லகாலமே நான் அதை முந்தி உன் கையிற் கொடுத்துவிட்டதென்றான். அதுகேட்டுச் சாருதத்தன் திடுக்கிட்டு, என்னடா, பரிகாசஞ்செய்கிறாய்? இதுதானோ நீ என்னுடன் பரிகாசம் செய்வதற்கு ஏற்ற சமயம்; பூணாரப்பெட்டியைப் பத்திரமாய் வைத்திருக்கிறாயல்லவா என வினவ, விதூஷகன், நான் அத்தனை விவேகமற்றவனா? வேளைசமயந்தெரியாமலும் பரிகாசஞ்செய்வேனா? நகைப்பெட்டியை நீ என் கையினின்றும் எடுத்துக்கொள்ளும்பொழுதுகூட நான் உன் கை சில்லென்றிருக்கிறதேயென்று கேட்டேனே, நினைவில்லையா என்றான். சாருதத்தன் அப்பொழுது அதன் உண்மை இத்தன்மையதென்று உணரமாட்டாமல், மறுபடி வீடுமுழுதும் தேடினான்; அந்த உடைமைப்பெட்டி எங்கும் அகப்படவில்லை. அதனால் அதைக் கள்வன் கொண்டுபோயினானென நிச்சயித்து, நல்லகாலம், வந்த திருடனது வருத்தம் வீண்போகாமல் இந்தப் பூணாரப்பெட்டியாவது அவனுக்குக் கிடைத்ததே யென்று சொல்லிச் சந்தோஷித்தான். அதுகண்டு விதூஷகன், இதென்ன நீ கடைத்தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையார்க்கு உடைத்து ஆநந்தப்படுகின்றாய்; நம்மிடத்தில் அடைக்கலமாகவைத்த அந்த உடைமைகளை மறுத்தும் வசந்தசேனைக்குக் கொடுக்கவேண்டுவதில்லையென நினைத்தாயோவென்று கேட்க, சாருதத்தன் ஒன்றும் தோன்றாமல் மயங்கிப்போயினான். பிறகு சற்று நிதானித்து யோசித்து, ஆ, விதியை மதியால் வெல்லக்கூடாதென்ற உலகவசனம் நம்மிடத்திலே தான் உண்மையாக விளங்கியது. நமது பொருள் அனைத்தையும் அபகரித்துக்கொண்டுபோன கொடிய தெய்வம் அவ்வளவோடு ஒழியாமல் பெயரையும் புகழையுங்கூட அழிக்கத் தொடங்கியதன்றோ? வறுமையின் கொடுமை நமது வாய்மொழி யெங்கும் செல்லாதாகையால், உண்மையை நாம் எவ்வாறு எடுத்துரைத்தாலும், அடைக்கலப்பொருளை ஒளித்துவைத்துக்கொண்டு இல்லையென்று இயம்புவதாய் எண்ணுவார்களேயன்றிக் கள்வன் கொண்டுபோயினானென்று நாம் உரைப்பதை ஒருவரும் உண்மையென்று மதியார்களே; இதற்குச் செய்யவேண்டிய உபாயமென்னவென்று சிந்தித்துக்கொண்டிருந்தான்.

இதற்குள் ரதனிகை சாருதத்தன் மனைவியான தூதையென்பவளிடம் சென்று நடந்த வரலாற்றைக் கூறினாள். அதுகேட்டு அவள் விசனமுற்று, “பட்டகாலிலேபடும், கெட்டகுடியே கெடும்” என்ற விதமாய், முதலிலே சிறிதளவு சறுக்கி வறுமைவந்துசேர்ந்த நமது

குடும்பத்தில் ஒன்றின்மேலொன்றாய் இடுக்கண்கள் உண்டாகத்த லைப்பட்டனவே; அவற்றினும் இத்தன்மையான அபகீர்த்திக்கு ஆளாவதைவிடக் கொடியது வேறொன்றில்லை; "வசையொழிய வாழ்வாரே வாழ்வார்" என்றல்லவோ கூறியிருக்கின்றனர். உலகத்தில் ஒப்புயர்வில்லாத புகழ்படைத்து வாழ்ந்த நமது கணவனுருக்கு இனி நல்லகாலம் என்று வரப்போகின்றது? விதிப்பயனாகி வந்த இந்த அபகீர்த்தி நீங்கும் உபாயமென்னவென்று ஆலோசித்துச் சிந்திக்கலானாள். சிந்திக்குமளவில், தாய்வீட்டிலிருந்து வந்த சிறந்த நவமணிமாலையொன்று தன்னிடமிருப்பது நினைவுவந்து, அதை வசந்தசேனைக்குக் கொடுத்துக் கடன்தீர்த்துக்கொள்ளலாமென்று நிச்சயித்து, இன்னபடியென்று உண்மையை உரைத்தால் ஒருவேளை கணவனர் அதைக் கைக்கொள்ளக்கருதாரோ என்னவோவென்று சந்தேகங்கொண்டு, மைத்திரேயனை அழைத்துவரும்படி வேலைக்காரிக்குக் கட்டளையிட்டனுப்பினாள்.

இதற்குள் காலைப்பொழுதாகிவிட்டது. பொழுதுவிடிந்தவுடனே மைத்திரேயன் வேலைக்காரிவந்து உரைத்தபடி தூதையினிடம் செல்ல, அவனைக்கண்டு அவள் அடிபணிந்து, ஐயா, நான் ஒரு நோன்பு நோற்றுவருகிறேன்; அதற்காக நான் இந்த மணிமாலையை உமக்குத் தானம்செய்யத் தீர்மானித்திருக்கிறேன்; நீர் இதை வற்றுக்கொண்டு எனது நோன்பை நிறைவேற்றவேண்டுமென்று விநயமாக வேண்டினாள். அவன் அதுகேட்டு அதிக சந்தோஷமாய் அதை யேற்றுக்கொண்டு அவளை ஆசீர்வதித்துச் சாருதத்தனிடம் சென்றான்.

சாருதத்தன் அந்த நவமணிமாலையை நோக்கி, அதைக் கொடுத்தனுப்பிய தன் மனையாட்டியினது கருத்து இன்னதெனத் தெரிந்து, பெண்டுகள் பொருள்கொடுத்தனுப்பிக் கடன்தீர்த்துவைக்கும்படியான காலம் நமக்கு நேர்ந்துவிட்டதல்லவா? இதென்ன விதிப்பயன் என்று நெஞ்சம் புண்ணாகி நின்றான். ஆயினும், மனையாள் மக்கள் முதலியோர் தம்மவரேயாதலால் அவர்கள் உடைமையும் தம்முடைமையேயன்றி வேறல்லவெனத் தேர்ந்து தைரியங்கொண்டவனாகி, நண்பனை நோக்கி, நேசனே, நீ இந்த நிமிஷமே இந்த நவமணிமாலையை எடுத்துக்கொண்டு வசந்தசேனையினிடம் சென்று, 'நீ நம்மிடத்தில் அடைக்கலமாக வைத்திருந்த உடைமைகளை நமக்குச் சொந்தமெனவே நினைத்து நாம் சொக்கட்டாணுடிப் பந்தயம்வைத்துத் தோற்றுப்போயினோம்; அவற்றிற்கு ஈடாக நீ இந்த நகையை வைத்துக்கொள்ளவேண்டும்' என்று நான் சொன்னதாகச் சொல்லிக் கொடுத்துவரவேண்டும் என்றான். அதுகேட்டு மைத்திரேயன் அப்படியே ஆகட்டுமென்று விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான். பிறகு சாருதத்தன், வீட்டில் திருடன் வந்தசெய்தி ஒருவருக்கும் தெரியக்கூடாதென்று, உடனே வேலைக்காரனை வரவழைத்துத் தக்ஷ

ணமே கன்னவாயிலே அடைத்துவிட்டு மறுவேலை பார்க்கவேண்டு மென்று திட்டஞ்செய்து, தான் அண்டையிலிருந்தே அவ்வாறு செய்வித்துவிட்டு, நீராடிக் காலைக்கடனை முடித்துக்கொண்டுவரும் படி தடாகத்திற்குச் சென்றான்.

அவ்விட்டிலே இராத்திரி களவுசெய்த சர்வலிகன், வசந்தசேனையின் வீட்டில் வேலைக்காரியாயிருக்கும் மதனிகையைத் தான் மீட்டுக்கொண்டு மணம்புரிந்துகொள்ளவேண்டுமென வெகுநாளாக விருப்பங்கொண்டிருந்தான். அதற்கு அன்று வரையில் அவன் கையில் பொருள்கிட்டாமலேயிருந்தது. அன்றையதினம் உயர்ந்த நகைகள் அதிகமாய் அகப்படவே, அவற்றைக் கெட்டவழியில் வீணாய்ச் செலவுசெய்யாமல் கலியாணவிஷயத்தில் உபயோகப்படுத்துவது உசிதமென்று நினைத்து, அவைகளை எடுத்துக்கொண்டுபோய் அவன் வசந்தசேனையின் வீட்டிலிருந்த மதனிகையின் கையில் கொடுத்தான். அவள் அந்த நகைகளை நிதானித்துப்பார்த்து, இந்த உடைமைகளெல்லாம் முன்னமே நான் பார்த்திருப்பவை போலிருக்கின்றனவே; இவை ஏது? உமக்கு எங்கிருந்து கிடைத்தனவென்று கேட்க, அவன், அதைப்பற்றி உனக்கென்ன? நான் கொண்டுவந்து கொடுத்தால் வாங்கிக்கொள்வதைவிட்டு வீண்விசாரம் செய்வானேன் என்றான். அந்தப்பேச்சு அவள் மனதில் சுறுக்கென்று உறுத்தியது. அதனால் அவள் நான் அவ்வளவு நம்பிக்கைக்குப் பாத்திரமல்லவெனத் தோன்றினால், என்மேல் ஆசைவைப்பதிற் பயனென்ன, வேண்டாமென்று முகங்கடுத்துப்பேசினாள். அதுகேட்டு அவன், நீ அப்படியெல்லாம் வேறுவிதமாக நினைக்க வேண்டாம்; அதைச் சொல்லி யாகவேண்டிய காரியமில்லையேயென நினைத்தேனேயல்லது மற்றப்படியல்ல. இது நான் நேற்றிராத்திரி ஒருவீட்டில் திருடிக்கொண்டுவந்தது; காலையிலே விசாரித்ததில் அது சாருதத்தன் வீடென்றார்கள் என்று உரைத்தான்.

அதைக்கேட்டவுடனே திடீரென்று மதனிகை மூர்ச்சையடைந்தாள். அப்பொழுது மறைவாகநின்று அவர்கள் பேசுவதை உற்றுக்கேட்டுக்கொண்டிருந்த வசந்தசேனையும், சாருதத்தனென்ற சொல் கேட்டவுடனே மதிமயங்கி மூர்ச்சித்து நின்றாள். அதைக் கண்டு சர்வலிகன், இதென்ன விபரீதமென்று அச்சங்கொண்டு, மதனிகையைச் சற்று ஆசுவாசப்படுத்தி, மதனிகே, பேசிக்கொண்டேயிருக்கையில் நீ திடீரென்று மூர்ச்சைகொண்டது என்னகாரணமென்று கேட்க, அவள், அது அப்புறம் ஆகட்டும், ஸாஹஸச் செயல் செய்யத் துணிந்த தீரனே, நீர் கொள்ளையிடப்போன வீட்டில் யாரையாவது துன்பப்படுத்தினீரோ வென்றாள். என் சொரூபம் இன்னும் உனக்கு நன்றாய்த் தெரியவில்லைபோலும்; தூங்குகிறவர்களையாயினும் பயந்தவர்களையாயினும் பெண்களையாயினும் பாலகர்களையாயினும் நான் ஒருபோதும் துன்பப்படுத்துகிறவனல்லனென்பது

இதுவரையில் உனக்குத் தெரியாதோ? அந்த வீட்டில் நான் எவர்க்கும் எவ்விதமான தீங்கும் செய்யவில்லை; சத்தியமாய்ச் சொல்லுகிறேனென்றான்.

அந்தமட்டும் என்வயிற்றில் நீ பாலைவார்த்தாய், நான் பிழைத்தேன் என்று மதனிகை மனங்குளிர்ந்து கூறியதுகேட்டு அவன், இதென்ன நீ இவ்விஷயத்தில் இத்தனை ஆவலுள்ளவளாயிருக்கிறாயே; உனக்கும் அவனுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டோவென்று வினவ, அவள், அதன் வரலாறுகளை ஆதியோடந்தமாய் அவனுடன் எடுத்துக்கூறினாள். சர்வலிகன் அதைக் கேட்டு நடுநடுங்கி, ஐயோ, நான் இத்தீச்செயல் செய்து வீண்பழிக்கு ஆளானேனே; வெயிலுக்கு ஒதுங்கவேண்டுமென்று வந்த மரத்தின்கிளையையே வெட்டிவிடத் துணிந்தேனே! இதற்கு நான் இனிச் செய்யவேண்டிய பரிகாரம் என்னவென்று விசாரமுற்றான். அதற்கு மதனிகை, போனதுபோயிற்று, இனி அதற்காக விசாரப்படுவதில் பயனில்லை; போனதைப்பற்றிச் சிந்திப்பவன் பித்தனல்லவா? இப்பொழுது எனக்கு ஒரு உபாயம் தோன்றுகிறது,—சாருதத்தனே கொடுத்தனுப்பியதாகச்சொல்லி இவைகளை நீர் அவருடைய சேவகன் போலவே என் யஜமானியிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிடுவது உத்தமமானதென நினைக்கிறேன்—என்றாள். அவ்வாறு கொடுத்துவிட்டால் என்ன செய்ததுபோலாகிறதென்று சர்வலிகன்கேட்க, மதனிகை, நீரும் திருடனாகிறதில்லை; சாருதத்தனும் அடைக்கலப்பொருளை ஒப்புவித்துவிட்டவனாகிறான்; சொத்துக்காரரிடம் சொத்தும் சேர்ந்துவிடுகிறது என்ன, நீ சொன்னதே சரியான யோசனை; அவ்வண்ணமே செய்யவேண்டுமென்று சர்வலிகன் சந்தோஷமாய் அங்கீகரித்தான்.

பின்பு மதனிகை அவனைச் சற்று அங்கேயே இருக்கச்செய்து வசந்தசேனையினிடஞ் சென்று, சாருதத்தனிடமிருந்து உன்னைக் காண்பதற்கு ஒருவர் வந்திருக்கிறாரென்று தெரிவித்து, அவளது அநுமதியின்மேல் சர்வலிகனை அவளிடம் அழைத்துக்கொண்டு போயினாள். கீழே நடந்த வர்த்தமானங்களை யெல்லாம் வசந்தசேனை ஒன்றுகூட விடாமல் கேட்டுக்கொண்டிருந்தாளாதலால், அவர்களுடைய உட்கருத்துயாவும் அவளுக்கு நன்றாய்த்தெரியும். சர்வலிகனைக் கண்டவுடனே வசந்தசேனை அவனுக்கு ஆசனமளித்து வந்தனஞ்செய்ய, அவனும் அவளை ஆசீர்வதித்து, தமது வீடு பத்திரமானவிடமா யிருக்கவில்லையென்று சாருதத்தன் இதை உன்னிடம் கொடுத்துவிட்டு வரும்படி யனுப்பினாரென்று சொல்லித் தான் கொண்டுபோன நகைகளை அவளிடம் கொடுத்தான்.

வசந்தசேனை தான் ஒன்றும் அறியாதவள்போலவே அதைக் கையில் வாங்கிக்கொண்டு, மதனிகையைக் கையில்பிடித்து, நீர் இந்தப்பெண்ணைப் பரிக்கிரகிக்கவேண்டும்; இந்த நகைகளை உன்னிடம்

யார்கொண்டுவந்து கொடுக்கிறாரோ, அவருக்கு இந்தக் கன்னிகையைக் கொடுத்துவிடு என்று சாருதத்தன் என்னிடம் சொல்லியிருக்கிறார். ஆகையால் அவரே இவளை உமக்குக் கொடுத்ததாய் நினைத்துப் பரிக்கிரகிக்கவேண்டும் என, சர்வலிகன், ஓகோ, நாம் பேசினதெல்லாம் இவள் கேட்டுக்கொண்டிருந்ததுபோலக் காண்கிறது என்று மனதில் எண்ணிக்கொண்டு, வசந்தசேனாய், உன் இஷ்டத்திற்கு நான் எதிர்மொழி சொல்பவனன்று, அப்படியே அங்கீகரிக்கிறேனென்றான். அதுகேட்டு அவள் மிகுந்த சந்தோஷத்துடனே அவன் கொடுத்த நகைகளைத் தன்னிடம் வைத்துக்கொண்டு, வேண்டிய வண்மை வரிசைகளோடு மதனிகையைச் சர்வலிகனுடனே தன் வண்டியிலேற்றி அவன் வீட்டிற்கு அனுப்பிவிட்டாள்.

வசந்தசேனையின் வீட்டினின்றும் இவ்வாறு சர்வலிகன் வெளியே சென்றபிறகு, நவமணிமாலையைக் கொடுத்துவரும்படி சாருதத்தன் அனுப்பிய மைத்திரேயன் அவ்வீட்டிற்குப் போயினான். அவன் வருவதைப்பார்த்து வேலைக்காரி வசந்தசேனைக்குத் தெரிவிக்க, அவள், இன்று நமக்குச் சுதினமாயிற்று! நமதுவீடு முழுமையும் அவருக்கு நன்றாய்க்காட்டித் தோட்டத்திற்கு அழைத்துக்கொண்டுவாவென்று கட்டளையிட்டாள். அப்படியே அவள், எட்டு அங்கணமுள்ளதாய் வெகு விசித்திரமான காட்சிப்பொருள்கள் அமைந்த அவ்வீட்டினழகை அவனுக்குக் காட்டிக்கொண்டே அழைத்துக்கொண்டு போயினாள். இதென்ன குபேரனுடைய கிருகமோ தேவேந்திர பவனமோவென்று அந்தவீட்டினழகு அனைவரும் அதிசயிக்கத் தக்கதாயிருந்தது. அங்குள்ள சித்திர விசித்திரமான வினோதங்களைப் பார்த்து வியந்துகொண்டே மைத்திரேயன் வசந்தசேனையிருக்குமிடமான உத்தியானவனத்திற்குச் சென்றான். பலவகைப்பூஞ்செடிகளும் பழச்செடிகளும் நிறைந்து வினோதக்காட்சி யளித்து திவியகந்தம் வீசும் அவ்வனத்தின் அழகைக் கண்ணெடுத்துப்பார்த்து, ஆ! இதை இப்படிப்பட்டதென்று வர்ணிக்க யார்தாம்! இத்தன்மை விநோதமான காட்சிகூட உலகிலிருக்கின்றதோ என்று மிகவும் ஆச்சரியப்பட்டவனாகி வசந்தசேனை யிருக்குமிடத்திற்குச் சென்றான்.

அப்பொழுது அவள், கமலப்பூக்களில் அன்னப்பறவைகள் வீற்றிருந்து விளையாடும் தெள்ளிய நீர் நிறைந்த ஓர் வாவிக்கரையில் நவரத்தினகசிதமாய்க்கட்டிய உத்தியான மாளிகையிலிருந்துகொண்டு, அவன் வரவை எதிர்பார்த்திருந்தாள். அவனைக் கண்டவுடனே அவள் எழுந்து நமஸ்காரஞ்செய்து நிற்க, அவனும் அவளை ஆசீர்வதித்து ஆசனத்தில் உட்கார்ந்தான். பின்பு வசந்தசேனை அவனை நல்வரவு விசாரித்துச் சாருதத்தனது யோகக்ஷேமங்களைப்பற்றி வினாவ, மைத்திரேயன், கடவுளுடைய கடாக்ஷத்தால் யாதொன்றுங் குறைவில்லை; அவருடைய காரியமாகவே நான் இப்பொழுது உன்னிடம் வந்தது. நீ அவரிடம் அடைக்கலமாகவைத்திருந்த உடைமைகளை அவர் பேத

மின்றித் தமதாகவே பாவித்துச் சொக்கட்டானாடித் தோற்றுவிட்டார்; உடனே அந்த ஆட்டக்காரர்கள் எங்கேயோ ஓடிப்போய்விட்டார்கள்; தேடியும் அவர்கள் அகப்படவில்லை. அந்த நகைகளைத் தேடிப் பிடித்துக்கொண்டு வருகிறவரையில் இந்த ரத்தினமாலையை நீ அதற்கு ஈடாக வைத்திருக்கவேண்டுமென்று மிகுந்த வணக்கத்துடன் உன்னுடன் சொல்லி இதைக் கொடுத்துவிட்டு வரும்படி அவர் திட்டஞ்செய்தார். நீ மனம் பெரிதுபண்ணி இதை வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லி அதை அவள்கையில் கொடுத்தான். அப்பொழுது அவள் தன்னிடம் வந்திருக்கும் திருட்டு நகைகளை அவனுக்குக் காட்டிவிடலாமா என நினைத்தாளாயினும், வேண்டாம், சற்று நிதானிப்போமென்று உடனே தனக்குள் துணிவுசெய்து, சேடிமுகத்தைநோக்கிப் புன்னகைசெய்துகொண்டே, அந்த மணி வடத்தைக் கையில் வாங்கிக்கொண்டாள். பிறகு மைத்திரேயனை நோக்கி, ஐயா, நான் இன்று மாலையில் அவ்விடம் வரவேண்டுமென்று நினைத்திருப்பதாய்த் தமது நண்பரிடம் தெரிவிக்கவேண்டுமென்று சொல்லி அவனைச் செலவுகொடுத்தனுப்பிவிட்டு, தானும் அவ்விடம் செல்வதற்கு வேண்டிய சன்னாகம் செய்துகொண்டிருந்தாள்.

மணிமாலையைக் கொடுக்க வரும்பொழுது மைத்திரேயன், தான் கொடுத்தாலும் வசந்தசேனை அதை வாங்கிக்கொள்ளமாட்டாள், திருப்பிக் கொடுத்துவிடுவாளென்று நினைத்துக்கொண்டே வந்தனன். அதற்குமுன் தன் நகை தன்னிடம் வந்து சேராதிருக்குமாயின் அவள் அவ்வாறே அந்தத் தாழ்வடத்தைத் திருப்பிக்கொடுத்திருப்பாள். மைத்திரேயன், தான் நினைத்திருந்தபடி அவள் அதை கொடாமல் எடுத்துக்கொள்ளவே, அவளிடத்தில் அதிக கோப கொண்டவனாகி, என்னதான் உத்தமியானாலும் வேசிபுத்தி ஒ நாளும் யோக்கியமாகாது; அவர்களுக்கு எப்போதும் அகப்பட்டவரையில் பொருளைப் பறிப்பதில் திருஷ்டியேயன்றி யோக்கியதையில் அணுவளவேனும் திருஷ்டிகிடையாது என்றுமனதில் வெறுத்துக்கொண்டேசாருதத்தனிடம் சென்றான். சென்றுகடுத்தமுகமாகவே நடந்த வரலாற்றைக் கூறி, நீ காசுபறிக்கும் வேசியினிடத்தில் நேசம்வைத்து மோசம்போகாதே யென்று அவனைக் கண்டிக்கத் தொடங்கினான். சாருதத்தன் அதற்கு என்ன சமாதானம் சொல்லியும் அவன் கேளாமல், நீ கொடுத்தனுப்பிய மணித்தாழ்வடம் போதாதென்று இன்னும் ஏதேனும் பறித்துக்கொள்ளச் சாயங்காலம் தானே நேராக வருவதாகவும் அவள் என்னுடன் சொன்னாள்; அன்றியும் நான் அதைக் கொண்டுபோய்க் கொடுக்கும்பொழுது, சேடியும் அவளுமாய் என்னை நோக்கி நகைத்தார்கள் என்றான்.

இதற்குள் மாலைவேளையாகிவிட்டது; அடிவானம் கறுத்து மேகமெழும்பி மழைபெய்யத் தொடங்கியது. ஆயினும் தான் நினைத்

தபடி சாருதத்தனிடம் அவசியம் போய்வரவேண்டுமெனத் துணிந்து தன் சேடியுடனே வசந்தசேனை புறப்பட்டுச் சென்றாள். சென்று அவன் வீட்டிற்குப்போய் அவள் தான் வந்திருப்பதை வேலைக்காரர்மூலமாய்ச் சாருதத்தனுக்குத் தெரிவித்தாள். அதைக் கேட்டவுடனே மைத்திரேயனுக்கு மிகுந்த கோபாவேசமுண்டாகியது. சாருதத்தன் அவனைச் சமாதானப்படுத்தி, வசந்தசேனையை அழைத்துக்கொண்டுவரும்படி சொல்ல, அப்படியே அவன் அவளை அழைத்துவருவதற்கு எதிர்கொண்டு சென்றான். மைத்திரேயனை நோக்கி வசந்தசேனை உங்கள் சூதாடி யெங்கேயிருக்கிறானென்று கேட்க, அவன், இதோ இந்தப் பாழ்ந்தோட்டத்தில் உட்கார்ந்திருக்கிறானென்றான். அதன்மேல் அவள் மைத்திரேயனுடன் சாதுரியமாய்ப் பேசிக்கொண்டே அவ்விடம் சென்று முறைப்படி அவர்களுக்கு மரியாதைசெய்து அவர்கள் அனுமதியின்மேல் அண்டையில் உட்கார்ந்தாள்.

உட்கார்ந்தவுடனே அவளைச் சாருதத்தன் நல்வாவு விசாரிக்க, வசந்தசேனை, தான் முன்னமே யோசனைசெய்துகொண்டு வந்தபடியே, தங்கள் ஆட்டம் நன்றாக நடக்கிறதாவென்று கேட்டாள். நீ வந்ததனால் எல்லாம் நன்றாகவே நடக்கின்றது; நீ இந்த மழையிலே முன்னெற்றிமயிர்கள் நனைய மேலாடை நனையப் புடவை நனைய வந்தது வெகு ஆச்சரியம் என்று சொல்லிச் சாருதத்தன் அவளுக்கு நல்லதாய் வேறுபுடவையொன்று கொண்டுவந்து கொடுக்கும்படி திட்டஞ்செய்தான். அப்படியே கொண்டுவந்து கொடுக்க, அதை அவள் அணிந்துகொண்டாள்.

பின்பு மைத்திரேயன் வசந்தசேனையை நோக்கி: அம்மா, நீ இந்த மழையிலும் இருட்டிலும் மாலைவேளையில் இவ்விடம் வந்ததேது என்று கேட்க, அவள், நீங்கள் கொடுத்த ரத்தினமாலை யென்னவிலையென்று விசாரித்துப்போகவந்தேன் என்ன, அவன் தோழன் காதோடு, நான் சொன்னது சரியாய்விட்டதல்லவா என்றான்.

அதற்குள் அருகேநின்றிருந்த வசந்தசேனையின் சேடியானவள், அந்த மணிமாலையை இவர் பேதமின்றித் தமதாகவே பாவித்துச் சொக்கட்டானடித் தோற்றுவிட்டார்; உடனே அந்த ஆட்டக்காரர்கள் எங்கேயோ ஓடிப்போய்விட்டார்கள்; தேடியும் அகப்படவில்லை; (இவ்வாறு பாதி சொல்லிக்கொண்டிருக்கையிலேயே மைத்திரேயன் நான் சொன்னதையே திருப்பிச்சொல்வதுபோலிருக்கிறதே யென்றான்.) அந்த நகையைத் தேடிக்கொண்டுவருகிறவரையில், அதற்கு ஈடாக இந்த நகைகள் தம்மிடமிருக்கட்டும் என்று சொல்லித் திருடன் கொண்டுவந்து கொடுத்த நகைகளை அவனெதிரே வைத்தாள். மைத்திரேயன் மிகவும் ஆவலாய் அவைகளை உற்றுப்பார்க்க, சேடி, இதென்ன இவ்வாறு கண் பூத்துப்போம்படி பார்க்கிறீரே, இவைகளை நீர் இதற்குமுன் கண்டதுண்டோ என்ற

தற்கு, அவன், இல்லை, வேலைத்திறம் வெகு விசித்திரமாயிருக்கிறதென்று பார்க்கிறேனென்றான்.

சேடி அதுகேட்டு, ஏமாறினீர், முன் நீர் பார்த்த நகைகளேயென்று சொல்ல, மைத்திரேயன் விழித்துப்பார்த்து, ஒகோ நமது வீட்டில் களவுபோன நகைகள்போலிருக்கின்றனவே! இது உங்களிடம் எப்படி வந்ததென்றான். சாருதத்தனும் உற்றுப்பார்த்து அந்த நகைகளேயெனத் தெரிந்து வியப்படைந்தான். பின்பு அவர்கள் அதன் வரலாற்றை ஒருவர்க்கொருவர் விவரமாய்ப் பேசிக்கொண்டார்கள். அப்பொழுது சாருதத்தன், தனக்கு அந்தச் சந்தோஷ சமாசாரம் சொன்ன சேடிக்கு ஏதேனும் ஒரு வெகுமதி அளிக்க வேண்டுமென்று தன் உடம்பெல்லாம் தேடினான்; ஒருபொருளும் அகப்படவில்லை. அதுகண்டு அவன் பெருமூச்செறிந்து தலையைக் குனிந்துகொண்டு, ஆ! வறுமையினாலாகிய சிறுமையை என்னென்று சொல்லலாம்! பல்லைப்பிடுங்கின பாம்பும், நீர் வற்றிய குளமும், சிறகொடிந்த பறவையும், வற்றி யுலர்ந்த மாமும் வறியனுக்கொப்பாகின்றன. தரித்திரனுக்குக் கருணை உண்டாயினும் கோபம் உண்டாயினும் இரண்டும் வீணேயல்லவா? அத்தன்மையானவன் இப்புவியில் உயிரோடிருப்பதைவிட இல்லாதிருப்பதே நலமென்று தனக்குள்ளே சிந்தித்துச் சிந்தைகலங்கிநின்றான்.

அப்பொழுது வசந்தசேனை சாருதத்தனைநோக்கி, ஐயா, நீங்கள் இந்த நவமணிமாலையைக் கொடுத்தனுப்பி என்னை இவ்வாறு அவமானப்படுத்தலாமா என்று வினவினாள். அதற்கு அவன், நீ யாவும் தெரிந்தவளாகையால் நான் உனக்கு அதிகமொன்றும் சொல்லவேண்டுவதில்லை; ஊரார் வாய்க்கு அஞ்சவேண்டியிருக்கிறது; தரித்திரத்தின் கொடுமை நாலுபேரும் நாலுவிதமாய்ப் பழிகூறத் தொடங்குவார்கள். நான் நல்லநிலையிலிருக்கையில் உன்பொருளை யொளித்து வைத்துக்கொண்டு களவுபோய்விட்டதென்றாலும் கேட்போர் நம்பிவிடுவார்கள்; இந்த வறுமை நிலையில் உள்ளபடி உரைத்தாலும் என் பேச்சு யாருக்கும் உண்மையெனத் தோன்றுதல்லவா! எனக்கு ஒரு பழிச்சொல் வந்தால் அது உனக்கும் வந்ததுபோலவேயன்றோ? அதற்காக நான் இவ்வாறு செய்தபடியேயல்லது உன்னிடத்தில் அவநம்பிக்கை கொண்டதனாலன்று, நீ வேறுவிதமாக நினைக்கவேண்டாமென்று சொல்லி சமாதானப்படுத்த, அவள், நீங்கள் என்ன சமாதானம் சொன்னாலும் அது எனக்கு அவமானமாகவே தோன்றுகிறதென்றாள்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் மறுபடி மேகங் கறுத்துப் பெருமழை பொழியத் தொடங்கியது. அதுகண்டு அவர்கள், இனி இங்கே யிருக்கலாகாது, உள்ளே போகவேண்டுமென்று எல்லோரும் எழுந்து சென்றார்கள். வர வர மழையும் அதிகமாகியது; இடியு மின்னலும் மிகுதியாயின; மழைத்தாரைகள் யானைத்

துதிக்கைகள்போலப் பெரிது பெரிதாகப் பேரிரைச்சலுடன் வீழ்ந்து தரையைத் துளைக்கலாயின. அவ்வாறு மழை பொழியும்போது அவர்கள் விநோதமாய்ப் பேசிக்கொண்டே இராத்திரி நெடுநேரம் கழித்துவிட்டார்கள். அதன்பிறகு வசந்தசேனை வீட்டிற்குப் போகவேண்டுமென்றெண்ணி வானத்தை நோக்கி, இந்தக் காடாந்தகாரத்தில் கொட்டுகிறமழையிலே வீட்டுக்குப்போவது அசாத்தியமென்று அறிந்து அங்கேயே நின்றுவிட்டாள்.

மறுநாள் உதயமாயிற்று. காலையில் எழுந்து சாருதத்தன் வழக்கப்படி வெளியே உலாத்திவரப் புறப்பட்டான். அப்பொழுது வசந்தசேனை நித்திரை தெளியாதிருக்கவே, எழுந்தவுடன் அவளைத் தன் வண்டியிலேற்றிப் புஷ்பகரண்டகவனத்திற்கு அழைத்துவரும்படி வண்டிக்காரனுக்குத் திட்டஞ்செய்து தான் முன்னே சென்றான். அவன் சென்ற சிறிதுநேரத்தில் வசந்தசேனை விழித்தெழுந்தாள். அப்பொழுது சாருதத்தனுடைய செல்வமகனை ரோஹசேனன் அண்டைவீட்டுப்பிள்ளை பொன்வண்டிவைத்து விளையாடுவது கண்டு, எனக்கு இந்த மண்வண்டி வேண்டாம்; அத்தன்மையான பொன்வண்டிதான் வேண்டுமென்று பிடிவாதம்பண்ணிப் புலம்பிக்கொண்டிருந்தான். அக்குழந்தையைப்பார்த்து வசந்தசேனை மிகப்பரிதாபமுற்றுத் தான் அணிந்திருந்த நகைகள் அனைத்தையும் கழற்றிக் கொடுத்துப் பொன்வண்டி பண்ணிக்கொள் என்றாள்.

அப்பொழுது வண்டிக்காரன் வாயிலில்வந்து, வண்டி சித்தமாயிருக்கிறது; உத்தியானவனத்திற்குப் புறப்படலாமென்று கூவினான். அதுகேட்டு வசந்தசேனை உடைதரித்துவரும்படி உள்ளே சென்றாள். இதற்குள் வண்டிக்கு மெத்தை போட்டுக்கொண்டுவர மறந்துபோனதனால், அம்மாள் உடைதரித்துக் கொள்வதற்குள் வந்துவிடலாமென்று மெத்தைபோட்டுக்கொண்டுவர வண்டிக்காரன் வண்டியை ஓட்டிக்கொண்டு போயினான்.

அந்தவண்டி அப்புறம்போன தருணத்தில் சகாரனுக்காகத் தோட்டத்திற்குக் கொண்டுபோகப்பட்ட வண்டியொன்று அவ்வழியாக வந்து, எதிரில் ஓர் வண்டி குறுக்கே நிற்கவே, அப்புறம்போக வழியின்றிச் சாருதத்தன் வீட்டுவாயில் ஓரமாய்ச் சற்று நின்றது. அந்தச் சமயத்தில் வசந்தசேனை வந்து பார்த்து அதுவே தனக்காக வந்திருக்கின்றவண்டியென நினைத்து அதிலேறியுட்கார்ந்து கதவை மூடிக்கொண்டாள். உடனே வண்டிக்காரன் வண்டியைச் சகாரனிடம் ஓட்டிக்கொண்டுபோய்விட்டான். விரைவாகவே வண்டி தோட்டம் போய்ச்சேர்ந்தது.

(இன்னும் வரும்.)

வயதுகண்டறியும் விநோதம்.

ஒருவன் வயதைச் சொல்லுவதெப்படி?

எவனுடைய வயது உனக்குத் தெரியவேண்டுமோ அவனை, தன்வயதைக்குறிக்கும் எண், அடியில் பதித்திருக்கும் ஆறுவரிசை எண்களில் எந்தெந்தவரிசைகளில் வருகிறதோ, அந்தந்த வரிசைகளைமாத்திரம் கையால் தொட்டுக் காண்பிக்கச்சொல்லி, அந்தந்த வரிசைகளின் தலையிலிருக்கிற எண்களைக் கூட்டினால், அவனுடைய வயது இத்தனையென்று தெரியவரும்.

1	2	4	8	16	32
3	3	5	9	17	33
5	6	6	10	18	34
7	7	7	11	19	35
9	10	12	12	20	36
11	11	13	13	21	37
13	14	14	14	22	38
15	15	15	15	23	39
17	18	20	24	24	40
19	19	21	25	25	41
21	22	22	26	26	42
23	23	23	27	27	43
25	26	28	28	28	44
27	27	29	29	29	45
29	30	30	30	30	46
31	31	31	31	31	47
33	34	36	40	48	48
35	35	37	41	49	49
37	38	38	42	50	50
39	39	39	43	51	51
41	42	44	44	52	52
43	43	45	45	53	53
45	46	46	46	54	54
47	47	47	47	55	55
49	50	52	56	56	56
51	51	53	57	57	57
53	54	54	58	58	58
55	55	55	59	59	59
57	58	60	60	60	60
59	59	61	61	61	61
61	62	62	62	62	62
63	63	63	63	63	63

THE OPENING by THE QUEEN
ALBANI SINGING "HOME SWEET HOME".

லண்டன்ம ... டி காலையில் மகாராணியார் வந்த
... ம் பார்.

சக்கரவர்த்தினியாரின் ஐம்பதுவருஷத்து அரசாட்சி.

நாளது ஜூன்மீ 20உ நமது சக்கரவர்த்தினியாரான மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியார் இங்கிலாந்து தேசத்தில் முடிசூடி அரசாட்சி செய்யத்தொடங்கி நாற்பத்தொன்பது வருஷம் நிறைந்து ஐம்பதாம் வருஷம் ஆரம்பமாகின்றது. இவ்வளவு நெடுங்காலம் நீதிமுறை தவறாமல் ராச்சியபரிபாலனம் செய்த மகாபிரபு இவரைப்போல் ஒருவருமில்லையென்னும் இணையிலாப்பெருமையை வெளியிடுவதற்காகவும், நமது தேசத்தவர் ஒருவர் பிறந்து 60 வருஷகாலம் சுகமாய் ஜீவித்திருந்தால் அக்காலத்தில் ஷஷ்டிபூர்த்தி (60-ம் ஆண்டு நிறைவு) என்னும் ஒரு உற்சவம் நடத்துகின்ற வண்ணமே மேற்குதேசத்தார் ஒருவர் பிறந்த 50-ம் வருஷத்திலே ஜூபிலியென்னும் பண்டிகை கொண்டாடுகின்ற வழக்கத்தை அனுசரித்தும், இந்தச் சுபகாலத்தில் இங்கிலீஷ் கொடிபறக்கும் தேசமெங்கும் அனைவரும் அகங்களித்து ஒரு சிறந்த திருவிழா கொண்டாடுவது மன்றி, அங்கங்கே பல புலவர்களும் பாவலர்களும் இந்தக் குணபூஷணியின் பெருமைகளையும் குணாதிசயங்களையும் எடுத்துப் பலவாறு புகழத் தொடங்கியிருக்கின்றனர். இந்த ராஜ சிகாமணியின் சரித்திரங்களையும் சற்குணங்களையும் நாம் இப்பத்திரிகையில் அப்போதப்போது சிற்சிலவாய்க் கூறி இருக்கின்றோமாயினும், அவருடைய பெருமைகளை வெளியிடுவதற்கு இது ஒரு ஏற்ற தருணமாக வாய்த்திருக்கின்றதாதலால், இப்பொழுது நாம் மவுனமாயிருப்பது உசிதமன்று. ஆயினும், 'தொட்டிலிற்பழக்கம் தேகமுள்ளளவும்' என்ற வசனப்படி சிறுபொழுதிலேயே பழக்கப்பட்டு நாளுக்கு நாள் விருத்தியடைந்து, கடைசியில் தமக்கு முக்கியமான ஆசிரயமாய் இம்மகாராணியாரிடத்தில் குடிகொண்டு, காண்போர் கேட்போர் அனைவர்க்கும் நீதி நல்லொழுக்கங்களைப் பயிற்ற வல்லவையாயிருக்கின்ற உத்தம குணங்களாகிய செங்கோன்முறைமை, செய்தொழில் திறமை, செய்ந்நன்றியறிதல், சீவகாருணியம், சுற்றந்தழால், கல்வி, கேள்வி, கற்பு, குறிப்பறிதல், குற்றங்கடிதல், தாளாண்மை, தீவினையஞ்சுதல், தெய்வபக்தி, வாய்மை, விருந்தோம்பல், வினைத்தூய்மை, மனத்தூய்மை, அறஞ்செயவிரும்பல், அடுத்தோரை ஆதரித்தல், அடக்கமுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, அருளுடைமை, அவையஞ்சாமை, அழுக்காறாமை, ஆள்வினையுடைமை, இனியவைகூறல், இன்னாசெய்யாமை, இடுக்கணழியாமை, இறைமாட்சி முதலிய பலவும் விளங்கும்படி விவரமாய் எழுதப்புகுந்தால் பல புஸ்தகங்கள் எழுதலாம். அவ்வாறு பெருக்கியெழுத

இங்கு இடமில்லையாதலால், தற்காலத்துக்கு ஏற்றவையாகச் சிறிது சுருக்கமாய்க் கூறுவோம்.

இப்பொழுது இம்மகாராணியாருடைய ராச்சியம், இந்த ராச்சியத்தில் சூரியன் எக்காலத்திலும் ஏதாயினும் ஓரிடத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பதேயன்றி எப்பொழுதும் முற்றும் அஸ்தமான மாவதில்லை யென்று நாநாதேசத்தவர்களும் நயந்து கொண்டாடும்படி இப் பூமண்டலத்தில் எப்புறமும் பரவி இருக்கின்றது. இந்த ராச்சியத்திலே இந்தச் சக்கரவர்த்தினியாருடைய அரசாட்சியில் உண்டான லோகோபகாரமான நன்மைகள் பல; அவற்றினும் இவ்விந்தியாவிலும், முக்கியமாய் இச்சென்னை ராஜதானியிலும், நாம் பெற்றிருக்கின்ற பெரும்பயனுக்கு இவ்வளவென்று அளவில்லை. இந்த மாது சிரோமணியின் அரசாட்சி ஆரம்பமாவதற்கு முன் படிப்பென்பது யாரோ சிலரிடத்தில் ஒவ்வோரிடங்களில் அருமையாயிருந்ததேயொழியச் சாதாரணமாய் எங்கும் விருத்தியடைந்திருக்க வில்லை: முன்பு வித்தியாசாலையென்பது எங்கேயோ அருமையாயிருந்தது; இப்பொழுது இத்தேசத்தில் 30 லக்ஷம் வித்தியார்த்திகள் அடங்கிய லக்ஷத்துப் பதினாயிரம் வித்தியாசாலைக ளிருக்கின்றன. ஆகலின் படிப்பு அக்காலத்திலிருந்த நிலைமைக்கும் இக்காலத்துள்ள நிலைமைக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால், இப்பொழுது ஆயிரம் மடங்கு அதிகமாய் விருத்தியடைந்து தேசமெங்கும் வியாபித்திருக்கின்றது என்று சொல்லத் தடையுண்டோ? இவ்வுலகத்தார்க்கு ஒப்புயர்வில்லாத பெரும்பேறாக அமைந்திருக்கின்ற கடிதத் தபால், தந்தித்தபால், இருப்புப்பாதை வண்டி, நீராவியந்திரம் முதலிய யாவும் நன்கு அமைந்து நிலைபெற்றதும் இம்மகாராணியாருடைய அரசாட்சியிலேதான்; இவரது அரசாட்சிக்கு முன் தபாற் சாவடிகள் இருந்த நிலைமையை முன்னொரு சஞ்சிகையில் தபாற் சாவடியின் தற்கால முற்கால நிலைமை என்கிற விஷயத்தில் விளங்கக் கூறியிருக்கின்றோமல்லவா? இப்பொழுது அது எத்தன்மையான நிலைமையிலிருக்கின்றது பாருங்கள்! இந்த இந்து தேசத்திற்குள் நமது பந்து மித்திரர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் இரண்டொரு தினத்திற்குள்ளே க்ஷேமசமாசாரங்களைக் காலணா செலவுசெய்து தெரிந்துகொள்ளும்படியா யிருக்கின்றது எவ்வளவு பாக்கியம்! நாலணாவில் எழுநூறு காததூரமான சீமைக்குச் சமாசாரம் போகின்றது. இவ்வண்ணமே மின்தபால் முன்னே யாரோ சில சாஸ்திர பண்டிதர்களுடைய உள்ளத்தில் ஓர் அற்புதமான தோற்றமாய் அமைந்திருந்தது. அதுகாரியத்தில் வழங்கலானது விக்டோரியாவின் ஆட்சியிலேதான். இப்பொழுது இந்துதேசத்தில் 22,000 மைல் தூரம் தந்தித்தபால்கம்பி போடப்பட்டிருக்கின்றது. இருப்புப்பாதை வண்டியைப் பற்றிய வரலாறுகளெல்லாம் இப்புத்தகச் சங்கத்தார் தனியே பிரசுரஞ்செய்திருக்கின்ற ஜார்ஜி ஸ்டீவின்சன் சரித்திரத்

ல தெளிவாய் விளங்கும். அது அதற்கிருந்த பல இடையூறுகளும் நீங்கி நன்குமதிக்கப்பெற்று நாடுகளில் பரவத்துவக்கியது இவ்வரசாட்சியிலேதான். நீராவியின் வல்லமையும் யந்திரசக்திகளும் அற்புதமான வகையாய்க் காரியங்களில் உபயோகப்பட்டு மிகவும் அற்புதமான நன்மைகளைச் சாதிக்கலானது இவ்வுத்தமியாருடைய ஆட்சியிலேதான். இதற்கு முன் நாகரிகம் இத்தன்மைத் தென்பதே தெரியாமல் மிருகங்களோடு ஒப்பாக மாமிசங்களைப் பச்சையாகவே பிடுங்கித்தின்றுகொண்டிருந்த பல தேசத்தார் நாகரிகத்தின் தன்மை இப்படிப்பட்டதென்று உணர்ந்து சீர்பெற்றதும் இச்சீமாட்டியினுடைய செங்கோலிலே தான். இப்போது புதிதாகக் கண்டுபிடித்திருக்கிற அற்புதமான பல தத்துவங்களையும் சாஸ்திர விஷயங்களையும் இங்கிலாந்து முதலிய தேசத்தவர்கள் அக்காலத்தில் கனவிலேகூடக் கண்டிருக்கமாட்டார்கள். இச்சென்னைநாட்டில் பற்பல நியாயஸ்தலங்கள் ஸ்தாபிக்கப்பட்டதும், ஏரி கால் குளம் முதலிய ஜலாதாரங்கள் ஏற்பட்டதும், அங்கங்கே திருத்தமான பாதைகளும் சாலைகளும் அமைக்கப்பட்டதும், கொலை களவு முதலிய கொடியசெயல்கள் நீங்கி நாநாதேசத்தவரும் நிர்ப்பயமாய் வாழும்படியானதுமாகிய இவையும், இவைபோன்ற மற்றும் பலவும் இச்சக்கரவர்த்தினியாருடைய ஆட்சியில் நாம் கண்ட காட்சிகளேயாம்.

இதற்குமுன் சாதாரணமாய் எளியஜனங்கள் எவ்விடத்திற்குச் செல்லவேண்டுமாயினும் கால்நடையாகவோ கட்டைவண்டியிலோ செல்லவேண்டியிருந்தது; யாரோ தனவான்களான சிலர் குதிரைகளின்மீதும் பல்லக்குகளிலும் ஏறிச்சென்றார்களாயினும், அவையும் இக்காலத்து இருப்புப்பாதை வண்டியின்வேகத்துக்கு ஈடானவையென்று சொல்லக்கூடுமோ? முன்னே சரக்குகளெல்லாம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாடுகளின் மேலேற்றிக்கொண்டு போகப்பட்டன; ஒரு தேசத்தில் பஞ்சம்நேரிடுமாயின் நாடுசெழித்திருக்கும் மற்றோரிடத்திலிருந்து தானியம் முதலியவை அழைப்பித்துக்கொள்ள வழி யாதொன்று மில்லாதிருந்தது. இச்சென்னைநாட்டில் சிலவருஷங்களுக்கு முன் கொடிய பஞ்சமொன்று நேரிட்டதே; அக்காலத்தில் நமது பாக்கியவிசேஷத்தால் பிறதேசங்களிலிருந்து எவ்வளவு தானியமூட்டைகள் மலைமலையாகவந்து குவியக்கண்டோம்; அத்தன்மையான பஞ்சமொன்று முற்காலத்தில் நேர்ந்திருக்குமாயின் அவர்கள் எப்பாடுபட்டிருப்பார்களோ? அக்காலத்தில் ஆறுகளுக்குப் பாலமும் கிடையா; திருத்தமானபாதைகளும் கிடையா. இப்பொழுது பெரிய ஆறுகள் பலவற்றிற்குப் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன; லக்ஷம்மைல்தூரம் செப்பனிட்ட பாதையும், பன்னீராயிரம்மைல் இருப்புப்பாதையு மிருக்கின்றன. இதனோடு இவை நாளுக்கு நாள் மேன்மேலும் விருத்தியடைந்து

கொண்டேவருகின்றன. சென்ற 1884-ஆம்த்தில் 7 கோடியே லக்ஷம் பிரஜைகள் இருப்புப்பாதையேறிச் சென்றார்களாம்.

நீராவிக்கப்பல்கள் 11 நாளில் பம்பாயிலிருந்து 7000 மைல்தூரத்திலுள்ள இங்கிலாந்து போய்ச்சேருகின்றன. தந்தித்தபால் இங்கிருந்து ஒருமணிநேரத்திலே போய்ச்சேருகின்றது; இக்காரணங்களால் வர்த்தகவியாபாரங்கள் விசேஷமாக விருத்தி செய்யப்பட்டு வருகின்றன. பயிர்த்தொழில் விசேஷமாக விருத்திசெய்விக்கப்பட்டு அதற்காக 9000 மைல் பெரியவாய்க்கால்களும் 20,000 மைல் கிளைக்கால்களும் வெட்டப்பட்டிருக்கின்றன. நூல்யந்திரங்களும், நெசவுயந்திரங்களும் ஸ்தாபிக்கப்பட்டன; இப்பொழுது இத்தேசத்தில் 90 யந்திரங்கள் வரையில் ஸ்தாபிக்கப்பட்டு 70 ஆயிரம் பிரஜைகளுக்கு வேலையளிக்கின்றன. பிரஜைகளுடைய தேகசவுக்கியத்திற்கு அனுகூலமாய்ச் சுகாதாரவிஷயங்கள் பலவும் கற்றுக்கொள்ள வைத்தியசாஸ்திர பாடசாலைகளும், தருமவைத்தியசாலைகளும் அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டன. வைசூரியின் கொடுமையை விலக்க வழி தேடப்பட்டது. இதன் விவரங்களை முன்னமே நாமெழுதியிருக்கின்றோமல்லவா? நாடுநகரங்களில் பிரஜைகள் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய மற்றும் பல உபாயங்களும் அனுசரிக்கப்பட்டன. கிராமகாரியங்களையும் நகரகாரியங்களையும் தாமேநேராக நடத்திக்கொள்ளக் குடிகள் சுயமாய் அத்தியக்ஷர்களைத் தேர்ந்தெடுத்து விசாரணைச் சங்கங்கள் ஏற்படுத்திக்கொள்ளும்படி அவர்களுக்குச் சுதந்தரம் அளிக்கப்பட்டது. குடிகள் தமது அபிப்பிராயங்களை அச்சமின்றி வர்த்தமானபத்திரிகைகளில் வெளியிடுவதற்குச் சம்மதி கொடுக்கப்பட்டது. அதற்கேற்கவே சமாசாரபத்திரிகைகளும் விசேஷமாக விருத்தியடையலாயின. இவ்வாறு நல்லரசாட்சிபெற்று இக்காலத்தில் நாடு செழிப்படைந்ததற்கு நல்லறிகுறியாய் நாளுக்கு நாள் பிரஜைகள் விசேஷமாக விருத்தியடைந்து வருகின்றனர். பூமியின் விளைவுகளும் அதிகமாகிச் சகலஜனங்களுக்கும் சுகஜீவனத்திற்கு வேண்டிய பொருள்கள் சுலபமாய்க் கிடைக்கின்றன; வர்த்தகவியாபாரங்களும் கைத்தொழில்களும் விருத்தியடைந்து அவற்றின்மூலமாய்ப் பிரஜைகளுக்குப் பற்பல சவுக்கியங்களும் சம்பத்தும் உண்டாகத்தலைப்பட்டன; நோயினால் பிரஜைகள் அதிகமாய்ப் பிடிக்கப்படுவதில்லை; குற்றவாளிகள் அதிகமாய்க் காணப்படுவதில்லை. கேவலம் மிருகங்களுக்கு ஒப்பான காட்டுமனிதர்கள் வாசஞ்செய்யப்பெற்றுக் குற்றவாளிகளைக் கப்பலேற்றியனுப்பிவிடும் இடமாயிருந்த ஆஸ்திரேலியாமுதலிய பலதேசங்கள் மிகச்சீர்திருத்தம் பெற்று நாகரிகத்தேர்ச்சியடைந்த நாடுகளுள் சேர்ந்தவையாயின.

இவ்விதமாக இவ்வளவு நெடுங்காலம் நாடுகளில் எவ்விதமான கலகமும் சிறிதுமில்லாமலும், எவர்க்கும் எவ்விதமான நிர்ப்பந்தமுமில்லாமலும், நாட்டுவளமும் நாகரிகமும் நாளுக்கு நாள் மேன்

மேலும் செழித்தோங்க அகண்டபூமண்டலாதிபதியாய் ஆட்சிபுரிந்தவர் மற்றெவருமில்லையென்றால் இவருடைய பெருமைகளை நாம் இன்னும் பெருக்கிப் பேசவேண்டுவது வேறென்ன? அன்றியும் இத் தச் சக்கரவர்த்தினியாருடைய புகழ்ச்சரிதம் பற்பல நீதி நல்லொழுக்கங்களுக்கு நிகரற்ற நிதர்சனமாகி கேட்போர் செவிக்கு இன்பந் தருவதா யிருக்கின்றது.

இந்த விக்டோரியா மகாராணியார் இங்கிலாந்து தேசத்தில் கென்ஸிங்டன் மாளிகையிலே 1819-ஆ மேய௴ 24௳ பிறந்தவர். இவருடைய தந்தைவமிசம் தாய்வமிசம் இரண்டும் மிகப்பிரசித்தமானவை. தந்தை 1000 வருஷத்துக்கு முன் இங்கிலாந்தில் அரசு செலுத்திய ஆல்ப்ரெட் தி க்ரேட்டு என்னும் ராஜாவினுடைய வமிசத்தில் பிறந்தவர்; தாயோ 900 வருஷமாக ஜர்மனிதேசத்தில் அரசு செலுத்திய ராஜவமிசத்தைச் சார்ந்தவர். இங்கிலாந்து தேசத்தில் நெடுநாள் அரசுசெலுத்தி வந்த மூன்றாவது ஜார்ஜ்துரையே விக்டோரியாளுடைய பாட்டனார். 3-ம் ஜார்ஜ்துரையவர்களுக்குப் பின் பட்டத்துக்கு வந்தவர் அவருடைய மூத்தகுமாரரான 4-வது ஜார்ஜ் என்பவர். அவர் காலத்திலேயே இரண்டாவது குமாரரான டியூக் அவ் யார்க்கு இறந்துபோகவே, 4-ம் ஜார்ஜுக்குப் பிறகு மூன்றாவது குமாரரான 4-ம் உவில்லியம் பிரபு பட்டத்துக்குவந்தார். அந்த உவில்லியம் பிரபுவுக்கும் அவருடைய மற்றச் சகோதரர்களுக்கும் சந்ததியில்லாமற்போகவே அந்த ராச்சிய சம்பத்துத் தானாகவே இச்சிறுமகளைத் தேடிக்கொண்டு இவரிடம் வந்து சேரும்படியாக நேரிட்டது. இவருடைய தகப்பனார் ஜார்ஜ்துரையவர்களின் 4-வது குமாரரான டியூக் அவ் கெண்டு என்பவர். இந்த இளவரசிக்கு இளமையிலே பிராணபாயமான சிலகண்டங்கள் நேரிட்டன; ஆயினும் இந்த நாட்டார் செய்த நற்றவத்தால், மலைபோல வந்தவையெல்லாம் பனிபோல விலகிப்போயின.

இந்த இளவரசி எட்டுமாதக் குழந்தையாயிருக்கையிலே தகப்பனார் இறந்துபோயினார். அதற்குக்காரணம் யாதெனின், டியூக் அவ் கெண்டுக்குத் தன்செல்வச் சிறுமகளிடத்தில் அன்பு மிகவும் அதிகம்; 'இக்குழந்தையைப் பாருங்கள்; இவள் இங்கிலாந்துக்கு அரசியாகப் போகிறாள்' என்று சொல்லிச் சந்தோஷித்துக் கொண்டேயிருப்பார். ஒருநாள் அவர் வெளியேபோய்த் தம் உடைமுதலிய வெல்லாம் சில்லென்றுநனைந்து வீட்டிற்குவந்தார்; வந்தவுடனே குழந்தையைக் கண்டு களிப்புற்று உடுப்பைமாற்றமறந்து மகளுடன் விளையாடத் தொடங்கினார். அதனால் உடுப்பின் ஈரமுறைத்துச் சீதளமேறிக் குளிர்காய்ச்சல்கண்டு இறந்துபோயினார். நம்மகாராணியாருக்குச் சிறுபருவத்தில் நேர்ந்த துன்பங்களுள் இதுதான் மிகக்கொடியது. ஆயினும் தந்தையில்லாத குறையை உணர்ந்து தாயார் பின்னும் பதின்மடங்கு அதிகமாய்க் குழந்தையினிடத்தில் அன்புவைத்துக்

கண்ணுங்கருத்துமாகக் காப்பாற்றி வந்தாள். அப்போதுபார்லிமெண்டு சபையாரும் பிற்காலத்தில் இங்கிலாந்து ராச்சியத்திலே சிங்காதனமேறத்தக்க உரிமையுடையவர் இச்செல்வச் சிறுமகளே யெனத் தேர்ந்து, அக்குடும்பரக்ஷணத்துக்கு வேண்டியபொருள் கொடுத்து உதவிபுரிந்துவந்தார்கள்.

அச்சிறுமி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, 'இளமையிற்கல்' என்ற ஔவை உரைப்படி மிகச்சிறு பருவத்திலேயே பற்பல விஷயங்களையும் கற்கத் தொடங்கினர். குழந்தையாய்ப் பேசத் துவக்கும்பொழுதே பிரென்சு, லத்தீன் முதலிய சில முக்கியமான பாஷைகளையும் சுதேச பாஷையைப்போல இயல்பாகவே பேச நன்குபயிற்றுவிக்கப்பட்டார்.

ஐந்தாவது வயதில் அக்ஷராப்பியாஸம் செய்விக்கப்பட்டது. அதுமுதல்இளவரசி புஸ்தகங்களைப்பார்த்துப் படிக்கப் பயிற்சி செய்தார். விஷயங்களைச் சொல்வதற்கு முன்னமே ஏகசந்தக்கிராகியாய் அறிந்துகொள்ளுகிற புத்தி திட்பத்திலும், ஒருதாம் புத்தியிலேறிய விஷயத்தை மறுபடி மறவாமல் அப்படியே தரித்துக்கொள்ளுகிற ஞாபகசக்தியிலும் அவர் இணையில்லாதவரென்று அக்காலத்தில் அவர்க்குக் கல்விகற்பித்த டாக்டர் டேவிஸ் என்பவர் மிகவும் கொண்டாடியிருக்கிறார். அப்பொழுதே அவர் இளவரசிக்கு அவசியமான தேசசரித்திரம், மதவிஷயம், ராஜநீதி முதலிய பற்பல விஷயங்களையும் பயிற்றுவித்து வந்தார். இளமையிலேயே இச்சிறுமியினிடத்தில் உண்மை, ஊக்கம், இரக்கம், கடமையைக் கைவிடாமை முதலிய நற்குணங்கள் தாமே புலப்பட்டன. பிறகு தாயார் அவ்வுத்தம குணங்களைப் பின்னும் பலமடங்காகப் பண்படுத்தியது மாத்திரமேயன்றி, எப்பொழுதும் அச்சிறுமியைத் தன்னண்டையிலேயே வைத்திருந்து வேண்டிய நல்லொழுக்கங்களையும் பயிற்றுவித்து வந்தாள். ராணியாகப்போகிற செய்தி அம்மகளுக்கு முன்னதாய்த் தெரியாதிருக்கவேண்டுமென்று அவ்விஷயத்தை வெகு கருத்தாய்க் கண்காணித்து வந்தாள்.

நாள்தோறும் இவ்வளவரசி காலைமுதல் செய்துவந்த காரியமென்னவெனில், காலையில் தாயாருடன் உட்கார்ந்து பால் பழம் ரொட்டி இவைகளைக் காலைப்போஜனம்செய்வார். பின்பு கால்நடையாகவாவது வண்டியிலேறிக்கொண்டாவது ஒரு மணிநேரம் உலாத்திவிட்டு, 10-மணிக்குமேல் 12மணிவரையில் பாடம்படிப்பார். அதற்குமேல் 2-மணிநேரம் விளையாட்டுவேளை. 2-மணிக்குச் சாதாரணமான பகற்போஜனம்செய்து மறுபடி 4-மணிவரையில் பாடம் படிப்பார். பிறகு வண்டியிலேறித் தோட்டம்பார்க்கப்போவார். தோட்டத்தில் பூஞ்செடிமுதலியவைகளுக்குத் தாமே தண்ணீரூற்றி வளர்ப்பதில் அவர்க்கு வெகுவினோதம். மற்றச் சாதாரணமான சிறுமிகளைப்போலவே வெளியேபோய் உலாத்திவந்ததனாலும் சாதா

ரணமாய் ஆரோக்கியமான உணவுகளையே புசித்துவந்ததனாலும் அவருடைய தேகசவுக்கியத்துக்கு ஒருபோதும் குறைவில்லாமலேயிருந்தது.

விக்டோரியாளுக்குப் பன்னிரண்டு வயதானபிறகு நான்காவது உவில்லியம் பிரபு அரசு செலுத்தி வருகையிலேதான், ஒருகால் அச்சிறுமிக்கு யோக்கியவயது வருவதற்கு முன்னமே அவ்வாசன் இறந்துபோகும் பட்சத்தில், அப்போது நடத்தவேண்டிய விதங்களைப்பற்றி ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தச் சமயத்திலே இது விஷயத்தை இளவரசிக்கு அறிவிக்க இதுதான் தருணமென்று அவருடைய தாயார், உபாத்தியாயர் முதலியோர் ஆலோசித்தறிந்தார்கள். அதற்கேற்ற உபாயமொன்று ஆலோசித்து இளவரசியின் உபாத்தியாயர் அவளைக்கொண்டே இங்கிலாந்து தேசத்து ராஜாக்களின் வரிசையை ஒரு வம்சவிருக்ஷமாய் எழுதுவித்தார். அவ்வாறே இளவரசி அதை எழுதிமுடித்துப் பிறகு, நம்பெரியதந்தை உவில்லியத்துக்குப் பின் பட்டத்துக்கு உரியவர் நான் தவிர வேறொருவரும் இல்லையென்று தோன்றுகிறதேயென்றார்.

அதுகேட்டு உபாத்தியாயர் உளமகிழ்ந்து, ஆம் அப்படிதான் என்று சொல்ல; இளவரசி, பலபேர்க்கு இது வெகு சந்தோஷமாய்த் தோன்றும்; ராச்சியபாரந் தாங்குவதிலுள்ள வருத்தம் அவர்களுக்குத் தெரியாது. அதில் பெருமைகளுண்டாயினும், பொறுப்பு மிகவும் அதிகம் என்று சொல்லி, நான் நியாயத்திற்குச் சரியாகவே நடப்பேனென்று கையடித்துக் கொடுத்தார். அந்த உறுதிமொழியை அவர் அன்றுமுதல் இன்றளவும் உண்மையாகவே காப்பாற்றிக்கொண்டு, நாநாதேசத்தவராலும் நன்குமதிக்கப்பட்டு வருகின்றார்.

மகாராணியார், தன்னுடன் இருக்கின்ற மற்றொரு பெண்ணுக்கு இல்லாமல், தனக்குமாத்திரம் லத்தீன்பாஷை கற்பித்து வருவதற்குக் காரண மின்னதென்பது, அப்பொழுதுதான் தனக்குத் தெரியவந்ததென்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு விக்டோரியாள் சகலமான சற்குணமுமமைந்து கல்வி கேள்விகளிலும் ராஜநீதிமுதலியவற்றிலும் தேர்ச்சிபெற்று வருகையில், அவருடைய 18-வது வயதான 1837-ஆ ஜூன்மீ 20உ இராத்திரி அக்காலத்து அரசனும் இளவரசியின் பெரிய தகப்பனருமாகிய 4-ம் உவில்லியம் பிரபு விண்ட்ஸர் மாளிகையில் காலகதியடைந்தார். அச்சமயத்தில் அவரண்டையில் காத்திருந்த பிரதானகுருவும் ராஜவைத்தியர் ஒருவரும் உடனே அந்தச் செய்தியை இளவரசிக்கு அறிவிக்கும்படி, அவர் இருக்கும் கென்ஸிங்டன் மாளிகைக்குச்சென்றார்கள். அவர்கள் அவ்விடம் போகும்பொழுது காலை 5-மணி; யாவரும் நல்ல நித்திரையாயிருந்தனர். ஆயினும் அவர்கள் மணியடித்து வேலைக்காரியையெழுப்பி, தாம் மிகவும் முக்கிய

மான காரியமாய் வந்திருப்பதாகச்சொல்லி, அதை ராணியாரிடம் அறிவிக்கும்படி கேட்க; அவள், இளவரசி அயர்ந்து தூங்குகிறார்; இப்பொழுது எழுப்புவது உசிதமல்லவென்றாள். அதுகேட்டு அவர்கள், நாங்கள் ஒரு அவசியமான ராஜகாரியமாகவந்திருக்கிறோம்; எப்படிப்பட்ட நித்திரையாயினும் அதுவும் இப்பொழுது கொஞ்சம் இதற்கு இடங்கொடுக்கவேண்டியதுதா னென்றனர். இதற்குள் இந்தச் சந்தடிகேட்டு ராணியார் விழித்துக்கொண்டு அந்த இராவுடுப்புடனே, தலைமயிர் அவிழ்ந்து தோள்களில் அலையக் கண்களில் நீர்ததும்ப அவர்களெதிரே வந்துநின்றார். உடனே அவர்கள் தாம் வந்தசெய்தியைத் தெரிவிக்க, ராணியார் பிரதான குருவைநோக்கி, என்னைக் கருணையுடன் கடாட்சித்தருளும்படி கடவுளைப்பிரார்த்திப்பீர்களாகவென்று வேண்டினர். அவ்வண்ணமே அவர்கள் முழங்காலிட்டு, இனி யெதிர்பார்த்திருக்கிற ராஜகாரியங்களை நன்கு நடத்துவதற்கு வேண்டிய விவேக விருத்தியையும் வல்லமையையும் ராணியாருக்குத் தந்தருளும்படிக் கடவுளைப் பிரார்த்தித்தனர். இவ்விதமாகத் தெய்வபக்தியுடனும் தரும சிந்தையுடனும் துவக்கியதென்றால் அந்த அரசாட்சி சீர்மைபெற்றிருப்பது ஓர் அதிசயமாகுமோ!

பிறகு கைம்பெண்ணயின பெரியதாயாருக்கு ராணியார் உருக்கத்துடன் உபசாரவசனங்கள் எழுதியனுப்பிவிட்டுத் தாயாரிடஞ் சென்று, நடந்தவரலாற்றையும், ராஜ்யபாரம் தன்மேல் பொறுத்ததையும் தெரிவித்தார். அப்பால் தாம்மாத்திரம் தனியேயிருந்து சற்றுநேரம் ஆலோசிக்கலானார். இதற்குள் மந்திரி முதலியோர் அவரைக் காணவந்தார்கள். அன்று 11-மணிக்கு மந்திராலோசனைச் சபையொன்று கூட்டப்பட்டது; அப்பொழுது மகாராணியார், அனைவரும் கேட்டு வியக்க, நெடுநாள் அக்கிராசனத்தில் வீற்றிருந்தவர்போலவே அக்காலத்துக்கேற்ற விளம்பரமொன்று எழுதிப்படித்தார்.

மறுநாள் வழக்கப்படி, ராஜவாத்தியங்கள்முழங்கப் பீரங்கிகள் வெடிதீர, விக்டோரியா மகாராணியார் சிங்காதனமேறினர் என்ற செய்தி எங்கும் விளம்பரஞ்செய்யப்பட்டது. அதுகேட்டு அனைவரும் நமது மகாராணியார் ஜயம்பெற்றுச் சுகஜீவியாய் நெடுநாள் வாழ்ந்திருக்கும்படி கடவுள் கடாக்ஷிப்பாராகவென்று வாழ்த்திக்கொண்டாடினார்கள். பிறகு மகாராணியார் கென்ஸிங்டன் மாளிகையை விட்டு ராஜாக்கள் வசிக்குமிடமான பக்கிங்ஹாம்மாளிகைபோய்ச் சேர்ந்தார். அதுகண்டு கென்ஸிங்டன் மாளிகைக்கு அருகிலிருந்தவர்கள் யாவரும் இவர் நம்மைவிட்டு நீங்கிப்போய் விடுகிறாரேயென்று மிகவும் விசனமடைந்தார்கள்.

1838-ஞ் ஜூன்மீ 28வ. ராணியார்க்கு முடிசூட்டினார்கள். அதுவரையில் ஒருவருஷகாலம் மகுடாபிஷேகமில்லாமலே மகாராணியார் ஆட்சிபுரிந்துவந்தார். அந்த மகுடாபிஷேக மகோற்சவதினத்தில் நடந்த விபவங்கள் இத்தன்மையனவென்று எடுத்துரைக்க

இங்கு இடமில்லை. சித்திரவிசித்திரமாய் அலங்கரிக்கப்பெற்று எட்டுக்குதிரைகள் பூட்டிய ராஜரதத்தின்மீதேறி மகாராணியார், மங்கள வாத்தியங்கள் முழங்க ராஜபரிஜனங்கள் புடைசூழப் பீரங்கிகள் வெடிதீர்க்க பக்கிங்ஹாம்மாளிகையினின்று புறப்பட்டு வெஸ்டு மினிஸ்டர் ஆபியென்னும் அழகிய தேவாலயத்திற்சென்று மகுடாபிஷேகம்செய்துகொண்டு வீதிவலம்வந்த காட்சி வெகு விசித்திரமானது. அக்காலத்தில் பிரஜைகளும் பிரபுக்களும் அந்த மகுடாபிஷேக மகோற்சவத்தைக்கண்டு களிக்கும்படி வீதிகளிலும் தேவாலயத்தின் உள்ளும்புறமும் திரளாய்க்கூடியிருந்து, ஜயவிஜயீபவவென்று மகாராணியாரை வாழ்த்தினார்கள். இப்படி கோலாகலமாயிருக்கும் கோடானுகோடி ஜனங்களின்மத்தியில் மகாராணியார் அலங்காரமாகச் சென்று ஆலயத்துட்புகுந்தபிறகு, இந்த மகாராணியார்க்கென்றே அப்பொழுதுதான் நவரத்தினகசிதமாய் நூதனமாக நிருமிக்கப்பட்ட கோடிசூரியப் பிரகாசமான கிரீடத்தைப் பிரதானகுரு கையிலெடுத்துப் பட்டாபிஷேக சிம்மாசனத்தில் வீற்றிருந்த மகாராணியாருடைய முடியில் அபிஷேகம்செய்தார். அப்பொழுது அவர் வேதபுஸ்தகத்தைக் கையிலேந்தி, கடவுள் கடாக்ஷத்தால் சத்தியமும் நீதியும் சிறிதளவும் தவறாமல் தெய்வபக்தியுடன் நான் சிறப்பாக ராஜ்யபரிபாலனம்செய்து வரக்கடவேன் என்றுசொல்லிப் பிரமாணம் செய்தார். அன்றையதினம் அந்நகரமெங்கும் ஒரு மகோற்சவமாயிருந்தது.

பிறகு 1840–ஆ மகாராணியார்க்கு விவாக மகோற்சவம் நடந்தேறிற்று. அதன் சிறப்பு மேற்கூறிய மகுடாபிஷேக மகோற்சவத்தின் சிறப்புக்குக் குறைந்திருக்கவில்லை. அந்த நகரம் முழுதும் மிகவிசித்திரமாய் அலங்கரித்துப் பற்பலவிதமான வேடிக்கை விநோதங்களுடனே கலியாண மகோற்சவங் கொண்டாடினார்கள். மகாராணியார்க்கு மணவாளனாக வந்துவாய்த்த பிரின்ஸ் ஆல்பர்ட்டு பிரபு கல்விகேள்விகளிலும் யுக்தி ஆலோசனைகளிலும் மிகத்தேர்ச்சி பெற்றவர். அவர் மகாராணியார்க்குச் சமயத்துக்குத்தக்க யுக்தியாலோசனைகள் சொல்லிக்கொண்டு இல்வாழ்க்கைக்கு எற்ற துணைவராயிருந்தார்.

அந்த ராஜதம்பதிகள் ஒருவரையொருவர் நேசித்து அன்னியோன்னியமாகவாழ்ந்த நல்வாழ்க்கையானது இல்வாழ்வோர் அனைவரும் தமக்கு ஒரு சிறந்த மேல்வரிச்சட்டமாகக்கொண்டு ஒழுகுவதற்கு எற்ற சாதனமாகியது. அவர்கள் வெளியே வண்டியேறிக்கொண்டுசென்றாலும், வேடிக்கையாய் உலாத்திவரச் சென்றாலும் கூடவே செல்வார்கள்; சங்கீதம்பாடுதல் முதலிய விநோதமான விளையாட்டுகள் விளையாடுகையிலும் கூடவேயிருந்து விளையாடுவார்கள்; சிற்பசித்திரங்கள் எழுதினாலும் கூடவேயிருந்து எழுதுவார்கள். வாசிக்கும் வேளைகளில் கணவனார் வாசித்து மனையாட்டிகேட்டிருப்பது

முண்டு; மனையாட்டிவாசித்துக் கணவனர் கேட்டுக்கொண்டிருப்பதுமுண்டு. இவ்வாறிருக்கையிலும் மகாராணியார் ராஜகாரியங்களிலுள்ளகடமைகளை எல்லாவற்றிலும் மேலானவையாகமதித்து அவைகளைமுக்கியமாகக் கவனித்துவந்தார். அவருடைய நல்லரசாட்சிக்கு நிதர்சனமாக நாடுகளும் மேன்மேலும் செழித்தோங்கத் தலைப்பட்டன.

பிறகு அந்த ராஜதம்பதிகளுக்கு நான்கு குமாரர்களும் ஐந்து குமாரத்திகளும் பிறந்தனர். அந்தப் புதல்வர்களைப்போற்றி வளர்ப்பதில் அவர்கள் மிகுந்த கருத்துக்கொண்டவர்களாகி, நற்குணம் நல்லறிவு, நல்லொழுக்கம்முதலியவை உண்டாவதற்கு வேண்டிய வகை தேடினர்கள். அந்த மக்களைச் சீர்மையாகவளர்ப்பதற்கு ஏற்றவிடமாய் உவைட் என்னும் தீவில் ஓர் தனிமாளிகை ஏற்படுத்திக்கொண்டு, அங்கே பிள்ளைகள் விநோதமாக விளையாடத்தக்க தோட்டங்களும், விளையாட்டுத்தனைகளுமமைத்து அம்மக்களை நன்குபரிபாலித்துவந்தனர். அங்கே ஒவ்வொரு பிள்ளைக்கு ஒவ்வொரு சிறிய தோட்டம் அமைத்துக்கொடுக்கப்பட்டது. அவரவர் தோட்டத்தில் அவரவர் தோட்டக்காரன் சொற்படி கேட்டுச் செடிவைத்துத் தண்ணீர்வார்த்து வளர்க்கும்படி ஏற்பாடு செய்திருந்தனர். இவ்வாறே அம்மக்கள் கைபழக வேறுசில கைத்தொழில்களும் பயிற்றுவிக்கப்பட்டன; அவர்கள் பொருள்களைப்பார்த்துக் கற்றுக்கொள்வதற்குப் பலபொருட்காட்சி சாலையும் ஒன்று அமைக்கப்பட்டது. கல்வி கற்பிக்கப் பல உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டனர். இம்மக்களுக்கு நீதி நன்னெறிகளைப் பயிற்றுகிற விஷயத்தில் மகாராணியார் கொண்ட கருத்து மிகவும் அதிகம். ஆனதுபற்றியே அவர் மாதா பிதாக்களுக்குப் பணிந்த புதல்வியும், கணவன் கருத்துக்கு இசைந்த இல்லாளும் புதல்வனைப் போற்றிவளர்க்கும் நற்றாயும், ஊழியக்காரர்களிடத்தில் உருக்கமுள்ள யஜமானியுமாகி, ஸ்திரீகளுக்குரிய உத்தமகுணங்களுக்கு ஒரு நிகரற்ற நிதர்சனமாக நிற்கிறாரென யாவரும் கொண்டாடுகின்றனர்.

இவ்வாறு புத்திரபாக்கியமும் பெற்றுப் பெருமையாக மகாராணியார் ராச்சியபரிபாலனஞ் செய்துவருகையில், அவருடைய கணவனரான ஆல்பர்ட்டு பிரபு, நாடுகளில் நாகரிகமும் செல்வமும் விருத்தியாவதற்கு நானாதேசத்து விளைபொருள் செய்பொருள் முதலியவற்றை ஓரிடத்தில் சேகரித்துப் பலபொருட்காட்சியொன்று அமைத்து அவற்றின் பெருமை சிறுமைகளை ஆராய்வதே ஏற்ற உபாயமென்று உணர்ந்து, ராஜாங்கத்தாருடைய அனுமதியின்மேல் 1851-ஆு லந்தன்மாநகரில் ஒரு காட்சி அமைத்தனர். பிறகு 1858-ஆு மகாராணியாருடைய மூத்தகுமாரத்திக்கு விவாகம் நடந்தேறியது. அச்செல்வச்சிறுமி பிரஷியாதேசத்து ராஜகுமாரனை மணம் புரிந்தாள். அதுவரையில் ஈஸ்திந்தியா கம்பெனியாருடைய கைவ

சத்திலிருந்த இத்தேசத்து அரசாட்சியை மகாராணியார் அந்த வருஷத்திலேதான் தாமே நேராகக் கைக்கொண்டு ஆளத்தொடங்கினர். இவ்விதமாக மகாராணியார் தமக்கு விவாகமான 20-வருஷம்வரையில் தம் குடும்பத்தில் துக்கச்செய்தி ஒன்றையும் காதில்கேளாமல் சுகமாகவே வாழ்ந்துவந்தார். ஆயினும் யமனுக்கு அரசர்களுடைய அரண்மனையென்று ஒரு ஏற்றமில்லை; எளியவர்களுடைய குடிசையென்று ஒரு தாழ்மையில்லை; யாவுமொன்றுதானே. 1861-ளு த்தில் மகாராணியாருடைய தாயார் இறந்துபோயினர். அந்தத் தியாமே தாங்கமாட்டாமல் மகாராணியார் துக்கக்கடலில் ஆழ்ந்திருக்கையில், உகிர்ச்சுற்றின்மேல் உலக்கைவிழ்ந்தவண்ணமாய் இது நேர்ந்த ஒரு வருஷகாலத்திற்குள்ளே அவருடைய வாழ்க்கைத்துணைவரும் காலகதியடைந்தார். அப்பொழுது அவருடைய துயரம் இத்தன்மையதாயிருக்குமென்று நாம் எடுத்துரைக்கவேண்டுமோ? பிறகு பலவருஷங்கள்வரையில் அவர் அதிகமாய் வெளியே புறப்படாமலேயிருந்தார். வேண்டிய ஆடையாபரணங்கள் அணிந்து பற்பல சுகங்களையும் அனுபவிக்க உரிமையுடையவராயிருந்தும் மகாராணியார் இல்வாழ்க்கைத் துணைவரையிழந்த தமக்கு ஒன்றும் வேண்டுவதில்லையென வெறுத்துச் சாதாரணமான உடைதரித்தே காலம்கழிக்கலானர். ஆயினும் விதியை மதியால் வெல்லக்கூடாதென்பதை உணர்ந்து மனதைத் தேற்றிக்கொண்டு தமது கடமையில்மாத்திரம் மிகுந்த கருத்துடையவராய் அவைகளைப் பரிபாலித்துவந்தார். தமக்குக் கஷ்டம்நேர்ந்தபிறகு குடிகளுடைய கஷ்டங்களும் இப்படித்தானேயிருக்குமென்று உணர்ந்து அவர் அவர்களிடத்தில் பின்னும் அதிகமான அபிமானமுடையவராகி ஆதரிக்கத்தொடங்கினர். அவருடைய உத்தமகுணங்களும் அரசாட்சித்திறமையும் நாநாதேசத்து ராஜாக்களும் தமக்கு மேல்வரிச்சட்டமாகக் கொள்ளத்தக்கவையாயிருக்கின்றன. ஆதலால் அவை இத்தன்மையனவென்று எடுத்துரைக்க நம்மாலாகாது.

பிறகு மகாராணியார் இத்தேசத்தார்க்குச் செய்துவந்த பல நன்மைகளுக்கு அறிகுறியாக 1877-ளு இந்துதேச சக்கரவர்த்தினியாரெனச் சிறந்த பட்டப்பெயர் அவர்க்கு அளிக்கப்பட்டது. அந்தச் சிறப்புப்பெயரே இப்பொழுது எங்கும் வழங்கிவருகின்றது.

லந்தன் பலபொருட்காட்சி.

இவ்வாறு விக்டோரியா மகாராணியார் இங்கிலாந்துதேசத்தில் முடிசூடி 50 வருஷகாலமாய் அற்புதமாக அரசாட்சி புரிந்து வருகின்றார். மேற்குத்தேசங்களிலே 50 வருஷத்துக்கு ஒருதரம் அடிமையாகப் பிடிக்கப்பட்டவர்களை விடுதலைசெய்வதும், கைக்கொண்ட தேசங்களைச் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக்கொடுத்துவிடுவதும் வழக்கமுண்டு. ஆதலின் அந்த 50-ம் வருஷம் அவர்களுக்குள் ஒரு

சந்தோஷகாலமாகியது. அதை யனுசரித்து அவ்விடத்தில் எல்லாக் காரியங்களிலும் 50-ம் வருஷத்தைச் சிறப்பாகக்கொண்டாடுகிற தென்கிற வழக்கமுண்டாயிற்று. ஹீப்ருபாஷையில் அதற்கு ஜூபிலியென்று பெயரிடப்பட்டது. அதன்படி இப்பொழுது விக்டோரியா மகாராணியாருடைய அரசாட்சிக்கு ஜூபிலிபண்டிகையல்லவா? ஆதலின் இக்காலத்தில், அதன் பெருமைகளைக் கொண்டாடவும், சூரியன்ஒளி எப்பொழுதும் மறையாத விசாலமான இங்கிலீஷ் ராச்சியத்தைச் சேர்ந்த இந்தியா முதலிய வெளிநாடுகள், த்வீபாந்தரங்கள் இவற்றிற்கும் இங்கிலாந்து தேசத்திற்கும் உள்ள ஒற்றுமையை வெளிப்படையாய்க் காட்டவும் கருதி, இங்கிலாந்து தேசத்தில் லந்தன்மாநகரிலே, நாளது மேமீ தொடங்கி5 மாதகாலம் ஒருபெரிய பலபொருட்காட்சியமைத்து அனைவரும் கண்டு களிக்கச்செய்தார்கள்.

இப்பொருட்காட்சி இதற்கு முன் நடந்த பற்பல பொருட்காட்சிகளைப் போலாகாமல் சில குறிப்பிட்ட நாடுகளுக்கென்றே அமைக்கப்பட்டது. நமது இந்துதேசத்துப் பொருள்களும் மற்றும் அங்கிலேயர் குடியேறிய நாடுகளின் பொருள்களுமே அங்கே கொண்டுபோய்ச் சேகரிக்கப்பட்டன. அங்கிலேய சுதேசிகளாவது, மகாராணியாரவர்கள் ஆளுகைக்குட்படாத தேசத்தவர்களாவது தத்தம் பொருள்களைக் கொண்டுவந்து அமைக்க ஏற்பாடில்லை. அங்கிலேய ராஜாங்கத்திற்குள்ளடங்கிய பற்பல தேசத்து விளைபொருள், செய்பொருள், சிற்பங்கள், சித்திரங்கள் முதலிய விசேஷப்பொருள்களைமாத்திரம் வரவழைத்து, அங்கங்கே கைத்தொழில் முதலியவை எவ்வளவு அபிவிருத்தியாயிருக்கின்றனவென்று அறிந்து, தொழின் முயற்சி, வர்த்தகம் முதலியவற்றை இன்னும் எவ்வாறு பெருக்கலாம்; எம்முறையால் தேர்ச்சிபெறச்செய்யலாம்; எங்கெங்கு எவ்வகைக் கருவிகள் அமைந்திருக்கின்றனவென்று இவை முதலான விஷயங்களைக் கண்டறியவும், அவற்றிற்கேற்ற முறைகளைத்தேடி அம்முறைகளை அனுசரித்து நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவும் அனுகூலமாய் இப்பொருட்காட்சியை நியமித்தார்கள். இவையே அதை நியமித்து நடத்தினவருடைய முக்கியமான நோக்கங்களாம். அக்கருத்துக்கள் எவ்வாறு நிறைவேறுமென்று அவ்வதிகாரிகள் உத்தேசித்தார்களோ, அதற்கதிகமாகவே நிறைவேறின. சுதேசம் விட்டுக் கப்பலேறி லந்தன்மாநகரஞ்சென்று அங்கே சேகரிக்கப்பட்ட நானாவிதமான பொருள்களைக் கண்ணாரக்கண்டு மனங்களிக்கச் சாதன சௌகரியங்களில்லாத நம்மவரநேகர் இப்பொருட்காட்சி இத்தன்மையது, இத்தனையருமையானது, இவ்வளவு ஏராளமானது என்று ஒருவாறு அறியும்பொருட்டு அவற்றுள் விசேஷமான விநோதப்பொருள்கள் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுவோம். ஓர் சிறிய அடையாளத்தைக்கொண்டு முழுவுருவம் இவ்வாறிருக்குமென்று அறிந்து கொள்வதுபோல், நாமெடுத்துரைக்கும் குறிப்பைக்



இந்தியதேசத்து ராஜமாளிகை.

கொண்டு அப்பொருட்காட்சி முழுமையும் இத்தன்மையதா யிருக்குமென்று ஒருவாறு உத்தேசமாய் அறிந்துகொள்ளவேண்டும்.

இப்பொருட்காட்சிக்கு வெகு விசாலமான விநோதமாளிகையொன்று கட்டினார்கள். அது முழுதும் மண்டபங்களாகவும், சோபானங்களாகவும், பிராகாரங்களாகவும் வகுத்திருந்தது. ஒவ்வொரு தேசத்துப்பொருள்களுக்கும் ஒவ்வோரிடம் நியமித்திருந்தார்கள். முன் நடந்த பொருட்காட்சிகளில் செய்ததுபோல இம்முறை சாமான்களை இனவரிசையாக வகுக்கவில்லை; பொருள்களைச் சேகரஞ்செய்து இந்தச் சபைக்குக் கொண்டுவந்து சேர்த்தவர்கள் தமதுபொருள்களைத் தாந்தாமே தமக்கேற்றவிதமாய்ப் பொலிவுபெற ஒழுங்குபடுத்தித் தமக்கென்று விடப்பட்ட ஸ்தானத்தில் ஒரு புறமாய் அமைத்துக்கொண்டார்கள். ஆகையால் ஒரு தேசத்துப் பொருள் மற்றொருதேசத்துப் பொருள்களோடு கலந்திராமல் அந்தந்தத் தேசத்திற்கென்று நியமித்தவிடத்திலேயே ஒன்றுசேர்த்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு செய்தது அந்தந்த ராச்சியத்தின் விசேஷங்களை யெளிதில் அறிவதற்கு மிகவும் அனுகூலமாயிருந்தது.

இப்பொருட்காட்சி மாளிகை தென்சோபானம், மத்தியசோபானம், கிழ் மேற் பிராகாரங்கள் என மூன்றுபாகங்களாக வகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருபாகத்திலும் பற்பல மண்டபங்களும், அறைகளும், சிறுசோபானங்களுமிருந்தன. தென்பாகம் முழுவதும் சற்றேறக்குறைய இந்து தேசத்துப் பொருள்களும் இலங்கைத்தீவின் பொருள்களும் வைப்பதற்காக விடப்பட்டிருந்தது. மத்தியபாகத்தில் ஆஸ்திரேலியா, கனடா தேசத்துச் சரக்குகளும், பிராகாரங்களில் மற்றத்தேசத்துச் சரக்குகளும் சேகரிக்கப்பட்டன.

நமது தேசத்திலிருந்து அனுப்பியபொருள்களில் விசேஷமானவைகளை அந்தந்த மாகாணவரிசையாய் எடுத்துச்சொல்லுவோம். இப்பொருட்காட்சிக்கு இங்கிருந்து போனதுபோல ஒருகாலத்திலும் எங்கிருந்தும் இதற்கு முன் நடந்த காட்சிகளுக்கு வந்ததில்லையாம். நமது தேசத்துச் சால்வைகள், துப்பட்டாக்கள், இரத்தினகம்பளங்கள், பூப்போட்ட நெசவுச்சரக்குகள், படுதாக்கள், திரைகள், செதுக்குச் சிற்றுளிவேலைகள், மட்கலம் முதலான பாத்திரங்கள், பூணாரங்கள், சிற்பசித்திரங்கள் முதலிய நானாவிதமான சாமான்களைக்கண்டு யாவரும் மிகுந்த ஆனந்தத்தை அடைந்தார்களாம். அதற்கு அடையாளமாக இங்கிருந்துபோன சாமான்கள் வெகுவாய் விலையாகிவிட்டன.

இந்துதேசத்து மாளிகை. இதையமைப்பதில் இந்தியாவிலிருந்து பழகி இங்கிலாந்தில் இந்துதேசப் பலபொருட்சாலைக்கு அதிபதியாயிருக்கும் கிளார்க்துரை முறைகாட்டியதுமன்றி, செய்யும்வேலைகளையும் மேல்பார்வை பார்த்து வந்தார். இந்த மாளிகைவேலைக்காகவென்று நமது தேசத்திலிருந்துசிற்றுளிவேலைக்காரரையும்வரவழைத்தார்.

இவ்வளவு சிரமப்பட்டுச்செய்து முடித்தமாளிகை 3 பாகங்கள் அடங்கியது:

முதலாவது வெளிப்பாகம்; அது பலவிதமான கைத்தொழில்கள் செய்வதற்காக நியமிக்கப்பட்டவிடம். இரண்டாவது மத்தியபாகம்; அது அநேகஸ்தம்பங்கள் நிறுத்தி அவைகளின்மேல் மண்டபம் வளைத்தசபையாம். மூன்றுவது சபாமண்டபம். இம்மாளிகையின்வாயில் உள்ளிருக்கும் பெருமைக்குத் தக்கதாயிருக்கவேண்டுமென்று, விந்தியா மகாராஜாவால் கென்ஸிங்டன் பொருட்சாலைக்குப் பரிசாக அனுப்பப்பட்ட வாயிலே அங்கே அமைத்தார்கள். இவ்வாயில் கருங்கல்லினுல்செய்தது; செவ்வியமுறையை அநுசரித்துச்செய்த வெகுவிநோதமான சித்திரசிற்பங்கள் அடங்கியது; கல்லுக்குக்கல் பொருத்தம் சாதாரணமாய்க் கருங்கல்வேலைகளிலுள்ளதுபோலிராமல் மரவேலைகளில் இணைப்பதுபோல் இணைத்திருந்தது. இவ்வாயிலின் இருபக்கங்களிலும்இரண்டுகொத்தளங்கள் கட்டியிருந்தன.

முதலாவது பாகத்தில் தனித்தனியே கைத்தொழில்சாலைகள் ஏற்படுத்தியிருந்தன. அந்தந்தவிடத்தில் கருமான், தச்சன், தட்டான், நெசவாளி முதலியோர் அவரவர் வேலையைச்செய்துகொண்டிருந்தார்கள். இந்தப்பாகத்தில் தொழிலாளிகள் பட்டறையன்றிச் சாமான் விற்கும் வர்த்தகக்கடைகளுமிருந்தன. ஒவ்வொரு கடையின் முன்பக்கத்திலும் 3 வளைவுபோட்டு 3 திறவுகளிருந்தன.

இரண்டாவதுபாகம் சாதாரணமாய்க் கோவில்களிலிருக்கும் ஆயிரக்கால்மண்டபத்தைப்போல் அநேகஸ்தம்பங்கள் நாட்டிய ஒரு மண்டபம். இந்தக்கட்டடத்தில் உயர்ந்ததரமான ரத்தினகம்பளம் முதலியவை நெய்யும் தறிகளிருந்தன. இவைகளையெல்லாம் நடத்தும் உத்தியோகஸ்தர்களும் அருகாமையிலே தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

மூன்றுவது பாகமாகிய சபாமண்டபம் வெகு விசித்திரமானது; அதின் அலங்காரம் ஒரு விமானம்போலிருந்தது. மேல்தட்டு, சுவர் முதலிய எல்லாப்பக்கங்களிலும் நுட்பமான சித்திரசிற்பங்களும், சிற்றுளிவேலைகளும் நிறைந்திருந்தன. இந்த மண்டபத்தின் மத்தியில் ஒரு சிறியகுளம் அமைத்திருந்தது. அதற்குள் தண்ணீர் கீழிருந்து குழாய்வழியாய் மேலே கிளம்பி ஓயாமல் சொரிந்து கொண்டேயிருந்தது.

இந்துதேசத்துக் கிராமம். இந்தியாவின் வடபாகத்திலுள்ள கிராமம்போல ஒரு பிரதிமை செய்துவைத்திருந்தது. அதைச்செய்த வேலைக்காரர்கள்அயோத்தியா நாட்டு லக்நோநகரத்தைச் சேர்ந்தவர்கள். அதில் அந்தவூர் ஜமீன்தார் தன் வீட்டுத்தாழ்வாரத்திலுட்கார்ந்திருப்பதுபோல் அமைத்திருந்தது. அவரெதிரில் அந்தக்கிராமக் கணக்கன்

2532



CENTRAL (INDIAN) COURT.

இ[illegible]தேசத்துப் பொருட்காட்சி மத்தியமண்டபம்.

நின்றுகொண்டு கிராமத்திர்வை வசூல் முதலிய கணக்குகளைப்படிக்கிறான். அவ்வதிகாரி கணக்குக்கேட்டபிறகு நியாயவிசாரணை செய்யத்தொடங்கிக் குற்றவாளிக்கு அடிதண்டனை விதித்து, அத்தண்டனையைத் தாமே இருந்து நிறைவேற்றுகிறதுபோலக் காட்டியிருந்தது. ஜமீன்தார் வீட்டுக்கெதிரில் கடைகளும் தொழிற்சாலைகளும் இருந்தன. கடைகளுக்கப்பால் மாடுகள்கட்டிக் கரும்பாலையாடுவதும், ஒருமாட்டுக்கு லாடம்தைப்பதும் நடந்துகொண்டிருந்தன. கொஞ்சந்தூரத்துக்கப்புறம் ஒரு கிழவி பன்றிமேய்த்துக்கொண்டிருக்கிறாள். அங்கே கழுதைச்சவமொன்றை நாய் நரி கழுகுகள் பிடுங்கித் தின்றுகொண்டிருந்தன. கவலையேற்றம், கையேற்றம் முதலிய கருவிகளால் குடியானவர்கள் வயல்களுக்கு நீர்பாய்ச்சிக்கொண்டிருந்தார்கள். பண்ணைக்காரன் ஓரிடத்தில் உழுது பண்படுத்துகிறான்; ஓரிடத்தில் விதைவிதைக்கிறான்; சிலவிடங்களில் பயிர் முளைத்தும், சிலவிடங்களில் கதிராடிக்கொண்டு மிருக்கின்றன. உழுது களைத்துக் கீழே விழுந்துகிடக்கும் எருதை வாலைமுடுக்கி எழுப்புகிறதுபோல் அமைத்திருக்கிற காட்சி விநோதமாயிருந்தது. ஊருக்கருகில் ஒரு சிவலிங்கமிருக்கிறது. அந்த லிங்கத்திற்கு அபிஷேக முதலிய சடங்குகள் செய்துகொண்டு குருக்கள் ஒருவர் பக்கத்தில் நிற்கிறார். மேற்காட்டிய காட்சிகளைக் கண்டு இந்து தேசத்திற்கு வந்திராதவர்களெல்லாரும் ஆனந்தமடைந்து வெகு நேரம் எதிரேயே நின்று பார்த்துக்கொண்டிருந்தார்களாம்.

காச்மீரம். இந்தத்தேசம் இந்தியாவில் சால்வை நெசவுக்குப் பெயர்பெற்றது. காச்மீரச்சால்வையென்றால் எல்லோருக்கும் தெரியும். அவ்விடத்துச் சால்வை முதலிய நெசவுச்சரக்குகள் வெகு நாணயமாய்ச் செய்து வந்திருந்தன. அன்றியும் அத்தேசத்திலிருந்து வந்திருந்த திரை வெகு சேர்த்தியாயிருந்தது. ஏறக்குறைய 1500-வருஷத்துக்குமுன் கட்டப்பட்டுத் தற்காலத்தில் ஜீர்ணஸ்திதியிலிருக்கிற ஒரு துலுக்கர் கோரியின் தாழ்வாரம்போல் தேவதாரு மரத்தில் செய்து, புராதனவேலையை மாதிரியாகக்கொண்டு, அதில் சிற்றுளி வேலை செய்திருந்தார்கள். வேலைமுடித்தவர் உபயோகித்த ஆயுதம் உளிதவிர வேறொன்றுமில்லை. வேலைக்காரர் திறமை இதனால் விளங்கும். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாம்.'

பஞ்சாப்பு. காச்மீரத்துக்கு இப்புறத்தில் 5 நதிகள்பாயும் நாடு பஞ்சாப்புதேசம். இத்தேசத்தார் வெகுகாலமாய்த் தச்சவேலையில் பிரசித்தியடைந்தவர்கள்; சித்திரச்சேலைகள் நெய்வதிலும் சாமர்த்தியமுள்ளவர்கள். அங்கிருந்து உலோகவகைப் பாத்திரங்களும், வர்ணந்தீர்ந்த சாமான்களும் அநேகம் வந்திருந்தன. அவை வெகு அலங்காரமாய் வேலைசெய்து மிகப்பளபளப்பாயிருந்தன. அவ்விடத்துச் சித்திரச்சேலைகளைப்போல வேறெங்கும் அவ்வளவு திறமானவையில்லை. பலவிதமான திரைகளும், நுட்பமான சிற்று

ளிவேலைசெய்த வாயில் நிலைகளும், கட்டங்கட்டமாய்த் துவாரங்க ளமைத்து நடுவே பலவிதமான கொடிகளும் உருவங்களுமுண் டாக்கிய பலகணிகளும் விசேஷமானவை. இவ்வகையான வேலை செய்வதற்கு அத்தேசத்தில் சீதர் என்கிற ஓர்வகை மரம் அபரி மிதமாய்க் கிடைக்கும். இந்த மரமே அனேகமாய் வீடுகட்டுவதில் அங்கே உபயோகப்படுத்துகிறார்கள். கிளிக்கூண்டுவேலை என்று ஒரு விதமான வேலைசெய்வதற்கு இந்த விருக்ஷம்போல வேறு எந்தவித விருக்ஷமும் அவ்வளவு உதவுகிறதில்லை. இவ்வகையான வேலைசெ ய்வதில் சிக்கர் என்னும் ஜாதியார் வெகு சமர்த்தர்.

வடமேற்கு மாகாணங்கள். கருங்கல் வேலைகளும், மரவேலைக ளும்,பலவிதமான பாத்திரவகைகளும், வெகு அலங்காரமானஇரத்தி னகம்பளங்களும் அங்கிருந்துவந்தன. வடமேற்கு மாகாணங்களில் பலவிதமான கருங்கல் திரளாயகப்படும். இந்தக்கருங்கல்வேலை செய் வதில் வடமதுராவிலுள்ள கல்தச்சரும், ஆக்ராவிலுள்ள கல்தச்ச ரும் பெயர் பெற்றவர்கள்; அவர்கள் இந்த வேலையில் வெகுகால மாக மிகத் தேர்ச்சியடைந்தவர்கள். லோகப் பிரசித்தமாகிய தாஜ் மஹால் என்னும் கோயிலிலுள்ள சிற்பசித்திரம்போலவும், ஆக்ரா கோட்டைக்குள் ஏராளமாயமைத்திருக்கும் வேலைப்பாடுகள்போல வும், கருங்கற்களில் வேலைசெய்து துண்டுதுண்டுகளாக வாவழைத்து, அத்துண்டுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து, எதை மாதிரியாக வைத் துக்கொண்டு வேலைசெய்தார்களோ அம்மாதிரிக்கு இசைய, அப்பொ ருட்காட்சி சபையில் நிருமித்த சிற்பவேலைகள் அனேகமிருந் தன. இவையன்றிப் பூமியிலிருந்து தோண்டியெடுத்த அனேகமாச் சாமான்களும் வேலைசெய்த கல்தூண்களும் வந்திருந்தன. அவை களில் விநோதமான சிற்றுளிவேலைசெய்து பலவிதமாய்ப் பித்தளைக் கம்பிகள் பூட்டியிருந்தன. கீற்றிட்டுக் கம்பிகள்அழுத்தும் நுட்ப வேலை வெகுகாலமாய் நின்றிருந்தது; இப்போது அதைத் திரும்பத் துவக்கியிருக்கிறார்கள்.

பரோதா. இந்த சம்ஸ்தானத்திலிருந்து அனுப்பிய பொருள்களில் மிகச்சிறப்பானது மரத்தால் செய்த புறாக்கூடு ஒன்று. அதிலமைந் திருக்கும் யுக்தியூகை ஏற்பாட்டினாலும் கைவேலைத் திறத்தாலும் அதை மற்றெல்லாப் பொருள்களிலும் முதன்மையாகச் சொல்ல லாம். அந்நேர்மைக்கு இசையவே அதைத் தகுந்தவிடத்தில் வே லைத்திறம் செவ்வையாய் விளங்கும்பொருட்டு வைத்திருந்தது. அதன் வேலையைப் பார்க்கப்பார்க்க ஆச்சரியம் பெருகிற்று. இவ் விதமான கூடுகள் பரோதாதேசமுழுவதும் செங்கல் சுண்ணும்பி னாலும், மரமுதலியவற்றாலும் அங்கங்கே கட்டப்பட்டிருக்கின்றன. இதனாலேயே அத்தேசத்தவர் கொள்கை விளங்கும். பிராணிகளைக் கொல்வது பாவமென்பதும் போஷிப்பது புண்ணியமென்பதும் ஹிந்துக்களின் சாதாரணமான கொள்கையேயாயினும் இக்கொ



இந்தியதேசத்து ராஜமாளிகைக் கோபுரவாயில்.



பரோதா நகரத்திலுள்ள புறாவீடு.

அத்தேசத்தில் அதிகமாய் அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது. தோறும் காலைவேளைகளில் ஆண், பெண் அனைவரும் தானி கைகளைக் கொண்டுபோய் அக்கூடுகளின் பல வாயில்களிலும் த்துவிட்டுவருவது வழக்கம். அந்தத் தானியங்களை உண்டு அப் வைகள் களிக்கிறதைக்கண்டு ஜனங்கள் ஆனந்தங் கொள்வார்கள். இவ்விதமாய் இன்னும் பல தேசங்களினின்றும் சித்திர விசித்திர ன பற்பல பொருள்கள் வரவழைத்து அப்பொருட்காட்சிசாலை ல் அமைக்கப்பட்டன. நாளது 1886-ளு மேமீ 4வ ஆகிய செவ் ாய்க்கிழமை நடுப்பகலில் மகாராணியார், அவ்விநோதக் காட்சி யைக் காணவந்து கூடியிருந்த 20,000 பிரஜைகளுடைய மத்தியில், அந்தக் காட்சிசாலைக்கு வந்து விளம்பரம் செய்தார். நம் இளவாசரா கிய பிரின்ஸ் அவ் வேல்ஸ் அவர்கள், அக்காட்சிசாலை விசாரணைச் சபைக்கு அக்கிராசனாதிபதியாகி, தாமே முதன்மையாயிருந்து அதன் காரியங்களை நிர்வகித்து நடத்தினார். அந்த ராஜகுமாரரு டைய முயற்சியும் ஊக்கமும் காரிய நிர்வாக சக்தியும் இத்தன்மை யனவென்று இதனால் மிகத் தெளிவாகி அவர்க்கு மிருந்த கண் ணியத்தை விளைவித்தன. அவர் மகாராணியாருக்கு முன்னமே காட்சிசாலைக்குச் சென்று அவ்விடத்திற் செய்யவேண்டிய ஏற்பாடு கள் செய்து மற்ற அத்தியக்ஷர்களுடனே வாயிலில் நின்று மகாராணி யார் வரவை யெதிர்பார்த்திருந்து, அவர் வருவதைக் கண்டவுடனே யெதிர்கொண்டுசென்று அழைத்துவந்தனர். பிரின்ஸ் அவ் வேல்ஸ் டியூக் அவ் கன்னாட்டு என்னும் இரண்டு புத்திரர்களின் மத்தியில் மகாராணியார் பலபொருட்காட்சிசாலைக்குள் சென்றார். மகாராணி யாருக்குப்பின் பிரின்ஸ் அவ் வேல்ஸ் அவர்களுடைய மனையாட்டி யும், ராஜகுமாரத்திகளும் மற்றும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர் களும் சென்றார்கள். அவர்களுக்குப் பின் அந்தக் காட்சிசாலை விசாரணைத் தலைவர்களும், மந்திரிமார்களும் மற்ற உத்தியோகஸ்தர் களும், அந்த ஆரம்ப மகோற்சவத்தைக் காண்பதற்காக அக்காட்சி சாலையின் உள்ளும் புறமும் வந்து கூடியிருப்பவர்கள் அனைவரும் கண்டுகொண்டாட வெகு விபவமாக வந்து சேர்ந்தனர்.

மகாராணியார் காட்சிசாலைக்குள் பிரவேசிக்கும்பொழுது மங் களவாத்தியங்கள் முழங்கின; பிரஜைகளெல்லாம் மங்களவாழ்த்து டன் கைகொட்டிக் களிப்புற்றார்கள். அங்கிலேயபாஷையில் ஒன் றும், ஆரியபாஷையில் ஒன்றுமாக மங்களவாழ்த்துப் பாடல்கள் பாடப்பட்டன. பிறகு மகாராணியார், வெகு விசித்திரமாய் இத்தே சத்து மாதிரியாகச் சரிகைச் சித்திரப்பூவேலை செய்த மகமல் மேற்க ட்டுக் கட்டிய ராஜசிங்காசனத்தில், ராஜகுடும்பத்தாரும் அதிகாரிக ளும், சூழ வீற்றிருந்தனர். பிறகு அக்காலத்திற்கு ஏற்றவையாய் எழுதிவைத்திருந்த பாடல்களைப் பிரின்ஸ் அவ் வேல்ஸ் அவர்களு டைய வேண்டுகோளின்மேல் படித்தார்கள். அப்பால் அந்த ராஜகு

மாரர் அந்தக் காட்சிசாலை அமைத்ததற்குக் காரணம் அதன்
பம் முதலானவை நன்றாய் விளங்க விவரமாய் ஒரு உபந்நிய
செய்தார். அதைக்கேட்டு ஆமோதித்து மகாராணியாரும் அந்த
யத்திற்கேற்ற சில மொழிகள் மொழிந்தார். அவையாவன:

"இந்தப் பலபொருட்காட்சி உற்சவாரம்பமாகிய இத்தரு
தில் நீ மொழிந்த சங்கதிகளைக் கேட்க எனக்கு மிகவும் திருப்தி
யிருக்கின்றது. நீ ஏற்றுக்கொண்ட காரியம் நன்கு நிறைவேறி
பொருட்காட்சி இவ்வாறு அமைக்கப்பட்டதைக் காண மிகவும்
தோஷமாயிருக்கின்றது. 1851-ஆ நடந்த பொருட்காட்சியை
பற்றியெடுத்துப் பேசியதைக் கேட்டு என் மனம் கரைந்து உருகு
கின்றது. என் அருமைக் கணவனரான பிரின்ஸ் கான்ஸார்ட்டு
அவர்கள் இன்றளவும் ஜீவித்திருப்பாராயின், இப்பொருட்காட்
சியைக் கண்டு மிகக்களிப்புற்று, தாம் ஆதியில் ஆரம்பித்த விஷயம்
இப்பொழுது இவ்வாறு விருத்தியடைந்திருக்கிற தென்றும், இதற்கு
நமது புதல்வனே தலைவனாக இருந்து நடத்துகின்றனனென்றும் உண
ர்ந்து ஆனந்தக் கடலில் ஆழ்வார். இப்பொருட்காட்சியானது, யாவ
க்கும் சமாதானத்தையும் தொழில் முயற்சியையும் அதிகமாக்கி,
மது ராஜ்யத்தில் எங்கும் பரவியிருக்கிற ஒற்றுமையைப் பின்னும்
உறுதிப்படுத்தி வர்த்தகவியாபாரம் போக்குவரவு முதலியவைகளை
விசேஷமாக விருத்திசெய்வதற்கு ஒரு முக்கிய சாதனமாகவேண்டு
மென்று நீ செய்த பிரார்த்தனை எனக்கு மிகவும் உவப்பாயிருக்கின்
றது; நானும் அவ்வாறே கடவுளைப்பிரார்த்திக்கிறேன்" என்பனவாம்.

பின்பு மகாராணியா ரவர்களுடைய அனுமதியின்மேல், காட்சி
சாலையில் புகுந்து அங்குள்ள அதிசயங்களைக் கண்டு அனைவரும்
அகங்களிக்கலாமென்று விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கு அறி
குறியாக மங்களவாத்தியங்கள் முழங்கினர்கள். அதன்பிறகு சங்
கீதம் பாடினார்கள். இவ்வாறு மகாராணியார் பலபொருட்காட்சி
சாலையில் கொலுவிருந்த மாட்சிமையே 131-ம் பக்கத்துப்படத்தில்
காட்டப்பட்டிருக்கிறது.

பின்னர் மகாராணியார் அச்சபையைவிட்டு எழுந்து செல்ல,
அதைக் காண வந்து காத்திருந்தவர்கள் அனைவரும் உடனே காட்சி
சாலைக்குள் நாற்புறமும்நுழைந்து அங்கங்கே அமைத்திருக்கும் அற்
புதங்களைக் கண்டு அகங்களிக்கலாயினர். அப்பொருள்களுள் இத்
தேசத்துச் சிற்ப சித்திரங்களே மிகச் சிறந்தவையாயிருந்தனவாம்.
பிறகு பல்லாயிரம் பிரஜைகள் நாள்தோறும் அவ்வற்புதக் காட்சி
யைப் போய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதற்குமுன் அமைத்த
பலபொருட்காட்சியொன்றும் இதற்கு ஈடாயிருக்கவில்லையென்று
யாவரும் இதை வியந்துகூறுகின்றனர்.

அங்கிலேய ராஜ்யத்தின் விஸ்தீரணம், விளைவு, பிரஜாவிருத்தி
முதலியவை விளங்குவதற்காகவன்றோ இந்தப் பலபொருட்



THE JUNGLE.

காட்சி அமைக்கப்பட்டது. அன்றியும் இந்த ஜூபிலி ஆண்டிற்கு ஒரு அறிகுறியாய், நடந்த ஐம்பதுவருஷகாலத்தில் அங்கிலேய ராஜயம் பரந்தோங்கியதும், அந்த ராச்சியத்தில் பிரஜைகளும் நாகரிகம் செல்வம் முதலியவும் விசேஷமாக விருத்தியானதுமாகிய இவற்றின் பெருமைகள் நன்றாய்விளங்க (இம்பீரியல் இன்ஸ்டிட்யூட்) ராஜயவிருத்தி விநோதசாலை என்று ஒரு காட்சிசாலை புதிதாக ஸ்தாபிக்கக் கருதியிருக்கின்றனர்.

50 வருஷத்திற்குமுன் 18 லக்ஷம் சதுரமைல் பரவியிருந்த அங்கிலேயராஜ்யம் இப்பொழுது 90 லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணமுடையதாயிருக்கின்றது. அதாவது இப்பூமியிலுள்ள நிலம் மொத்தத்தில் 6-ல் ஒருபங்கு அங்கிலேய ராச்சியமாகின்றது. ஜனத்தொகையோ முன்னே 15 கோடியாயிருந்தது, இப்பொழுது 31 கோடிக்கு மேலாகியிருக்கின்றது. அது இப்பூமியின் ஜனத்தொகை மொத்தத்தில் 5-ல் 1 பங்குக்கும் அதிகமாம். நமது இந்துதேசத்திலே மாத்திரம் தனித்துப்பார்த்தால், 1836-ம் வருஷத்தில் அங்கிலேயர் அதினத்திலிருந்தது 6 லக்ஷம் சதுரமைல்; இப்பொழுது 14 லக்ஷம் சதுரமைல் ஆளப்படுகின்றது. முன் 9 கோடியே 63 லக்ஷமாயிருந்த ஜனத்தொகை இப்பொழுது $25\frac{1}{2}$ கோடியாயிருக்கிறது. அவ்வண்ணமே முன் இத்தேசத்தில் 19 கோடி ரூபாயாயிருந்த அரசிறையும், 12 கோடி ரூபாயாயிருந்த வர்த்தகமும் இப்பொழுது முறையே 71 கோடி ரூபாயும், 130 கோடி ரூபாயுமாக அதிகரித்திருக்கின்றன. அங்கிலேயர் குடியேறிய மற்ற வெளிநாடுகளிலும் த்வீபாந்தரங்களிலுமோ எல்லாவிஷயங்களும் முன்னிலும் இப்பொழுது ஏழுபங்கு அதிகமாக விருத்தியடைந்திருக்கின்றனவாம்.

இந்தக் கணக்கினால் நமது சக்கரவர்த்தினியாருடைய 50 வருஷத்து அரசாட்சியிலுண்டான ராச்சியவிருத்தி செல்வப்பெருக்கு முதலியவை உலகசரித்திரத்தில் நாம் கேட்டிராததவையெனத் தெளிவாகின்றனவல்லவா? இவ்வண்ணமே வர்த்தகவியாபாரங்கள் அரசிறை முதலியவை மேன்மேலும் விசேஷமாக விருத்தியாகிவருகின்றனவென்றால் இவ்வங்கிலேயராச்சியம் ஒப்புயர்வில்லாத உத்தம ராச்சியமென யாவரும் கொண்டாடத் தடையுண்டோ? "இவ்வாறு ராச்சியம் செழித்தோங்கிச் சிறப்புற்றிருக்கும்படி செங்கோல் செலுத்திவரும் சக்கரவர்த்தினியாகிய விக்டோரியா மகாராணியார் சுகஜீவியாய்ப் பல்லாண்டுபல்லாண்டாக வாழ்ந்திருந்து இன்னும் வெகுகாலம் நாடுகளை நன்கு பரிபாலித்துவரக்கடவர்" என்று எந்த நாட்டிலும் குடிகள் களிப்புடன் செய்யும் பிரார்த்தனை தலைக்கட்டும்படி கருணைக்கடலான கடவுள் கடாக்ஷித்தருளுவாராக.

கபிலபுரத்திலிருந்து காந்தாரபுரிக்குப் படையெடுத்துச்சென்ற பிரதாபம்.

சிலவருஷங்களுக்குமுன் ஆப்கனிஸ்தானத்தில் யுத்தம் நடந்தபோது ஒரு சமயத்தில் அங்கிலேயர் கபிலபுரம் அல்லது காபூலிலிருந்து காந்தாரபுரிக்குப் படையெடுத்துச்சென்றனர். அதன் பிரதாபத்தை ஒருவாறு அடியில் எழுதுகிறோம். அங்கிலேயப் படைகளுக்கு அவ்விடத்தில் நேரிட்ட இடுக்கண்களைக் கேள்விப்பட்டு இந்தியாவிலுள்ள அதிகாரிகள் தக்ஷணமே அதற்குப் பரிகாரம் பண்ணும்பொருட்டுப் பெருமுயற்சி செய்தார்கள். முற்றுகை போடப்பட்ட காந்தார நகரத்திலிருந்த சேனைக்குச் சகாயமாகப் பம்பாயிலிருந்து உடனே ஒரு பெரியசேனையை போலன், கோஜாக் என்னும் கணவாய்களின் வழியாய் அனுப்பும்படி தந்திமூலமாய் உத்தரவு அனுப்பிவிட்டு, காபூலிலிருந்து ஒரு சேனையை ஸர் பிரடெரிக் ராபர்ட்ஸ் எனும்சேனாபதியின் அதீனத்தில் வைத்துக் குஜினி வழியாகக் காந்தாரத்துக்கு அனுப்பும்படிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இடாவணாயில் போக்குவரவு பாதையைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஜெனரல் பேரி என்பவர், கோஜாக், போலன் என்னும் கணவாய்களைப் பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு துஷ்டஜனங்களையும் அடக்கி, காபூலிலிருந்து வரும் சேனைக்குச் சாமான்கள் சேகரித்து அனுப்பிக்கொண்டிருந்தார்.

இடக்கு முடக்கான சந்தர்ப்பங்கள் வந்துவிட்டால் மிகுந்த மனோதிடத்துடனும் ஊக்கத்துடனும் எப்படிப்பட்ட காரியத்தையும் செய்யத் துணிவது அங்கிலேயருடைய சுபாவம். கபிலதேசத்திலிருந்து காந்தார தேசத்துக்குச் சுமார் 320 மைல் தூரம். ஸர் பிரடெரிக் ராபர்ட்ஸ் என்பவருடைய சேனையானது பெருநடையாக நடந்து அயூப்கான் என்பவனைத் தாக்குவது என்றால் இலகுவான காரியமோ? மிகுந்த அபாயத்துடன் கூடிய யோசனையாயிருந்தும் இந்தப்படி தீர்மானிக்கப்பட்டது. இப்படிப்பட்ட அசாத்தியமான செய்கையைச் செய்து, இழந்துபோன கௌரவத்தைத் திரும்பவும் பெறவேண்டுமென்பது அவர்கள் யோசனை.

ராபர்ட்ஸ் தம்முடைய சேனையைச் செலுத்திக்கொண்டு சென்ற சிறப்பையும், நிர்வாகசக்தியையும் விரித்துச் சொல்லுவது எளிதன்று. அவர் செய்திருந்த நுட்பமான ஏற்பாடுகள் அவருடைய சாமர்த்தியத்தைப் பிரகாசிப்பித்ததுமன்றி, அவருடைய உத்தரவுகளை நிறைவேற்றின உத்தியோகஸ்தர்களுடைய வல்லமையையும் வெளியிட்டன.

1880-ம் வருஷம் ஆகஸ்டு மாசம் 9-ம் தேதி ராபர்ட்ஸ் என்பவர் தம் குதிரைமேலேறிக்கொண்டு, காந்தாரத்துக்குப் போகச் சித்தமா யிருக்கும் சேனையின் முன் வந்து நின்று உன்னிப்பாய்ப் பார்த்தார். இப்படிப்பட்ட சிறந்த சேனையைப் பார்க்கும்போது எப்படிப் பட்ட சேனைத்தலைவனுக்கும் குதூகலமுண்டாகும். வரிசை வரிசை யாகநுழைந்துபார்க்கும்போது, யுத்தத்தில் தேர்ச்சியடைந்த தகுந்த பருவமும் வலிவுமுள்ள அங்கிலேய வீரர்கள் பளபளப்பும் ஒளி யும் திரமும் தங்கிய முகங்களோடு பிரகாசித்துக் கொண்டிருப்ப தையும், முன் ஒருகால் தம் கீழிருந்து வெற்றிபெற்ற சீக்கியர்களும் கூர்க்கர்களும் ராபர்ட்ஸ் என்பவருடன் கூடப் போனால் ஜெயம் சித்தந்தான் என்கிற நிச்சயத்துடன் ஆனந்தம் பெருகி நிற்பதையும் கண்டு மகிழ்ந்தார். இன்னொருதரம் இவருடன் சென்று வெற்றிபெ ற்றுத் தங்கள் பிரதாபத்தைப் பெருக்கிக் கொள்ளும்படியான பாக் கியம் பெற்றோமே யென்று யாவரும் களிப்புடன் கூடி நின்றார்கள். குதிரைகளும் கோவேறு கழுதைகளும் கட்டிநின்றன. "செல்லுங் கள்" என்ற கடைசியான கட்டளை பிறந்தவுடன் அவரவர்கள் முறை யே சென்றார்கள். வழியோ கரடுமுரடான வழி; தேசமோ கொ டிய பாதகங்களுக்கு அஞ்சாத சத்துருக்கள் நிறைந்த தேசம்.

ராபர்ட்ஸினுடைய சேனையானது 2562 அங்கிலேய வீரர்களும், 7151 சுதேச வீரர்களும், 273 அங்கிலேய உத்தியோகஸ்தர்களும், 18 பீரங்கிகளும் அடங்கினது.

ஆகஸ்டுமாசம் 15-ம் தேதி ராபர்ட்ஸ் காபூலிலிருந்து 98 மைல் தூரமுள்ள குஜினிக்குச் சேனையை நடத்திக்கொண்டு ஏழேநாளில் போய்ச்சேர்ந்தார். அப்புறம் 8 நாளைக்குள் குஜினியிலிருந்து 134 மைலுள்ள கிலேட் கில்ஜி என்னுமிடத்தைச் சேர்ந்தார். அங்கிருந்து காந்தாரம் 86 மைல்தூரந்தான். ஜெனரல் பேரி என்பவருக்குத் தம் வரவை வெகுசீக்கிரம் தெரிவிக்கக்கருதி இரண்டு குதிரைப்பட்டா ளத்தை முன்னாடி அனுப்பிவிட்டுத் தாமும் விரைவாக நடந்தார்.

காபூலிலிருந்து அங்கிலேய சேனை வேகமாய் வருகிறது தெரிந்து அயூப்கான் காந்தாரத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கிராமங்களை விட்டு, வடபக்கத்தில் ராபிகோடல் குன்றுக்கும் மஜ ரா என்னும் கிராமத்துக்கும் நடுவே ஆர்க்கந்தாப்பு என்னும் நதியின் பள்ளத்தாக்கில் 24-ம் தேதி ஒரு இடம் பார்த்துக்கொண்டு போய்வி ட்டதாக 26-ம் தேதி ராபர்ட்சுக்கு ஒரு கிராமத்தில் சமாசாரம் தெ ரிந்தது. கிலேட் கில்ஜி என்னுமிடத்தில் ஒரு நாள் முழுவதும் சேனை க்கு இளைப்பாறுதல் பண்ணுவித்துப் பிறகு ராபர்ட்ஸ் 31-ம் தேதி காந்தாரபுரம் சேர்ந்து, அதனருகாமையில் கூடாரமடித்தார். 318 மைல்தூரம் 22 நாளையில் வந்து சேர்ந்தார். இது எவ்வளவு ஆச்சரியம்.

இந்த அங்கிலேயசேனை பலத்தில் குறைவில்லாததாகி, வீராவேச மும் தலைக்கொண்டிருந்தது. ஜெயமடையத் தடையில்லை என்னும் தைரியம் பூரணமாக உண்டு. வீரர்களுக்குத் தங்களுடைய பராக்கிரமம் இப்படிப்பட்டதென்று தெரியும்; எஜமானனுடைய புத்தி கூர்மையையும் அறிந்தவர்களாதலால் அவர் சொல்லைக் கிஞ்சித்தும் தவறமாட்டார்கள்.

இப்படிப்பட்ட சேனையைக் கண்ணில் கண்ட மாத்திரத்திலேயே அயூப்கானுக்கு அடிவயிற்றில் தீமூண்டதுபோலாயிற்று. அவனுடைய ஜனங்கள் யோசனைகள் செய்யத் தொடங்கினார்கள். ஹீராத்திக்குப் போகும் மார்க்கத்தில் கிரிஸ்க் என்னும் இடத்தைத் தாண்டிப் போய்விடவேண்டுமென்று அயூப்கான் என்பவன் கருத்துக்கொள்ள, அவனுடன் சேர்ந்திருந்த தலைவர்களெல்லாம் ஹீராத்திலிருந்து வந்தசேனையை அழைத்துக்கொண்டு போய்விட்டால் நாங்கள் என்ன செய்வோமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டதன்மேல், ஆனால் இங்கேயே தான் இருப்போமென்று அரைமனதோடு சம்மதித்தான். ஆகிலும் அவனுடைய காலாட்கள் அநேகர் அங்கிலேயருக்குப் பயந்து தத்தம் வீடு நோக்கி ஓடிப்போய் விட்டார்கள். ஆகலால் மறுநாள் நடந்த சண்டையில் அவனுடைய சேனாபலம் மொத்தம் 16,000 ஜனத்துக்கு அதிகமில்லை.

ராபர்ட்ஸ் காபூலிலிருந்து வரும்போது தம் சேனையிலுள்ள மனிதர்களும் கால்நடைகளும் எவ்வளவு சிரமம் தாங்கக்கூடுமோ அதை நுட்பமாக அறிந்து அதற்குத் தக்கபடி வெகு ஜாக்கிரதையாய் தீர்க்க யோசனையுடன் வந்தார். காலாட்களுடைய வருத்தம் இத்தன்மையதென்று அவருக்கு நன்றாய்த் தெரியும்; அவருடைய மனோபாவம் இப்படிப்பட்டதென்று அறிந்து தக்கபடியே அங்கிலேயர் எல்லாரும் ஒரே மனதுடையவர்களாயிருந்தார்கள். பிரிட்டிஷ் சேனையின் முக்கியமான மகிமை என்னவெனில் ஒரேமனதாக இருத்தல். ஐகமத்தியம் எப்போது இருக்கிறதோ அப்போதே காரியம் அனுகூலமாயிற்றென்று நிச்சயிக்கலாமல்லவா?

ராபர்ட்ஸ் சென்ற வழியில் கில்ஜேஸ் என்னும் சாதியார் தம்மைத் தொந்தரவு செய்யாமலிருக்கும் பொருட்டுத் திரவியம் செலவு செய்து அவர்களைச் சமாதானப்படுத்தினர் என்று இங்கிலாந்தில் குறைவாகப் பேசினார்கள்; ஆனால் இந்தப்பேச்சு நம்பத்தக்கதல்ல; ஏனெனில் ராபர்ட்ஸ் இது விஷயமாக எழுதும்போது குஜினிப் பிரதேசத்தில் மிகுந்த துன்பம் நேரிடுமென்று எதிர்பார்த்துத் தக்க ஜாக்கிரதை செய்திருந்ததாகச் சொல்லியிருக்கிறார். முன் ஸர் டானல்டு ஸ்டேவர்ட்டு காந்தாரபுரியிலிருந்து காபூலுக்குப் போகும்போது கில்ஜேஸ்ஜாதியார் அவரை எதிர்த்து அடிபட்டிருக்கிறார்கள். அப்போது பட்ட பாட்டை ஞாபகம் வைத்துக்கொண்டு இப்போது பேசாமல் இருந்துவிட்டார்களேயன்றி வேறில்லை.

ஸர் பிரடெரிக் ராபர்ட்ஸ் காந்தாரதேசம் சேர்ந்தவுடன் எப்போதும்போல மிகுந்த சுறுசுறுப்புடன் பேபி வாலி கோடல் என்னும் குன்றின் வலதுபுறத்தில் சத்துருவின்பலம் எப்படியென்று பார்த்து வரும்படி திட்டம் செய்துவிட்டு, குன்றின் சிகரத்திலும் முன்பக்கத்திலும் சத்துருவின் ஸ்தானத்தினுடைய பலாபலத்தைத் தாமே ஆராய்ந்துபார்த்து, முன்பக்கமாக எதிரிகளைத் தாக்குவது கடினமென்றும் ஒருபாரிசமாகச் சென்று எதிரியின் ஸ்தானத்தைப் பிடிப்பது யுக்தமென்றும் கண்டுகொண்டார்.

ஆப்கானியருடைய ஸ்தானத்திலிருந்து அங்கிலேயர் ஸ்தானத்தை நோக்கிப் பார்க்கும்போது சந்நிவேசம் எப்படியிருந்ததெனில், இடதுபக்கத்தில் பேபி வாலி கோடல் என்னும் மலைத்தொடர் இருந்தது; இது ஒரு பெரிய காலாட்படையினால் காக்கப்பட்டு, பீரங்கிகளும் வாய்ப்பான இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. வலதுபக்கமானது சற்றுத்தாழ்ந்த பூமியாயிருந்தபடியால் அதன் சார்புகளிலும் காண்டிஜன், காண்டிமுல்லா என்னும் கிராமங்களிலும் அநேகம் காலாட்பட்டாளங்களும் குதிரைப்பட்டாளங்களும் பீரங்க்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

1880-௵ செப்டம்பர்மாசம் முதல்தேதி காலையில் தங்களை அங்கிலேயர் தாக்குவது நிச்சயமென்றெண்ணி, மலைச்சிகரத்திலும் வலதுபக்கத்துச் சார்புகளிலும் கிராமங்களின் தோட்டங்களிலும் மறைவிடங்களிலும் ஆப்கானியர்கள் ஆயிரம் ஆயிரமாகப் போய் நின்றுகொண்டு கிராமங்களினின்றும் மலைச்சிகரத்தினின்றும் முதலில் உபாயமாக வெடிதீர்க்கத் தொடங்கினார்கள்.

ராபர்ட்ஸ் செய்த தந்திரம் என்னவென்றால், முன்புறமாகத் தாக்குவதுபோல் ஆடம்பரம்பண்ணிப் பாரிசமாகச் சென்று எதிரிகளைத் தாக்கவேண்டுமென்பதே. சேனைப்பிரிவுகளுக்கு வேலையை ஏற்படுத்திய விதம் எப்படியெனில், ஜனரல் பரோஸ் என்பவரிடத்திலிருந்த சேனையும் காந்தாரத்துக் கோட்டைப்பட்டாளமும் பேபி வாலி என்னும் குன்றையும் கணவாயையும் தடுத்துக்கொண்டு நகரத்துவாரங்களையும் பாதுகாத்து எதிரிகள் தாக்கும் பக்ஷத்தில் அதற்கும் சித்தமாயிருக்கும்படிக்கும், எதிரிகள் கிரிஸ்க், ஹீராத் பக்கம் ஓடாமல் பயமுறுத்துவதற்காகக் காபூலிலிருந்து வந்த குதிரைப்பட்டாளத்துடன் பிரிட்டிஷ் ஸ்தானத்தின் இடதுகோடியில் ஒரு படைவீரர் நிற்கும்படிக்கும், அத்துடன்கூடக் கொஞ்சம் காலாட்களையும் பீரங்கிகளையும் அவருக்குக் கொடுத்துச் சமயோசிதமாக உபபோகப்படுத்தும்படிக்கும், ஜனரல் மாக்பர்ஸன் என்பவர் காண்டிமுல்லாசஹிபாத் என்னும் கிராமத்தைத் தாக்கி அருகிலுள்ள கிராமத்துக்குச் செல்லும்படிக்கும், ஜனரல் பேகர் என்பவருடைய பட்டாளம் ஜனரல் மாக்பர்ஸன் பட்டாளத்துக்கு இடதுபுறம் செல்லும்படிக்கும் தீர்மானிக்கப்பட்டது.

சுமார் 9½ மணிக்கு எல்லா ஏற்பாடுகளும் முடிந்து காந்தாரத்திலிருந்து பீரங்கிகளும் வெடிக்கத்தலைப்பட்டன. உடனே மலைச்சிகரத்தை நோக்கிப் பட்டாளங்களும் நெருங்க ஆரம்பித்தன.

ஜனரல் மாக்பர்ஸனிடத்திலிருந்த பட்டாளங்கள் நான் முன்னே, நான் முன்னே என்று போட்டிபோட்டுக்கொண்டு சென்று, எதிரிகள் மிகவும் உறுதியாய் நின்று சண்டை ஆடியும், அவர்களைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டுபோய், காண்டிமுல்லா என்னும் கிராமத்தைக் கைக்கொண்டார்கள். இவர்களுக்கு இடது பக்கத்தில் வந்த ஜனரல் பேகர் என்பவருடைய படைவீரர்களும் சத்துருக்கள் புகுந்துகொண்டிருந்த சந்துவழிகளையும் மறைவிடங்களையும் தாக்கி, ஆப்கானியர்கள் செய்த கொடுமைகள் ஒன்றையும் இலட்சியம்பண்ணாமல் அவர்களைக் கண்டவிடமெல்லாம் துரத்தி அடித்தார்கள். பிறகு சுமார் 1 மணிக்கு இரண்டுபேர்களுடைய சேனையும் பெர்பேமால் என்னும் கிராமத்தையும் பிடித்துத் தோப்புகளிலும் தோட்டங்களிலும் பதுங்கியிருந்த எதிரிகளையும் அப்புறப்படுத்திவிட்டு, பேபி கோடல் என்னும் குன்றின் பின்பக்கத்து அடிவாரத்தில் அயூப்கான் இறங்கியிருந்த விடம்போய்ச் சேர்ந்தன. இவர்களுக்கு ஒத்தாசையாக ஏற்படுத்தப்பட்டிருந்த சேனையும் இப்போது புறப்பட்டுவந்தது. ஆனால் அது வந்து சேருவதற்குமுன்னமே இரண்டு சேனைகளுக்கும் தலைமையாயிருந்த ஜனரல் ராஸ் என்பவர் சத்துருக்கள் ஒரு நல்ல காவலுள்ள இடத்தில் போய் நுழைந்துகொண்டார்களென்று கண்டு, சாவகாசப்படுத்தினால் எதிரியின் கூட்டங்கள் பலத்துப்போகும், இப்போதே ஓரேமூச்சாக அதையும் பிடிக்கவேண்டுமெனக்கருதி, ஜெயத்தினால் களிப்புற்றிருக்கும் தம்முடைய ஆட்களை மறுபடியும் ஒரு உறுதியான பிரயத்தனம் பண்ணும்படி கட்டளையிட, அவர்களும் அப்படியே கீழ்ப்படிந்தார்கள். முன்னணியை நடத்தின மேஜர் உவைட் என்னும் சூரன் வேகமாகப்போய் பாயவேண்டியது அவசியமெனக் கருதி, என் அன்பர்களே, ஜெயம்பூர்த்தியாக இன்னும் ஒரு பாய்ச்சல் தான்வேண்டும், ஓடிவாருங்கள் எனக் கூப்பிட, அப்படியே அவர்கள் ஒன்றுகூடி உற்சாக கோஷம் போட்டுக்கொண்டு சில நிமிஷகாலத்துக்குள் ஓட்டமாய் ஓடி எதிரிகளின் காவலிடத்துக்குள் போய், அவர்களுடைய மத்தியிலும் அவர்களுடைய பீரங்கிகளின் மத்தியிலும் நின்றார்கள்.

முதலில் ஓடினவர்களுக்குள் மேஜர் உவைட் என்பவர் முதல்; இவருடன்கூட ஒரு சிறிய கூர்க்கன் போனான். எதிரியின் பீரங்கியைக் கண்டவுடன் இச்சிறுவன் தன் துப்பாக்கியை அதன் மேல்வைத்து மேஜர் உவைட் என்பவரைப் பார்த்து "பிரின்ஸ் அவ் வேல்ஸ் அவர்களுடைய சொந்தப்பட்டாளமாகிய 2-வது கூர்க்காஸ் என்னும் பட்டாளத்தின் பேரால் இந்தப்பீரங்கி பிடி

திருனென்றசெய்திதெரிந்தவுடனே அக்காலத்தரசனுன பாலகனென்பவன் அவன்மேல் பகைகொண்டு அவனைப்பிடித்துச் சிறைசெய்ய வழிதேடிக்கொண்டேயிருந்து, சகாரனது வண்டியில் வசந்தசேனை ஏறிச்சென்றதற்கு முதனுள் அவனைப்பிடித்துச் சிறைசெய்து விலங்கடித்துவிட்டான். ஆயினும் அன்றிராத்திரி ஆரியகன், சர்விலகன்முதலிய சிநேகிதர்களது சகாயத்தினுல் ஒற்றைக்கால்விலங்கைத்தறித்துக்கொண்டு விடியற்காலத்தில் சிறைச்சாலையின்தலைமைக் காவலாளனைக் கொன்று வெளியே வந்துவிட்டான். இவ்விதமாய் அவன் சிறையினின்றும் வெளிப்பட்ட செய்தி உடனே அரசனுக்குத்தெரிய, தக்ஷணமே நகரத்தைச்சுற்றிக் காவல்வைத்து எவ்வகையிலேனும் அவனைப் பிடிக்கவேண்டுமென விளம்பரஞ்செய்தனன். அதுபற்றி அன்றுகாலையில் அந்தப்பட்டணமெங்கும் கட்டுங்காவலுமாய் உல்லோல கல்லோலமாகவிருந்தது. அதுகண்டு ஆரியகன் இன்னது செய்கிறதென்று தோன்றுமல் வீதிவழியே வந்து சாருதத்தன்வீடு திறந்திருப்பதுதெரிந்து அதில்புகுந்து, நாம் எவ்வாறு தப்பித்துக்கொண்டு வெளியேபோகிறதென்று யோசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது சாருதத்தன்வண்டி வாயிலில்வந்து நிற்க, தனக்குத்தான் தப்பித்துக்கொண்டுபோக சுவாமி வண்டிகொடுத்தனுப்பினுரென்று ஆரியகன் அதிலேறிக்கொண்டுபோயினுன்.

வண்டி கோட்டைவாயில் வழியாகச் செல்லும்பொழுது அங்கே காவல்காத்திருந்தவர்கள் வண்டியைச் சோதனைசெய்யவந்தார்கள். வண்டி சாருதத்தனுடையதென்றும், வண்டியிலிருப்பவள் வசந்தசேனையென்றும் வண்டிக்காரன் கூறினுன். ஆயினும் அவர்கள் நேராகப் பார்க்கவேண்டுமென்றுசொல்ல, அவர்களுள் ஒருவனுன சந்தனகனென்பவன் வண்டியைத் திறந்துபார்த்தான். தாங்கள் தேடிப்பிடிக்கக் காத்திருந்த ஆரியகனே வண்டியில் உட்காந்திருக்கிறுனெனத் தெரிந்தது. ஐயோ! இப்பொழுது ஆரியகன் என்னசெய்வான்! வேறு வழியில்லாமல் அவன் சந்தனகனைச் சரணமடைந்தான். சந்தனகன், ஆரியகன் முதலியோர்க்கு நேசனுகையால், அவனை எவ்வகையிலேனும் காப்பாற்றவேண்டும்; காட்டிக்கொடுக்கக்கூடாதென்று தீர்மானித்து,மற்றெவரும் வண்டியைப் பார்க்கவேண்டாம்; நான் பார்த்ததே போதுமென்று மற்றவர்களோடுவாதாடி வண்டியை வெளியே அனுப்பிவிட்டான். அனுப்பும்பொழுது, யாவரேனும் கண்டுகேட்டால், காவலாளர் அனைவரும் சோதனைசெய்தே வண்டியை வெளியே விட்டார்களென்று சொல்லும்படி வண்டிக்காரனுக்குத் திட்டம் செய்து அனுப்பினுன்.

புஷ்பகரண்டகோத்தியானத்தில் சாருதத்தனும் மைத்திரேயனும் வசந்தசேனை வருவாளென்று வெகுநேரம் வழிபார்த்திருந்தனர். அப்படியிருக்கையில் ஆரியகனை ஏற்றிக்கொண்டு வண்டி போய்ச்சேர்ந்தது. சகடத்தைப்பார்த்துச் சாருதத்தன் வசந்தசேனை

வந்தாளென்று சந்தோஷமடைந்து விரைந்தோடிவந்து வண்டியைத் திறந்தான். திறந்தவுடனே ஆரியகன், அவனே சாருதத்தனெனத் தெரிந்து அவனை அடைக்கலம்புகுந்து, அருள்புரிந்து என்னை இத்த ருணத்தில் ஆதரிக்கவேண்டும்; தமது வண்டியில் ஏறிவந்த பிழையைப் பொறுத்துக்கொள்ளவேண்டுமென வேண்டினன். அவனே ஆரியகனெனத் தெரிந்து சாருதத்தன் அவனுக்கு அபயமளித்து, அவன் தாள்களிலிருந்த விலங்கைத்தறித்துவிட்டுத் தன் வண்டியிலேயே ஏறிக்கொண்டு நகருக்குவெளியே விரைவாய்ப் போய்விட வேண்டுமென்றுசொல்லி அவனை அப்புறம் அனுப்பிவிட்டான்.

பிறகு சாருதத்தன் தோழனைநோக்கி, நேசனே, நாம் இப்பொழுது செய்த செய்கை அரசனுக்கு நேர் விரோதமானது. இச்செய்தி இராஜனுக்குத் தெரிந்தால் அத்தனையும் அநர்த்தமாகும். இதுவும் அரசனுடைய தோட்டம். இனி நிமிஷங்கூட நாம் இங்கே நிற்கலாகாது. வசந்தசேனை ஏன் வரவில்லையோ, அவளுக்காகக் காத்திருக்க முடியாது என்றான். உடனே அவர்கள் வீட்டிற்குப்போகப் புறப்பட்டார்கள். புறப்படும்பொழுது அநேகம் அபசகுனங்கள் ஆயின. அவற்றைக்கண்டு சஞ்சலமாகவே சாருதத்தன் வீடுபோய்ச்சேர்ந்தான்.

இது இப்படியிருக்கச் சகாரன், 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்ற வசனப்படி வசந்தசேனையைக் கொன்ற பழியை எவ்வாறு போக்குகிறதென்று அதேசிந்தையுடையவனாய், உடனே சாருதத்தன்மேல் பிரியாது செய்யும்படி அதிகாரிகள் வருவதற்கு முன்னமே நியாயஸ்தலத்திலேபோய்க் காத்திருந்தான். நியாயாதிகாரியும் ஜூரியென்கிற மத்தியஸ்தர்களும் வந்துசேர்ந்தபிறகு வழக்கப்படி, பிரியாதுதார் யாவரேனும் உண்டாவென்று விசாரிக்க, இதோவென்று சகாரன் முன்னேபோய் நின்றான். அவன் வழக்கு எப்போதும் சிக்காயும், நியாயமற்றதாயுமே யிருக்குமேயென்று உணர்ந்து நியாயாதிகாரி இந்தவிஷயம் நாளைக்காகட்டுமென்று தெரிவிக்க, மூர்க்கனான சகாரன் மிகக்கோபங்கொண்டு, இன்று என் வியவகாரத்தை விசாரிப்பதில்லையா! நல்லது, நான் இதோ என் உடன்பிறந்தாளிடம்சென்று, இவர்கள் அநியாயக்காரர்களென்று அறிவித்து, இவர்கள் வேலையை வாங்கிவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன் என்று அட்டகாசம்செய்தான். அதுகேட்டு நியாயாதிகாரி, இவன் மூர்க்கன், அரசனும் அவசரக்காரன்; துஷ்டர்களைக் கண்டால் தாழ்ந்துதான்போகவேண்டும் என நினைத்து, அவன் பிரியாதை ஏற்றுக்கொண்டனன். சகாரன் அதுகண்டு, முதலிலே நாளைக்காகட்டுமென்றவர்கள் நமது கோபத்திற்குப்பயந்து, இன்றேவிசாரிக்கப் புகுந்தார்களல்லவா? இவ்வாறே இவர்களை முற்றும் வெருட்டி வியவகாரத்தை நிறைவேற்றிக்கொள்ளலாமென்றெண்ணி ஆநந்தமடைந்தான்.

அதன்பிறகு கொண்டுவந்த பிரியாது என்னவென்று விசாரிக்க, சகாரன், அதை யான் ஏகாந்தமாய்க் காதோடுசொல்லுகிறேன்; நான் யார் தெரியுமா? என்னுடைய தகப்பனுர் அரசனுக்குமாமனுர், அரசன் என் தந்தைக்கு மருமகன்; நான் அரசனுக்கு மைத்துனன்; என் உடன்பிறந்தாள் அரசனுடைய பட்டத்தரசி என்றான். அதுகேட்டு நியாயசபை உத்தியோகஸ்தன், ஆயின் என்ன? இதில் உன் பெருமை ஒன்றையும் காணேமே. "என் தகப்பன் கூத்தாடி, எனக்குப் பிச்சைபோடு" என்பதுபோல் இருக்கின்றதே உன் வாய்மொழி; குலம் எதுவானுலென்ன, சரித்திரமல்லவோ சரியாயிருக்கவேண்டும். முதல்தரமான நிலத்தில் முட்செடிகள் முளைப்பதுபோல, உத்தமகுலத்தில் அற்பர்களும் உதிப்பது உண்டல்லவா? ஆதலின் இப்பொழுது அதைப்பற்றிப் பேசுவதிற்பயனில்லை; வியவகாரம் ஏதாவது உண்டானுல் எடுத்துக் கூறலாமென, சகாரன், நான் இவைகளை வீணுக்குச் சொல்லவந்தவனன்று; நான் எதாவது குற்றஞ்செய்தாலும், நீங்கள் என்னைத் தண்டிக்கத்தகாதென்று எடுத்துரைத்தேன். என் பிரியாதென்னவெனில், நான் என் இஷ்டப்படி வளர்க்கவும் அழிக்கவும் அரசன் எனக்கே உரியதாகப் புஷ்பகரண்டகமென்னும் பழைய தோட்டத்தை அளித்திருக்கிறுரல்லவா? எனக்கு இஷ்டமானபோது நான் அத்தோட்டத்திற்குப்போய்வருவதுண்டு. அந்த வழக்கப்படி இன்றுகாலையில் நான் அவ்விடம் சென்றிருந்தபொழுது பெண்பிணமொன்று அங்கே கிடக்கக்கண்டேன்; அதன் வரலாற்றை விசாரிக்கவேண்டுமென்றான். அந்தப்பெண் இன்னுரென உமக்குத் தெரிகிறதாவென்று அதிகாரி கேட்க, சகாரன், தெரியாமலென்ன? நமது நகருக்கு ஓர் அற்புதமான அலங்காரமாயிருந்த வசந்தசேனையென்னும் பெண்மணி. யாரோ ஒரு திருவற்ற தீயோன் அவளது பூஷணங்களைப்பறித்துக் கொள்ளப் பேராவல்கொண்டு அவளை அடித்துக்கொன்றான்; நான் அல்ல, என்றுசொல்லி முகத்தை மறைத்துக்கொண்டான்.

நியாயாதிகாரி அதுகேட்டு, காவலாளர்கள் தங்கள் காரியத்தில் கருத்தின்றி உபேக்ஷைசெய்ய ஆரம்பித்திருக்கிறுர்கள்போலுமென்று சிந்தைகலங்கி, நல்லது, இவர்சொன்ன வாய்மொழியால் "நானல்ல" என்பதை முதலில் எழுதிக்கொள் என்று லேககனுக்கு அனுமதி கொடுக்க அவன் அவ்வாறே பதிவுசெய்துகொண்டான்.

சகாரன் சற்று நிதானித்து, நான் அல்லவென்று சொன்னது சரியானதல்லவெனத் தனக்குள்ளே தெரிந்து, அதிகாரியைநோக்கி, ஓகோ, என்னென்னவோ எழுதிக்கொள்ளுகிறீர்களே? நானல்லது வேறுயாரும் அதைப்பார்க்கவில்லை என்றல்லவோ நான் கூறியது என்று சொல்லிக்கொண்டே காலால் உதைத்து லேககன் எழுதியதைக் கிழித்துவிட்டான். நகைக்காகக் கொன்றதென்பது உனக்கெவ்வாறு தெரிந்ததென்று மறுபடியும்கேட்க, அவன், அவளுடம்பில்

கைகால் கழுத்து எவ்விடத்திலும் ஒருநகையாயினும் இல்லையாத லால் அதற்காகவே கொலைசெய்யப்பட்டவளென நான் கண்டறிந் தேன் என்றான்.

அதுகேட்டு வசந்தசேனையின் மாதாவை வரவழைத்தே இதுவிஷ யத்தை விசாரிக்கவேண்டுமென்று மத்தியஸ்தர்கள் கூற, அவ்வண்ண மே அவளை அச்சமுறுத்தாது மரியாதையாய் அழைத்துவரும்படி சேவகனை அனுப்பினார்கள். அவன் அப்படியே போய் அழைத்து வந்து அவளைச் சபைநடுவில் ஓர் ஆசனத்தில் உட்காரவைத்தான். உட்காந்தபின்பு அதிகாரி அவளை நோக்கி, நீயார், உனக்கு வசந்த சேனை என்னமுறையாகவேண்டுமென்று கேட்க, அவள், வசந்த சேனை என் மகளென்று சொல்வார்கள் என்றாள். இப்பொழுது உன்மகள் எங்கேயிருக்கிறாள் என்று மறுபடியும் விசாரிக்க, அவள் தன் உயிர்த்தோழனான சாருதத்தன் வீட்டிற்குச்சென்றிருக்கிறா ளென்றாள். உடனே சாருதத்தனை விசாரணைக்கு வரவழைத்தனர். அதுகண்டு சாருதத்தன் ஒருபாபமும் அறியாத புண்ணிய புருஷ னாகையால், தன் வண்டியில் ஆரியகன் ஏறிவந்த செய்திதெரிந்து அதைப்பற்றியே விசாரிக்க வரவழைக்கிறார்களோவென்று சந்தே கித்துக்கொண்டே சென்றான்.

சாருதத்தன் நியாயசபையிற் சென்றதும், வசந்தசேனைக்கும் உமக்கும் நேசமுண்டா, அவள் இப்பொழுது எங்கேயிருக்கிறாள், அவளைப்பற்றி உமக்கு ஏதாவது விசேஷந்தெரியுமா என்று விசா ரிக்க, அவன், நேசமுண்டு, அவள் வீட்டிற்குப்போயினாள்; அது தவிர எனக்கு மற்றொன்றும் தெரியாதென்றான். அந்த மொழி கேட் கப் பொறாமல் சகாரன் எழும்பிக் குதித்து, புஷ்பகாண்டகோத்தி யானத்தில் அருமை மகளை அநியாயமாய் உயிர்மாய்த்துவிட்டு, இப்பொழுது ஒன்றுமறியேனென்று அபலாபம் செய்கிறாயா என்று இரைச்சலிட்டான். அதுகேட்டுச் சாருதத்தன் ஒன்றுந்தோன்றா மல் திகைத்துப்போயினான். இதென்ன அநியாயமென்று வசந்த சேனையின் தாய் மனந்தவித்துநின்றாள்.

இவ்வாறிருக்கும் சமயத்திலே, காலையில் கோட்டைவாயிலிலே சந்தனகனல் பரிபவப்பட்ட வீரகன் என்பவன் ஓடிவந்து, தான் காவலிருந்த வழியாய்ச்சென்ற வண்டியைச் சோதனை செய்யப் போ கும்பொழுது, பார்க்கக்கூடாதென்று சந்தனகன் தன்னை இழுத்துத் தள்ளி உதைத்தானென்று பிரியாதுசெய்தான். அந்த வண்டி யாரு டையதென்று கேட்டதற்கு, சாருதத்தன் வண்டி யென்றும், வசந்த சேனையை ஏற்றிக்கொண்டு புஷ்பகாண்டகவனத்திற்குச் செல்லு கிறதென்றும் வண்டிக்காரன் கூறினானென்றான். அதுகேட்டு நியா யாதிகாரி, நல்லது, உன் பிரியாது பின்பாகட்டும்; நீ உடனே புஷ்பகாண்டகத்திற்குப்போய் அங்கே ஏதாவது பிணம்விழுந்து கிடக்கிறதா பார்த்துவாவென்று சொல்லியனுப்ப, அவன், சித்தம்

ஐயா என்று அதிசீக்கிரமாய்க் குதிரையேறிச்சென்று பார்த்துவந்து, நாய் நரிகள் இழுக்க ஒரு பிணம் அங்கே கிடக்கிறதென்றான். இதற்குள் வசந்தசேனையின்வீட்டிற்கு ஆளனுப்பி அங்கேயும் அவளில்லையென்ற செய்திதெரிந்துகொண்டார்கள்.

இது இப்படியிருக்க, காலையில் சாருதத்தன் தோட்டம்போய்த் திரும்பி வீட்டிற்குவந்தபோது, வசந்தசேனைகொடுத்துப்போன பூஷணங்களைப்பார்த்து, அவற்றை அவளிடமே கொடுத்துவிட்டு வரும்படி மைத்திரேயன் வசம் அனுப்பியிருந்தான். அவற்றையெடுத்துக்கொண்டு அவன் வசந்தசேனைவீட்டிற்குச் செல்லும் போது வழியே சாருதத்தன் செய்தியைக் கேள்வியுற்று, அப்படியே நகையும் கையுமாக நியாயஸ்தலத்திற்கு ஓடிவந்தான். அங்கே நடக்கும் நடத்தைகளைப்பார்த்து, இத்தனையும் சகாரனால் விளைந்த விபரீதமெனத்தெரிந்து அவன்மேல் மிகக்கோபங்கொண்டு இந்தச் சண்டாளனை அடித்துக்கொல்வதே சரியென்று எழுந்து சென்றான். அந்த க்ஷணத்தில் அவன் கையிலிருந்த ஆபரணமூட்டை கைதவறிக் கீழே விழுந்தது. சகாரன் உடனே அதை யெடுத்துப்பார்த்து, இவை தாம் வசந்தசேனையின் அணிகள்; இவற்றின்மேல் ஆசைகொண்டே துண்டமும் பிண்டமுமில்லாத பிச்சைக்காரப்பையலாகிய இவன் அவளை அடித்துக்கொன்றானென்றான். அவை வசந்தசேனையின் அணிகளேயென அவளுடைய அன்னையும் சாருதத்தனுங்கூட ஒப்புக்கொண்டார்கள். இவ்வாறு ஒன்றின்மேலொன்றாய்க் காலத்தின் கொடுமையால் தான்குற்றஞ்செய்தது நிச்சயமேயென நிரூபிப்பதற்கே அனுகூலமான அத்தாட்சிகள் உண்டாகி, சகாரனது பொய்யான பேச்சு உண்மையென உறுதிப்படுவதையறிந்து சாருதத்தன் ஒன்றும் தோன்றாது, தலைகுனிந்துகொண்டிருந்தான். அதுகண்டு மைத்திரேயன், உள்ளதை உள்ளபடியே உரைத்துவிடுவதைவிட்டு இதற்காக வீண்விசாரப்படுவானேன் என்றுகூற, சாருதத்தன், நாம் எதுசொன்னாலும் இச்சமயத்தில் ஏழைவார்த்தை அம்பலமேறாது; நமது எழ்மைதான் வெளியாகும்; அதைவிட மரணமே மேலானதெனமொழிந்தான்.

இவ்விஷயங்களைக் கேட்ட நியாயாதிகாரி, சாருதத்தன் இத்தன்மையாகப் பெண்கொலைசெய்யத் துணிபவனல்லனென நன்றாய்த் தெரிந்திருந்தும், அதற்கு ஆதாரம் ஒன்றும் காணப்படாமையால், தீர்ப்புச்சொல்லும்படி நடந்தவர்த்தமானங்களை அரசனுக்கு எழுதியனுப்பிவிட்டான். அதைப்பார்த்து அரசன், இந்தப் பொய்க்கதையாகிய கடலைக்கடைந்து உண்மையென்னும் அமுதத்தைக்கண்டறிய வல்லமையற்றவனாகி, சாருதத்தன் உள்ளபடி உடைமைகளுக்கு ஆசைகொண்டு பெண்கொலை புரிந்தவனேயென நினைத்து, அந்த நகைகளையெல்லாம் அவன் கழுத்திலேமாட்டிப் பறையறைந்துகொண்டே பட்டணமுழுதும் சுற்றிவந்து கடைசியில் தென்மயானம்

கொண்டுபோய்க் கொலைசெய்துவிடவேண்டுமெனவும், இனி எவரே னும் இத்தன்மையான குற்றஞ் செய்வாராயின், அவரைக் கப்ப லேற்றித் தேசாந்தரம் அனுப்பிவிடவேண்டுமெனவும் தீர்ப்பு எழுதி யனுப்பினன்.

அந்தத் தீர்ப்பின்படியே சாருதத்தன் கொலையாளிகள் வசம் ஒப் புவிக்கப்பட்டனன். அவர்களும் அவனுக்குக் கொலைக்குறியான சிவப்புச் சந்தனம் பூசிச் செவ்வலரிப் பூமாலைசூட்டிக் கட்டியிழுத் துக்கொண்டு தெருத்தெருவாய்ப் பறையறைந்து பிரசித்தப்படுத்திக் கொண்டே சென்றார்கள். சகாரனும் அவனைக் கொலைசெய்யும்போது வேடிக்கைபார்க்கவேண்டுமென்று கூடவேசென்றான்.

சகாரன் வீட்டு வாயிலண்டை செல்லும்போது அவ்வீட்டு மேல் மாளிகையில் விலங்குங்காலுமாய் விழுந்துகிடந்த வண்டிக்காரன் தெருவிலுண்டாகிய கூச்சலைக்கேட்டு, ஐயோ, இதென்ன அநியாய மென்று மிகப் பரிதாபங்கொண்டு, கீழே இறங்கிச்செல்லக் காலில் லாமற்போகவே, உயிர்போனாலும் போகட்டும், உண்மையை வெளி யாக்கவேண்டுமென்று, அங்கிருந்தபடியே எழும்பித் தெருவிலே குதித்தான். அதுகண்டு அங்கிருந்தவர்களெல்லாரும் இதென்னவெ ன்று ஆச்சரியமடைந்தார்கள். தெய்வச்செயலால் அவனுக்குச் சிறி தும் காயம்படவில்லை. கீழே குதித்தவுடனே வண்டிக்காரன், சாரு தத்தன்மேல் சிறிதும் தோஷமில்லை; நானே பெரும்பாவி; மாறாட்ட மாய் என் வண்டியிலேறிக்கொண்ட வசந்தசேனையை நான் பாரா மலே வண்டியைத் தோட்டத்திற்கு ஓட்டிக்கொண்டுபோனேன்; இந்தப்பாவி சகாரன் அவளைப் பிடித்துக்கொன்றுவிட்டுச் சாருதத் தன்மேல் பழிசுமத்தினன்; அச்செய்தியை நான் வெளியிடப்போ கிறேனென்று பயந்தே இதோ எனக்கு விலங்கடித்திருக்கிறான் பா ருங்களென்றான். ஆயினும் அவன் பேச்சும் பயன்படவில்லை: அண் டையிலிருந்த சகாரன், இவன் என் வீட்டில் களவுசெய்தான்; அதற் காக விலங்கடித்தேன்; அந்தப்பகையினல் இவ்வாறு பிதற்றுகிறா னே யல்லது வேறில்லையென்றுசொல்லவே, அவர்கள் சரிதானென்று அப்புறம் இழுத்துக்கொண்டுபோய்விட்டார்கள்.

இது இவ்வாறிருக்க, சன்னியாசிமடத்திற்குச் சென்றிருந்த வசந்தசேனை அவ்விடத்தில் நடந்த உபசாரங்களால் உடனே உடம்பு தெளிந்தவளாகி, சாருதத்தனிடம் செல்லும்படி அந்தச் சன்னியாசியுடனே புறப்பட்டாள். புறப்பட்டு வீதியாய்ப் போகும்போது மார்க்கத்தில் இந்தக் கொடிய செய்தி காதில் கேட்டது. அதைச் செவியுற்றவுடனே அவ்வுத்தமி நடுநடுங்கி, ஐயோ, என்னைப் படுத்தினபாடு போதாதென்று என் பிராணநாயக னுக்கும் பொல்லாங்கிழைக்கத் துணிந்தானே பாவியென்று கூவிக் கதறிக்கொண்டு, கொலைபாதகர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு

போகுமிடநோக்கி வெகுவேகமாய்ச்சென்றாள். ஆயினும் அவள் போவதற்குள் அவனைக் கொலைசெய்யுமிடமான தென்மயானத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள். இவள் அவ்விடம் போகும்பொழுது சாருதத்தனைக் கொல்வதற்காகக் கத்தியோங்குகிறதருணம், முதலில் ஒருதரம் ஒருவன் கத்தியோங்கத் தெய்வச்செயலால் அது கீழே விழுந்துவிட்டது. அதுகண்டு அவன் மற்றொருவனை நோக்கி, ஏதோ இது இவனுக்கு நல்லகாலம்போலிருக்கிறது; ஒருவேளை விடுதலையாகிவிடுமோ என்னவோவென்று வசனித்துக்கொண்டிருந்தான். அவ்வமயத்தில் சன்னியாசியும் வசந்தசேனையுமாய் அதிவேகமாக அவ்விடம் ஓடிவந்து, வசந்தசேனை இதோ உயிரோடிருக்கிறாள்; அவளுக்காக உபகாரியான உத்தமபுருஷனைக் கொன்று வீண்பழிக்கு ஆளாகாதேயுங்கள்; வேண்டாம், வேண்டாம் என்று கூவினார்கள். அதுகேட்டு யாவரும் திகைத்து நின்றனர். இவ்வுத்தம புருஷனை அநியாயமாய்க் கொல்லாமல் தப்பினோமேயென்று கொலையாளர்கள் மகிழ்ச்சிகொண்டு, அச்செய்தியை அரசனுக்குத் தெரிவிக்க ஓடினார்கள். வசந்தசேனையைப் பார்த்துச் சகாரன், தன்மோசம் வெளியாகிவிட்டது; இனியிங்கிருந்தால் அபாயம் விளையுமென்று அறிந்து ஓடிப்போக வழிதேடினான். வசந்தசேனை சாருதத்தனைக் கண்டவுடனே கண்ணுங்கண்ணீருமாய் அவன் கால்களிலே போய் விழ, அவன் அவளையெடுத்து அணைத்துக்கொண்டு, என் கண்மணியே, எனக்குச் செய்திருக்கும் இந்தக் கொலைக்கோலத்தைக் கண்டாயே; இவையாவும் இப்பொழுது உன்னை உயிரோடு பார்த்தபிறகு மணக்கோலமாயின; கொலைக்குறியாய் அடிக்கும் இந்தப்பறையும் விவாஹத்திற்குரிய மங்களவாத்தியமாகியது; இத்தனையும் நமக்குப் பகைவனும் மாபாவியுமாகிய சகாரனால் விளைந்த விபரீதங்களென்றான். பின்பு அவர்கள் எல்லோரும் ஒருவர்க்கொருவர் அவரவர் விருத்தாந்தங்களை விவரமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கும் சமயத்தில் அன்றுகாலையில் சிறையினின்று விடுபட்டுச்சென்ற ஆரியகன் தன்னை ஆபத்துவேளையில் ஆதரித்த உத்தமனான சாருதத்தனுக்கு வந்த விபத்தைக் கேள்வியுற்று உடனே தந்திரமாய் ஓடிவந்து, மதிகெட்ட மன்னனான பாலகனைக் கொன்றுவிட்டுத் தான் சிங்காதனமேறி, நாம் சாருதத்தனை விடுதலைசெய்தோம், உடனே அவரை இவ்விடம் அழைத்துவரவேண்டுமென்று கட்டளையிட்டு, சர்வலிகனை அவனிடம் அனுப்பினான். சாருதத்தன் வசந்தசேனையுடன் கூடிக் களிப்புற்றிருக்கிற சமயத்தில் அவன் அவ்விடம்போய்ச் சேர்ந்தான். அவன் அவர்களைப் பார்த்து அதிக சந்தோஷமடைந்து சகாரனை அவ்விடம் பிடித்துவரும்படித் திட்டம் செய்தான். இவற்றையெல்லாம் கண்ணுற்றிருந்த சகாரன் தனக்கு வேறுகதியில்லையெனத் தெரிந்து தானே ஓடிவந்து, இப்

பொழுது புத்திவந்தது; இனிமேல் நான் எவர்க்கும் இப்படித் தீங்கிழைப்பதில்லை; அபயமளிக்க வேண்டுமென்று சாருதத்தனையே சரணமடைந்தான். சாருதத்தனுக்கு விதித்ததண்டனையை அவனுக்கு நிறைவேற்றிவிடவேண்டுமென யாவரும் அதிக ஆவல்கொண்டு, அவ்வாறே உத்தரவு கொடுக்கும்படி சாருதத்தனை வேண்டிக்கொண்டனர். "சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவனை ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்" ஆதலால், அவன் அதற்குச் சிறிதும் உடன்படவில்லை; அடைக்கலம்புகுந்தவர்களை ஆதரிப்பதேயன்றிக் கைவிடுவது கடமையன்று; தமக்கு அபகாரம் செய்தவனையினும் அதற்குப்பிரதி நாம் உபகாரம் செய்வதே ஏற்றதண்டனையாகுமென்று யாவருக்கும் நியாயமெடுத்தோதி, அவனை விடுதலைசெய்யும்படி உத்தரவுபண்ணினன்.

இவர்கள் இவ்வாறிருக்கின்ற வேளையில், சாருதத்தனைக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகிறார்களென்ற செய்தி கேள்வியுற்று, அவனுடைய கற்புடைப் பெண்டிரான தூதையென்பவள் தீக்குளித்து உயிர்மாய்க்கச் சித்தமாயிருக்கிறாளென்று ஒருவன் ஓடிவந்து உரைத்தான். அந்தச்சொல் காதில்கேட்டவுடனே சாருதத்தன் சிந்தைகலங்கி அனைவரையும் அழைத்துக்கொண்டு அதிசீக்கிரமாய் அவளிடம் சென்றான். அப்பொழுது அவள் பெருந்தீவளர்த்தி அதில் குதிக்கத்துணிந்து கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்தாள். அந்தச்சமயத்தில் சாருதத்தன் சென்று அவளைப் பிடித்திழுத்து, இதென்ன சாகசம்செய்யத் துணிந்தாய், நான் உயிரோடிருக்கையிலும் நீ இவ்வாறு உயிர்மாய்க்கக் கருதலாமோ; குழந்தை யென்னகதியாவானென நினைத்தாய் என்று சொல்லி அழைத்துவந்தான். அவளும் தன் பிராணநாதனைப் பணிந்து மிக்கமகிழ்ச்சிகொண்டாள். பின்பு யாவரும் ஆரியகனைப்போய் கண்டு களிப்புற்றார்கள். கடைசியில் இவ்வாறு சாருதத்தனது தருமமல்லவோ தலைகாத்தது; வசந்தசேனையும் உயிர்த்தெழுந்தாள், சாருதத்தனும் கொலைசெய்யப்படாமல் காக்கப்பட்டான், தூதையும் தீக்குளிக்காமல் தப்பிப்பிழைத்தாள்.

பிறகு உஜ்ஜயினீ நகரத்தில் ஆரியகனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. குசாவதி நகரத்திற்குச் சாருதத்தன் அரசனாகி அவ்விடத்தில் இனிது ஆட்சிபுரிந்துவந்தான். இவர்களுக்குத் துணையாயிருந்த மற்றயாவரும் அவரவர் திறமைக்குத்தக்கபடி ஏற்ற அதிகாரங்களில் நியமிக்கப்பட்டனர். அரசுசெலுத்துவதும் வியவகாரங்களில் உண்மையைக்கண்டறிந்து நியாயத்தீர்ப்புசெய்வதும் எவ்வளவு கடினமானவை கண்டீர்களா? சாருதத்தன் ஒருபாவமுமறியாத புண்ணியாத்துமாவாயிருந்தும் அவனே குற்றஞ்செய்தவனென்பதற்கு அனுகூலமாய் ஒன்றுக்கொன்று உபபலமாக அநேகம் அத்தாட்சிகள் அமைந்த வகையைப் பாருங்கள்

"பொய்யுடையொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே
மெய்யுடையொருவன் சொலமாட்டாமையால்
பொய்போலும்மே பொய்போலும்மே—அதனால்,
இருவர்தஞ்சொல்லையு மெழுதரங்கேட்டே
இருவரும்பொருந்த வுரையானாயின்
மனுநெறிமுறையின் வழக்கிழந்தவர்தாம்
மனமுறமறுகிநின் றழுதகண்ணீர்
வழிவழியீர்வதோர் வாளாகும்மே."

அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரிக்கும் அறிவுள்ள பறவைகள்.

கோதாவரிதீரத்தில் மிகவும் மதுரமான பழங்களையுடைய மா, பலா, விளா, மாதுளை, கொய்யா, கர்ச்சூரம், நெல்லி, நாரத்தை, சந்தனம், தெங்கு, கமுகு முதலிய மரங்களும், திராக்ஷை முதலிய கொடிகளும் அடர்ந்து வெகு விசித்திரமான சாலவனமென்கிற வனமொன்றுண்டு. அந்த வனத்திலே பலவகைக்கிளிகள், அன்னம், மயில், குயில், கழுகு, நாரை, கொக்கு, சகோரம் முதலான பறவைகளும், புலி, கரடி, கடம்பை, சிங்கம், கவரிமான்முதலிய மிருகங்களும் வெகு சந்தோஷமாக வாசஞ்செய்துகொண்டிருந்தன. அந்த அரணியத்தின் நடுவிலே விழுதுவிட்டுத் தழைத்து இரண்டுமைல்தூரம் பரவிக் கப்புங்கிளையுமாய் ஆகாயமளாவிய ஆலமரமொன்று உண்டு. அந்தமரம் அவ்வரணியத்தினுள்ள பலவகை விலங்குகளுக்கும் பறவைகளுக்கும், வழிப்போக்கர்களான மன்னர்முதலிய மனிதர்களுக்கும் வெயில் காற்று மழைகளுக்கு அடைக்கலமாகவந்து ஒதுங்குவதற்கு ஏற்றவிடமாயிருந்தது. அந்தப் பெரிய ஆலமரத்தின் ஓர்கிளையிலே ஆணும் பெண்ணுமாய் இரண்டு புறாக்கள் வெகு விந்தையாகக் கூடுகட்டிக்கொண்டு மிகவும் பிரீதியாய் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் தங்கள் குடித்தனமுறையில் குறைவறக்கலந்து அன்னியோன்னியமாகத் தம் குடும்பத்துடனே வெகுகாலம் வாசஞ்செய்துகொண்டிருந்தன.

அந்த ஆலமரத்தின் அருகே வேடச்சேரி ஒன்று உண்டு. அதில் வேடர்கள் அநேகர் வாசஞ்செய்துகொண்டிருந்தனர். அவர்கள் அம்பும்வில்லும் கைக்கொண்டு அவ்வனத்திலுள்ள விலங்கு

களையும் பறவைகளையும் வேட்டையாடி ஜீவனஞ்செய்பவர்கள்; கொலைத்தொழில் புரியச் சிறிதும் கூச்சமில்லாத கிராதகர்கள். அவர்களில் மிகக்கொடியனான ஒருவன் ஒருநாள் வேட்டையாட வெளியேசென்று மிருகங்கள் ஒன்றும் அகப்படாமல் நெடுநேரம் அலைந்துதிரிந்து கடைசியில் அந்த ஆலமரத்தண்டைவந்து அதிலிருந்த புறாக்களைக்கண்டு வெகு சந்தோஷமாய் அவ்விடத்தில் சிறுகண்ணிறுக்கி முறுக்கிய வலையைக்கட்டி இரையைத்தெளித்துக் கபடமான பறவை ஒன்றை வைத்து, உச்சுருக்குக்கயிற்றைக்கையில் பிடித்துக்கொண்டு தழைகளினால் தன்னை மறைத்துப் பறவைகளுக்கு யமன்போல அந்தப்புறாக்களை எவ்விதமாயாவது பிடிக்கவேண்டுமென்று நிச்சயித்து மறைந்திருந்தான். வேடன் இவ்வாறு வந்து வலைகட்டித் தங்களைப் பிடிக்கப் பதுங்கியிருப்பதைக்கண்டு அம்மரத்திலிருந்த பெரிய புறாக்கள் இரண்டும் பயந்து தங்கள் குஞ்சுகளை நோக்கி, எம் குழந்தைகாள், உங்களுக்கு இதமான செய்தி ஒன்று சொல்லுகிறோம்; மாதாபிதாக்களான நாங்கள் சொல்லுகிறவார்த்தையைச் சற்றுக் கவனித்துக்கேளுங்கள்: நமக்குச் சத்துருவான வேடன் காலையில் நாம் எழுந்துபோகும் மார்க்கங்களில் வலைகளைக் கட்டி நாமெப்போ வந்து அகப்பட்டுக்கொள்வோமென்று மறைந்திருக்கிறான்; ஆகையால் நீங்கள் சாதாரணமாகப் போகும் மார்க்கங்களில் போகாமல், நாம் வாசஞ்செய்யும் இடத்தைவிட்டு வெகுதூரம் வானத்தில் உயர எழும்பிப் பின்பு குறுக்காகத் தூரதேசஞ்சென்று ஆகாரம் தேடிக்கொண்டு, முன்போனதுபோலவே கூட்டில்வந்து சேருங்கள் என்று கட்டளையிட்டன. அப்படியே தாய் தந்தைகளுடைய சொற்படி சிறகுள்ள குஞ்சுகள் எச்சரிக்கையாய் நடந்துவந்தன. இறகுமுளையாத குஞ்சுகளுக்கு ஆகாரங்களைத் தாமே தேடிக்கொடுத்துக்கொண்டு அந்தப் புறாக்கள் இரண்டும் பலநாள் வேடனிடத்தில் தப்பித்துச் சுகமாகவாழ்ந்துகொண்டிருந்தன.

இப்படியிருக்க ஒருகாலவிசேஷத்தில் அந்தவேடன் இந்தப் புறாக்கள் நம்முடைய வலையில் அகப்படாமல் மோசஞ்செய்து விடுகின்றனவென்று தெரிந்து இன்றையதினம் வேறொரு உபாயஞ்செய்யவேண்டும்; வலையைமாத்திரம் கட்டிவைத்துக் காத்திருப்பதில் பயனில்லை; வில்லில் அம்பைத் தொடுத்து அந்தக் கூட்டினது துவாரமுகத்திலே இலக்குவைத்து இருந்தால் அந்தப் புறாக்கள் வெளிப்படும் தருணத்தில் ஒரே அடியாக அடித்துப்போடலாம் என்று எண்ணி அப்படியேசெய்து சூரியோதயத்துக்கு முன்னமே மரத்தடியில் வந்து காத்திருந்தான். உதயமானபின் அந்த ஆண் பெண் புறாக்கள் இரண்டும் எழுந்திருந்து தங்கள் குஞ்சுகளைப் பார்த்து, கண்மணிகளே நீங்கள் சத்துருக்கள் நிறைந்த இந்த விடத்தில் அவசரப்பட்டுக் கூண்டைவிட்டு வெளியேபோய்ச் சஞ்சரிக்கவேண்டாம் என்று நற்புத்திபோதித்தன. பிறகு ஆண்புறாவானது கூட்

டுக்குவெளியில் தலையைச் சற்றே மெல்லென நீட்டிப்பார்த்து, கீழே மரத்தினடியில் வில்லும்கையுமாய்க் கிராதகன் நிற்கக்கண்டு திகிலடைந்ததாய் நீட்டிய கழுத்தை உள்வாங்கித் தன் பத்தினி புத்திரர்களுடன், இன்றையதினம் வேடன் மரத்தடியைவிட்டு அப்புறம் போகிறவரையில் நாம் எங்கேயும் சென்று சஞ்சரிக்கக்கூடாது என்று உறுதியாகச் சொன்னது. அவை அப்படியே கூட்டில் அடங்கி இருந்தன. வேடனும் இவைகளை அடியாமல் அப்புறம் போகிறதில்லையென்று வெகுநாழிகை காத்திருந்தான். இப்படியிருக்கையில் சூரியன் அஸ்தமனமாகிற சமயமாயிற்று. அப்பொழுது நீருண்ட மேகங்கள் ஆகாசத்தில் கிளம்பிப் பளபளவென்றுமின்னிப் படபடவென்று இடித்துப்பிரளயகாலத்தில் பொழிவதுபோல எலுமிச்சங்காயவ்வளவு பருமனான கல்மழைபெய்து பெருங்காற்று அடித்தது. அடிக்கவே அந்த மரத்தடியிலிருந்த வேடன் தொப்பென நனைந்து நடுக்கமெடுத்துக் குளிருமுண்டாய், மெய்சிலிர்த்து வெளேரென்று வெளுத்துக் கையும் காலும் விறைத்து, கண் காது மூக்கு முதலிய பொறிகள் சோர்ந்து கருவி கரணங்களுங் குறைந்து மதிமயங்கிப் பூமியில் வீழ்ந்தான். அப்போது அவன் "இம்மரத்திலிருக்கும் தெய்வமே, உன்னை நான் சரணமடைந்தேன்; அநியாயமாய் இந்தப் புறாக்களை நம்பி என் உயிரை இழந்துபோகலானேன் என்று முறையிட்டு மெய்மறந்து பிராணன் போனவனைப்போல் மூர்ச்சைபோய்த் தரையில் விழுந்துவிட்டான். அந்தச் சமயத்தில் கூட்டிலிருந்த புறாக்கள் வெளியில்வந்து பார்த்தன. சத்துருவான வேடன் மரணமடைந்துவிட்டானென்று எண்ணி ஆண்புறா, தன் பெட்டையுடன் சொன்னதாவது: ஓ பெண்கள் நாயகமே! நமக்கும் இந்த வனத்திலுள்ள மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் காலாந்தகனைப்போல் இருந்த வேடன் பிராணன்போய் மரத்தடியில் விழுந்துவிட்டான்; இனிமேல் இந்த வனத்திலிருக்கும் பக்ஷிமிருகங்களெல்லாம் சிறிதும் அச்சமின்றிச் சஞ்சாரம்செய்யலாம். நம்மைக் கொல்லவந்த வேடன் இதோ காற்றுமழையினால் மாண்டுகிடக்கிறான்; நீபாரென்று சொல்லியது. பெட்டையும் கூட்டைவிட்டு வெளியில்வந்து அம்மரத்தடியில் விழுந்துகிடக்கும் வேடனைக் கிட்டப்போய்ப் பார்த்துப் பின்பு கணவனைநோக்கிச் சொன்னதாவது: என் பிராணநாதா, புருஷரத்தினமே! இந்தவேடன் மரித்தானென்று எண்ணவேண்டாம்; அவனுடைய முகத்தில் ஜீவகலை மாறவில்லை. மரணமடைந்தோர்களுடைய முகம் எவ்விதமிருக்குமோ அவ்விதமின்றி இவன்முகம் மிகவும் தெளிவாக இருப்பதினால் இவன் பிராணன்போனவனென்று நினைக்கக்கூடவில்லை. மிகவும் ஆபத்தை அடைந்த இந்த வேடனுக்குத் தகுந்த சிகிச்சைசெய்தால் இவன் பிழைத்துப்போவான். அப்படி செய்வதினால் நமக்கு அழியாத புண்ணிய பதவிகள் கிடைக்கும்; சீக்கிரத்தில் இவனுடைய களை தெளியும்படி ஓர் உபாயந்தேடவே

ண்டும் மகானுபாவனே என்றுசொல்லிற்று. அந்த வார்த்தையைக் கேட்டு ஆண்புறு சொன்னதாவது: பறவை விலங்கு முதலியவற் றிற்குக் காலனான இவன் இன்னும் இறந்துபோகவில்லையென்றும், இவனுக்கு உபசாரஞ்செய்து களை தெளியும்படி செய்யவேண்டு மென்றும் சொன்ன உன் வார்த்தை எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இவனுக்கு இன்னும் உயிர்போகாமலிருக்கும் பக்ஷத் தில் சீக்கிரத்தில் கொடும்பாவியான இவன் பிராணனைப்போக்குவது நமக்கு மேலானதருமம். முன் நம்மைக் கொல்லுகிறதற்காகக் கடுமை யாய்ப்பார்த்த இவனுடைய இரண்டு கண்களையும் என்னுடைய மூக்கினால் குத்திக்கிளறி விழிகளைப்பிடுங்கிப்போடுகிறேன். கூர் மையான அம்புகளினால் பக்ஷிமிருகங்களுடைய கழுத்துகளைப் பிரா ணன்போகும்படி துளைக்கின்ற இவனுடைய நெஞ்சங் குழியைத் துளைத்துவிடுகிறேன். ஒருவருக்கும் அபகாரஞ்செய்யாத பக்ஷிக ளைப்புசித்த இவனுடைய வயிற்றைக்கிழித்துக் குடலைப்பிடுங்கிப் போடுகிறேன். சீக்கிரத்தில் இவன் பிராணனுடன் எழுந்திருக்கு முன்னமே இவனை வதைக்கிறேனென்று சொல்லிற்று. இவ்வாறு சொன்ன நாயகனுடைய வார்த்தையைக்கேட்டுப் பெண்புறுவானது கணவனைநோக்கி, ஓ தர்மசுரூபியே, கருணாலயமே, பெரியோர்களு டைய சகவாசத்தால் சகல தர்மங்களும் தெரிந்தவரே, உமக்கு நான் என்னதர்மம் சொல்லப்போகிறேன்; உமக்குத்தெரியாதது ஒன்று மில்லை; ஆயினும் இப்பொழுது இந்த வேடன்விஷயத்தில் நீர் அப் படி நடத்துவதினால் மகத்தான பாவத்துக்காளாவோம். களைத்து விழுந்துகிடக்கிற வேடனைக் கருணைசெய்து காப்பதே மேலானதர் மம். ஏனென்றால் இந்த வேடன் காற்றுமழையில் அடிபட்டுக் களைத்துவிழும்போது, இந்த மரத்திலிருக்கும் தெய்வமே, உன்னைச் சரணமடைந்தேனென்றும், இந்தமரத்தில் வாசம்செய்யும் புறுக்க ளின்மேல் இச்சைகொண்டு என்னுயிர் இழக்கலானேனென்றும் அல றிவிழுந்தான். இவன் நம்மைச் சரணமடைந்தவன். ஆகையால் இவனை இரக்ஷிப்பதே நலமென்று சொல்ல, அதைக்கேட்டு ஆண் சொல்லுகி றது: ஓ பெண்கள் நாயகமே! என் உயிரினும் அருமையான வளே, மரத்திலிருக்கும் தெய்வமே தனக்குச் சரணமென்று சொன்னா னேயல்லது நம்மை இவன் சரணமடையவில்லையே. இவனை நாம் கொல்லுவதில் என்னபாவம். நீயேன் தடைசெய்கிறாயென்று கேட்க, பெண்புறு மறுபடியும் சொல்லுகிறது: நம்முடைய வீட்டில் ஒரு வன் சாதாரணமாய் வந்தாலும், ஆபத்துக்களை அடைந்துவந்தாலும், பகைவர் திருடர் முதலானவர்களுடைய உபத்திரவங்களாலே வரும் கஷ்டத்தைச் சகிக்கமாட்டாமல் பயந்து சரணமென்றுவந்தாலும் அ ப்படிப்பட்டவர்கள் எல்லோரும் சரணாகதர்களென்று வேதங்களில் சொல்லியிருக்கிறதாக வேதியர்களால் நான் பலவாறு கேள்விப்பட் டிருக்கிறேன். இப்பொழுது நாம் வாசம்செய்யும் மரத்தடியில்

நம்மையேகருதி இவன் வந்திருக்கிறபடியால் இவனும் சரணாகதனே யாம். தான் வாசம்செய்யும் வீட்டிற்கு வரும் விருந்தாளியை எவனாயிருந்தபோதிலும் ஆதரித்தே அனுப்பவேண்டுமென்று நீதி நூல்களில் சொல்லியிருப்பதினால் இவன் நமக்குப் பகைவனாயிருந் தாலும், இவனை நாம் களைதெளியச்செய்து பூசித்து அனுப்புவதே இல்லறம் நடத்துகிற நமக்குச் சரியான தருமம்; தம்முடைய பிராணன்களைக் கொடுத்தும், திரவியசகாயம் செய்தும், சரீரத்தினால் கஷ்டப்பட்டும், சொல்லுபகாரத்தினால் யோசனைமுதலானவை சொல்லிக்கொடுத்தும் தம்மைச் சரணமடைந்தோரைக் காப்பது பெரியோர்களுடைய குணம். இப்பொழுது நினைவுதப்பிக்கிடக்கிற இந்த வேடனுக்கு உயிருண்டாகும்படிசெய்ய என்ன உபாயமென்றால், நம்முடைய கூட்டில் நல்ல சருகுகளும், செத்தைகளும் சுள்ளிகளும், வெகுவாயிருக்கின்றன. அவைகளில் கொஞ்சம் நாமிருவரும் எடுத்துக்கொண்டுவந்து இவன் அருகில்வைத்து, அதோ தூரத்தில் மலையுச்சியில் எரிகிற மூங்கிற்காட்டிலிருந்து தீயுடன் ஒரு மூங்கிலைக் கொண்டுவந்து இந்தச் செத்தையின்மேல் வைத்து நம்முடைய சிறகுகளினால் விசிறிக் காற்றுண்டுபண்ணித் தீயைவிருத்தி செய்து வேடன் சரீரத்தில் குளிர்வாங்கிச் சூடுறைக்கச் செய்தால், இவன் உயிருண்டாய்ச் சுகமாக எழுந்திருப்பான் என்று சொல்லிற்று. அதைக்கேட்டு ஆண்புறாவானது, புத்தியிற் சிறந்த பெண்ணரசே, நீயும் நானும் காட்டில் பிறந்த புறாக்கள்; நீ இவ்வளவு தர்மம் சொல்லுகிறாய். இவனோ மனிதன், நாமோ பறவைகள்; இவன் நமக்குச் சத்துரு; நாம் ஈனஜாதியில் பிறந்தவர்கள்; இவன் உயர்ந்த ஜாதியில் பிறந்தவன். இவனை இரக்ஷிப்பதினால் நமக்குப் புண்ணியம் என்ன? ஈனஜாதியில் பிறந்த நமக்குச் சரியானவர்களைக் காப்பாற்றினால் நீ சொல்லும் சுகிருதம் உண்டாகும்; இவனை இரக்ஷிக்க நமக்கு அதிகாரமில்லையாகையால் இவன் நமக்குச் சரணாகதனல்லனென்று சொல்ல, பெண்புறாவானது, ஓ நாயகனே, உயர்ந்தவனாயிருந்தாலும் தாழ்ந்தவனாயிருந்தாலும், பசுவாயிருந்தாலும் பக்ஷியாயிருந்தாலும் ஆபத்தை அடைந்தவர்களை இரக்ஷிப்பது உத்தமமான தர்மமென்றும், இம்மூன்றுலகிலுமிருக்கும் தர்மிஷ்டர்கள் செய்யும் தர்மங்களெல்லாம் சரணாகதனுக்கு அபயப்பிரதானம் செய்வதினால் உண்டாகும் சுகிர்தத்திற்குப் பதினாறிலொருபங்குக்கும் சரியாகமாட்டாதென்றும் அருந்தவமுனிவர்களின் கூட்டத்தில் ஏற்பாடாயிருக்கிறது. இந்தத் தருமத்தை நான் பெரியோர்கள்சொல்ல நன்றாகக்கேட்டிருக்கிறேன். மிருகண்டுமாமுனிவருடைய ஆச்சிரமத்தில் ஸனகர், ஸநந்தனர், நாரதர், வசிட்டர்முதலான அநேகமாயிரம் மஹாமுனிவர் தர்மகதாப்பிரசங்கம் செய்யுங்காலத்தில், ஸனகமுனீந்திரர் ரிஷிகளுக்கு எலியும் யானையும் ஒன்றையொன்று ஆபத்தினின்று காப்பாற்றின ஒரு தருமகதை சொல்லியிருக்கிறார். அப்பொழுது நானும் என்னு

டைய தந்தைதாய்முதலானவர்களும் அவ்விடத்திலிருந்த ஒருவிரு க்ஷத்தினின்று அக்கதையைக் கேட்டோம். தங்களுடைய ஆபத்தை நிவர்த்திசெய்துகொள்ள உயர்ந்தவரும் தாழ்ந்தவர்களைச் சரணம டைவது சாதாரணமென்று அவர் அருளிச்செய்தார். அதெப்படியெ ன்று மிருகண்டுமாமுனி வினவ, ஸனகர் அதை விவரமாய் எடுத்துக் கூறினர். அவர் சொன்ன கதையை நான் உமக்கு இப்பொழுது சொ ல்லுகிறேன் கேளும் என் நாயகனே என்று சொல்ல ஆரம்பித்தது.

தெளிவான தண்ணீர் பெருகியோடும் புண்ணிய நதியான நர்ம தையாற்றின் கரையில் பெருங்காடுகளுண்டு. இருண்ட தோப்புக ளும், நாநாவிதமான பரிமளமுள்ள புஷ்பங்களையுடைய செடிக ளும் கொடிகளும் நிறைந்தும், செங்கழுநீர் தாமரைமுதலான புஷ் பங்களால் பூரணமான ஓடைகளோடுகூடி அனேகவிதமான அன் னம் சக்கரவாகம் காரண்டவம் கிளி குயில் மயில்முதலான பறவைகளுடைய சத்தத்தினாலும், புஷ்பங்களிலுள்ள தேனைக்குடி த்து மயக்கத்தினால் சப்திக்கிற வண்டுகளின் ரீங்காரங்களினாலும் மிகவும் அழகாயுமிருக்கின்ற அந்த நர்மதாநதீதீர வனங்களில் புலி, கரடி, சிங்கம், யானை, மான், சவரி, கஸ்தூரிமுதலாகிய மிருகங்கள் சூழ்ந்த பல உன்னதமான மலைகள் உண்டு. இப்படிப் பட்ட நர்மதையாற்றின் கரையோரத்தில் வெகுகாலமாகப் பெரிய அரசமரம் ஒன்று இருந்தது. அதின் வேரின்கீழ் இருக்கும் வளை யில் சுமுகனென்றும் சுநேத்திரியென்றும் ஆணும் பெண்ணுமாய் இரண்டு எலிகள் அநேக சந்தானங்களுடன் வாசம்செய்துகொண் டிருந்தன. ஒரு காலவிசேஷத்திலே பெருமழைபெய்து அந்நதியில், சுழல் நுரை அலைமுதலானவைகளுடன் வெகுவேகமாய் வெள் ளம் கரைபுரண்டுவந்தது. அப்போது எலிகள் வாசம்செய்த வளை யில் ஜலம் அதிகமாய்ப்போனதினால், அங்கே இருக்க இடமில் லாமல் வளையைவிட்டுக் குஞ்சுகளோடு வெளியேசென்று மரத்தி னடிக்கிளை வங்கில் உட்கார்ந்து, இரண்டெலிகளும் வெள்ளம் ஓடு கிற வேடிக்கையைப்பார்த்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டு இருந் தன. அப்போது சுநேத்திரி என்னும் பெண்ணெலி தன் நாயகனை ப்பார்த்துச் சொல்லுகிறது: ஓ நாயகனே, இந்த ஆற்றில் ஜலமில் லாமலிருக்கும் காலத்தில் தினந்தோறும் இக்கரையிலிருந்து அக்க ரைக்குப்போய் அவ்விடத்தில் விளைந்திருக்கும் நெற் கதிர்களைக் கறித் துக்கொண்டு அதிசீக்கிரத்தில் வருவீரே. இப்போது இந்தப் பூரணப்பிரவாஹத்தில் போய்வர உம்மால்கூடுமோ வென்று கேட்டது. அதற்குச் சுமுகனென்கிற ஆணெலி, இந்த வெள்ளம் எவ்வளவாய் இருந்தாலும் எனக்கு இலக்ஷ்யம் இல்லை என்று சொல்லிற்று. அது கேட்டுப் பெண்ணெலி ஏதேது, உம்மால் சாத்தியப்படாது; வீணான வார்த்தை என் என்முன் சொல்லுகிறீரென்று கூற, ஆணெலி, ஒரு நிமிஷத்தில் நான் போய் வருவேனென்று சொல்லிப்போகப்

புறப்பட்டது. அதுகண்டு பெண்எலி பயந்து, நான் தெரியாமல் பரிஹாஸமாகச் சொன்னேன்; அதை நீர் நிஜமென்று நம்பி ஸாஹஸம் செய்யவேண்டாம். இன்றைக்கு ஆகாரம் இல்லாமல் போனாலும் போகிறது; நீர் ஸாஹஸமான இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யவேண்டாமென்றது. ஆயினும் அதன் பேச்சைக் கேளாமல் ஆண்எலி மரப்பொந்திலிருந்து போய்வருகிறேனென்று புறப்பட்டு வெள்ளத்தில் குதித்துச் சிறிதுதூரம்போய் ஓர் பெரியசுழலில் அகப்பட்டு ஒருதரம் உள்ளேமுழுகி வெளியே கிளம்பிற்று; ஆயினும் மறுபடி வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோயிற்று. பெண்எலி அதை மரத்திலிருந்து பார்த்து மனங்கலங்கி அம்மரத்திலிருந்து குதித்து ஜலக்கரையோரமாகவே கணவனைக் கூப்பிட்டுக்கொண்டு ஓடிற்று, தைரியத்தினால் ஆபத்தை ஜயிக்கவேண்டும் என்றெண்ணிக் கொஞ்சதூரம்வரையில் ஓடிற்று.

இப்படிப் போகும் சமயத்தில், பத்திரன் என்கிற ஒரு கஜேந்திரன் அநேகம் யானைப் பேடுகளுடன்கூடி அந்நதியில் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது. அதுகண்டு சுநேத்திரி அந்த கஜேந்திரனைச் சரணமடைந்து, மகானுபாவா, ஓ கஜராஜனே, உம்மை நான் குடும்பத்தோடு சரணமாக அடைந்திருக்கிறேன்; என்னுடைய பிராணநாயகனை வெள்ளத்திலிருந்து நீர் கரையேற்றி எனக்கு மாங்கலியப்பிச்சை கொடுக்கவேண்டுமென்று கதறி அழுதுகேட்டது. அந்த எலியைப் பார்த்து கஜேந்திரனும், எங்கே உன்னுடைய நாயகன், வெள்ளத்தில் அடித்துப்போகிறதென்று சொன்னாயே, அவனைக் காட்டென்று கேட்க, அப்போது வெள்ளத்தின் வேகத்தில் அகப்படாமல் சுழலில் அகப்பட்டுக்கொண்டிருந்த தன்னுடைய நாயகனை அதோ இருக்கிறாரென்று காண்பிக்க, யானையானது ஜலத்தில் இறங்கித் தன்னுடைய துதிக்கையினால் ஜலத்தோடு அந்த எலியை எடுத்துக் கரைமேல் கொண்டுவந்து மேடான இடத்தில் விட்டது. ஒரு யாமகாலம் எலி மூர்ச்சையாயிருந்து வெயிலில் உலர்ந்தபின் நினைவு வந்து அது கஜேந்திரனைப் பார்த்துச் சொல்லுகிறது: ஓ கஜேந்திரனே, மிகவும் அற்பனான என்னிடத்தில் இவ்வளவு தயவு உண்டாகி, நீர் என்னுடைய ஆபத்தை நிவர்த்திசெய்தது நான் செய்த புண்ணியமன்று, என்னுடைய பெரியோர் செய்தபுண்ணியமென்றே எண்ணுகிறேன்; எப்பொழுதும் பெரியோர்களுக்குச் சிறியோர்களைக் காப்பதே சுபாவம். நாங்கள் குடும்பத்தோடு உங்களுக்கு அடிமையாக இருக்கிறோம், எங்களை நீங்கள் எப்போதும் காத்து ரக்ஷிக்கவேண்டுமென்று சொல்லிற்று. கஜேந்திரனும் அந்த ஆண் எலி பெண்எலி அவற்றின் குழந்தைகள் எல்லாவற்றையும் தன்னுடைய துதிக்கையால் எடுத்துத் தந்தத்தின்பேரில் வரிசையாக வைத்துக்கொண்டு ஆற்றங்கரையோரத்தைவிட்டு மலையின் தாழ்வரையில் இருக்கும் ஆச்சாமரத்தடியில் கொண்டுபோய்விட்டு அவை

களுக்கு மாங்கனியும், கொய்யா, திராக்ஷைமுதலான பழங்களும் கொண்டுவந்து கொடுத்துத் திருப்திசெய்து வைத்தது. அந்த எலிகளும் அந்தமாத்தடியில் வளை தோண்டி அதிலே சுகமாகவிருந்தன.

அப்பொழுது அவைகள் அந்த கஜேந்திரனை நோக்கி, இப்படிப் பட்ட மகோபகாரம் செய்த உமக்கு நாங்கள் என்ன பிரதிஉபகாரம் செய்யப்போகிறோம்; ஆனபோதிலும் எங்களால் செய்யக்கூடிய காரியங்களை உத்தரவுசெய்தால் நாங்கள் செய்கிறோம்; ஏழையான எங்களிடத்தில் எப்போதும் கடாக்ஷம் இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம என்று சொல்ல, அந்தக் கஜேந்திரனும் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி அந்த எலிகளோடு சிநேகம் செய்துகொண்டு, தினந்தோறும் தான் வெளியேபோய்வரும்போது கம்பு சோளம் முதலியவற்றின் கதிர்களைக் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தது. எலிகளும் கஜேந்திரன் வரும்போது வெகு அழகாய்க் கூப்பிட்டுக் கஜேந்திரன்மேல் ஏறித் தங்கள் கால் நகங்களால் சொரிந்து சந்தோஷிக்கச் செய்தன. இப்படி வெகுகாலம் யானையும் எலிகளும் சுகமாய் இருந்தன. கேளும் நாயகனே; இவ்வாறிருக்கையில் விதர்ப்பதேசத்தில் அரசனுடைய பட்டத்துயானை மரணமடைந்தது; அப்போது அரசன் பட்டத்துயானைக்கு யோக்கியமாயிருக்கும் யானைகளைக் காடுகளில் போய்த் தேடும்படி மனிதர்களை அனுப்பினன். அவர்கள் அப்படியே தேடிக்கொண்டு வந்து இந்த நர்மதாதீரத்தில் இருக்கும் மலையடிவாரத்திலே சஞ்சரித்துக்கொண்டிருந்த கஜராஜனைப் பார்த்து அதைப் பிடிப்பதற்காகக் காட்டில் பெரிதாய் ஆழமும் அகலமுமுள்ள ஒரு பள்ளத்தை வெட்டி, அதில் அனேகம் பக்கற்கால்களை நட்டு மேலே பந்தல்போட்டு மூங்கிற்பாய்களை விரித்து மண்களைப்போட்டு, சோளங்களை விதைத்துப் பயிராக்கிப் பத்திரமாகக் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள். இப்படிக்கு இருக்கையில் அந்தக் கஜேந்திரன் பசியினுல் இராத்திரியில் தன்னுடைய இனத்தோடு சோளக்கொல்லையில் மேயவந்தது. அப்படி மேய்ந்துகொண்டிருக்கும்போது அது அந்தப் படுகுழியில் தன் இனங்களோடு விழுந்துவிட்டது. பிறகு அது கரையேறமாட்டாமல் மிகவுந் தவித்துத் தன்னுடைய பந்துக்களையெல்லாம் கதறிக் கதறிக் கூப்பிட்டது; ஆயினும் அவை இந்த யானையைப் பள்ளத்தினின்றும் கரையேற்றச் சக்தியில்லாமல் அதனிடத்திலுள்ள ஆசையையொழித்து விசனத்தோடு போய்விட்டன. அங்கேயே மூன்றுமாசம் ஆகாரமில்லாமல் உடம்பு இளைத்துக் கூப்பிடவும் சக்தியில்லாமல் அந்தக் கஜேந்திரன் மிகவும் வருத்தமுற்றிருந்தது. இப்படி அந்த யானையினுடைய இனங்களும் அதன் சமீபத்தில் போகப் பயந்து போய்விட்டபோது அந்தக் கஜேந்திரனுடைய பத்தினியானது கணவனை நோக்கி, உம்மால் பலவாறு பேருதவிபெற்ற பந்துக்கள் நம்மைக் காப்பாற்றுமல் கைவிட்டார்களாயினும், நேசர்கள் இவ்வாறு

கைவிடார்கள்; ஆபத்துக்குத் தோழனென்கிறார்களல்லவா? ஆதலின் உமது பரமமித்திரனான சுமுகனை இந்தச் சமயத்தில் நினைத்தால் நமது துன்பம் நீங்கத் தடையிராதென்று சொல்லியது. அது கேட்டுக் கஜேந்திரன் நீ சொல்வது சரிதானென்று தன் உயிர்த்தோழனான எலியை மனதில் நினைத்துக் கூவியது.

இதற்குள் அந்த எலி செய்த காரியமென்னவென்கிறீர்களோ? நமது நண்பனான கஜராஜன் நாள்தோறும் நாம் இருக்குமிடம் வந்து விசாரித்து நமக்கு இனிப்பான உணவுகளைக் கொடுத்து அன்புடன் நம்மோடு விளையாடிக்கொண்டிருக்குமே; இப்பொழுது நாலைந்து மாதகாலமாய் அது இந்தப்பக்கம் எட்டிப்பார்க்கவேயில்லையே; அதற்கு என்ன கோபமோ, நாம் என்ன அபகாரம் செய்தோமோ என்று எண்ணி விசாரமுற்று, அந்த யானையைத் தேடிக்கொண்டு புறப்பட்டு அது சஞ்சரிக்கும் காடுகளெல்லாம் அலைந்து திரிந்தது. எங்கும் அதைக் காணாமல் கடைசியாய் இந்தப் படுகுழியண்டை வந்து சேர்ந்தது. அங்கே அந்த யானையினிருப்பைப் பார்த்து மிக்க விசனமடைந்து, தோழனே, நாலைந்து மாதமாய் நான் உம்மைத் தேடித் திரிகிறேனே; நீர் இப்படிப் படுகுழியில் விழுந்து கிடக்கிற செய்தி எனக்குத் தெரியாமல் போய்விட்டது. இப்பொழுது என்னாலாகவேண்டிய காரியமென்னவோ அதைக் கட்டளையிடவேண்டுமென்று கேட்க, கஜேந்திரன், இப்பொழுது நீ செய்யக்கூடிய காரியம் ஒன்றுமில்லை; மகா பலசாலிகளான யானைகள் என்னை இந்தப் படுகுழியினின்றும் கரையேற்றமாட்டாமல் பயந்து ஓடிப்போய்விட்டன; நீ இந்த ஆபத்துவேளையில் வந்து என்னை இவ்வளவு பிரியமாக விசாரித்தாயே, அதுவே எனக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. இன்னம் இரண்டு மூன்றுதினத்தில் இராஜாவினுடைய தூதர்கள் பட்டணத்தில் இருக்கும் யானைகளை ஓட்டிக்கொண்டு வந்து என்னைப் பாசங்களால் கட்டி அவைகளோடு பிணைத்து என்னைப் பட்டணத்துக்குக் கொண்டுபோவதாகச் சொல்லிப் போயிருக்கிறார்கள். அவர்கள் வருகிறவரையில் நீ இந்தக் கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பாயானால் அதுதான் எனக்குப் பெரிய உபகாரமென்று சொல்லிற்று. அதுகேட்டுச் சுமுகன் ஓ கஜேந்திரனே, நீர் பயப்படவேண்டாம்; உம்மைக் கரையேற்றுகிற விஷயத்தில் கூடியவரையில் பிரயத்தனப்படுகிறேன்; என்னுடைய எத்தனம் பலியாமல் போகமாட்டாது என்று சொல்லி, உடனே போய்த் தன்னுடைய பெண்ஜாதி பிள்ளை முதலிய குடும்பங்களை அதி சீக்கிரத்தில் அழைத்துவந்தது. அந்தக் கஜேந்திரனையும் அதனுடைய கூட்டங்களையும் பார்த்து வந்த எலிகளெல்லாம் மிகவும் விசனமடைந்தன. அப்போது சுமுகன், ஓ பிள்ளைகளே, இந்தச் சமயம் கஜராஜனை இரக்ஷிக்க வேண்டிய காரியத்தில் சீக்கிரம் பிரயத்தனஞ்செய்யவேண்டும்; விசனத்துக்கு இது காலமன்று. வெகுநாளாய் இரையில்லாமல் இளைத்

துப்போயிருக்கிற கஜராஜனுக்கும் அதன் இனத்தோர்க்கும் பசிதணியும்படி சோளப்பயிர்களை அடியில் கறித்து ஒவ்வொன்ருய் இழுத்து நீங்கள் படுகுழியில் போடுங்கள்; அவைகளைப் புசித்துப் பசிதணியட்டும்; இதோ இவ்விடத்தில் தண்ணீர் ஓடுகிற வாய்க்காலின் மடையை உடைத்து ஜலத்தை இந்தப்பள்ளத்திற்கு வந்துசேரும்படி நான் செய்கிறேன் என்று சொல்லிற்று. அப்படியே அவை சோளக்கதிர்களைக் கடித்துக்கொண்டுபோட்டன. சுமுகன் ஜலத்தையும் கொண்டுவந்துகொடுத்து யானையின் விடாய் தீரச்செய்தது. பின்பு சுமுகன் எலிராஜாவான சொர்ணரோமாவினிடம் சென்று, நமக்கெல்லாம் மித்திரனுன கஜேந்திரன் தன் குடும்பத்துடன் படுகுழியில் விழுந்து ஆறுமாசமாய் ஆகாரம் இல்லாமல் பெரிய ஆபத்தை அடைந்திருக்கிறது; நம்மினத்துக்கு அரசான தாங்கள்நம்மவர் அனைவரையும் கூட்டிக்கொண்டு சீக்கிரம் சென்று படுகுழியிலிருக்கிற கஜேந்திரனைக் கரையேற்றுவது தங்களுக்குப் பரமமான தர்மமும் கீர்த்தியுமாகும். எனக்கு முன் நேர்ந்த ஆபத்தை அந்த யானைதான் தீர்த்தது; அது தங்களுக்கே செய்த உபகாரமாக எண்ணி இப்போது அந்தக் கஜராஜனைக் கரையேற்றுவிக்கப் பிரார்த்திக்கிறேன் என்று சொல்லிற்று. அந்த வசனத்தைக் கேட்ட எலிராஜன், அப்படியே அந்த உபகாரிக்கு வந்த கஷ்டத்தை இன்றையிராத்திரிக்குள் நாம் தீர்த்துவிடுவோம் என்று சொல்லித் தன் சேனுபலத்துடனே சென்று, படுகுழியின் கரையில் மலைமேடாய்க் கொட்டியிருக்கும் மண்ணை ஆயிரம் பதினுயிரம் எலிகளைவிட்டுப் பறித்துப் படுகுழியை நிரப்பிவிடச் செய்தது. உடனே கஜேந்திரன் தன்னினத்தோடு கரையேறிச் சினேகிதனுன சுமுகனையும் எலியரசனுன சுவர்ணரோமாவையும் மிகவும்கொண்டாடி, நல்லஉணவுகளைப் புசித்துச் சந்தோஷமாகக் காட்டுக்குள் பிரவேசிக்க எத்தனப்பட்டது. அப்போது இந்திராதி தேவர்கள் ஆகாயத்தில் கூட்டங்கூடிப் பூமாரிபொழிந்து, நன்றியறிதலை இப்படியல்லவோ விளக்க வேண்டும்; உனக்கு உடலும் வலியும் சொல்பமாயிருந்தபோதிலும் சொல்வன்மையினுலும் யுக்திவலிமையினுலும் மாட்சிமைபொருந்திய இந்தக் கஜேந்திரனுக்கு நேர்ந்த விபத்தைத் தீர்த்து இரக்ஷித்தாயல்லவா? பரோபகாரியான உன் ஜன்மமல்லவோ நல்ல ஜன்மம்! உனக்குச் சொர்க்காதிலோகங்கள் இதோ கொடுத்தோம்; நீ வரவேண்டும் என்று விண்ணுலகத்துக்கு அழைக்க, அப்படியே சுமுகனும் அதன் இனத்து மற்ற எலிகளும், கஜேந்திரனுடன் சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்தன என்று கூறினர்.

இப்படி முனிவர்சொன்ன கதையை நான் கேட்டிருக்கிறேன்; ஆகையால் இந்த வேடனை நாம் ஆதரிக்கவேண்டியது நமது கடமையென்று பெண்புரு நற்புத்தி போதனைசெய்தது. அதைக்கேட்டு ஆண்புரு, அப்படியே உன்னிஷ்டப்படி செய்வோமென்று ஆகாயத்தில் எழும்பிப்பறந்து, மாத்தில் தன் கூட்டிலிருந்த சுள்ளி

களையும் சருகுகளையும் கொண்டுவந்து வேடனுடைய சமீபத்தில் அடுக்கி, மலையுச்சியில் எரிந்துகொண்டிருந்த காட்டுத்தீயில் எரிகொம்பொன்று மூக்கினால் கொண்டுவந்து சருகின்மீது வைத்துத் தீமூட்டி, தன்னுடைய இரக்கைகளினால் விசிறி வேடனுக்குச் சூடுறைக்கப் பண்ணிற்று. பண்ணவே, வேடன் புரண்டு எழுந்து முன்னும் பின்னும் தீயில்காய்ச்சக் குளிர்போய்த் திமிர்நீங்கி மெல்ல எழுந்தான். இப்படி நடந்ததையெல்லாம் பார்த்து அந்த வேடன் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கையில், தாம் மூட்டிய தீ அணைந்துவிட்டதை ஆண்புரு கண்டு இன்னும் தன் கூட்டில் அடைத்துவைத்திருக்கிற சுள்ளிகளையெடுத்து வரும்படி எழுந்து பறந்துபோயிற்று. அது அப்புறம்போன சமயம்பார்த்து அந்தக் கிராதகனான வேடன் அருகே தனக்கு உபசாரம்செய்துகொண்டிருந்த பெண்புருவைப்பார்த்து அதைப்பிடித்து அதன் கழுத்தைக் கையால் பிடித்துத்திருகி இறகுகளை ஒடித்துப் பையில்போட்டுச் சுருக்கிட்டான். வெளியே செத்தை சுள்ளிகள் கொண்டுவரப் போன ஆண்புரு விரைவாய்வந்து தீமூட்டி வேடனுக்குக் குளிர்நீங்கச்செய்து, பெண்புரு எங்கேயென்று இங்குமங்கும் பார்த்து, வலைப்பையில் அடைபட்டிருக்கிற விதம் அறியாமல், அதுவும் சுள்ளி சருகுகளை எடுத்துவரப்போயிருக்கலாமென்று நினைத்து இருந்தது. நெடுநேரம் காத்திருந்தும் அது வாராததினால் அதைத்தேடி, மயிலே குயிலே மாடப்புருவே யென்று மனம் நொந்து வாடி, இந்த நடுராத்திரியில் எங்கே அகப்பட்டுக்கொண்டாயோ? வழிதெரியாமல் நின்றாயோ? வருந்தி என்னைத் தேடுகின்றாயோ? என்று வாய்விட்டுக் கதறிப் பேய்போலப் பறந்தது.

அதின் வருத்தத்தைப் பார்த்த வனதேவதைகளும் பறவைகளும் மிருகங்களும் கண்ணீர்விட்டழுதன. அப்பொழுது சிக்கத்தில் அகப்பட்ட பெண்புரு மூர்ச்சைதெளிந்து, தன்னைக் காணாமல் அழுகிற கணவனுடைய குரலைக்கேட்டு, ஓ பிராணநாதனே, நான் உம்மைவிட்டு எங்கும் போகவில்லை; இந்த வேடனுடைய சிக்கத்தில் அகப்பட்டுச் சிறகுகள்முறிந்து இருக்கிறேன்; என்னை நீர் எங்கும்போய்த் தேடவேண்டாம்; எத்தனைநாள் என்னோடு கூடியிருந்தபோதிலும், சுகங்கள் பழமையானவையே யொழியப் புதியது வேறொன்றுமில்லை; ஆறிலும் சாவு நூறிலும் சாவுதானே. மிஞ்சிப்போன காரியத்துக்கு வேறு செய்கை என்ன இருக்கிறது. ஆங்காலமெல்லாம் அன்புடன் வாழ்ந்தோம்; இது போங்காலம். ஏதோ பொல்லாத காலம், சாங்காலம், இதைக்குறித்துச் சஞ்சலப்படவேண்டாம். இதை விலக்கிக்கொள்ளும் வல்லமை நமக்குண்டானால், முன்னோர்களெல்லாம் மடியாதிருப்பார்களே. ஆகையால் வினைப்பகுதியை வெல்ல வல்லவரில்லையென்று மனவுறுதிகொண்டு கூவிச்சொல்லியது.

அதுகேட்டு ஆண்புறு மிகுந்த விசனமடைந்து புலம்பததொடங்கியதுகண்டு பெண்புறு மறுபடியும் சொல்லியதாவது: என் வினைவசத்தால் இந்த வேடன்கையில் கிட்டிக் கக்கத்திலிருக்கும் சிக்கத்தில் அடக்கப்பட்டேன். நான் மிகவுந் தீவினையுடையவள்; என்னை நீர் ஒருபொருட்டாக எண்ணி மனம் நையலாமா? உம்முடைய பேறிவாண்மையை எங்கே போக்கடித்துக்கொண்டீர்! நித்தியாநித்திய வஸ்துவிவேகமிழந்து துன்பம்வந்தவேளையில் மயங்கித் தாபத்திரயப்படலாமா? அப்படிப்படுவதினால் ஏதாவது பயனுண்டாகுமா! இது நமக்கு முன்னும் பின்னும் நடந்திருக்கிறகாரியமே; நாமும் அறிந்திருக்கின்றோமே? போனதுபோக, நின்றவனைக்கும் நிலைதவறுமவிருந்து என்றென்றைக்கும் அழிவில்லாத இன்பத்தைத்தேடும்; என் னுறவைத் துறவாகக்கொள்ளும். இந்த வேடன் பசி எத்தன்மையுடையதோ. சுமங்கலிகளுக்குக் கணவன் காலஞ்செல்லுமுன்னமே மாங்கலியமும் மஞ்சளும் குங்குமமும் அணிந்து காலம்செல்வதே நலமல்லவா? அவ்வாறே போகவேண்டுமென்றிருந்த என் மனோரதம் ஈடேறி இருக்கிறது. வீணாக நான் இறந்துபோகுமுன்னமே என்னை இந்த விருந்தாளியான வேடன் பசிதணியப் புசிக்கக் கொடுத்துவிடும். என்னைத்தவிர இவன் பசியைத் தணிவிக்க வேறொரு பொருளும் உமக்குக் கையிலில்லை. இவ்வுலகத்தில் தோற்றப்படுவனவாகிய நாமரூபமடைந்த வஸ்துக்களெல்லாம் நசிக்கும் பொருளேயல்லது வேறல்ல. இன்னும் பலநாளிருந்தாலும் ஒருநாளிறப்பது நிச்சயம். தூங்குவதுபோலிறப்பு; தூங்கிவிழிப்பதுபோலப் பிறப்பு. இதையறிந்தும் பிரபஞ்சத்தில் பலர் இறப்பைக்கண்டு அஞ்சுகிறார்கள். புத்திமான்கள் அனித்தியமான சரீரத்தினாலேயே நித்தியமான பேரின்பத்தைத் தேடிக்கொள்ளுகிறார்கள். நீர்க்குமிழியைப்போல் பொய்யான இச்சரீரம் போனபோதிலும் புகழுடம்பு பெற்று நாம் வெகுகாலம் வாழ்ந்திருப்போம். செவ்வையாக இறகுமுளையாதிருக்கும் குழந்தைகளுக்கும் ஈசுவரனே இரக்ஷகனென்றெண்ணும்; ஆசாபாசத்தை விட்டுவிடும் என்று சொல்லி அநேகவிதமாகத் தேற்றிற்று.

அதன் தத்துவவார்த்தைகளைக்கேட்டு ஆண்புறுவானது அறிவுடன் தெளிவடைந்து ஸ்திரீயின்மேலிருந்த பந்தத்தைத் தொலைத்து வேடனை நோக்கி, ஓ அரணியவாசி, உமக்கு மிகவும் இளைப்பும் களைப்பும் வந்திருக்கிறதாய் எனக்குத் தோற்றுகின்றது; நான் இந்தப் பக்ஷியுடம்பெடுத்ததற்கு உம் பசியாறச்செய்வதே எனக்குப்போதுமான பிரயோசனமாகக் காணப்படுகிறது. நீர் பசியினாலே வருத்தப்படவேண்டாம்; நானிந்த நெருப்பில்வீழ்ந்து இறக்கிறேன்; என்னையெடுத்துப் புசித்துப் பசியைத்தீர்த்துக்கொள்ளுமென்று சொல்லி ஆகாயத்தில் எழும்பிப் படபடவென்று சிறகையுதறி, ஓ லோகரக்ஷகனாகிய கடவுளே, உன்னுக்கினையினால் நல்வினை தீவினைப்பயனை அனுபவிப்

பதற்காக எடுத்த இந்தத்தேகம் தெய்வத்துக்கொப்பாய்ப் பசித்துவ ந்த இந்த வேடனுக்கு இரையாகக்கடவதென்று மூன்றுவிசைகூவிச் சிறகை ஒடுக்கிக்கொண்டு நெருப்பில் வீழ்ந்திறந்தது. அதைப் பார்த் திருந்த வேடன் மிகவும் அதிசயமடைந்தான். ஆயினும் ஒருபக்கம் வருத்துகிற பசியால் துன்பப்பட்டு, அதை வெந்த பின்னெடுத்துப் புசித்துத் தண்ணீர்குடித்துப் பசிதணிந்தான். பிறகு அவன் தருமத் தை நினைந்து, இந்தத் தாரணியில் பிறந்த ஆத்துமாக்களில் பேரறிவை யுடைய இந்தப் புறு மிகவும் அருமையானது. நான் இதுவரையில் இப்படிப்பட்ட ஜெந்துவைப் பார்த்ததில்லை. ஐயோ! நான் மூர்ச்சை யடைந்து விழுந்து கிடந்த சமயத்தில் உபசரித்து உயிருண்டாக்கிய இந்தப் புறுவின் பெண்சாதியைப் பிடித்து முறித்துச் சிக்கத்தில்கட்டி யது தெரிந்தபின்பும்இது பாவியான என்னைப் பரிவாகப் பூசித்து என் குளிரையும் போக்கித் தன்னுடலையும் எனது பசிக்கு உதவியாக்கிய தன்றோ. இத்தனையுபகாரஞ்செய்யும்படி ஒரு பக்ஷிக்கிருந்த நல்லறிவு நமக்கில்லாமல் போனதென்ன? நாம் மானிடதேகமும் நன்மைதிமை களைப் பகுத்தறிகிற புத்தியுமுடையவராயிருந்தும் பாழான பசிநிமித் தம் இதைப் புசித்துவிட்டோமே; நம்மைப்போல் பாபஜனனமெடுத் தவரில்லையென்று பரிதவித்து, அற்பமான இந்த உயிரை வளர்ப்ப தற்காகவா ஆத்மாக்களை வதைப்பது! அப்படி உயிர்வதை செய்தும் சுகித்தும் களித்தும் என்னபலனைப் பெற்றோம். இந்தக் கொலைத் தொழில் புரிந்து குடும்பத்துடன் கூடிவாழ்ந்த நமது தந்தை, தாய், பந்து முதலியவர்கள் எங்கே? எல்லாரும் இறந்துதானேபோனார் கள். இந்தப் புறுவைப்போலத் தெளிவான மனமுடைய அதிதிகள் வரக் கிடைக்குமோ! ஏதேது, இன்னம் என்னென்ன பாவங்களைச் செய்ய இருக்கிறோமோ தெரியாதென்று சிந்தித்து, பையிலிருக்கிற பெண் புறுவைக் கையிலெடுத்துக்கொண்டு, உன் புருஷனுக்கும் உன க்கும் ஒப்பான புண்ணியவான்களை இவ்வுலகில் யான் எங்கும் கண் டதுமில்லை, கேட்டதுமில்லை; அவரை நினைக்குந்தோறும் எனக்கு மனக்கலக்கமாகிறது. உத்தமரான உன் புருஷனுக்கும் உத்தமியான உனக்கும் நான் துரோகியாய்விட்டேன்; மகாபாவியாய்விட்டேன; ஆவியோ கரைகிறது. ஆனபடியால் அவருடன்கூடிப் பிரியாமல் வாழ்ந்த உன்னைத் தீயிற்சுட்டுக் கொல்லமாட்டேன்; என் பாழான அங்கத்திற்கு இரையாகவொட்டேன். உனக்கு இஷ்டமான இடத் திற்குப் போய்விடு என்று விட்டுவிட்டான்.

வேடன் கையினின்று விடுபட்ட பெண்புறு வேடனைப் பார்த்து, ஐயா நானும் என் புருஷனும் 'இல்லறமல்லது நல்லறமன்று' என் னும் விதியை விரும்பி வாழ்ந்தோம்; எங்களை பொருபொருளாய் எண்ணி நாங்களிருக்கும் வீடு தேடி வந்து நலிந்து மெலிந்து நாவுக்கு ருசிதேடிய நீர் அதிதியாய்விட்டீர். இல்லற தர்மத்தை இச்சி த்தபேர்கள் பரதேசிகளுக்கு அன்னம் படைத்து பிராணனைக்

கேட்பினும் கொடுத்துப் பசியகற்ற வேண்டுமென்று வேதாகம விதியில் சொல்லியிருப்பதினால் என்புருஷன் உமக்கு உணவாயினர். இப்போது நீர் என்னை விடுத்து எங்கேயாகிலும் போய் வாழென்று இசைத்தீர். அன்பனான என் நாதன் நெருப்பில் விழுந்தபோதே என்னாவி போய்விட்டது; என்னன்பன் நீங்கியபோதே ஆசையும் அலங்காரமும் போய்விட்டன; கொண்டவன் குலைந்தபோதே என் கொண்டையும் குலைந்தது. உயிர்போய் உடலிருப்பதினால் பயனென்ன? என்னைவிட்டு ஒருநாளும் பிரியாத என் கணவனோடென்னையும் சேர்ப்பிப்பீராகில் உமக்கு விசேஷமான புண்ணியமுண்டு. என்னாயகன் அதிதியாகிய உமக்கு ஆத்மதிருப்திபண்ணிவைத்தார். நானும் ஒத்துநடந்தால்மாத்திரம் அவர் செய்த உபகாரம் பயன்படும். நான் அவரிஷ்டம்போல் நடந்தால்தான் இதுவரையில் நாங்கள் செய்துவாழ்ந்த இல்லறவாழ்வும் விரதமும் தானதருமமும் சபலமாகும்; எனக்கும் நற்கதியுண்டு. இல்லாவிடின் அவரங்கும் நானிங்கும் அலைந்துதிரிந்து நரகத்தில் வீழ்வோம். ஆதலால் என் காதலன் உம்மைப்போலொத்த நல்லோருக்குப் பசியாற்றி வருத்தப்பட்டாரென்கிற பேர்வராமல் என்னையும் கூட அனுப்பிவிடும். ஸ்திரீகளுக்குப் புருஷனைவிடத் தெய்வம் வேறில்லை, விரதமில்லை, நோன்பில்லை, கோவில்குளமில்லை, மஞ்சளில்லை, மாலையில்லை, வாசனையில்லை; ஆடையாபரண முதலியசிறப்பும் புருஷனேயன்றி வேறொன்று மல்லவென்று இந்தத் தருமங்களை அருமையாய்ப் போதித்து, இதனது உண்மையைத் தெரிவித்த பேர்களும் தெரிந்து நடந்த உத்தம ஸ்திரீகளும் யமயாதனையில்லாமல் இகபரசாதனத்தை என்றும் பெறுவார்கள். ஆனதால் நீர் என்னைப் பக்ஷிக்க ஆசைப்பட்டுப் பிடித்த இச்சைதீரப் புசிக்கக்கடவீர். என்கணவனுடன் நானும் போய்ச்சேருகிறேனென்றுசொல்லி ஓ, திக்குத் தேவதைகளே! வாயுபகவானே! சூரியபகவானே! வருணராஜனே! மஹா விஷ்ணுவே! கைலாசபதியே! பிரமதேவனே! உங்களை நான் சரணமாக அடைகிறேன். என்னுடைய குழந்தைகளைக் காத்து இரக்ஷிக்கவேண்டும் என்று சொல்லிப் பதியாகிய ஆண்புறாவை மனதில் நினைத்து நாராயணனை நாவினால் துதிசெய்துகொண்டு உயரவெழும்பித் தன் நாயகனிறந்த நெருப்பிலேயே தானும் விழுந்து பிராணனைவிட்டது.

இவ்விரண்டு பறவைகளின் பக்ஷங்களும் நெருப்பில் பொசுங்கும்பொழுது மேன்மையான சாம்பிராணி சந்தனம் அகருமுதலியவைகளின் வாசனைபோல அதினின்றும் நாற்றிசையிலும் பரிமளம் வீசிற்று. இவ்விதம் வாசனைவீசுகிறதை வேடனும்பார்த்து ஆச்சரியப்பட்டு மனதில் விசனப்பட்டு, அதனுடைய பிரார்த்தனையைத் தள்ளாமல் தான் எடுத்துப் புசித்துத் திருப்தியடைந்தான். பெண்புறா அக்கினியில் விழும்போது தன்னால் கூடியவரையில் உரத்தகுர

லோடு தேவதைகளின் பெயர்களைக் கூப்பிட்ட சத்தம் அந்தந்த உலகத்திலிருக்கும் தேவதைகளுக்குக் காதில் சுறுக்கென்றுகேட்டு, வாகனத்தின்மீதேறி அவர்கள் பக்ஷிகள் இறந்த இடம்வந்து சேர்ந்தார்கள்.

உடனே அப்புருக்களிரண்டும் திவ்யதேகம்பெற்றுத் தேவ விமானத்திலுற்றன. தேவதுந்துபி முழங்கத் தேவர்கூட்டம் நெருங்க, அரம்பை ஊர்வசி மேனகை திலோத்தமைமுதலிய அநேகம் அப்ஸரஸ்திரீகள் நடனம்புரிய, தேவரிஷிகளும் அவர்களுடைய தர்மபத்தினிகளும் ஆலவட்டம், சாமரம், குடை, கொடி, பூரணகும்பம், மாணிக்கதீபம் முதலிய உபசாரங்கள் செய்துவர, சப்தரிஷிகள், அஷ்டவசுக்கள், திக்குப்பாலகர், ருத்திரகணங்கள், பூதகணங்கள், தேவகணங்கள், இராக்ஷதகணங்கள் முதலிய பேர்களெல்லாம் ஜெயஜெய வென்றுகொண்டாடினார்கள். அப்போது இலக்ஷ்மி பார்வதி சரசுவதிமூவர்களும் பெண்புருவினிடம் சென்று தேவஸ்திரீரூபம் வரும்படி அனுக்கிரகம்செய்து, உத்தமமான ஆடை ஆபரணங்களாலும் புஷ்பசந்தனங்களாலும் அலங்கரித்து, உன்னைப்போல் சத்துருவைக் கூடக் காத்துரக்ஷிக்கும்படி எங்கள் கணவனுக்கு நாங்கள் சொல்லாமலிருப்பதனால் நீ எங்களைவிட மிகவும் மேலானவள் என்று சொல்லி, மகளே, முத்தே, கண்மணியே, நவரத்தினமே என்று மூவரும் கட்டிக்கொண்டு பரமாநந்தமடைந்தார்கள். பிறகு பிரமன் விஷ்ணு சிவன் முதலியபேர்கள் ஆண்புருவினிடம்சென்று அதற்குத் தங்கம் போன்ற தேவசரீரம் வரச்செய்து, பீதாம்பரங்கள் முத்துமாலை மோகனமாலைமுதலிய ஆபரணங்களால் அலங்கரித்துச் சொல்லுகிறார்கள்:

நீ பூலோகத்தில் தாழ்மையான பக்ஷிஜன்மத்தை யடைந்திருந்தபோதிலும், உனக்கு ஜன்ம சத்துருவும் உன் மனைவியை அபகரித்தவனுமாகிய வேடன் விஷயத்தில் நீ செய்த கருணையை என்னென்று சொல்வோம்; உன்னுடைய தர்மசிந்தனையினாலும் தயாளகுணத்தினாலும் நாங்கள் ஜயிக்கப்பட்டோம். எங்களுக்கு உன்னைப்போல் பகைவனிடத்தில் இப்படிப்பட்ட தயவு வருவதில்லையேயென்று மிகவும் பரிதாபப்படுகிறோம். ஆகையால் உனக்கு நாங்கள் நீ கேட்ட வரங்களைத் தருகிறோம் என்று சொன்னார்கள். அந்த வார்த்தையைக் கேட்டு அப்புருக்களிரண்டும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து இருகைகளையும் சிரமேற்குவித்து, ஆண்டவர்களே, தமது பாதாரவிந்தம் சேர்வதுதவிர எங்களுக்கு வேறுவரம் வேண்டுவதில்லை; எங்களை அடுத்தவனான இந்தவேடனுக்கும் நற்கதிதந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, சகல தேவர்களும் அதுகேட்டு ஆச்சரியம் ஆச்சரியமென்று அவைகளின் நற்குணத்தைக்கண்டு மிகவும் கொண்டாடினார்கள்.

அப்பொழுது பிரமதேவர், அந்த வேடன் மகா பாவியாயிருந்த போதிலும் உங்களுடைய சகவாசம் அவனுக்கு நேர்ந்ததினாலும், அவனும் நற்கதியையடையவேண்டுமென்று நீங்கள் கேட்பதினாலும், இனி அவன் பாவச்செயலில் பிரவேசியாமலிருக்கும்படியாகவும், இந்தத் தேகம் போனபின்பு அவனுக்கு சுவர்க்கலோகம் கிடைக்கும்படியாகவும் வரங்கொடுத்தோமென்றனர். சிவனும் அக்காலத்தில் உங்களுக்கு வேண்டியவரங்களைக் கொடுக்கிறேன், கேளுங்கள் என்று சொல்ல, எங்கள் குழந்தைகளும் எங்களைப்போலத் தேவசரீரமடைந்து எங்களுடன் கூடவே புண்ணியலோகத்துக்கு வரும்படி அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று கேட்க, சிவபெருமானும், உங்களிஷ்டப்படியே உங்கள் குழந்தைகளும் திவ்வியதேகம்பெற்று உங்களுடன் புண்ணியலோகம் சேரக்கடவனவென்று அனுக்கிரகஞ்செய்தார். இச்சமயத்தில் சூரியனும் கீழ்த்திசையில் உதிக்க, கூட்டிலிருந்த குஞ்சுகள் கண்விழித்துத் தாய் தந்தைகளைக் காணோமேயென்று கூவ, அசுவனிதேவதைகள் குழந்தைகளை எடுத்துவந்து பிரமதேவன்சமீபத்தில் விட்டனர். அக்காலத்தில் பிரமன் தன் கையிலிருந்த கமண்டலுவின் தீர்த்தத்தைத் தெளித்தார்; அக்குஞ்சுகளுக்கு இருந்த புறுவின் சரீரம்போய்த் தேவகுமார சரீரம்வந்து தாய்தந்தையர்களுடன் சேர்ந்தன. இவ்வளவு சம்பிரமத்துடன் பெண்சாதி புருஷனாக மனமொத்துவாழ்ந்த புறுவிரண்டையும் அதன் குஞ்சுகளையும் மஹாவிஷ்ணு தம் உலகத்துக்கு அழைத்துப்போனார். சகல தேவர்களும் ரிஷிகளும் இந்த விந்தையைக்கண்டு மகிழ்ந்து அவரவர் தங்கள் தங்களுடைய லோகம்போய்ச் சேர்ந்தார்கள்.

அப்பொழுது முனிவர்கள், பக்ஷியாயிருந்தபோதிலும் பெரியோர்களுடைய சகவாசத்தாலல்லவோ இவைகள் இவ்வளவு மேன்மையான பதவியை அடைந்தன. எப்போதும் பெரியோர்களுடன் சகவாசம்செய்பவர் மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் சகல சுகங்களையும் அடைவார்கள் என்று சொல்லிச் சந்தோஷத்துடன் தத்தமிடங்களுக்குச் சென்றார்கள்.

இந்த வைபவங்களைக்கண்ட வேடன் மதிமருண்டு மண்மேற்புரண்டு, ஐயையோ! இவ்வாறாகிய மகாபுருஷர்களுக்குத் துரோகியானேனே, கொலைபாதகனானேனே, பாவியாய்ப்போனேனே என்று மூர்ச்சையாய்ப் பூமியில் வீழ்ந்து பின்னர் தெளிந்து, 'நன்மைசெய்தோர் நலம்பெறுவர், தீமைசெய்தோர் தீமைபற்றி நலிவர்' என்னும் பழமொழிக்கிணங்க, பிராணனிடத்தில் ஆசையையும் தேகாபிமானத்தையும் போக்கிப் பரிந்து நமக்கு விருந்தாக இருந்த புறுக்களிரண்டும் அவைகளின் குஞ்சுகளோடு தெய்வதேகம் பெற்றுத் தெய்வலோகமுற்றார்களே. அவர்களைக் கண்டு தரிசிக்கவாவது நமக்குக் கிடைக்காதா! அவர்களைத் தின்றிருக்கிற நமது தேகம் புனிதமாகாதா! நான் பாவியானபோதிலும், நல்லோர்க

ளால் உபசரிக்கப்பட்டு அவர்களையே உணவாகக்கொண்ட என் தேகம் நற்கதிபெறுமலிருக்கப்போமா! இனி இந்தத்தேகம் இருந்தென்ன, இறந்தென்ன? வீடு வாயில் பெண்சாதி பிள்ளைமுதலியவர் யாருக்குயார் சம்பந்தம்? இதென்ன வீண்தொந்தம் என்று விசேஷமான விவேகம் பிறந்து இகத்திறைசையை வெறுத்துப் பரத்திறைசையைக் கருதி, நிலத்தின் குணம் உப்பும் கைப்பும் கசப்பும் மதுரமுமாக நீரை வேறுபடுத்துவதுபோலக் குலத்தின் குணம் நம்மை இக்கூறுக்கிவிட்டது. அநேகம் உயிர்களை வதைகொண்டோம், அவைகளைப் பசிக்கு உட்கொண்டோம், கொலைத்தொழிலுக்கு ஆலயமானேம், பாபத்திற்கு அதிபதியானேம். இன்னமிருந்து வினைமூட்டையைக் கட்டிக்கொண்டு யமபடர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டு இருபத்தெட்டுகோடி நரகத்தில்வீழ்ந்து இம்சைப்படுவதைப்பார்க்கிலும் இப்போதே உயிரைத்தொலைப்பது ஒப்பென்று, களங்கரகிதமாகிய கபோதமிரண்டையும் ஞானேபதேசக் குருவாகக்கொண்டு அப்புறுக்களினது திருவடிகளைத் தியானித்து, ஓ, என் குருசுவாமியாகிய தெய்வமே, நல்லோர்களைக் கண்டாலும் நாவினல் பேசிக்கொண்டாலும் நானிலத்தில் வீழ்ந்தாலும் சரணமடைந்தாலும் தரிசனம்செய்தாலும் நல்லகதி உடனே கிடைக்குமென்று வேதசாஸ்திரங்களில் விளம்பியிருப்பதாய் மேலோர்கள் சொல்லுகின்றார்கள். அவைகளைக் கிளிப்பிள்ளைபோல் நெடுநாளாய்க் கேட்டுக்கொண்டிருந்த நான் உங்களைக்கண்டு தரிசித்தேன், கையால்பிடித்துப் பரிசித்தேன், கடித்துப் புசித்தேன், என்பசியைத் தவிர்த்தேன்; இப்பொழுதும் உங்களைக் கதியென்று நம்பினேன், நம்பினேனென்று பாபரகிதமான பவித்திரமனதையுடையவனாகிக் காட்டுத்தீயில்வீழ்ந்து காலமுடிந்துபோனன். தக்ஷணமே இந்திரவிமானம் வந்தது. நெருப்புக்குப் பக்ஷணமானவேடன் தேவரூபம்பெற்றுத் தேரிலேறிக்கொண்டு சிங்காரங்களுடன் தேவலோகம்புகுந்தான்.

இப்படி பிரதியுபகாரத்தை எதிர்பாராமல் உதவிபுரியும் உத்தமகுணம் பக்ஷி மிருகம் முதலியவைகளிடத்திலும் மிகுதியாயுண்டு. மனிதர்க்கு இந்த உத்தமகுணம் இல்லையென்றால் அவருடைய அஞ்ஞானத்தை நாம் என்னென்று சொல்லலாம்! அப்படிப்பட்டவர்கள் உமிபதருக்கும் ஒப்பாகார்கள்.

"அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னு வுலகம் புகல்."

"மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை."

உலகத்தில் வழங்கும் பானவகைகள்.

நாம் உயிரோடு சுகமாக வாழ்வதற்கு நல்லகாற்றும் உணவும் எப்படியோ அப்படியே திரவப்பொருளான பானவகைகளும் அவசியமானவை. இது விஷயத்தைப்பற்றி இப்பத்திரிகையில் முன்னமே எழுதியிருக்கிறோம். நமது தேகத்தில் உண்டாகும் தாபத்தைத் தணித்து உண்ணும் உணவு நன்றாய் ஜீரணமாவதற்கே நாம் திரவப் பொருளைப் பருகவேண்டும்; நீராவியந்திரத்தைச் செலுத்துவதற்குக் கரியும் தண்ணீரும் தேவையாயிருப்பதுபோலவேதான் நமது தேகமாகிய யந்திரத்தைச் செலுத்துவதற்கும் உணவும் நீரும் தேவையானவை. நமது தேகத்திற்கு உணவுவேண்டுமென்பதைக் குறிப்பிக்கப் பசி உண்டாவதுபோலவே, நீர் வேண்டுமென்பதைக் குறிப்பிக்க நீர்வேட்கை அல்லது தாகம் உண்டாகின்றது. பசி தணிவதற்குப் பலவகை உணவுகளைப் படைத்திருப்பதுபோலவே நீர்வேட்கை தணிவதற்கும் ஏற்ற நல்லபொருளாக இயற்கையாகவே கடவுள் தண்ணீரைப் படைத்திருக்கிறார். ஆயினும் வெகுகாலமாகச் செயற்கைப்பொருள்கள் அநேகம் இவ்வுலகத்தில் எல்லாத்தேசங்களிலும் பானத்திற்கு ஏற்ற பொருளாக வழங்கப்படுகின்றன. அவையாவையெனின்: பலவகைத்தானியம், பழம்முதலியவற்றினின்று இறக்கும் கள்ளாம்.

தானியம் பழம் முதலியவற்றினின்றும் கள்ளிறக்கும் முறையை வெகுகாலமாக இவ்வுலகத்தார் நன்றாய் அறிந்துகொண்டிருக்கின்றனர்; எகிப்துதேசத்தார் பார்லிமுதலிய தானியங்களினின்றும் உவயின் என்னும் ஒருவகைச்சாராயம் இறக்கும் முறையை நெடுங்காலமாகக் கண்டறிந்திருக்கின்றனர். கிரீஸ்தேசத்தவர் வெகுகாலமாக ஒருவகைச்சாராயம் இறக்கிக் குடிக்க வழக்கப்பட்டிருக்கின்றனர். கிரீஸ்தேசத்தவரும் உரோமதேசத்தவரும் எகிப்துதேசத்திலிருந்து பானவகைகள் அழைப்பித்து அதிகமாய்க் குடித்ததாக நெடுங்காலத்திற்கு முன்னமே சரித்திரங்களில் பிரசித்தமானது.

ஆதியில் வெகுவாய்ப் பலதேசங்களிலும் சாராயமிறக்குவதற்கு பார்லி என்னும் தானியமே முதற்கருவியாயிருந்ததெனத் தெரிய வருகின்றது. அமெரிக்காதேசத்தை முதலில் கண்டுபிடித்தபோது அத்தேசத்தவர் சோளத்திலிருந்து கள் இறக்கிக் குடித்துக்கொண்டிருக்கக்கண்டார்களாம். அது அத்தனையாக மயக்கம்தரத்தக்க உக்கிரமான பானமல்லவென்றும், பிறகு வெள்ளைக்காரர்கள் கொண்டு போய்க்காட்டிய கொடிய பானங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் அவ்வளவோடிருப்பார்களாயின், வெறிகொண்டு அத்தனையாக வருந்தார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்காலத்திலேதான் பிரான்சுமுதலிய தேசங்களில் திராட்சை முதலிய பழங்களினின்றும் சாராயமிறக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. இங்கிலாந்தில் முற்காலத்திலே நமதுதேசத்தில் தெங்கு பனை முதலிய மரங்களினின்றும் இறக்குவதுபோலவே அத்தேசத்துப் பலஜாதி மரங்களினின்றும் கள்ளிறக்கிக் காய்ச்சிப் பானமாக உபயோகித்து வந்தனர்.

சீனதேசத்தில் தானியத்தினின்றும் மாமிசத்தினின்றும்கூடச் சாராயம் இறக்குகின்றனர். ஆயின் அது மிகவும் கேடுகெட்டதென்கிறார்கள். இவ்வண்ணமே ஜபான் ருஷியா முதலிய தேசத்தவர்களும் கள்ளிறக்கிக் குடித்துவருகின்றனர். பலவகைப் புற்கள், பூண்டுகள், புஷ்பங்கள், கிழங்குகள்முதலிய வற்றினின்றும் அங்கங்கே அநேகதேசத்தார் மது இறக்கி உண்டு களிப்படைகின்றனர்.

இவ்விதமாய் இக்காலத்தில் இவ்வுலகத்தில் ஏற்பட்டிருக்கின்ற பானவகைகளுக்கு இவ்வளவென்று அளவில்லை. இவையாவும் குணத்தில் ஒருதன்மையானவையல்ல; வெவ்வேறு விதமாகவே இருக்கின்றன. உடம்புக்குச் சில ஆரோக்கியமாயிருக்கின்றனவென்கிறார்கள். சில மிதமான வெறியுண்டாக்குகின்றவை, சில விசேஷமான வெறியுண்டாக்குகின்றவை. சில பானங்கள் நோயாளிகளுக்கு மருந்தாய் உபயோகிக்கத்தக்கவையென வைத்தியர்கள் கண்டறிந்து இருக்கின்றனர். ஆயினும் பொதுவாய்ப் பார்க்குமளவில் இந்தச் சாராயங்களுக்கெல்லாம் மதியைக்கெடுத்து வெறியைக் கொடுக்கும் குணமே மிகுதியாதலால் இவற்றை முற்றும்விலக்கி, குடியனென்கிற இழிசொல்லுக்கு இலக்காகாமல், நம்மைப் பாதுகாப்பதற்காகக் கடவுள் இயற்கையாகவே படைத்திருக்கும் பாலையும் நன்னீரையும் பானத்திற்கு ஏற்றபொருளாய் உபயோகப்படுத்திக்கொள்வது உத்தமமென இக்காலத்தில் அறிவிற்சிறந்த உத்தமர்கள் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

மத்யபானம் செய்வதனால் விளையும் தீமைகள் பல, அவை அனைத்தையும் இங்கே எடுத்துரைக்கப் புகுந்தால் பெருகும். அது தேகசவுக்கியத்தையும் கெடுத்து மதிமயக்கத்தையும் மிகுதியாக விளைவிக்கின்றது. வெறிக்கக்குடித்து ஒன்றுந்தெரியாமல் மதிமயங்கி வீழ்ந்து கிடக்க எத்தனைபேரை நாம் காண்கிறோம். இப்படிப் பணம் செலவுபண்ணி மெய்ம்மறதியை விலைக்குவாங்கிக்கொள்கின்றவர்களை நாம் என்னென்று சொல்லலாம். கட்குடித்தலாகிய இப்பெருங்குற்றத்தையுடையவர்களைநோக்கி நாணம் என்பது நெடுந்தூரம் அப்பால் ஓடிப்போய்விடும். எவ்வளவு ரகசியமானசெய்தி அவர்களுடைய உள்ளத்திலிருந்தாலும் குடித்து வெறித்திருக்குங்காலத்தில் அவை தாமே தற்செயலாய் வெளியே வந்துவிடும். "மானமழிந்தபின் வாழாமை முன்னினிது" ஆகையால், குடியனென்று யாவரும்

இகழ இவ்வாறு மானத்தைப் போக்கடித்துக்கொண்டதன்பிறகு வாழ்கின்றவாழ்வு என்னவாழ்வு! ஆனதுபற்றியே திமை விளைவிக்கத்தக்க பானங்களை முற்றுமொழித்தல் வேண்டுமென்பது தோன்ற நாயனாரும்,

"உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றும்
கட்கா தல் கொண்டொழுகு வார்" எனவும்,

"உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்"

எனவும் கூறியிருக்கின்றார். ஆதலால் கட்குடித்துக் களிப்படைந்தவர்களுக்கு அதனால் அப்பொழுது உண்டாகும் சோர்வு இப்படிப்பட்டதெனப் பின்னால் அவர்களுக்குத் தெரியாதாயினும், தாம் குடிக்காது சாதாரணமாயிருக்கின்ற சமயத்தில் மற்றவர்கள் குடித்து மயங்கி மன்றுடுவதைப்பார்த்து, குடிக்குங்காலத்தில் தமது நிலைமையும் அத்தன்மையதாகத்தானே இருக்குமெனத் தெரிந்துகொள்வார்களானால் அந்த வழக்கத்தை அவர்கள் உடனே ஒழித்துவிடுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இந்தக் கட்குடிவழக்கமொழிந்துபோமாயின் அவர்கள் வீடுகளில் உண்டாகும் காதில்கேட்க வழங்காத வீணாரவாரம் சண்டை சச்சரவுமுதலிய எல்லாம் உடனே வெகுவாய் விலகிப்போம்.

சிறுவர்க்கான கதை.

ராஜகுமாரன் பரிசுபெற்றது. (தொடர்ச்சி.)

அரசன் தன் மகளைக் கண்டுபிடிக்கும்படி தேடிக்கொண்டு செல்லவேண்டுமெனத் திர்மானித்தானென்றும், அந்தச் சமயத்தில் ஒரு நாள் அரண்யத்திலே அந்தக்கன்னிகை இராத்திரி ஆற்றிற்குச்சென்று நீராடிக்கொண்டிருந்தாளென்றும் முன் கூறியிருக்கிறோமே. அவள் அவ்வாற்றங்கரையில் உட்கார்ந்திருந்தவேளையில் சலசலவென்று ஒரு சத்தமுண்டாயிற்று. அதைக்கேட்டவுடனே அச்சிறுமி, வேடனது வில்லோசையைக்கேட்ட மான்போல நடுநடுங்கி எழுந்து சென்று, சந்திரமண்டலத்தை மேகம் மறைப்பதுபோலத் தோல் போர்வையால் தனது வடிவழகை மூடி மறைத்துக்கொண்டு, நிமிஷநேரத்தில் மின்னல்கொடிபோல மறைந்து வீடுபோய்ச்சேர்ந்தாள். அங்கே வீட்டு வாயலில் உட்கார்ந்திருந்த கிழவியைக் கண்டு அவளுடன் நடந்த வரலாறுகளையெல்லாம் விவரமாய் எடுத்துக்கூறினாள்.

அதைக்கேட்டுக் கிழவி புன்னகைகொண்டு, குழந்தாய், பயப்படாதே இது நமக்கு முன்னமே தெரிந்த செய்திதானென்றாள். பின்பு அவள் அம்மகளை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் விளக்

கேற்றிக்கொண்டு, வீடுமுழுதும் குப்பை செத்தையில்லாமல் சுத்தி செய்யவேண்டுமென்று பெருக்கித் துடைத்துச் சீர்ப்படுத்த ஆரம்பித்தாள். அதுகண்டு மகள், தாயே, இதென்ன நீ இந்நேரத்தில் வீடு பெருக்க ஆரம்பித்தாய்; காலையிலல்லவோ பெருக்கவேண்டும். இப்போது இராத்திரி இன்னும் பதினைந்து நாழிகையாகவில்லையே என்று கேட்க, கிழவி, அதற்காகவன்று, நீ இவ்விடத்திற்கு வந்து இப்பொழுது மூன்றுவருஷத்திற்குமேல் ஆகின்றதல்லவா? இனிமேல் நீ இங்கிருப்பது தகுதியல்லவென்று முன்னமே நினைப்பூட்டியிருக்கிறேனே; அதற்காகவே கொஞ்சம் வேலைசெய்யவேண்டியிருக்கிறதென்றாள்.

அதுகேட்டு அந்தச்சிறுமி, தன்னை அவள் துரத்திவிடப்பார்க்கிறாளோவென்று அச்சங்கொண்டு, என் அருமைத்தாயே, ஆயின், நீ என்னை எங்கேயாவது அனுப்பிவிடப்போகிறாயா என்ன? வெளியேபோய் நான் என்னசெய்கிறது, எனக்குப் போக்கிடமெங்கே, உற்றாருறவினர் ஒருவருமில்லையே? இதுவரையில் நான் உன் சொற்படிகேட்டு, உன்மனங் கோணாமல் நடந்துவந்தேன்; நீயும் என்னிடத்தில் அதிகமாய் அன்புபாராட்டிவந்தாய். அப்படியிருக்க, இப்பொழுது நீ என்னைப் போகச்சொல்வதற்குக் காரணமென்னவென்றுகேட்டாள். பின்னால் நடக்கப்போகிறதை முன்னதாகச் சொல்லக் கிழவிக்கு இஷ்டமில்லைபோலும். அதனால் அவள் சொல்லியதாவது: இனிமேல் நான் இவ்விடத்திலிருப்பதற்கில்லை; வெளியேபோகும்பொழுது வீடுமுழுதும் சீர்ப்படுத்தி வைத்துவிட்டுப்போகவேண்டும். இப்போ நான் வேலைசெய்யும்பொழுது நடுவே நீ தடங்கல்செய்யாதே; உனக்கொன்றும் பயமில்லை, உன்னை ஆதரிப்பதற்கு யாவரேனும் உடன்படுவார்கள்; உனக்கு ஒன்றும் குறைவுவாராதிருக்கும்படி நான் தகுந்த ஏற்பாடு செய்துவைக்கிறேனென்றாள்.

அவ்வளவோடு திருப்திகொள்ளாமல் அச்சிறுமி மறுபடியும் இனி நான் போகவேண்டிய விடமெங்கே, அதை எனக்குத் தெளிவாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க, கிழவி, நீ அதைக் கேட்கக்கூடாது; வீணாய் என் வேலைக்குத் தடைசெய்யாதே. உடனே நீ உன் அறைக்குள்சென்று, இந்த வேஷப்போர்வைகளைக் களைந்துவிட்டு ஆடையாபரணங்களால் நன்றாய் அலங்கரித்துக்கொண்டிரு. மறுபடி நான் கூப்பிடுகிறபோது நீ இவ்விடத்திற்கு வரவேண்டுமென்று சொல்லி அனுப்பிவிட்டுத் தன் வேலையிலிருந்தாள்.

இதற்குள் முன்சொன்ன நகரத்தில் அரசனும் அரசியும் செய்த காரியமென்னவென்று விசாரிப்போம். அவர்கள் தாமே தேடிக்கொண்டு போவதைக்காட்டிலும் பழகினவனான அந்தக் குமாரனையும் அழைத்துக்கொண்டுபோய்ப் பார்ப்பது நல்லதென்று தீர்மானித்துப் புறப்பட்டு, அக்காட்டில் அவனை முன்னே தனித்துப்போகும்படி அனுப்பினார்கள். அவன் இரண்டுநாள் அக்காடுகளில் அலைந்து

திரிந்து, மாலைப்பொழுதில் அம்மகள் நீராடவரும் ஆற்றங்கரை போய்ச் சேர்ந்தான். பொழுதுபோய் இருண்டுபோகவே, இனி இராத்திரியில் வழிநடப்பது உசிதமல்ல, வழிதவறிப்போனால் வருத்தமுண்டாகும்; காலையிலெழுந்து சுலபமாய்ப் போகலாமென்று அங்கே ஒரு மரத்தில் ஏறி உட்காந்திருந்தான்.

இப்படியிருக்கச் சந்திரோதயமாகி அந்தக்காடுமுழுதும் வெகு விநோதமாக விளங்கியது. அந்த விசித்திரக் காட்சியைப் பார்த்து அவன் வியந்துகொண்டிருந்த சமயத்திலேதான் இந்தக் கன்னிகை அங்கு நீராடவந்தது. முதலில் அவளைப் பார்க்கையிலேயே, அந்தக் குமாரன் முன் தான் கண்டபோது மாடுமேய்த்துக்கொண்டுவந்த மகளே இவளெனக் குறிப்பாய்க் கண்டறிந்து, இவள் இங்கே வருகின்றதனால், நாம் தேடிவந்தவிடம் சமீபத்திலேதானிருக்கிறது, சுலபமாய்ப்போய்ச் சேரலாமென்று சந்தோஷமாயிருந்தான்.

அந்தச் சிறுமி ஓடைக்கரைக்கு வந்து மேலே தரித்திருந்த தோல் போர்வையை வாங்கித் தன் இயற்கையான வடிவழகோடு நிற்கக் கண்டபோது அவனுக்கு உண்டான ஆச்சரியம்இத்தன்மையதென்று எடுத்துச்சொல்ல நம்மாலில்லை. இவளென்ன தேவகன்னிகையோ, நாககன்னிகையோ; அல்லது உலகத்திலுள்ள அழகுகளெல்லாம் ஒன்றுகூடி வடிவெடுத்துவந்த உருவமோ மின்னற்கொடியோ, கன்னற்கட்டியோ, பொற்பதுமையோவென்று திகைத்து மயங்கிப்போயினன். அவளது அற்புதமான வடிவழகை இமைக்கொட்டாமல் அவன் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டேயிருந்தான். பிறகு அதுவும் போதாமல் நுனிக்கிளையிலேபோய் நன்றாய்ப் பார்க்கவேண்டுமென்று இருந்தவிடம்விட்டுச் சிறிதுமுன்னே மெல்ல நகர்ந்தான். அந்த நுனிக்கிளை மிகவும் நுட்பமாயிருந்ததனால் அவனது சுமையைத் தாங்கமாட்டாமல் அப்பொழுது மளமளவென்று ஓசைப்பட்டது. அந்த ஓசையைக் கேட்டுத்தான் அச்சிறுமி பயந்து வடிவழகை மறைத்துக்கொண்டு வேகமாய் ஓடிப்போனது.

அவள் விரைவாகச் செல்வதைப்பார்த்துக் குமாரன் உடனே மரத்தினின்றும் இழிந்து அவளைப் பின்தொடர்ந்து சென்றான். அங்கிருந்து சிறிதுதூரம் செல்லுகையில், அவனுக்குப் பின்னால் அந்தக் காட்டில் இரண்டுபேர் வருவது அந்நிலாவெளிச்சத்தில் நன்றாய்த்தெரிந்தது. அவர்கள் யாரெனில், அச்சிறுமியின் தாய்தந்தையரான அரசனும் அரசியும். அவர்கள் வெகுதூரத்தில் சிறிதாய் விளக்கு வெளிச்சமொன்று தெரிய, அதைப்பார்த்துக்கொண்டே அதற்கு நேராக நடந்துவந்தனர். தூரத்தில் வருகையிலேயே அவர்கள் இன்னாரெனத் தெரிந்துகொண்டு குமாரன் அவர்கள் இடம்சென்று ஓடைக்கரையில் தான்கண்ட அதிசயத்தை இப்படியென்று அவர்களுக்கு விசேஷமாக வர்ணித்துக்கூறினன்.

அதுகேட்டு அவர்கள் அச்சிறுமகளே தமது செல்வக்குழந்தையெனத் தெரிந்து மிகுந்த சந்தோஷமடைந்தவர்களாய், அதிவேகமாக நடந்து அருகிலிருந்த வீட்டண்டைபோய்ச் சேர்ந்தனர். அவ்வீட்டுவாயிலில் ஆடுமாடுகளெல்லாம் அசைவற்றுப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தன. வாத்துகள் ஒற்றைக்காலை உயரத்தூக்கிக்கொண்டு தலையைச் சிறகுக்குள் திருப்பிவைத்துக்கொண்டு உறக்கமாயிருந்தன; ஒன்றாவது சற்றும் சலிக்கவில்லை. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே அவர்கள் அந்தக்கிழவியின் வீட்டுவாயிலிலே போய்ச் சேர்ந்தார்கள்.

வாயிலிலேபோய் நின்று அவர்கள் கதவைத்தட்டப் பயந்து முதலில் சாளரத்தின்வழியாய் உள்ளே எட்டிப்பார்த்தார்கள்; கிழவி வெகுசுறுசுறுப்பாக வேலைசெய்துகொண்டிருந்தாள். அந்த அறை வெகு அழகாய்ச் சிங்காரித்து, அதில் பலவகைப்பொருள்களும் சீராகச் சேகரிக்கப்பட்டிருந்தன. ஆயின் அவர்களுடைய மகள்மாத்திரம் அவ்விடத்தில் காணப்படவில்லை. கிழவி இவர்களை நிமிர்ந்துபார்க்கவேயில்லை. அதுகண்டு அவர்கள் எப்படியானாலும் ஆகட்டுமென்று கதவைத் தட்டினார்கள். அதுகேட்டு உள்ளேயிருந்த கிழவி அவர்கள் இன்னாரெனத் தெரிந்துகொண்டு, வெளியில் ஏன் காத்திருக்கவேண்டும், உள்ளே வரலாமே; நீங்கள் இப்பொழு
வருவது எனக்கு முன்னமே நன்றாய்த் தெரியும், உள்ளே
கள் என்று அன்புடன் அழைத்தாள். அப்படியே
அந்த அறைக்குள் சென்றார்கள். அவர்களைப் ப
இவையெல்லாம் நீங்களே விளைவித்துக்கொண்ட
வா? உத்தமியான இச்செல்வச்சிறுமியை அநியா
விட்டு ஓட்டிவிடாதிருப்பீர்களானால், இத்தனை அ
லையே. யானை தன்தலையில் தானே மண்ணை வாரிப்போட்டு
வதுபோல ஏன் விணான வருத்தத்தை வருவித்துக்கொண்ட
ஆயினும் மரம்வைத்தவன் தண்ணீர்வார்க்காமல் போகமாட்ட
ல்லவா? நீங்கள் துரத்திவிட்டாலும் இவ்விடத்தில் அச்சிறுமக
மூன்றுவருஷகாலமாய்ச் சுகமே வாழ்ந்திருக்கிறாள். என் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு வருவதுதவிர இவளுக்கு மற்றொருவேலையில்லை. தீக்குணங்கள் ஒன்றும் இவளுக்குப் படியவில்லை, நற்குணநற்செய்கைகள் யாவும் இவளிடத்தில் குடிகொண்டிருக்கின்றன. இம்மகளைத் துரத்திவிட்ட நாள்முதல் நீங்கள் பரிதாபப்பட்டுப் புலம்பியதே நீங்கள் இவளுக்குச் செய்த கொடுமைக்குப் போதுமான சிக்ஷையாம். இனி எவர்க்கும் எக்காலத்திலும் இத்தன்மையான கொடுமை செய்யாதேயுங்கள் என்று சொல்லி, குழந்தாய் இங்கே வாவென்று மகளைக் கூவியழைத்தாள். கிழவியின் குரலைக் கேட்டவுடனே பக்கத்துஅறையில் உட்கார்ந்திருந்த சிறுமி குலுங்கப் பணிபூண்டு குச்சரியப் பட்டுடுத்துக் கதவைத் திறந்துகொண்டு சந்

திரோதயமானதுபோல வெளியே வந்தாள். அப்பொழுது தோன
றிய அவளது வடிவழகைப் பார்த்துப் பெற்றோர்களும் மிக்க வியப்ப
டைந்தார்கள்.

அந்தச் சிறுமகள் தன் பெற்றோர்களைப் பார்த்தவுடனே மிகச்
சந்தோஷமடைந்து அவர்களின் பாதங்களில் விழ்ந்து பணிந்தாள்.
அப்பொழுது அவர்கள் அம்மகளையெடுத்து ஆலிங்கனம்செய்து
கொண்டு ஆனந்தக்கண்ணீர் பெருக்கினார்கள். பிறகு தன் பெற்
றோர்களுடைய பக்கத்தில் நின்றுகொண்டிருந்த குமாரனைப் பார்த்
துச் சிறுமி, இவ்வளவென்று அளவிடக்கூடாத மிகுந்த சந்தோஷ
மடைந்தாள். அதற்குக் காரணம் மாத்திரம் இன்னதென்று அவ
ளுக்கே தோன்றவில்லை.

அந்த மகளது சமர்த்தைப் பார்த்துத் தந்தை மிகவும் மனமகி
ழ்ந்து, குழந்தாய், என் ராச்சியமெல்லாம் முன்னமே கொடுத்து
விட்டேன்; இப்பொழுது உனக்குக் கொடுக்க என்கையில் ஒன்று
மில்லையேயென்று சொல்ல, கிழவி, நீங்கள் இவளுக்கு ஒன்றும்
கொடுக்கவேண்டுவதில்லை; இவளுடைமையை எடுத்துக் கொள்ளாதி
ருந்தால் அதுவே போதுமானது. இவள் அழுத கண்ணீரை எல்
லாம் நான் சேர்த்துக் குவித்துவைத்திருக்கிறேன்; அவை யாவும்
...புதமான முத்துக்களாயிருக்கின்றன. இத்தன்மையான முத்
... இவ்வுலகில் எங்கும் கிடைப்பது அருமை; உங்கள்
...வதும் சேர்ந்தாலும் இவற்றிற்குச் சரியாகமாட்டாது;
...னைநாள் இவள் என்னிடத்திலிருந்ததற்காக இந்த
...ான் இவளுக்கே கொடுத்துவிடுகிறேனென்றாள்.
...லிக்கொண்டேயிருக்கையில் திடீரென்று அவள்
...யினாள்.

...ள் மறைந்த மறுநிமிஷத்தில் அந்தச் சிறுகுடிசை ஒரு
... அரண்மனையாகியது; அதைச்சுற்றிலும் பெரிய நகரமொ
... உண்டாயிற்று; நால்வகைச் சேனைகளுடனே படைவீரர்கள்
அநேகர் அணிவகுத்து வந்து நின்றனர்; சேவகர்களும் உத்தி
யோகஸ்தர்களும் அநேகர் காலாலிட்டவேலையைத் தலையால் செய்
வதற்குச் சித்தமாய்க் கைகட்டிக் காத்துக்கொண்டிருந்தனர்.

இந்தக் கதை இவ்வளவுதான் நன்றாய்த் தெரிகின்றது. இதற்கு
மேல் முடிவு எப்படிப்பட்டதோ தெரியவில்லை; அந்த ராஜகுமா
ரன் அந்தச் செல்வச்சிறுமியை மணம்புரிந்துகொண்டு அவளுடன்
அவ்விடத்திலேயே ஒன்றுலொன்று குறைவின்றிச் சுகமாக வாழ்ந்
திருந்தானென்று சொல்வார்கள்.

அந்தக்கிழவி தான் அருமையாக வளர்த்துவந்த அழகான காட்
டையே தன் அருமைமகளுடைய சவுக்கியத்திற்காக ஒரு நகரமாக
மாற்றினாளென்று சொல்வது ஸகஜமே; அவள் தான் வளர்த்த ஆடு

மாடு வாத்து முதலியவற்றையே அவ்விடத்துக்காரியங்களைப் பார்ப்பதற்கு வேண்டிய மனிதர்களாக மாற்றினளோ, அல்லது புதிதாகவே படைத்தாளோ, அது நிச்சயமாய்ச் சொல்லக்கூடவில்லை; அந்த மிருகங்களையே அவ்வாறு மாற்றினளென்று கூறுவதே உசிதமாகத் தோன்றுகிறது.

ஆயினும் அந்தக்கிழவிமாத்திரம் மாயக்காரியல்ல; விசித்திரமான வல்லமைகள் அமைந்த ஒரு தெய்வமகளெனத் தோன்றுகிறது; ஏனெனில், அவள் எவர்க்கும் நன்மைசெய்யக் கருதுகிறுளேயல்லது, ஒருவருக்கும் தீமைசெய்யக் கருதுவதில்லை. அந்தச் சிறுமிக்குக் கண்ணீரெல்லாம் முத்தாக மாறும்படியான சக்தியையும் ஆதியில் இவளே கொடுத்திருந்தாலும் இருக்கலாம். இத்தன்மையான நன்கொடை இக்காலத்தில் அமைவது அருமையாயிருக்கின்றது. அப்படி அமைவது உண்டானல் தரித்திரர்கள் எல்லாரும் எவ்வளவு சீக்கிரத்தில் தனிகர்களாகி விடலாம்!

சமாசாரம்.

மிகப்பெரிதான போர்ப்படைக்கலச்சாலை.—இப்பொழுது இப்பூமண்டலத்திலுள்ள ஆயுதசாலைகள் எல்லாவற்றிலும் இங்கிலாந்தில் ஊல்விச்சு நகரத்திலுள்ளதே மிகப்பெரியதாம். அந்த ஆயுதசாலையின் பரப்புநிலம் 280 ஏகராவாம். அதில் கட்டடம் கட்டியிருக்கும் இடம்மாத்திரம் 160 ஏகரா உள்ளது. அதில் பூரணமாக வேலை நடக்கும்பொழுது 18,000 பேருக்குக் குறையாமல் வேலைசெய்வார்கள். அந்தச்சாலையில் சேர்த்துவைத்திருக்கும் குண்டு மருந்து முதலிய போர்க்கருவிகளுக்கு அளவில்லை. அங்கே பீரங்கிகள் ஆயிரக்கணக்காய் அடுக்கிவைத்திருக்கின்றன. கிடங்குகளில் குதிரைச்சேணங்கள் எந்த நிமிஷத்தில் வேண்டுமானாலும் சித்தமாய்க்கிடைக்கும்படி 20,000க்குக் குறையாமல் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. குதிரைலாடங்களும் ஆணிகளும், வார் கடிவாளம் கண்டவலயம்முதலிய தோல் சாமான்களும் மிகுதியாக மேலேகூறிய தொகைக்கு ஏற்றபடியே சித்தமாய் இருக்கின்றன. கடைச்சல் பிடிப்பது முதலிய பலவேலைகளும் செய்வதற்கு வேண்டிய சுழல் யந்திரங்கள் வைத்திருக்கும் இடம்மாத்திரம் ஒரு ஏகரா விஸ்தீரணமுடையது. அந்த யந்திரங்கள்யாவும் சுழன்று வேலைசெய்யும் பொழுது உண்டாகும் ஆரவாரத்தை இன்னவிதமென்று வர்ணித்துரைக்க நம்மால் முடியாது. கண்ணுல் பார்த்தால்தான் அந்த அதிசயம் விளங்கும். ஒவ்வொரு யந்திரமும் ஒருதரம் சுழன்ருல் 250 வெடிமருந்து தோட்டா அச்சுக்களை உருவாக்கிவிடும். ஆகையால் ஒரு நாள்முழுதும் சுழன்று வேலைசெய்தால் 2,50,000 தோட்டாக்கள் சித்தமாகின்றனவாம். இந்த ஆயுதசாலையில் நாலாமூலைகளிலும் வேலை நடந்தேறும் கம்மியசாலைகள் சிற்பசாலைகள்

முதலான பட்டடைகள் பற்பல உண்டு. அவைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் சாமான் கொண்டுபோக இருப்புப்பாதை வண்டிகளே ஏற்பட்டிருக்கின்றன. அவ்விருப்புப்பாதைமாத்திரமே பல மைல்களாகின்றனவாம்.

அமெரிக்காதண்டத்தில் ஸ்திரீகள் அநுசரித்துவரும் தொழில்கள்.— அத்தேசத்திலே தையல்வேலையில் 52,000 பெண்கள் பிரவேசித்திருக்கிறார்கள். உடுப்புவகை வியாபாரம் செய்பவர்கள் 2,80,000 ஸ்திரீகள். வண்ணாரவேலைசெய்பவர்களை அங்கே எல்லா நகரங்களிலும் காணலாம். வண்ணான்துறைகள் 1,22,000 உண்டு. அவைகளுள் 16,000 துறைகளில் ஸ்திரீகளே வேலைசெய்கிறார்கள். மேலும் படிப்பு முதலான யோக்கியதைகள் வேண்டியிருக்கும் தொழில்களிலும் ஸ்திரீகள் பிரவேசித்திருக்கிறார்கள். வைத்திய சிகிச்சை, ரணவைத்தியம் முதலானவைகளில் 2,500 பெருமாட்டிகள் பிரவேசித்திருக்கிறார்கள். ஜனங்களுக்கு நீதி நன்னெறிகள் போதிக்கும் ஸ்திரீகள் 165 பெயர்கள். சட்டங்கள் படித்து ஞாயஸ்தலங்களில் வாதிக்கிறவர்கள் 16 வருஷத்திற்குமுன்னே 7 பேர்களுக்கு அதிகம் இல்லை; இப்பொழுதோ 57 ஸ்திரீகள் கக்ஷிக்காரர்களுக்கு ஞாயவாதம்செய்து ஜீவிக்கிறார்கள்.

கௌண்டேஸ் அவ் டபேரின் நிதி.—இந்த இந்துதேசத்து ஸ்திரீகளுடைய வருத்தங்களை நீக்கிச் சவுக்கியங்களை விருத்திசெய்வதிலே நமது சக்கரவர்த்தினியார் எப்போதும் கவனமுள்ளவராயிருக்கின்றாராகையால், அதற்கு அனுகூலமாகவே நமது கவர்னர் ஜனரலவர்களின் மனைவியாராகிய, கௌண்டெஸ் அவ் டபேரின் என்னும் பெருமாட்டி, மகாராணியார் அரசாட்சியின் ஜூபிலி மகோற்சவமாகிய இக்காலத்தில் அவ்வாட்சியின் பெருமைக்கு ஒரு அறிகுறியாய், நமது தேசத்து ஸ்திரீகளுடைய தேகசவுக்கியம் விருத்தியாவதற்குத் தகுந்த ஒரு நற்காரியம் செய்யவிரும்பி அதற்காக 'கௌண்டெஸ் அவ் டபேரின் நிதி' என்று ஒரு நிதி ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார். அதன் கருத்தென்னவெனில், கையொப்பச்சீட்டுகள் ஏற்படுத்தவேண்டுமென்பதும், பெருந்தொகையாகமாத்திரமேயன்றிச் சில்லறை ரூபாயாகவும் அணுவாகவும்கூடக் கையொப்பம் வசூல்செய்யலாமென்பதும், அப்படிக் கையொப்பமிட்டு உதவிசெய்த சந்தாதார்களுடைய பெயரையெல்லாம் பதிவுசெய்து நேர்த்தியாக ஒருபுத்தகமாய்க்கட்டி ஜூபிலிமகோற்சவ சமயத்தில் ஒரு ஞாபகக்குறிப்பாக மகாராணியார்க்கு வெகுமதியளிக்கவேண்டுமென்பதும், இவ்விதமாகச் சேருகிற தொகையைக்கொண்டு சக்கரவர்த்தினியாருக்கு இத்தேசத்து ஸ்திரீகளிடத்திலுள்ள பிரீதியைப் பயன்பெறச் செய்யவேண்டுமென்பதுமேயாம். இவ்வாறு சேருகிற தொகையை வரப்பெற்றுத் தக்கபடி காரியங்களை நடத்துவதற்குச் சபையாரும் காரியதரிசியும் ஏற்பட்டிருக்கின்றனர். இஷ்டமுள்ளவர்கள் அனைவரும் அவரவர்க்கு இயன்றவரையில் இந்நற்காரியத்திற்கு உதவிசெய்து கனம்பெறுவார்களென்று கருதுகிறோம்.

S. P. C. K. Press, Vepery, Madras, 1887.